வரு.72 இல. 40 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2020 ஒக்டோபர் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
October 04 Sunday, 2020
32 பக்கங்கள் 40/-






மாளிகைக்காட்டு ' சுனாமி இளைஞன்' வெடித்தது சர்ச்சை 05



19 ஆவது திருத்தத்தால் நாட்டுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை 07



தேயிலைச் சாயமும் தேய்ந்துபோன கரங்களும் 20



நாட்டின் விளையாட்டு துறைக்காக முதலீட்டு திட்டமொன்று அவசியம் 24




படம்: ஐ.சிவசாந்த்

தினகரன் 'வடக்கின் உதயம்' சிறப்பிதழ் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கைலாசபதி அரங்கில் வெளியிடப்பட்டதன் பின்னர், லேக்ஹவுஸ் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையுடன் தினகரன் ஆசிரியப்பீட பணிக்குழாமினர் எடுத்துக் கொண்ட குழுப் படம்.

## மக்கள் நலனின் அடிப்படையில் தீர்மானங்கள் அமைய வேண்டும்

### இவற்றுக்கு முக்கியத்துவம் அளிப்பது கட்டாயம்; அதிகாரிகளிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



மக்களினதும் அரசாங்கத்தினதும் நலன்சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவமளித்து அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்பதுவே தனது எதிர்பார்ப்பென்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்களின் நலனை முன்னிறுத்தியே தனது தீர்மானங்கள் இருக்குமெனவும் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சு சார் திணைக்களங்களின் யாழ். பிராந்திய அதிகாரிகளுக்கும் அரச நிர்வாக அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று(03) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதில் கடற்றொழில் மற்றும் நீர் வேளாண்மை அபிவிருத்தி நடவடிக்கைகளில் காணப்படக்கூடிய நடைமுறை பிரச்சினைகள் தொடர்பாக

04

### இளைய சமூகத்துக்கு ஊடகக் கல்வி

## நாட்டின் 25 மாவட்டங்களிலும் ஊடகத்துக்கான பாடசாலைகள்

### விரைவில் ஆரம்பிக்கப்படும் என்கிறார் அமைச்சர் கெஹெலிய



அருள் சத்தியநாதன்

நாட்டின் 25 மாவட்டங்களிலும் ஒரு பாடசாலை வீதம் ஊடகத்துக்கான பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டு ஊடகக் கற்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமென ஊடகத்துறை அமைச்சர் செஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச, நாடெங்கும் விளையாட்டுத் துறை அபிவிருத்தியை மனதில் கொண்டு விளையாட்டுத் துறைக்கான பாடசாலைகள் ஏற்படுத்தவுள்ளதைப் போலவே இந்த ஊடகத்துறை பாடசாலைகளும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கும் என்றும் அமைச்சர் கெஹெலிய தெரிவித்தார். ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு இது இனிப்பான ஒரு தகவலாக இருக்கும் என தெரிவித்த அமைச்சர், ஏனெனில் அச்சு கோர்க்கும் காலத்திலிருந்து, வானொலிப் பெட்டியைத் திருகி நிகழ்ச்சி கேட்கும் காலத்திலிருந்த ஊடகத்துறை, இன்று வளர்ச்சி பெற்று இணையம், கைபேசி என்று வளர்ந்து விட்டது. இந்தவளர்ச்சி வேகம் இங்கேயும் நின்றுவிடப் போவதில்லை.

மேலும் பல பிரமிக்கத் தக்க

04

### 20 ஆவது திருத்தம்

## எதிரான மனுக்கள் மீதான விசாரணை நாளை 5ஆம் திகதி

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தும் வகையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பான மேலதிக விசாரணை நாளை 05 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹார,

04

## மூன்றிலிரண்டு பெரும்பான்மை கொண்ட அரசுக்கு எவரது ஆதரவும் தேவையில்லை

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

ஹற்றன் சுழற்சி நிருபர்



நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்ட அரசாங்கம் எவரிடமும் சென்று ஆதரவு தேட வேண்டிய அவசியம் கிடையாது என்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவு பெறுவதற்கு இன்னும் நான்கு வருடங்கள் உள்ள நிலையில் அக்காலப்பகுதியில் நாட்டுக்குத் தேவையான அனைத்தும் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

04

## பாராளுமன்றம் நாளை மறுதினம் கூடுகிறது



லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றம் நாளை மறுதினம் 06ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது டன் எதிர்வரும் 09ஆம் திகதி வரை சபை அமர்வுகளை நடத்த பாராளுமன்ற தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது

மேற்படி தெரிவுக்குழுவில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்களுக்கமைய

04

## பிராந்திய ஊடகவியலாளர்களின் நலன்களில் கவனம் செலுத்தப்படும்

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

கிளிநொச்சி குறூப், ஓமந்தை விஷேட நிருபர்கள்

பிராந்திய ஊடகவியலாளர்களின் நெருக்கடிகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் நாம் நன்கறிவோம், என வேதான் அவர்களின் நலன்களில் அதிக கவனம் செலுத்த தீர்மானித்துள்ளோமென ஊடகத்துறை மற்றும் தபால் துறை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல வுடன்

கிளிநொச்சிக்கு நேற்று (03) விஜயம் மேற்கொண்ட அவர் கிளிநொச்சி



மாவட்டச் செயலகத்தில் தகவல் திணைக்கள மாவட்ட அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு

04

## பசுவதைக்கு எதிராக குரல் கொடுத்த பூசகர் அடித்துக் கொலை

யாழ்.விசேட நிருபர்



யாழ்ப்பாணம் தீவகப் பகுதிகளில் இடம்பெறும் பசு வதைக்கு எதிராக குரல் கொடுத்து வந்ததுடன் அதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்த பூசகர் இனம்தெரியாத கும்பலால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

புங்குடுதீவிலுள்ள அவரது வீட்டினுள் (02) வெள்ளிக்கிழமை இரவு புகுந்த கும்பல், வீட்டில்

04

## ஆயுதமேந்தியோரை தெற்கில் நினைவு கூர முடியுமாயின் வடக்கில் ஏன் முடியாது?

### மனோ கணேசன் எம்.பி கேள்வி



1970/80 களில் இலங்கை அரசுக்கும், இராணுவத்துக்கும் எதிராக ஆயுதம் தூக்கிய, ஜேவிபியின் தேசப்பிரேமி இயக்க போராளிகள் இன்று தெற்கில் பகிரங்கமாக நினைவுகூரப்படும் போது, அதே சிறப்புரிமை வடக்கில் தமிழருக்கு இல்லை? அரசாங்கத்தின் “ஒரே நாடுஒரே சட்டம்” என்ற கொள்கை ஒரு கேலிகூத்தாகத் தெரிகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி, தனது டுவிட்டர் தளத்தில்

04

## 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க எவ்விதத்திலும் பிரதமர் உடன்பட மாட்டார்

### சுமந்திரன் எம்.பி திடமான நம்பிக்கை

பருத்தித்துறை விசேட நிருபர்



அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்திற்கமைய உருவாக்கப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பதற்குப் பிரதமர் உடன்படமாட்டாரென்று தாம் திடமாக நம்புவதாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் வாரமஞ்சரிக்குத் தெரிவித்தார். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதாகத் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இந்திய அரசாங்கத்திடம் எழுத்து மூலம் உறுதியளித்துள்ளதாகக் கூறிய சுமந்திரன், அதனால், பதின் மூன்றாவது திருத்தச் சட்டத்தை எவ்விதத்திலும் பிரதமர் நீக்கமாட்டார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

04

## சாரதிக்கு திடீர் சுகவீனம்; மாங்குளத்தில் பஸ் விபத்து

### சிறு காயங்களுடன் பயணிகள் உயிர் தப்பினர்

றிஸ்வான் சேகு முஹைதீன்



யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி சென்ற பஸ் மாங்குளத்தில் நேற்று சிறிய பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. நேற்று பிற்பகல் 2 30 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. வீதியை விட்டு விலகிய இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வீதி யோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய வகை கார் ஒன்றுடன் மோதி அருகிலிருந்த மரத்தின் கிளையை

04


WORLD IS YOUNG
SRI LANKA YOUTH SUMMIT
SRI LANKA Youth
at BMICH
NOV 6 / 7 / 8
9.00 am to 10.00 pm
உயர் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி சந்தர்ப்பங்கள்
தொழில் வழி காட்டல் மற்றும் தொழில் வாய்ப்புக்கள்
ரொபோ தொழிநுட்பத்துடனான தகவல் தொழிநுட்ப வலையம்
விளையாட்டு பயிற்சி சந்தர்ப்பங்கள்
e - Gaming
கல்வி மகாநாடு மற்றும் செயலமர்வு சந்தர்ப்பங்கள்
நவம்பர் 7 மற்றும் 8ம் திகதிகளில்
மு.ப 10.00 - 11.30 மணி வரை
பி.ப 12.00 - 1.30 மணி வரை
( இந்நிகழ்ச்சித்திட்டத்தில் இணைய www.nysc.lk ஊடாக பதிவு செய்து கொள்ளவும்)
முப்படையினரின் கண்காட்சிகள்
இளைஞர்களுக்கான விரிவுரைகள்
இரசனை நிகழ்ச்சிகள்
நாடக பயிற்சி பட்டறைகள்
Youth X-tream இசை மாலை பொழுது
உள்ளடங்களாக விசேட அம்சங்கள் பலவற்றுடன்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

# ஹத்ராஸ் பாலியல் வன்புணர்வு: சாதியத்தின் தொடர்ச்சி



ஆதிக்கத்தை நிலைநிறுத்த தலித்துளையும் ஒடுக்கப்பட்ட சாதியினரையும் அச்சுறுத்திக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டியிருப்பதால், அதை முழுமையாகச் செய்ய ஒரு தலித் பெண்ணின் உடல்மீது அத்துமீறி வன்முறையை கட்டவிழ்த்துவிடுவதைவிட வேறெந்த சிறந்த வழியுள்ளது? நிஜ வன்முறையையும் குறியீட்டு வன்முறையையும் இது ஒருசேர நிகழ்த்தி விடுகிறது. அதனாலேதான் ஆளும் வர்க்கத்தினர்/சாதியினர் தம் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கென நீண்டநெடுங்காலமாகவே வன்புணர்வையும் பாலியல் வன்முறையையும் ஒரு அரசியல் கருவியாகத் தொடர்ந்து உபயோகித்து வருகின்றனர்.

இன்று, ஹத்ராஸில் நிகழ்ந்துள்ள கூட்டுவன்புணர்வு கொடூரம் குறித்தான செய்திகளும், அந்த தலித் பெண்ணின் உடல்பாகங்கள் சிதைக்கப்பட்டிருக்கும் காட்சிகளும் நம் சமூகவளைதளப் பக்கங்கள் முழுவதும் நிறைந்துகிடப்பதைக் கண்டு நாம் பீதியில் நடுங்கிக்கொண்டிக்கிறோம், ஆனால் வன்புணர்வு செய்தவர்கள் யாரென்பது குறித்து ஏன் ஒரு தலைப்புச்செய்திகூட இதுவரை பேசவில்லை? அவர்கள் யார்? இந்தக் கேள்வி ஏன் நம் மனதில் தோன்றவேயில்லை? தீவிர விசாரணைக்குப் பிறகும் குற்றவாளிகளின் சாதிப்பெயர்கள் பற்றி ஏன் யாருமே மூச்சுவிடவில்லை? ஒடுக்குவோரின் சாதியடையாளம் மறைக்கப்படுவது ஏன், அதிலும் குறிப்பாக அவர்கள் ஆதிக்கசாதியினராக இருந்துவிட்டால் இது கட்டாயம் நிகழ்கிறதே, அது அச்சத்தாலா அல்லது தீவிர சாதிப்பற்றினாலா? 19 வயது இளம் பெண்ணை ஹத்ராஸில் பாலியல் வன்புணர்ந்தோர் ராஜ்புத்கள்/தாக்கூர்கள் சாதியைச் சேர்ந்தவர்கள், கிராமப்புற இந்தியாவின் பெரும்பான்மை விவசாயநிலத்தின் சொந்தக்காரர்கள் இந்த சாதியினர்தாம். பாதிக்கப்பட்ட தலித் பெண்ணைப் பற்றியச் செய்திகளை அறிவிப்பதில் பேரார்வம் காட்டும் ஊடகத்துறை, அந்த ஆதிக்கசாதிகள் கொண்டுள்ள பெரும் அதிகாரத்தை வெளியிடத் தயங்குவது ஏன்?

"அதுவொரு பாலியல் பலாத்கார சம்பவம் மட்டுமே, அதில் ஏன் சாதியை நுழைக்கிறீர்கள்?"

இந்தியா அடிப்படையில் ஒரு சாதிய சமூகமே. குடியரசாலோ தாராண்மை அரசியலமைப்பாலோ அதை மாற்றமுடிந்ததேயில்லை. ஒருவர் உருவச்சொத்துக்களையோ அறிவாற்றல் போன்ற அருவச் சொத்துக்களையோ அடையும் வாய்ப்புகளையும், உற்பத்திக்கு வழிகோலும் நிலம் போன்ற வளங்களை உடைமையாக்கிக் கொள்வதையும் அவர் எந்த குடும்பத்தில் பிறந்துள்ளார் என்பதை அடிப்படையாகவே வைத்து இந்த சாதீய சமூகம் தீர்மானிக்கிறது. வால்மீகி சமூகத்தைச் சேர்ந்த அந்த 19 வயது இளம்பெண் கம்புவயல் அருகே மாட்டுக்குத் தீவனம் பொறுக்கவந்தபோது பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார். உயர்சாதியினரின் அனுகூலத்திற்காய் உண்டாக்கப்பட்டுள்ள சாதிய அமைப்பின்படி பார்த்தால் சூத்திரர்களும் அவர்களுக்கும் "கீழானவர்களும்" சொந்தமாக நிலம் வைத்துக்கொள்ளக்கூடாது.

உடலுழைப்பைத் தவிர விற்று உண்ணத் தம்மிடம் வேறெதுவுமில்லாதவர்கள்தான் அந்தப் பெண்ணும் அவள் குடும்பத்தினரும். நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தின் வேலையாட்கள் அவர்கள், நிலங்களை உழுவர், மற்றவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவர், கழிவறைகளைச் சுத்தம் செய்வர், பிணங்களை எரிப்பர். இவையெல்லாம் உடலுழைப்பைக் கோருவதோடு "தீட்டு" என்றும் "தீட்டை உண்டாக்கும்" பணிகளென்றும் வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலப்பிரபுத்துவ சாதிய சமூகம் தான் இந்தியாவின் நிஜ முகம், நவீன நகரச்சூழல்களும் கூட இப்பாரத்தை சுமக்கின்றனதாம். அதனாலேதான் பாதிக்கப்பட்டவர் மற்றும் வன்முறையை ஏவிவிட்டோரின் சமூக நிலை குறித்து பேச வேண்டியுள்ளது, ஏனெனில் சமூக உறவு தான் அவர்களுக்கு மற்றவரை தாக்குவதற்கான அதிகாரத்தை வழங்குகிறது. யார் எங்கு எதை உடைமையாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வைத்தே இந்தத் தொடர்பு செயற்படுகிறது, ஒடுக்கப்பட்டவர் ஒடுக்குவோர் ஆகிய இருவரையும் ஒரே உறவுக்குள் கொண்டுவருவதை இந்தத் தொடர்புகளே தீர்மானிக்கின்றன எனும்போது இத்தொடர்புகளோ சாதியால்தான் இந்தியாவில் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே, இந்திய மக்களில் பெரும்பான்மை மக்களை மிகச்சில சமூகங்கள் ஒடுக்குவதையும் சுரண்டுவதையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும் சமூகக்கட்டமைப்பின் உள்ளார்ந்த சார்புத்தன்மையை ஒதுக்கிவைத்துவிட்டு, ஹத்ராஸ் வன்புணர்வு போன்ற சம்பவங்களை வெறும் பாலியல் கோணத்திலிருந்து மட்டுமே நாம் அணுகுவோமானால், அதுவொரு அரைகுறைக் காட்சியையே நமக்களிக்கும்.

**பரம்பரைப்பெயரைக் கடந்த சாதி**

நீதித்துறை, காவல்துறை, தாராண்மை குடியாட்சி போன்ற நவீன சட்ட அமைப்புகளெல்லாம் நிறுவப்பட்டபிறகும் கூட, நிலத்தை சொந்தமாக வைத்திருக்கும் ஒரே காரணத்திற்காக எப்படி மிகச்சிலரால் பெரும்பான்மை இந்திய மக்களை தொடர்ந்து ஒடுக்கியாள முடி

**சசிகலா பாபு ...**

கிறது எனப் பலரும் கேட்கின்றனர். அவர்களால் சாதியின் நேர்த்தியான பரவலையும், அதன் கூட்டுணர்வையும் நவீனமயமாகிவிட்ட அதன் வடிவதத்தையும் புரிந்துகொள்ள முடியவில்லை தனிமனிதனுக்குரியதாக, உதிரிகளாக, எச்சங்களாக, பாரம்பரிய உணர்வின் அற்ப மீதங்களாகத் தான் அவர்கள் இதை எண்ணுகிறார்கள், நவீனத்துவத்தாலோ அல்லது நிலப்பிரபுத்துவ தொடர்புகளில் நிகழும் மாற்றங்களோடோ இது முடிந்துபோய்விடும் என அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் இந்தியாவின் சாதீய ஆட்சிமுறை அவர்கள் எண்ணங்களைப் பொய்யென நிரூபிக்கிறது. சொத்துக்களை சொந்தமாக்கிக்கொள்வது மட்டுமே சாதிரீதியான மூலதனமல்ல, குறிப்பட்டக் கலாசார, சமூக மூலதனங்களையும் பெருமளவில் கையகப்படுத்திக் கொள்வதும் அதில் சேர்த்திதான்.

அறிவாற்றலை அடைவதில் ஆளும் சாதியினர் கொண்டிருந்த பிரத்யேக உரிமையின் விளைவாக நவீன நிறுவனங்களான அதிகாரத்துறை, காவல்துறை, ஊடகத்துறை போன்றவற்றில் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக உட்புகுந்துவிட்டனர். பெரும் ஊதியம் வழங்கும் நிறுவனங்களில் ஆளும்சாதியினரின் அதீத பிரதிநிதித்துவத்தால் உண்டாகும் ஒருதலைபட்சமான தகவல்தரவுகளை மற்ற சாதியினர் புரிந்துகொள்வதில் சிக்கல் எழுகிறது. உள்ளூர் காவல்நிலையத்தில் பணியாற்றும் ஹவில்தாரில் துவங்கி நாட்டின் உச்சபட்ச நீதிபதி வரையிலும், சாதியொற்றுமை என்பது மிகப்பெரிய வலைப்பின்னலாக விரிந்துகொண்டே செல்கிறது, பாலியல் வன்புணர்வுக்குள்ளான தலித் பெண்ணால் காவல்நிலையத்தில் முதல் தகவலறிக்கையைக் கூடப் பெறமுடியாத அளவிற்கு இந்தப்பின்னல் ஆகப்பெரிதாயுள்ளது.

ஒவ்வொரு நாளும் நான்கு தலித்பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றனர், பாலியல் வன்கொடுமை குறித்துப் புகாரளிக்கச் செல்லும் தலித் பெண்கள் காவல் நிலையத்தினுள்ளேயே வன்புணரப்படும் வழக்குகள் உள்ளன, வன்புணர்வுக்கான வழக்கு தொடுக்கப்பட்டாலுமேகூட அவை வன்கொடுமைத் தடுப்புச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படுவதில்லை. தலித்களுக்கும் பழங்குடியினருக்கும் எதிரான குற்றங்கள் மற்றவர்களுக்கு எதிரான (22ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு நிர்பயா..?



## ஆறுதல் கூற வீடு தேடிச் சென்ற ராகுல்காந்தி மீது வழக்குப் பதிவு...

**முழுப் பின்னணி என்ன...?**

உத்தர பிரதேச மாநிலம் கான்பூர் அருகே உள்ள ஹத்ராஸ் பகுதியை சேர்ந்த 19 வயது பட்டியலின பெண்ணை கடுமையாக தாக்கி, நான்கு பேர் கூட்டுப்பாலியல் பலாத்காரம் செய்தனர். இந்த சம்பவத்தில் 14 நாட்களாக உயிருக்குப் போராடிய அந்த பெண் கடந்த செவ்வாயன்று உயிரிழந்தார். 4 உயர் சாதியினர் அப்பெண்ணை தாக்கியதில், அவரது முதுகெலும்புகள் உடைந்ததோடு, அவரது உடலில் பல்வேறு காயங்கள் ஏற்பட்டிருந்தது. மேலும் அப்பெண்ணின் நாக்கு துண்டிக்கப்பட்டதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் இறந்த பெண்ணிற்கு இறுதி சடங்குகளை மேற்கொண்டு அடக்கம் செய்ய வேண்டும் என்று பெற்றோர்கள் கேட்டனர். ஆனால், உடலை அவர்களிடம் ஒப்படைக்காமல், இரவோடு இரவாக அப்பெண்ணின் குடும்பத்தினர் இல்லாமலே ஒரு சில காவல்துறையினரின் முன்னிலையில் உடல் தகனம் செய்யப்பட்டது. இந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதுகுறித்து அலகாபாத் நீதிமன்றத்தின் லக்னோ கிளை, உ.பி காவல்துறை உயரதிகாரிகளுக்கு அழைப்பாணை அனுப்பியது.

இந்நிலையில் கூட்டு பாலியல் பலாத்காரம் காரணமாக இறந்த பெண்ணின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூற காங்கிரஸ் தலைவர்கள் ராகுல்காந்தி, அவரது சகோதரி பிரியங்கா காந்தி ஆகியோர் உ.பி சென்றனர். ஆனால் கொரோனா காரணமாக அதிகளவில் கூட்டங்கள் கூடுவதை தவிர்க்கும் வகையில், காங்கிரஸ் தலைவர்களின் வருகைக்கு உ.பி. நிர்வாகம் தடை விதித்து, காட்டி எல்லைகளில் தடுப்புகளை அமைத்தது.

இதனைக் கண்டித்து காங்கிரஸ் கட்சியினர், சாலைகளில் ஆர்ப்பாட்டம் செய்து கோஷங்களை எழுப்பினர். பின்னர், ராகுல், பிரியங்காவின் கார்கள் எல்லையைத் தாண்டியது, ஆனால் ஹத்ராஸுக்கு சுமார் 142 கி.மீ தூரத்தில் உள்ள கிரேட்டர் நொய்டாவில் அவர்களின் வாகனம் நிறுத்தப்பட்டது.


ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி ஆகியோர் தங்கள் வாகனத்திலிருந்து ஏறி, ஏராளமான காங்கிரஸ் ஊழியர்களுடன் நடக்கத் தொடங்கினர். அவர்கள் உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத்திற்கு எதிரான கோஷங்கள் எழுப்பினர். இதனால் அங்கு அதிகளவில் குவிந்த உ.பி. பொலிசார் கூட்டத்தை கலைக்க அவர்களை திரும்பி போக வலியுறுத்தினர். அப்போது போலீசார் நடத்திய தடியடியில் ராகுல்காந்தி கீழே விழுந்தார். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ராகுல் காந்தி, பொலிசார் தன்னை தரையில் தள்ள விட்டதாகவும், லத்தியால் தாக்கியதாகம் குற்றம் சாட்டினார். மேலும் "நீங்கள் என்னை ஏன் கைது செய்கிறீர்கள்? கைது செய்வதற்கான காரணங்கள் என்ன? தயவுசெய்து ஊடகங்களுக்குச் சொல்லுங்கள்" இப்போதே போலீசார் என்னைத் தள்ளி, லத்தியால் அடித்து, தரையில் தள்ளிவிட்டனர். இந்த நாட்டில் மோடி மட்டுமே நடக்க முடியுமா? ஒரு சாதாரண நபர் நடக்க முடியவில்லையா? எங்கள் வாகனம் நிறுத்தப்பட்டது, எனவே நாங்கள் நடக்க ஆரம்பித்தோம்" என்றும் ஆவேசமாக பேசினார்.

ராகுல்காந்தி கீழே தள்ளிவிடப்பட்டதற்கும், அவரைக் கைது செய்தததற்கும் எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், புதுச்சேரி, கர்நாடகா போன்ற இடங்களிலும் போராட்டம் நடைபெற்றது. மேலும் ராகுல்காந்தி தள்ளிவிட்ட உ.பி. பொலிசாரின் செயலுக்கு அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் உடனடியாக மன்னிப்பு கோர வேண்டும் என்று அரசியல் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த சூழலில் ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி மீது கௌதம் புத்த நகரின் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ராகுல், பிரியங்காவுன் சென்ற 150 காங்கிரஸ் கட்சி தொண்டர்களின் பெயர்களும் எஃப்.ஐ.ஆரில் இடம்பெற்றுள்ளது.

இதனிடையே அப்பெண், கழுத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக இறந்துவிட்டார் என்று பிரேத பரிசோதனை அறிக்கை கூறுவதாக கூடுதல் பொலிஸ் இயக்குநர் ஜெனரல் பிரசாந்த் குமார் தெரிவித்துள்ளார். மேலும் பேசிய அவர் "தடய அறிவியல் ஆய்வகத்தின் அறிக்கையில் வன்புணர்வுக்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. சாதி அடிப்படையிலான பதற்றத்தைத் தூண்டுவதற்காக சிலர் இந்த விஷயத்தை திரித்தார்கள் என்பதை இது தெளிவுபடுத்துகிறது. அத்தகைய நபர்கள் அடையாளம் காணப்படுவார்கள், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் " என்று தெரிவித்திருந்தார்.




# பொதுப் போக்குவரத்தின் புதிய போக்கு

நகருக்குள் பிரவேசிக்கும் பஸ் வண்டிகளுக்கு தனியான பாதையொன்றை ஒதுக்குவதற்கு போக்குவரத்து பொலிஸார் முடிவுசெய்தார்கள். அதனை செயற்படுத்துவதில் பல வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. பல பரிசோதனைகளை மேற்கொண்டார்கள். காலையிலும் மாலையிலும் காணப்படும் வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் முயற்சியே இந் நடவடிக்கையில் அடங்கியிருந்தது. வாகனநெரிசல் கொழும்புக்கோ நாட்டின் ஏனைய பகுதிகளுக்கோ மாத்திரம் உரியதல்ல. உலகில் அனைத்து நாடுகளிலும் அதிகமாகவோ குறைவாகவோ வாகன நெரிசல் காணப்படுகிறது. அதனை தவிர்க்க பல முறைகள் பரிசோதிக்கப்படுகின்றன.

அதிக வாகன நெரிசல் காலத்தை வீணடிப்பதோடல்லாமல் வாகனங்களில் எரிபொருள் தகனம் மோசமான சூழல் பாதிப்புமாகும். பாரிஸ் நகர முதல்வர் துவிச்சக்கரவண்டிக்காக தனித்த பிரதேசமொன்றை ஒதுக்கியுள்ளார். முப்பதுமைல் தூரத்தை துவிச்சக்கர வண்டிகள் மாத்திரம் பயணிக்கும் பிரதேசமாக மாற்றியுள்ளார். பின்னர் அதனை 620 மைலாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளார். வாகன போக்குவரத்து தடை செய்யப்பட்ட இந்த பிரதேசத்தில் நடமாடும் மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்ததாக தெரிய வந்துள்ளது. களைப்பு மற்றும் மன அழுத்தமும் குறைந்துள்ளது. இலங்கையில் துவிச்சக்கர வண்டிக்காக தனியான பாதையை ஒதுக்கி வாகனங்ளை தடைசெய்வது நடைமுறைச் சாத்தியமற்றது.

சர்வதேச அறிக்கைகள் மூலம் தெரியவரும் இன்னொரு விடயம் பற்றி கவனம் செலுத்த வேண்டும். உலகில் பிரதானமாக நூற்றைம்பது நகரங்களில் பொதுப் போக்குவரத்து இலவசமாக்கப்பட்டுள்ளது. அதனை லக்ஸம்பர்க் என்னும் சிறிய ராச்சியமே ஆரம்பித்தது. பஸ் மற்றும் ரயில்களில் பயணம் செய்பவர்களுக்கு கட்டணம் அறவிடப்படுவதில்லை. தனியார் வாகன பாவனை ஏற்படுத்தியுள்ள பாதிப்பை ஆட்சியாளர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். தனியார் வாகனங்கள் அதிகமாக உயோகப்படுத்தப்படும் லக்ஸம்பர்க்கில் அரச தகவல்களின்படி கடந்த இருபத்தைந்து வருடங்களில் மிகக் குறைந்தளவு பொருளாதார வளர்ச்சியே எட்டப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் வாகன நெரிசலால் நேரம் வீண் விரயமானதாகும் என கூறப்பட்டது. தற்போது அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா, சீனா, அவுஸ்திரேலியா, பிரேஸில் பின்லாந்து மற்றும் பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகள் தெரிவுசெய்யப்பட்ட நூற்றுக்கணக்கான நகரங்களில் பொது போக்குவரத்துச் சேவையை கட்டணமின்றி நடத்துகிறது. இலகுவாக பயணம்செய்யக் கூடிய பஸ், ரயில் இலவச சேவை மூலம் தனியார் வாகன பானை குறைக்கப்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. லக்ஸம்பேர்க் அறிக்கைகள் குறிப்பிடுவது போன்று இலவச போக்குவரத்து சேவைக்கு வரவு செலவு திட்டத்தின் மூலம் பெருமளவு நிதி ஒதுக்கவேண்டியிருந்தது. பின்னர் அது லாபமாக மாறியுள்ளது.

நாடொன்று வளர்ச்சிடையும்போது அதனால் நன்மைபெறும் மக்களுக்கு சொந்த வாகனமொன்றை வாங்குவது சிரமம்மல்ல. அன்றாட நடவடிக்கைகளை இலகுவாக்க வாகனத்தில் பயணிக்கின்றார்கள். தனியார் வாகனங்கள் பாதைக்கு வரும்போது அதிக வாகன நெரிசல் ஏற்படுகின்றது. வேகம் குறைவடைந்து ஒரே இடத்தில் வாகனம் நின்று எரிபொருள் எரிக்கப்படுவதால் அது பெரும் சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது.


இலங்கையில் பொது போக்குவரத்து லாபமீட்டும் ஒன்றல்ல.

இ. போ. ச மற்றும் ரயில்சேவை பெரும் நட்டத்தில் இயங்குகின்றன.போதுமான அளவு பஸ் வண்டிகளும், ரயில்களும் இல்லையென்று கூறப்படுகின்றது. அனுமதி சீட்டில்லாமல் பயணிப்பவர்களால் ஏற்படும் நட்டம் குறித்தும் குறிப்பிடப்படுகிறது. அரச வருமானத்தில் இன்னொரு பகுதியை பயன்படுத்தினால் பொதுப் போக்குவரத்து சேவையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்

பொதுப்போக்குவரத்து பலவீனம் அடைந்ததன் காரணமாக தனியார் வாகனங்கள் பாதைக்கு வந்தன. அரசு மற்றும் தனியார் காரியாலயங்கள் தமக்கென காரியாலயசேவையை ஆரம்பித்துள்ளன. பாடசலை பஸ் வண்டிகளும் அந்தந்த பாடசலைகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமைகளில் வாகன நெரிசல் மேலும் மோசடைகிறது. இந்நாட்டில் பிரதான பாதைகளில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கைப் பற்றிய மதிப்பீடொன்று நடத்தப்படவேண்டும் பொருளாதார வளர்ச்சியுடன் இவ்வாறான பிரச்சினைகளுக்கு சம்பிரதாய கட்டமைப்புக்கு அப்பால் சென்று தீர்வைக் காண சர்வதேசத்திடமிருந்து கிடைக்கும் யோசனைகள் கருத்தில்கொள்ளப்பட வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# மகாத்மா காந்தியின் 151ஆவது ஜனனதின நிகழ்வில் பிரதமர்





மகாத்மா காந்தியின் 151 ஆவது ஜனன தினத்தையொட்டி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் நேற்று (02) அலரிமாளிகையில் அவரது உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

இந்தியாவின் தந்தை என போற்றப்படும் மகாத்மா காந்தி இந்திய சுதந்திர போராட்டத்தின் முன்னோடியாகவும், அகிம்சையின் தந்தையாகவும் விளங்கியவராவார். அவர் அகிம்சைவாத கொள்கையை இந்தியாவில் மாத்திரமின்றி உலகம் பூராகவும் பரப்புவதற்கு பணியாற்றினார்.

1927ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த மகாத்மா காந்தி, பல நாட்கள் இலங்கையில் தங்கியிருந்ததுடன், கொழும்பு ஆனந்தா கல்லூரியில் பௌத்த சமயம் குறித்த உபதேசமொன்றையும் நிகழ்த்தியுள்ளார்.

காலி மஹிந்த கல்லூரி உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு இடங்களில் உபதேசங்களை நிகழ்த்தியுள்ள அவர், கொழும்பு, கண்டி, மாத்தளை, குருநாகல், சிலாபம், பதுளை, நுவரெலியா, மொரட்டுவ, பாணந்துறை, ஹொரன, களுத்துறை, பலபிட்டிய, காலி, மாத்தறை, அக்மீமன மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட நகர்களுக்கும் விஜயம் செய்துள்ளார்.

மகாத்மா காந்தி வடமேற்கு இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் 1869ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 ஆம் திகதி பிறந்தார்.

இந் நிகழ்வில் இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் வினோத்கே. ஜாகோப், இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, பிரதமரின் மேலதிக செயலாளர் (சட்டம்) கணேஷ் தர்மவர்தன மற்றும் இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர்.

அரசாங்க ஊழியர்களுக்காக

# கொழும்பில் மாடி வீட்டுத்திட்டம் நாளை பிரதமரினால் திறப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்க ஊழியர்களுக்காக 5,500 மில்லியன் ரூபா செலவில் கொழும்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவினால் நாளை திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட உள்ளது.

கொழும்பில் பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வனாத்தமுல்ல பிரதேசத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் இந்த வீடமைப்புத் திட்டத்தில் 608 வீடுகள் உள்ளடங்குகின்றன.

மூன்று படுக்கையறைகளைக் கொண்ட 304 வீடுகள் மற்றும் இரண்டு படுக்கையறைகள் கொண்ட 304 வீடுகளும் இந்த வீட்டுத்திட்டத்தில்உள்ளடங்குவதுடன் வாகன தரிப்பிடம், சிறுவர் பூங்கா, உடற்பயிற்சி நிலையம்,வர்த்தகத் தொகுதி, நீச்சல் தடாகம் உள்ளிட்ட அனைத்தும் இந்த வீட்டுத்திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

## இலங்கையில் அதிகரிக்கும் மார்பகப் புற்றுநோய்

# ஆரம்ப கட்டத்தில் இனங்காணும் விழிப்புணர்வு மக்களுக்கு அவசியம்

**மர்லின் மரிக்கார்**

உலகில் மார்பகப் புற்று நோய்க்கு உள்ளாவோர் அதிகம் உள்ள நாடாக இலங்கை விளங்குவதாக சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய்கள் கட்டுப்பாட்டு திட்டப் பணிப்பாளர் டொக்டர் ஜானகி வித்தான பத்திரன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

உலகில் மார்புப் புற்று நோய்க்கு 24 வீதமான பெண்கள் உள்ளாகின்ற போதிலும் இந்நாட்டில் 26 வீதமான பெண்கள் இந்நோய்க்கு உள்ளாவதாகவும் அவர் கூறினார்.

இந்நாட்டில் நாளொன்றுக்கு பத்து பேர் என்றபடி வருடமொன்றுக்கு 3,500 பேர் இப்புற்றுநோய்க்கு உள்ளானவர்களாக இனங்காணப்படுவதாகத் தரவுகள் தெரிவிக்கின்ற அதேநேரம், நாளொன்றுக்கு இருவர் படி 700 பேர் இந்நோயினால் உயிரிழப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்

உலக மார்பு பற்றுநோய்கள் தொடர்பாக அறிவூட்டும் மாதம் குறித்து சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டுக்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் டொக்டர் சமாதி ராஜபக்ஷ, அவிசாளை தள வைத்தியசாலையில் புற்றுநோய்கள் தொடர்பான சிகிச்சை நிபுணர் ஜாலிய ஜயசேகர, தேசிய புற்றுநோய்கள் கட்டுப்பாட்டு திட்டத்தின் சமூக மருத்துவ நிபுணர்கள் டொக்டர்கள் சுராஜ் பெரேரா, நயனா டி அல்விஸ், புற்றுநோய்கள் தொடர்பான இந்திரா நிதியத் தலைவர் டொக்டர் லங்கா ஜயசூரிய, சமூக மருத்துவ நிபுணர் ஷெரின் பாலசிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



இச்செய்தியாளர் மாநாட்டில் டொக்டர் ஜானகி விதான பத்திரன தொடர்ந்தும் உரையாற்றுகையில், 'மார்பு புற்று நோய் பெண்களுக்கு மாத்திரம் ஏற்படக்கூடிய நோயல்ல. ஆண்களுக்கும் ஏற்படவே செய்கின்றது. ஆனாலும் இப்புற்றுநோய்க்கு உள்ளாவோரில் பெரும்பகுதியினர் பெண்களாவர். ஆனால் இந்நோயை ஆரம்ப கட்டத்தியே இனம் கண்டு உரிய சிகிச்சைப் பெற்றுக்கொண்டால் நோயை முழுமையாகக் குணப்படுத்தி விடமுடியும்.

இவ்வாறு ஆரம்ப கட்டத்திலேயே இந்நோயை இனம் கண்டு சிகிச்சை பெற்று முழுமையாகக் குணமடைந்தவர்கள் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அதன் காரணத்தினால் இருபது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தம் மார்பு தொடர்பில் சுய பரிசோதனை செய்வதில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும்.

அதேநேரம் 'சுவநாரி' மற்றும் 'சுவதிவிய' கிளினிக்குகள் பிரதேச மட்டத்தில் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன.

இவற்றின் மூலம் இந்நோய் தொடர்பில் தெளிவுகளைப் பெறலாம் குறிப்பாக மார்பகங்களில் திடீரென மாற்றங்கள், வித்தியாசங்கள், கட்டி, வலி மற்றும் சுமை போன்ற உணர்வு போன்றவாறான அறிகுறிகள் தென்படுமாயின் தாமதியாது தகுதியான மருத்துவ நிபுணரை அனுகி சிகிச்சையுடன் கூடிய மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கிளிநொச்சியில்

# அரசாங்க தகவல் திணைக்கள மாவட்ட அலுவலகம் திறப்பு

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகம் நேற்று (03) திறந்து வைக்கப்பட்டது.

கிளிநெச்சிக்கு விஜயம் மேற்கொண்ட ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மற்றும் ஊடகத்துறை, தபால் துறை இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் சேனாநாயக்க உள்ளிட்டவர்கள் இதனை திறந்து வைத்தனர்.

மாவட்டத்திற்கு ஒரு அலுவலகம் என 25 அலுவலகங்கள் ஏற்படுத்தப் படுவதோடு, மாணவர்களிடையே ஊடக கல்வியை மேம்படுத்தவும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப் படும் எனத் தெரிவித்த அமைச்சர் பிராந்திய ஊடகவியாளர்களின் நலன்கள் தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்வோம், அவர்களின் நெருக்கடிகள், தொடர்பில் நாம் நன்கு அறிவோம்.

எனவே பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான அமைப்பை உருவாக்கி அதன் மூலம் அவர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு கவனம் செலுத்தப்படும் என்றார்.

## சாரதிக்கு திடீர்...

முறித்துக்கொண்டு முன்னாலிருந்த பாலத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் வீதி ஓரத்திலிருந்த முச்சக்கரவண்டி ஒன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. விபத்தில் எவருக்கும் பாரிய காயம் ஏற்படவில்லை எனவும், முன்னாலிருந்த பயணிகள் ஒரு சிலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

திடீரென சாரதிக்கு சுகவீனம் ஏற்பட்டதன் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பஸ்ஸின் நடத்துனர் தெரிவித்தார்.

சாரதிக்கு இதற்கு முன்னரும் இவ்வாறு சுகவீனம் ஏற்பட்டதாகவும் இதன்போது இவ்வாறானதொரு விபத்தும் இடம்பெற்றதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

## 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க...

வாரமஞ்சரிக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் மேற்கண்டவாறு கூறிய சுமந்திரன்,

கடந்த வாரம் இந்தியப் பிரதமருடன் நடத்திய இணையவழி பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போதுகூடப் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகத் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதில் தமக்குள்ள அர்ப்பணிப்பான ஈடுபாட்டைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எடுத்துரைத்திருக்கிறார்.

எனவே, பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் தொடர்ந்தும் பேணப்பட்டு மாகாண சபை முறையும் நடைமுறையில் இருக்கும் என்பதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எந்தச் சந்தேகமும் இல்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பிராந்திய ஊடகவியலாளர்களின்...

தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிராந்திய ஊடகவியலாளர்களின் நிலைமைகள் மோசமானது அவர்களுக்கு கிடைக்கின்ற வருமானம் அவர்களது வாழ்க்கையை கொண்டு செல்ல போதுமானது அன்று. பல பிராந்திய ஊடகவியலாளர்கள் தங்களது கையடக்க தொலைபேசி மூலமே ஊடகத் தொழிலை மேற்கொள்கின்றனர். பலருக்கு காணியில்லை, காணியிருந்தால் வீடு இல்லை. இப்படி ஏராளமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவேதான் நாம் பிராந்திய ஊடகவியலா ளர்களின் நலன்கள் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தவுள்ளோம் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## பசுவதைக்கு எதிராக...

அவருடன் இருந்த உதவியாளரைக் கட்டிவைத்துவிட்டு, பூசகரை அடித்துக் கொலை செய்து விட்டு தப்பி சென்றுள்ளது.

புங்குடுதீவு ஊரதீவுச் சிவன் கோவில் பூசகரான கிளிநொச்சியைச் சேர்ந்த ரூபன் சர்மா (வயது33) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

புங்குடுதீவில் பல ஆலயங்களில் பூஜை செய்யும் அவர், பசுவதைக்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வந்ததுடன், பொலிஸாருக்கும் தகவலை வழங்கி அவற்றைக் கட்டுப்படுத்தி வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கொலையுடன் பூசகருடன் வீட்டிலிருந்த உதவியாளருக்கும் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவர் பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டு, தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மூன்றிலிரண்டு பெரும்பான்மை கொண்ட...

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாட்டுக்கு பொருத்தமான புதிய அரசியலமைப்பை அரசாங்கம் உருவாக்கும்.

நாட்டுக்கு பொருத்தமான அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காகவே மக்கள் எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கியுள்ளனர்.

அதற்கிணங்க நிச்சயம் அதனை நிறைவேற்றுவோம் அதற்கு முன்பாக தற்காலிகமாகவே 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்ட மூலம்நிறைவேற்றப்படும்.19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தால் இந்த நாடு அழிவை நோக்கி பயணித்தது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரால் இணைந்து செயற்பட முடியாத நிலை அதனால் ஏற்பட்டது. சுயாதீனம் என்ற போர்வையில் பழிவாங்குவதற்காக ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டனர். அந்த வகையில் தங்கையைக் காட்டி அக்காவை மணமுடித்து வைப்பது போன்று அன்றைய ஆட்சிக்காலத்தில் 19 ஆவது அரசியலமைப்புக்கான நடவடிக்கைகள் இடம்பெற்றன.

அரசாங்கம் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வந்து அதனை நீக்கும்.

அதேவேளை ஆளும் கட்சிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ள நிலையில் எவரது ஆதரவும் அவசியம் இல்லை. எனினும் வெளியிலிருந்து எவரும் வந்து இணைந்தாலும் எமக்குப் பிரச்சினை கிடையாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஆயுதமேந்தியோரை தெற்கில்...

தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்குபவர்களை அரசாங்கம் தனது கணிப்பீட்டின்படி "பயங்கரவாதிகள்" என்கிறது. அப்படியானால், 1970ஆம் , 80ஆம் ஆண்டு களில் இலங்கை அரசுக்கும், இராணுவத்துக்கும் எதிராக ஆயுதம் தூக்கிய ஜேவிபியின் தேசப் பிரேமி இயக்க போராளிகள், இவர்கள் வருடாவருடம், தெற்கில் பகிரங்கமாக நினைவுகூரப்படுகிறார்கள்.

ஆனால், அதே சிறப்புரிமை, தமிழர்களுக்கு இல்லை. "தமிழ் பயங்கரவாதிகளை" என்ற தமிழ் ஆயுததாரிகளை மட்டுமல்ல, பல வேளைகளில் மரணித்த சாதாரண மக்களையே பகிரங்கமாக நினைவு கூர, தமிழர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

இது இந்நாட்டில் நீண்ட நாளாக நடந்து வரும் ஒரு இரட்டை நிலைப்பாடு கொண்ட பாரபட்ச கொள்கை ஆகும்.

மறைந்த தமது உறவுகளை தமிழர் நினைவு கூருவது மறுக்கபடுவதும், அதே உரிமை பெரும்பான்மைக்கு வழங்கப்படுவதும், இந்நாட்டில் அரசின் இரட்டை கொள்கையின் அடிப்படையில் இருக்கிறது. தமிழ் மக்களை பொறுத்தவரையில் இது பெரும் சோகமாக அமைகிறது.

இந்த இரட்டை கொள்கை உடன் முடிவுக்கு வரவேண்டும். இதுபற்றி தேசிய கலந்துரையாடல் நடைபெற வேண்டும்.

இதுபற்றி எவருடன் வேண்டுமென்றாலும், மூன்று மொழிகளிலும் பகிரங்க விவாதம் நடத்த நான் தயார் என்றும்மனோ தெரிவித்துள்ளார்.

## எதிரான மனுக்கள் மீதான விசாரணை...

சிசிர டி ஆப்ரு, பிரியந்த ஜயவர்தன, விஜித மலல்கொட ஆகிய ஐவர் அடங்கிய உச்சநீதிமன்ற நீதியரசர் குழாம் முன்னிலையிலேயே மேற்படி மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

கடந்த 02 ஆம் திகதி மேற்படி மனுக்கள் தொடர்பான விசாரணைகளின் போது 39 மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அதனையடுத்து கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் சார்பில் மனு ஒன்றை தாக்கல் செய்த ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன, அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தம் அரசாங்கத்தினால் தன்னிச்சையாக முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலம் அல்ல என்பதை தெளிவுபடுத்தினார்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமலே நிறைவேற்றப்பட்டதாக குறிப்பிட்ட அவர் அவ்வாறிருக்கையில் தற்போது அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் சர்வஜன வாக்கெடுப்பு க்காக விடப்பட வேண்டுமென்பது தர்க்கரீதியானதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை என அப்போது உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில் தற்போது அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பிலும் அதே நடைமுறையை பின்பற்றலாம் என்பதையும் ஜனாதிபதி சட்டத்தரணி மாரப்பன சுட்டிக் காட்டியுள்ளார்.

(ஸ)

## நாட்டின் 25 மாவட்டங்களிலும்...

மாற்றங்கள் ஏற்படப்போகின்றன. ஊடகத்துறை, இலங்கையிலும் சர்வதேச அளவிலும் சமூக, அரசியல் அரங்குகளில் பெரும் சொல்வாக்கு செலுத்தத்தான் போகிறது.

எனவே நாம் கூட்ஸ் வண்டியில் பயணித்துக் கொண்டிருக்க முடியாது. ஜெட் வேகம் பிடிக்க வேண்டுமானால் ஊடகத்தை விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இளைய சமூகத்துக்கு ஊடகக் கல்வியை அளிக்கவும் வேண்டும். யாழ். பல்கலைக்கழக ஊடகப் பிரிவு வெகு சிறிப்பாக செயற்பட்டு வருவதை இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இங்கே உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகத்தை இன்னொரு கோணத்தில் பார்த்தார். ஒரு பொய்யைத் திரும்பத் திரும்ப சொல்லி வந்தால் அது உண்மை போலவாகிவிடும் என்று குறிப்பிட்ட அவர், ஊடகங்கள் அப்படியும் செய்கின்றன என்றார்.

ஒரு கட்சிப் பத்திரிகை கூறி வந்தவற்றை அப்படியே நம்பி ஆயுத பலத்தால் மட்டுமே உரிமைகளைப் பெறலாம் என தாம் நம்பி ஆயுதம் தூக்கியதாகவும் தற்போது உரிமைகளை ஜனநாயக வழிகளிலும் அடையமுடியுமென உறுதியாக நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

செய்திகள் செம்மையாகவும், நேர்மையாகவும் அமையவேண்டும், புண்படுத்துவதாக அல்ல என்பது தான் அவர் சொல்ல வந்த விஷயம் என்றும் அமைச்சர் செஹெலிய ரம்புக் வெல்ல மேலும் தெரிவித்தார்.

## மக்கள் நலனின் அடிப்படையில்...

கலந்துரையாடப்பட்ட நிலையிலேயே மேற்படி கருத்து அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த, தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் நிருபராஜ், அண்மைய சர்வதேச ஆய்வுகளின் அடிப்படையில், உலகளவில் தேவைப்படுகின்ற மொத்த உணவுத் தேவையில் 70 வீதத்தை நீர் வேளாண்மை ஊடாகவே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுககள் ஸ்தாபனம் தெரிவித்துள்ள நிலையில் எமது பிரதேசங்களிலும் நீர் வேளாண்மையில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

எனினும், மக்கள் மத்தியில் நீர் வேளாண்மை பற்றிய பூரணமான புரிதல் இன்மை காரணமாக, தங்களுடைய பாரம்பரிய தொழில்முறைகளுக்கு ஆபத்து ஏற்பட்டு விடும், சூழல் பாதிப்பு ஏற்படும் போன்ற அடிப்படையற்ற சந்தேகங்களை வெளிப்படுத்தி வருகின்றனர் என்று தெரிவித்தார்.

இந்நிலையில் கருத்து தெரிவித்த அமைச்சர், மக்கள் நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானங்கள் அமைய வேண்டுமெனவும், நீர் வேளாண்மை செயற்பாடுகளின் போது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அனைத்து நியமங்களும் பின்பற்றப்பட வேண்டும் என்பதுடன் கடலட்டை மற்றும் இறால் உற்பத்தி தொடர்பாக மக்களுக்கு பூரண விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாராளுமன்றம் நாளை...

நிதி திருத்தச் சட்ட மூலம் மீதான இரண்டாவது வாசிப்பு மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள கட்டளைகள் தொடர்பிலும் எதிர்வரும் ஆறாம் திகதி விவாதம் நடத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் ஆளும் கட்சியினால் சமர்ப்பிக்கப்படவுள்ள சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை பிற்பகல் 4.30மணி முதல் 5. 30 மணிவரை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 07ஆம் திகதி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி திருத்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மற்றும் பொருளாதார சேவை கட்டணம் திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு, துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி திருத்த சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு ஆகியன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அன்றைய தினம் பிற்பகல் 4 30 மணி தொடக்கம் ஐந்து முப்பது மணி வரை ஆளும் கட்சியினால் சமர்ப்பிக்கப்படும் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

அதனையடுத்து 08ஆம் திகதி சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையாக வெளிநாட்டு உடன்படிக்கைகள் தொடர்பில் சபையில் விவாதம் நடைபெறும்.

எதிர்க் கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்த யோசனைகளுக்கிணங்க அனைத்து வெளிநாட்டு உடன்படிக்கைகள் தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் தொடர்பில் ஆளும் கட்சியின் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளது அதற்கிணங்க அந்த விவாதம் அன்றைய தினம் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4 30 மணி வரை இடம்பெறவுள்ளது.

ஒக்டோபர் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைகள் நடைபெறவுள்ளன. அமரர் சுரங்கனி எல்லாவல, அமரர் ஆர்.ஆர்.டபிள்யூ ராஜபக்ஷ, அமரர் கே பி சில்வா ஆகியோரது அனுதாபப் பிரேரணைகளே நடைபெற உள்ளன. (ஸ)

# துன்பத்தை மகிழ்ச்சியாக ஏற்று வாழ்ந்த புனித குழந்தை திரேசாள்

அருட்பணி
ஜோசப் கென்னடி

## கொழும்பு திம்பிரிகஸ்யாய புனித திரேசாள் ஆலய திருவிழா இன்று





கொழும்பு திம்பிரிகஸ்யாய புனித திரேசாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று ஒக்டோபர் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாயின. தினமும் மாலை ஆறு மணிக்கு நவநாள் ஆராதனைகளுடன் திருப்பலியும் இடம் பெற்றன.

நேற்று 3ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வெஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெற்று திருச்சூருப பவனியும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து இன்று ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலி பங்குத் தந்தை அருட்பணி சந்தன பெரேரா, அருட்பணி ஜோசப் கென்னடி ஆகியோரினால் நிறைவேற்றப்படவுள்ளது.

புனித திரேசாள் 1873 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் உள்ள அலேன்கோன் என்ற இடத்தில் மேரி பிரான்காய்ஸ் மற்றும் தெரசா மார்ட்டின் என்பவர்களுக்கு ஒன்பதாவது மகளாகப் பிறந்தவர்.

இவர் சிறுமியாக இருந்தபோதே இறைவனின் அழைப்பை உணர்ந்தார். ஆனால் வயது குறைவாக இருந்ததால் இவரை எந்த துறவறசபையும் ஏற்றுக் கொள்வதாக இல்லை. ஆனாலும் இவர் இவரின் மூத்தசகோதரி இருந்த கார்மல் மடத்தில் சேர விரும்பினார். எனவே தன் தந்தையை அழைத்துக் கொண்டு உரோம் சென்று திருத்தந்தையின் சிறப்புக் கடிதம் வாங்கி வந்து சபையில் சேர்ந்தார்.

இவள் தன் வாழ்க்கையில் தன் தலைவனாம் இயேசுவைப் பின்பற்றி எளிய வாழ்க்கைப்பாதையைத் தனக்கென உருவாக்கிக் கொண்டவள். அதுதான் அன்பு வழி. அன்பு ஒன்றை மட்டுமே அதுவும் இறை அன்பை மட்டுமே முன்னிலைப் படுத்தி தன் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டவள். அக்டோபர் முதலாம் திகதியில் திருச்சபை இப் புனிதையின் திருவிழாவினை கொண்டாடுகின்றது.

துன்பம் என்றால் விழுந்தடித்து ஓடும் மக்களைத்தான் நாம் பார்க்கின்றோம். ஏன் நாம் கூட அவ்வாறு தான் இருப்போம். ஆனால் துன்பத்தை விரும்பி ஏற்றுக் கொண்டு துன்பத்தின் மத்தியில் ஒருவர் வாழ்ந்தார் என்றால் புனிதை குழந்தைத் தெரசாள் தான்.

இறைவன் இயேசு தன்னைப் பின்பற்ற விரும்புகின்றவர் எப்படி இருக்கவேண்டும் என்று விரும்பினாரோ அவ்வாறே தனக்கும் என்று சொல்லி இயேசுவைப் பின்பற்ற விரும்பியவள். இயேசு சொன்னது என்ன? “என்னை பின் பற்ற விரும்பும் எவரும் தன்னலம் மறந்து, தன் சிலுவையை சுமந்து கொண்டு என்னைப் பின்பற்றட்டும்”மாற் 8:34 என்பதே. அவரது வாழ்க்கையில் உந்து சக்தியாக இருந்தது என்றால் மிகையாகாது.

“இயேசுவுக்காகத் துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்பதே என் விருப்பமாக இருந்தது”என்கிறார் அவர். மேலும் அவர் “துன்பத்தை நாம் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளும் போது என்னால் என் இயேசுவை அதிகமாக அன்பு செய்ய முடியும்" என்கிறார்.

நாம் துன்பத்தை அனுபவிக்கும்போதுதான் நாம் பிற ஆன்மாக்களை மீட்கமுடியும் என்று கூறுகின்ற நம் புனித என் மரணவேளையில் என்னால் ஒரு ஆன்மாவை மீட்கமுடியும் என்றால் நான் மிகுந்த மகிழ்ச்சிஅடைவேன் என்கிறார். ஆக துன்பத்தை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டுஅதன் மூலமாக இயேசுவின் துன்பத்தில் பங்கெடுத்து உண்மையான சீடராக வாழ்ந்தவர்.

நம்முடைய வாழ்க்கையில் சிறியதுன்பம் வந்தாலும் நாம் நிலைகுலைந்து போய்விடுகின்றோம். கடவுளைவிட்டுவிலகிப்போகவிரும்புகின்றோம் அல்லதுகடவுள் இல்லை என்று மறுதலிக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால் இப்புனிதையின் வாழ்க்கை நமக்குக் கற்றுக் கொடுக்கும் பாடம் மிகவும் வித்தியாசமானதாக இருக்கின்றது.

இவள் தனது 15 வயதில் துறவியாகி கடவுளுக்குத் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து தனது 24வது வயதில் இவ்வுலகைவிட்டு இறைபதம் சேர்ந்தவள். மிகக் குறுகிய காலமே வாழ்ந்திருந்தாலும் இவளது வாழ்க்கை முறை வித்தியாசமானதாகவே இருந்தது.

தனது 23 வதுவயதிலே காசநோய் இவளை நோயாளியாக்கியது. அந்த வேளையிலும் இவள் தன் தலைவனாம் இயேசுவின் மீது இருந்த அன்பு துளி கூட குறையவில்லை. இவள் வாழ்க்கையில் இலக்காகக்கொண்ட இறைவனுக்கும் தனக்கும் உள்ள உறவை தொடர்ந்து கடைப் பிடிக்க செபத்தையும் தான் பட்டவேதனை துன்பம், நோய் அனைத்தையும் இயேசுவின் துன்பத்தோடு இணைத்துக் கொண்டு வாழ்வதையும் தொடர்ந்தார்.

அதே சமயம் இறக்கும் வரை என்னால் முடிந்த சின்னச் சின்ன காரியங்களையும் தனது எளியவழியில் செயற்படுத்தி இறைவனின் அன்பை இந்த உலகிற்கு எடுத்துக்காட்டுவதே என் கடமை என்று இறுதி வரையிலும் வாழ்ந்தும் காட்டினாள்.

யார் என் தாய், யார் என் சகோதரர் யார் என் சகோதரி?கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் தாயும் என் சகோதர சகோதரியும் ஆவர்” மாற்கு 3: 3335 என்ற இறை கூற்றிற்கேற்ப தன் வாழ்க்கையில் இறை திருவுளத்தை நிறைவேற்றி தான் இறைவனின் பிரியமான மகளாக வாழ்ந்து காட்டியவள்.

இறுதியில் அவள் தனது 24வது வயதில் 1897ல் இவ்வுலக வாழ்க்கையை நிறைவுசெய்து தன் தந்தையிடம் அவர் பெறவேண்டிய பரிசினைப் பெறசென்று விட்டாள். அவளது இறுதி வார்த்தையானது, “என் இறைவனே நான் உன்னை அன்பு செய்கின்றேன்” என்பதாகும். ஒருவரை புனிதராக அறிவிக்க அதற்கான முன் முயற்சியை செய்யவேண்டும் என்றால் அவர் இறந்து 50 ஆண்டுகள் கழித்துதான் அதனைத் தொடங்குவார்கள்.

ஆனால் இவருடைய வாழ்க்கை முறையைப் பார்த்த திருச்சபை அவர் இறந்த 28 ஆண்டுகளுக்குள் அவருக்குப் புனிதர் பட்டம் கொடுத்து அழகு பார்த்தது. திருத்தந்தை 15ம் ஆசீர்வாதப்பர் அவர்கள் அதனையடுத்து1921 ஆகஸ்ட் மாதம் 14ஆந் திகதி வணக்கத்திற்குரியவர் என்ற பட்டத்தையும் 1923 ஏப்ரல் மாதம் 29ஆந் திகதியன்று அருளாளர் பட்டத்தையும் வழங்கினார். 1925ஆம் ஆண்டு மே மாதம் 17ஆந் திகதி அவருக்குப் புனிதர் பட்டம் திருத்தந்தை 9ஆம் பத்திநாதரால் வழங்கப்பட்டது.

எளிய வாழ்க்கை, செபவாழ்வு மற்றும் துன்பத்தின் வழியாக இறைவனை நெருங்குதல் இறைவனின் திருவுளத்திற்கு எப்போதும் கீழ்ப்படிந்து வாழ்தல், எளிய வழி மூலமாக மட்டுமே இறைவனை அடைய முடியும் என்ற இலக்கோடு வாழ்ந்து எமக்கு முன்னுதாரணமாகியுள்ளார் நம் புனிதை.

அவரைப்போல் நாமும் வாழ்ந்து காட்டி இறைவனை நாமும் அடைய முடியும். இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக.

---

# இரு தாய்க்கு ஒரு பிள்ளை



# மாளிகைக்காடு' சுனாமி இளைஞன்' விடயத்தில் வெடித்தது சர்ச்சை

சுனாமியில் காணாமல் போன மகன் 16 வருடங்களின் பின்னர் திரும்பி வந்த சம்பவம் , அனேகரது கவனத்தையும் ஈர்த்தது. இந்த சம்பவத்தில் திடீர் திருப்பம் சுனாமியில் காணாமல் போன மகனை அம்பாறை பிரதேசத்தில் வளர்த்தக்காக கூறப்படும் தாயை ஊடகவியலாளர்கள் சந்தித்த போது ஏற்பட்டுள்ளது.

மகன் வீட்டுக்கு திரும்பிவிட்டதாக மாளிகைக்காடு பிரதேசத்தை சேர்ந்த அபுசாலி சித்தி கமாலியா எனும் தாய் சொன்னதை நம்பி ஊடகவியலாளர்கள் வீடு திரும்பிய மகனையும் தாயையும் செவ்வி கண்டனர். தனது மகன் வீடு திரும்பி விட்டதாக கூறி ஊடகங்கள் முன்னிலையில் மகிழ்ச்சியுடன் அறிவித்தார், மாளிகைக்காடு பிரதேசத்தை சேர்ந்த அபுசாலி சித்தி கமாலியா. ஆனால் ஊடகங்கள் கேள்வியெழுப்பி போது வீடுதிரும்பிய தன் மகனுக்கு தமிழ் பேசுவதில் சிக்கல் இருப்பதாகக் கூறி ஊடகங்கள் முன்னிலையில் மகனை வாய்திறக்க விடாமல் தடுத்தும் வந்தார். ஆனால் இப்போது உண்மைகள் வெளிச்சத்திற்கு வர ஆரம்பித்துள்ளன.

வளர்ப்பு தாயாக அடையாளப்படுத்தப்பட்ட அம்பாறை பிரதேச தாய் தன்னுடைய மகன் ஏமாற்றப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸில் புதன்கிழமை (30) முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பல கோணங்களிலும் பலரிடமும் விசாரணை செய்த போது பல விடயங்கள் தெரியவருகிறது. அதனடிப்படையில் பல வருடங்களாக பிள்ளையை இழந்து தவித்துக்கொண்டிருந்த மாளிகைக்காடு பிரதேசத்தை சேர்ந்த அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஊழியராகப் பணியாற்றும் அபுசாலி சித்தி கமாலியா, அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் மூலம் காணாமல் போன தன்னுடைய மகன் முகம்மட் அக்ரம் றிஸ்கான் அம்பாறை பிரதேச வீடொன்றில் வளர்வதாக அறிந்துகொள்கிறார். பின்னர் மகன் வளர்வதாக கூறப்பட்ட அம்பாறை பிரதேச வீட்டிற்கு சென்று சில வருடங்களாக அவர்களிடம் வளர்வது தன்னுடைய மகன் தான் என்பதாக வாதாடி வந்துள்ளார். அங்கு மாறுபட்ட வித்தியாசமான வேடங்களிலும் சென்ற அபுசாலி சித்தி கமாலியா அந்த குடும்பத்தின் சார்பில் எல்லோரிடமும் வாதாடி வந்துள்ளார்.



அபுசாலி சித்தி கமாலியாவுக்கு ஒரேயொரு பிள்ளைதான். அதுவும் சுனாமியில் காணாமல் போய்விட்டதால் பெரும் கவலையடைந்தார். கணவரும் அபுசாலி சித்தி கமாலியாவுடன் இல்லை. மகன் பிறந்து நாலாவது மாதம் கணவர் பிரிந்து சென்று வேறு மணம் செய்துகொண்டார். சுனாமியில் காணாமல் போன மகனின் சிறிய வயது புகைப்படத்தை அன்று காட்டியது போலவே இன்றும் காண்பிக்கிறார் அபுசாலி சித்தி கமாலியா. வந்திருப்பது தன்னுடைய மகன் தான் என அவர் நிரூபிக்க வைத்திருக்கும் ஆதாரத்தில் அதுவும் ஒன்று. அது தவிர பிறப்பு சான்றிதழும் வைத்துள்ளார். அவ்வளவுதான் அவர் வைத்திருக்கும் ஆதாரம்.

திரும்பி வந்ததாக கூறப்படும் மகனுடனும் பேசினோம். சரளமாக சிங்களத்தில் பேசும் அவர் தமிழில் பேசுவதற்கு மிகவும் சிரமப்பட்டார். அவர் இதுவரை வாழ்ந்து வந்த இடம் பற்றிய தகவலையும் வீட்டு முகவரியினையும் அவரிடமிருந்து கடுமையாக துருவித்துலாவி பெற்றுக் கொண்டோம். ஆனால் அந்த தாயின் தொலைபேசி இலக்கத்தை வழங்க கோரியபோது தனக்கு தெரியாது என மறுத்துவிட்டார்.

தனது மகனின் பெயர் முகம்மட் அக்ரம் றிஸ்கான் என்று கமாலியா கூறிய போதும், அந்தப் பையனோ தன்னை அம்பாறை பிரதேச வீட்டில் அழைக்கும் தனது பெயர் முகம்மட் சியான் என்கிறார்.

அம்பாறை பிரதேச தாய் நூறுல் இன்ஷானிடம் கேட்ட போது 'கமாலியா எனும் பெண் எனது மகனைத் தேடி இங்கு அடிக்கடி வந்துள்ளார். அந்த காலகட்டத்தில் நான் பணிப்பெண்ணாக வெளிநாடு சென்றிருந்தேன். அந்தப் பெண்ணிடம் எனது தாயார் (சியானின் பாட்டி), 'சியான் எங்கள் பிள்ளை' என்று கூறியிருக்கிறார். ஆனால், அவர் அதனைக் கருத்தில் எடுக்காமல் அடிக்கடி வந்து தொந்தரவு செய்திருக்கிறார்' என்றார்.

மேலும் தனது மகன் சியான் அம்பாறையிலுள்ள சத்தாதிஸ்ஸ எனும் பாடசாலையில் முதலாம் வகுப்பில் மூன்று மாதங்கள் வரை கல்வி கற்றார். அதன் பின்னர் என்னை (சியானின் தாயை) ஹம்பாந்தோட்ட பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் திருமணம் செய்து ஹம்பாந்தோட்ட பிரதேசத்திற்கு அழைத்துச் சென்றார். அதனால் முதலாம் வகுப்பிலிருந்து 05ஆம் வகுப்பு வரை ஹம்பாந்தோட்டயிலுள்ள பாடசாலையொன்றில் சியான் படித்தார்.

பின்னர், நான் (சியானின் தாய்) மீண்டும் அம்பாறை வந்தேன். 05ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை மீண்டும் அம்பாறையிலுள்ள பாடசாலைக்கு சியான் சென்றார். அதன் பிறகு அவர் படிப்பை தொடரவில்லை என்கிறார்.

இது இவ்வாறு இருக்க கொழும்புக்கு வேலை தேடிச்சென்று அவ் இளைஞர் வேலை செய்து கொண்டிருந்த போது சம்பவ தினத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் மாளிகைக்காடு பிரதேசத்தை சேர்ந்த ஒருவர்மூலம் பேசியுள்ளார் அபுசாலி சித்தி கமாலியா. குறித்த நபர் கமாலியாவுக்கும் அவரது மகனுக்கும் உதவும் நோக்கில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் கடந்த கால பிரத்தியோக செயலாளர் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு அவ்விளைஞனுக்கு தொழில் வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி தன்னுடைய காரிலையே தன் வீட்டிற்கும் அழைத்து வந்துள்ளார்.

16 வருடங்களின் பின்னர் வீடு திரும்பிய செய்தியை கேள்வியுற்ற இளைஞரை காண ஊடகங்கள் வந்து சேர்ந்தன. ஊடகங்களின் வாயிலாக தகவலறிந்த அம்பாறை மக்கள் ஆவலுடன் அந்த இளைஞரை காண வந்தனர். தகவல் காட்டுத்தீயாக பரவியது. ஊடகங்கள் செய்தியை ஒளிபரப்பியதும் அது வளர்ப்பு தாயான அம்பாறை நூறுல் இன்ஷானை சென்றடைகிறது. அதுமாத்திரமில்லாது செய்தியறிய சென்ற ஊடகவியலாளர்களின் கேள்விகளின் பின்னரே அவர் தன்னுடைய மகன் கொழும்பில் வேலையில் இல்லை. மாளிகைக்காட்டில் இருப்பதை அறிகிறார்.

பிரச்சினையை அறிந்து கொண்ட வளர்ப்பு தாயாக அடையாளப்படுத்தப்பட்ட அம்பாறை பிரதேச தாய் நூறுல் இன்ஷான் சம்மாந்துறை பொலிஸில் கடந்த புதன்கிழமை (30) முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார். அம்முறைப்பாட்டுக்கான விசாரணை வியாழக்கிழமை (01) நடைபெற்றது. இரு தரப்பினரிடமும் விசாரணை செய்த சம்மாந்துறை பொலிஸ் நிலைய அதிகாரிகள் இரு தரப்பினரிடமும் வாக்கு மூலத்தையும் பெற்றுக்கொண்டனர். இருதரப்பினரும் அவ்விளைஞன் தமது பிள்ளை என்பதற்கான ஆதாரங்களை முன்வைத்து தமது பக்க நியாயங்களை முன்வைத்தனர். தீர விசாரித்த சம்மாந்துறை பொலிஸார் இவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க எதிர்வரும் நாட்களில் நீதிமன்றத்தில் வழக்கொன்றை பதிவுசெய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக அறிய முடிகிறது.

வளர்ப்பு தாயாக அடையாளப்படுத்தப்பட்ட அம்பாறை பிரதேச தாய் நூறுல் இன்ஷானைப் பற்றியும் மகனைப் பற்றியும் அறிந்துகொள்ள முற்பட்ட போது அவர் அம்பாறை நூறுல் இன்ஷானின் மகன்தான் என்பதையும் அவர் 2001 ஏப்ரல் 19 ம் திகதி பிறந்த அமீர் சிஹான் எனும் பெயரை உடையவர் என்பதையும் குடும்பத்தினர் பலரும் சாட்சி பகிர்கின்றனர். அவர் அங்கு பிறந்து வளர்ந்தமைக்கான ஆதாரங்கள் பலதையும் அவர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

அவர் தன்னுடைய மகன் அமீர் சிஹான் என்பதற்கான சகல ஆதாரங்களும் தன்னிடம் இருப்பதாக கூறுகிறார் அம்பாறை தாய். நூறுல் இன்ஷான். இல்லை சுனாமியில் காணாமல் போன தன்னுடைய மகன் முகம்மட் அக்ரம் றிஸ்கான் என்கிறார் மாளிகைக்காடு தாய் சித்தி கமாலியா. இப்போது நீதிமன்றமே யாருடைய பிள்ளை என்பதை தீர்மானிக்க வேண்டும் என்றாகி விட்டது பிரச்சினை.

நூருல் ஹுதா உமர்

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 18ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 16

# தேசிய நல்லிணக்கமே தமிழரின் அனைத்துப் பிரச்சினைக்கும் தீர்வு

நாட்டில் இனங்களுக்கிடையே பிரச்சினைகள் உருவாகியதற்கும் உருவாகுவதற்கும் முக்கிய காரணிகளுள் பத்திரிகைகளும் அடங்கும் என்பதை யாரும் மறக்க மாட்டார்கள்.

அரசியல்வாதிகள் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காகத் தீர்க்கப்படாத ஒரு பிரச்சினை இருந்துகொண்டிருப்பதை விரும்புவார்கள் என்பது ஒரு பொதுவான கருத்தியல். அதேபோன்று பத்திரிகை விற்பனைக்கும் ஏதாவது ஒரு பிரச்சினை இருந்துகொண்டே இருக்க வேண்டும்.

அரசியல்வாதியின் கருத்துகளை அல்லது தகவல்களை சமூகமயப்படுத்தும்போது அல்லது வியாக்கியானப்படுத்தும்போது பத்திரிகைகள் தங்களின் வகிபாகத்தை மறந்துவிடுகின்றன. அந்த வேளையில், தாங்கள் வெளியிடும் கருத்துகளின் சாதக, பாதக நிலவரங்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை. நல்லிணக்கத்திற்காகப் பாடுபட வேண்டிய பத்திரிகைகள் சில வேளைகளில் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் பணியைச் செய்துவிடுகின்றன.

நாட்டில் முப்பது ஆண்டுகளாக நிலவிய போர்ச்சூழலுக்கும் பத்திரிகைகள் ஒரு வகையில் காரணமாக இருந்து வந்துள்ளன என்பதை மறுக்க முடியாது. அரசாங்கமானாலும் ஆயுதக் குழுக்களானாலும் அவர்களை விமர்சித்து நல்வழிப்படுத்தவோ சமரசப் பேச்சுவார்த்தைக்கு முனைப்பு காட்டவோ பத்திரிகைகள் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. சிங்களப் பத்திரிகைகள் தங்களுக்கு ஏற்றமாதிரியும் தமிழ்ப் பத்திரிகைகள் தங்களுக்கு ஏற்ற வகையிலும் செய்திகளை வெளியிட்டு வந்தன. ஆனால், அரச ஊடகங்கள் மாத்திரமே ஓரளவிற்கு யுத்த காலத்தில் உண்மைகளைக் கூறிவந்தன. அரச படைகள் அடைந்துள்ள முன்னேற்றத்தைச் சரியாகக் கூறின. ஆனால், தனியாருக்குச் சொந்தமான பத்திரிகைகள் எப்போதும் மிகைப்படுத்தியே செய்திகளை வெளியிட்டன. இப்போது யுத்தம் முடிவடைந்திருக்கும் நிலையிலும் பத்திரிகைகள் தங்களைச் சுயபரிசோதனை செய்துகொள்ளத் தவறியுள்ளன என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வாறு செயற்பட்டிருந்தால், கிழக்கு மாகாணத்தில் கருணா அம்மான் குறிப்பிட்ட ஒரு கருத்தையும் முன்னாள் நீதியரசர் விக்கினேஸ்வரன் சொன்ன ஒரு கருத்தையும் அடிப்படையாகக் கொண்டு நாட்டில் வீணான அரசியல் சர்ச்சைகள் உருவாகியிருக்க மாட்டா.

எனவேதான், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஊடகங்களுக்குள்ள பொறுப்பையும் அவற்றின் வகிபாகத்தையும் மீண்டும் தெளிவுபடுத்தியிருக்கிறார். தேசிய நல்லிணக்கமே தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்சினை உட்பட்ட அனைத்திற்கும் தீர்வு காண்பதற்குச் சிறந்த வழிமுறையாக இருக்குமென தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அத்துடன் மெய்ப்பொருள் காண்பதே ஊடகங்களின் நோக்காக இருக்க வேண்டும் என்ற வலியுறுத்தித் தெரிவித்துள்ளார். அதேவேளை, அவற்றை நேர்மையாக மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்ற பணியையும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்திருக்கிறார். யாழ். பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை (02) நடைபெற்ற தினகரன் நாளிதழின் 'வடக்கின் உதயம்' விசேட பதிப்பு வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் நோக்கோடு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்திருந்த போதிலும், காலப் போக்கில் சர்வதேச மற்றும் உள்ளூர் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள், இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னரான அரசியல் சூழலும் தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகவே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான சிறந்த வழிமுறை என்ற யதார்த்தத்தைப் புரிய வைத்ததாகவும் அமைச்சர் தேவானந்தா குறிப்பிட்டிருக்கின்றார்.

எனினும், யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாது சில ஊடகங்கள் தவறாக மக்களை வழிநடத்தியிருந்தமையும் எமது மக்கள் எதிர்கொண்ட பல்வேறு துன்பங்களுக்கான காரணங்களில் ஒன்றாக இருந்துள்ளது எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இந்நிலையில், எதிர்காலத்திலாவது ஊடகங்கள் தங்களை சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த அமைச்சர், மெய்ப்பொருள் காண்பதை இலக்காகக் கொண்டு ஊடகங்கள் செயற்படுவதுடன், மெய்ப்பொருளை மக்களிடம் எடுத்துச் சென்று, மக்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் நேர்மையாக செயற்பட வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன், சமூக ஊடகங்களின் தாக்கம் பாரம்பரிய ஊடகங்களின் செல்நெறியில் தளம்பல்களை ஏற்படுத்தியுள்ள இன்றைய காலகட்டத்தில், 'தினகரன்' போன்ற ஊடகங்கள் காலத்திற்குத் தேவையான மாற்றங்களை உள்வாங்குகின்ற அதேவேளை, ஊடக விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் இளைய தலைமுறையினரை வழிநடத்த வேண்டும் என்பதே விருப்பமாகும் என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தினகரன் நிறுவனத்தினர் காலத்தின் தேவையுணர்ந்து மேற்கொள்கின்ற புதிய முயற்சி வெற்றியடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்திற்கும் தினகரனுக்கும் உள்ள உறவின் நெருக்கம் பேராசிரியர் கைலாசபதியின் காலத்திலிருந்தே தொடர்ந்து நீடித்து வருகிறது. அந்த உறவின் நெருக்கத்தை மீள வலுப்படுத்தும் ஒரு நிகழ்ச்சியாகவே வடக்கின் உதயம் வெளியீடும் அமைந்திருக்கிறது. அந்த நெருங்கிய உறவைத் தற்கால சந்ததியினரும் அறியும் வகையில் தினகரன் தனது வகிபாகத்தைச் செய்து வருகிறது.

உண்மையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது மாத்திரமல்லாமல், தேசிய நல்லிணகத்தின் ஊடாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் குறைந்தபட்சம் தமிழ் ஊடகங்களாவது உறுதியுடன் செயற்பட வேண்டும்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# நிம்மதியாக வாழ நினைக்கும் சமூகத்திற்கு நாம் என்ன செய்யப்போகிறோம்?

சிங்கள எழுத்தாளர் இஸுரு சாமர சோமவீரவின் "திருமதி பெரேரா" என்ற சிறுகதை ஆண்நிலை நோக்கை, பெண்பார்வை சார்ந்து பேசுவது மட்டுமல்ல, மரபுசார்ந்த அதிகார நிலைப்பட்ட அத்தனை விதங்களையும் நிராகரிக்கும் விளிம்பு நிலை சார்ந்த பார்வையை முன்வைக்கிறது. இந்தக் கதையில் திருமதி பெரேரா மட்டுமல்ல, அதில் வரும் பூனைகள் கூட விளிம்பு நிலையினரின் வாழ்க்கையை அதிகார தரப்புகள் எப்படி நோக்குகின்றன என்றும் சொல்கிறது. உதாரணமாக கதையில் வரும் ஒரு பகுதி – "ப்ளாக்கிக்கு (பூனைக்கு) நேரத்துக்கு ஊசி மருந்து ஏற்றப்படுகிறது. வாலை மீனைச் சோற்றோடு பிசைந்து ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் வழங்கப்படுகின்றது. கிழமைக்கு ஒரு தடவை குளிப்பாட்டப்படுகிறது. பிரதான நுழைவாயிற்கதவை மூடி வைத்து விட்டு, கூட்டின் கதவைத் திறந்து விட்டு வீடு முழுவதும் இஷ்டம் போல நடமாடித் திரிய அனுமதிக்கப்படுகிறது. ஒரு பெண் பூனைக்கு இன்னும் வேறு என்னதான் வேண்டும்?" என்பது இலங்கையில் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் நிலையை பேரினவாதச் சிந்தனையினர் நோக்கும் விதம் இது என்று சொல்கிறது.





தமிழ் பேசும் சமூகத்தினருக்கு என்னதான் வேண்டும்? ஒரு பூனைக்குள்ள சாதாரண தேவைகளைப்போல, அவர்களுடைய அபிவிருத்தி, வாழ்க்கைத் தேவைகள் போன்றவற்றை சரிசெய்து விட்டால் போதும். அதற்கு மேல் வேறென்ன வேண்டியிருக்கிறது? என்றே அதிகார வர்க்கம் சிந்திக்கிறது. அல்லது அவர்களுடைய புரிதல் அப்படித்தானுள்ளது.

என்றபடியால்தான் அவர்கள் எப்போதும் ஜனநாயகத்தையும் பன்மைத்துவத்தையும் வலியுறுத்திக் கொண்டிருக்கும் இந்த உலகத்தில் தங்களுடைய மதத்திற்கும் தங்களுடைய நலன்களுக்கும் மரபுசார் அடையாளங்களுக்கும் மட்டுமே முன்னுரிமை என்று வாதிடுகிறார்கள். பிற மதங்களோ, பிற அடையாளங்களோ, பிற தரப்புகளின் உணர்வுகளோ, பிரத்தியேகமான தேவைகளோ பொருட்படுத்தத்தக்கவை அல்ல என்று சிந்திக்கிறார்கள்.

இப்பொழுது 20 ஆவது திருத்தம் பற்றிப் பலமான நிலையில் பேசப்படுகிறது. இதற்கு முன்பு "நல்லாட்சி" அரசின் காலத்தில் அரசியலமைப்புத் திருத்தம் பற்றிப் பேசப்பட்டது. இரண்டின்போதும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் தேவைகள், உணர்வுகள், சுதந்திரம் போன்ற நியாயமான அடிப்படைகளைக் குறித்த பேரினவாதச் சிந்தனையாளர்களின் நோக்கு நிலை குறுகலானதாகவே – சுயநலன் சார்ந்தே உள்ளது. அது மிகச் செறிவாக இந்தக் கதையில் வரும் ப்ளாக்கியை அல்லது பொதுவாகப் பூனைகளைப் பற்றி குறிப்பிடுவதை ஒத்ததாகவே உள்ளது.

மேலும் ஒரு உதாரணமாக "பல காலங்களாக திருமதி பெரேரா வாங்கிச் சேகரித்து வைத்த வெள்ளை நிறப் பாவாடைகள், சட்டைகள் ஏராளமிருக்கின்றன. பெரேரா என்றைக்கும் சாப்பாட்டிலோ, உடுதுணி, ஆபரணங்களிலோ திருமதி பெரேராவுக்கு ஒரு குறையும் வைத்ததில்லை. பெரேரா அவ்வாறுதான் நினைத்துக் கொண்டிருந்தார். உணவு, பானங்கள், ஆடை, ஆபரணங்கள், வருடத்துக்கு ஒரு தடவை ஒரு சுற்றுப் பயணம், நல்லதொரு வீடு, மின்சார சாதனங்கள். இவையெல்லாம் இருந்தால் அனைத்தும் சம்பூரணமாகி விடும். உண்மையில், ஒரு பெண்ணுக்கு இவை தவிர இன்னும் வேறு என்னதான் வேண்டும்" எனவும்.

ஆனால், இதை நிராகரிப்புச் செய்கிறார் திருமதி பெரேரா. கதையில் பெரேராவின் மனநிலை வெளிப்படுத்தும் மையம் குறிப்பிடுவது அதைத்தான். ஆனாலும் தற்போது அவருடைய (திருமதி பெரேராவினுடைய) அடையாளம் சட்ட அடிப்படையிலும் மரபு நிலைப்பட்ட வழக்கத்தினாலும் "என்னதான் இருந்தாலும் திருமதி. பெரேரா என்பது பெரேரா செத்துப் போனாலும் கூட மாறாது" என்பது, என்னதானிருந்தாலும் தமிழ்மொழிச் சமூகங்கள் இலங்கையர்கள் என்றே நோக்கப்படுவதாகவும் நோக்கப்படும் என்றுமே வாசிப்புச் செய்ய வைக்கிறது.

அதாவது, திருமதி பெரேராவை அவருடைய முந்திய அடையாளமான "குணவங்சலாகே ஸ்ரியானி பத்மகாந்தி சோமரத்ன" என்பதை பின்னர், திருமணம் என்ற சட்டரீதியான வலுவினூடாக திருமதி பெரேரா என்ற அடையாளம் விழுங்கி விட்டது. இதுதான் ஒற்றையாட்சி என்ற பதம் அரசியலமைப்புச் சட்டத்தின் வழியாகக் குறிப்பிடும் மகத்துவமாகும்.

அதற்கு மேல் அவர்கள் (தமிழ் மொழிச் சமூகத்தினர்), "பெரேராவுடன் சண்டை போட்டுவிட்டு எங்கேயென்றுதான் போவது? இருக்க ஒரு இடம், தொழில் ஒன்று இரண்டுமே இல்லாத பெண்ணொருத்தி பொறுமையாக இருப்பதைத் தவிர வேறு என்னதான் செய்வது?" என்ற திருமதி பெராவின் நிலையே தமிழ் மொழிச் சமூகங்களுக்கு இன்றுள்ளது.

இந்தக் கதையிலிருந்து மேலும் ஒன்றைச் சொல்லி விட்டு அப்பால் செல்லலாம். "நேரத்துக்கு தேனீர், நேரத்துக்கு சாப்பாடு, கூட்டிப் பெருக்குதல், தூசி தட்டுதல், துணிகளைக் கழுவி, காய்த்து, மடித்து நேர்த்தியாக அலமாரியில் வைத்தல், சாரங்கள் தனியாக, சட்டைகள் தனியாக, களிசான்கள் தனியாக, உள்ளாடைகள் தனியாக.. இப்படி. திருமதி. பெரேரா சில சிறிய சிறிய விடயங்களில் மாற்றங்களைச் செய்த போதும், தவிடு நீக்காத சிவப்புச் சோறு, சீனி போடாத தேனீர் போன்ற பெரிய பெரிய தீர்மானங்களை எப்போதும் எடுப்பது பெரேராதான்." என்பது இலங்கையில் உள்ள தமிழ்பேசும் சமூகங்கள் எந்த அரசியல் தீர்மானங்களையும் எடுப்பதற்கு வலுவற்றவர்கள், உரிமையற்றவர்கள். அதற்கான அதிகார பலம் நியாயத்தின் அடிப்படையில் பார்க்கப்படுவதில்லை. பெரும்பான்மை என்ற நோக்கின் அடிப்படையிலேயே நோக்கப்படுகிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

ஆகவே, இந்த ஒரு கதையே போதும் அதிகாரத்தரப்பினரின் மனநிலை, அரசியல் நோக்கு, இலங்கை அரசியல் சட்டங்கள், நடைமுறை போன்றவற்றை எல்லாம் தெளிவாக்குவதற்கும் விமர்சிப்பதற்குமாக.

ஒடுக்கப்படுவோர் சார்பாகச் சிந்திப்போர் அல்லது ஒடுக்குமுறைக்கு எதிராகச் சிந்திப்போர் எப்போதும் சரியான நோக்கையே கொண்டிருப்பர் என்பது உலகம் முழுவதிலும் திரும்பத்திரும்ப மெய்ப்பிக்கப்படும் உண்மை. அவர்களுக்கு சாதி, மதம், பிரதேசம், மொழி, இனம், தேசம் என்ற வரையறைகள் கிடையாது. அவர்கள் மேற்சொன்ன அடையாளப் பரப்பிற்குள் ஒரு போதும் தங்களைக் குறுக்கிக் கொள்வதில்லை. அவர்களுடைய சிறகுகள் மிக விசாலமானவை.

**இலங்கை கல்வியறிவு பெற்ற வீதத்தினரை அதிகமாகக் கொண்ட நாடு. அபிவிருத்தியைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருக்கும் தேசம். போரினால் களைத்துப் போன மக்களைக் கொண்டது. நிம்மதியாகவும் முன்னேற்றமாகவும் வாழ விரும்பும் மக்களுக்கு நாம் எதைக் கொடுக்கப்போகிறோம்? எதைச் செய்யப் போகிறோம்? அவர்களுடைய எதிர்பார்ப்புக–ளுக்கு தேவையானதை எப்படி வழங்குவது? என்பதே இன்று நாம் சிந்திக்க வேண்டியது**

போருக்குப் பிந்திய இலங்கைச் சமூகங்கள், பொறுப்புக்கூறுதல், பகை மறப்பு, புரிந்துணர்வு, நல்லிணக்கம், சமாதானத்தை நோக்கி நகர்தல், பன்மைத்துவத்தை ஏற்றல், பல்லினத்தன்மையை அங்கீகரித்தல், அதிகாரத்தைப் பகிர்தல், தீர்வை எட்டுதல் என்றே செயற்பட வேண்டும் என்கிறது வரலாற்றுச் சூழல். இதையே வெளியுலகமும் நிர்ப்பந்திக்கிறது, வலியுறுத்துகிறது. இது போருக்குப் பிந்திய கோரிக்கை மட்டுமல்ல, போருக்கு முந்திய கோரிக்கையும் தேவையுமாகும்.

ஆனால், அப்போது இதைக் கேட்கக் கூடிய நிலையில் சூழல் இருக்கவில்லை. போரின்போது புலன்கள் அடைபடுகின்றன. அல்லது அடைக்கப்படுகின்றன. அப்பொழுது போரின் சத்தமே பெரிதாகக் கேட்கும். போரில் தென்படும் இலக்கு – குறி – வேறு.

ஆனால், போருக்குப் பிந்திய அனுபவங்கள் இலங்கைச் சமூகங்களை இதைக் குறித்து சிந்திக்க வேண்டும் என்றே வலியுறுத்துகின்றன. சனங்களுடைய நலனுக்கும் தேசத்தினுடைய நலனுக்கும் இது தேவை. அவசியம். கட்டாயம். அரசியல் அதிகாரத்திலிருப்போரும் அதற்காக முனைவோரும் இதைப் புறக்கணிக்கின்றனர். அதாவது, அவர்கள் சனங்களுடைய தேவைகளுக்கும் நலன்களுக்கும் நாட்டின் தேவைக்கும் நலனுக்கும் பாதுகாப்புக்கும் எதிராகவே சிந்திக்கிறார்கள். இவர்கள் முன்பும் இப்படித்தான் சிந்தித்தார்கள். இப்படித் தவறாகச் சிந்தித்தே இந்த நாட்டில் போரை உருவாக்கினார்கள். இப்படியான சிந்தனையின் வழியில் செயற்பட்டே பெரும்போரை வளர்த்தெடுத்தார்கள். நாட்டின் பொருளாதாரத்தையும் வளங்களையும் இயற்கைச் சூழலையும் அழிவுக்குள்ளாக்கினர்.

இதைத் தவறென்று உணர்வதும் இதற்குப் பொறுப்புச் சொல்லுதலுமே இன்று நாட்டிலுள்ள முதன்மைப் பணியாகும். இதைச் செய்வதே ஏனையவற்றுக்குச் செல்வதற்கான வாசலாகும். இங்கே நடப்பது என்னவென்றால், திறக்க வேண்டிய கதவை மூடி வைத்துக் கொண்டு புதிய பயணங்களைப் பற்றிச் சிந்திப்பதும் பேசுவதுமாகும். அப்படியென்றால் அது எதிர்பார்க்கப்படும் நற்பயன்களைத் தரப் போவதில்லை. என்பதால்தான் தொடர்ந்தும் சமூகப் பதற்றங்கள் நீடிக்கின்றன. சமூகப்பதற்றங்களை தணிப்பதற்கு படையினரோ படை ஏற்பாடுகளோ பதிலாகாது. அல்லது தவறான அரசியல் சட்டங்கள் உதவாது. நம்முடைய வரலாற்று அனுபவங்கள் இதை திரும்பத்திரும்ப வலுவாக உணர்த்துகின்றன. வரலாற்று அறிவு மிகப் பிரகாசமாக இந்த உண்மையைக் காட்டுகிறது.

இருந்தும் போதையில் ஆடுவதைப்போல அரசியல் தலைமைகள் ஆடிக்கொண்டிருக்கின்றன. போதாக்குறைக்கு சனங்களையும் போதையேற்றி ஆட வைத்திருக்கின்றன. இதைப் பார்த்து உலகம் சிரிக்கிறது. நீ வரலாற்றிலிருந்தும் உன் வாழ்க்கையிலிருந்தும் எதைக் கற்றுக் கொண்டாய் என்று கேட்கப்படும் கேள்விக்கு நம்முடைய பதில் என்ன? பகைக்குப் பகை. பழிக்குப் பழி என்ற பழங்குடிச் சமூகத்தின் வழிதானா நம்முடைய தெரிவு.

இலங்கை கல்வியறிவு பெற்ற வீதத்தினரை அதிகமாகக் கொண்ட நாடு. அபிவிருத்தியைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருக்கும் தேசம். போரினால் களைத்துப் போன மக்களைக் கொண்டது. நிம்மதியாகவும் முன்னேற்றமாகவும் வாழ விரும்பும் மக்களுக்கு நாம் எதைக் கொடுக்கப்போகிறோம்? எதைச் செய்யப்போகிறோம்? அவர்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு தேவையானதை எப்படி வழங்குவது? என்பதே இன்று நாம் சிந்திக்க வேண்டியது.

அல்லது இந்தத் தேசத்தை நாம் எப்படி நிர்வகிக்கப்போகிறோம்? எப்படி இந்த நாட்டில் அமைதியை உருவாக்கப்போகிறோம்? முன்னேற்றங்களைக் காணப்போகிறோம்? சமத்துவமாக வாழ்வதற்கான வழிகளை எப்படிக் காணப்போகிறோம்? என்று சொல்ல வேண்டும். ஆனால், நிச்சயமாக ஒரு உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இது பல்லின தேசம் என்பதையும் பன்மைத்துவத்தின் அடிப்படையில் எதையும் அணுக வேண்டும் என்பதையும் நிராகரிக்கும் தோறும் மேல் நிலைச் சிந்தனையாளர்களையும் அதிகாரத்திலுள்ளோரையும் ஏனைய சமூகங்களின் நிராகரிப்புக்குள்ளாக்கும்.

கருணாகரன்...

# 19 ஆவது திருத்தத்தால் நாட்டுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை



## நீதியமைச்சர் அலி சப்றி

19 ஆவது திருத்தத்தினால் இந்நாட்டுக்கு எதுவும் நடக்கவில்லை. நாட்டின் அபிவிருத்திக்கு எதுவுமே நடக்கவில்லை. நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் சீர்குலைந்து சென்றது. ஐந்து வருட காலமாக நல்லாட்சி அரசாங்கத்தினால் இந்த நாட்டிற்கு எந்த ஒரு முக்கியமான சேவையும் செய்ய முடியாமல் போனது அதனால்த்தான் என்கிறார் நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்றி. தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய செவ்வியில் 19ஆவது திருத்தத்தால் நாட்டின் பாதுகாப்புக்கு என்ன நேர்ந்தது என்றும் கேள்வி எழுப்புகின்றார். செவ்வியின் முழு விபரம்....

முஸப்பிர்

**கே: அரசியல் கட்சிகள், எதிர்க் கட்சி மற்றும் சமூக அமைப்புக்கள் 20ஆவது திருத்தத்தை ஏன் எதிர்க்கின்றன?**

பதில்: எதிர்க்கட்சி என்பது எல்லாவற்றையும் எதிர்க்கவேண்டும் என்பதற்காக வழமைபோன்று அவர்கள் இதனையும் எதிர்க்கிறார்கள். அவர்கள் தங்களுடைய அரசியல் அதிகாரத்தை காட்டும் முயற்சியாகத்தான் இதனை எதிர்க்கிறார்கள் என்று எங்களுக்கு விளங்குகிறது. அடுத்தது 19 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்தது நாம் அல்லவே. அவர்கள் தான் அதனை கொண்டு வந்தார்கள். எனவே அதனை பாதுகாப்பதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

**கே: உங்கள் அரசாங்கத்தில் இருக்கும் சிலர் அன்று 19ஆவது திருத்தத்திற்கு ஆதரவு அளித்தார்கள். இதனை நீங்கள் எவ்வாறு கருதுகின்றீர்கள்?**

பதில்: இதனைப் பற்றி விஷேசமாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. இதனைக் கொண்டு வந்தவர்களுகே தெரியாது இதில் என்ன இருக்கிறது என்று. இதுதான் உண்மையான நிலைமை.

இதனைக் கொண்டு வருவதற்கு அன்று ஆதரவளித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் மாத்திரமின்றி அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கூட இது மோசமானது, நாட்டுக்கு உகந்தது அல்ல என்று கூறியிருக்கிறார்கள்.

எனவே இனி இதைப் பற்றி என்ன கூற இருக்கிறது என்பது மக்களுக்கு நன்றாக விளங்கி இருக்கும். இரண்டு சாரதிகள் ஒரு வாகனத்தை ஒரே நேரத்தில் செலுத்துகின்றார்கள் என்றே இன்று அனேகமானோர் இது தொடர்பில் கூறுகின்றனர்.

19 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்கு மிகவும் பாடுபட்டு உழைத்த சுமந்திரன் கூட இது தற்காலிகமானது, இது நீண்ட காலத்திற்கு பொருத்தமானதல்ல என்று கூறியிருக்கிறார்.

எனவே இவற்றிலிருந்தே விளங்குகிறது 19வது திருத்தம் எந்தளவுக்கு குழப்பம் நிறைந்தது என்பது.

**கே: 19 ஆவது திருத்தத்தை நீக்குவோம் என உங்கள் தரப்பினரால் கடந்த பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் தெளிவாகவே கூறப்பட்டது. ஏன் அவ்வாறு கூறப்பட்டது?**

பதில்: கடந்த தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது பிரதான விடயமாக அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் மக்களுக்கு கூறினோம். இதற்காக நாம் மக்களிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை வழங்குமாறு கேட்டோம்.

ஏனெனில் 19 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு எமக்கு பாராளுமன்றத்தில் அந்த அதிகாரம் கண்டிப்பாக தேவை. மக்கள் இதனை தெளிவாக புரிந்து கொண்டார்கள் என்பது தேர்தல் முடிவுகளின் மூலம் எமக்கு விளங்கியது. மக்கள் எங்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பாராளுமன்றத்தில் வழங்கியிருக்கிறார்கள். இந்த தேர்தல் முடிவின் ஊடாக எமது முக்கியமான எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கிறது. இந்த 19ஆவது திருத்தத்தின் ஊடாக இந்த நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை இந்நாட்டு மக்கள் தெளிவாக கண்டு கொண்டார்கள்.

இதில் இருந்த பிரச்சினைகளின் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்தார்கள்.இரண்டு தரப்பினர் நாட்டை ஆட்சி செய்யும் நிலையே இதனால் ஏற்பட்டது. நிறுவன கட்டமைப்பு சீர்குலைந்து பல்வேறு குழப்பகரமான நிலைமைகள் இதனால் ஏற்பட்டது.

**கே: இந்த அரசாங்கத்தினால் 19வது திருத்தத்துடன் முன்னேறிச் செல்ல முடியாதா? 20வது திருத்தம் அவசியம்தானா?**

பதில்: கண்டிப்பாக முடியாது. 20வது திருத்தம் மிகவும் அவசியமே. இதில் இருக்கும் சில பிரச்சினைகளை என்னால் குறிப்பிட முடியும். உதாரணமாக ஜனாதிபதியால் எந்த அமைச்சுப் பதவியும் வகிக்க முடியாது என்று ஒரிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை வைத்துக்கொள்ள முடியும் என்று இன்னொரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கே: 20வது திருத்தத்தின் மூலம் பல–மிக்க அதிகாரங்களைக் கொண்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவர் உருவானார் என்பதும், பாராளுமன்றம் வெறும் பெயரளவிலேயே இருக்கும் என்ப–தும் சில அரசியல் கட்சிகளின் கருத்தாக உள்ளது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

பதில்: ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்று பத்து மாதங்கள் ஆகிவிட்டது. அவர் இதுவரை மிகவும் ஜனநாயக முறைப்படி ஆட்சியை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கிறார். அனைத்து நடவடிக்கைகளையும் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனநாயக முறைப்படி அவர் முன்னெடுத்துச் செல்கிறார். நாட்டைப் பற்றி நாட்டு மக்களைப் பற்றி தீர்மானங்கள் எடுக்கும் போது அவை நடைமுறைச் சாத்தியமானதாக இருக்க வேண்டும். வரையறைகளுக்கு உட்பட்டு அவ்வாறான தீர்மானங்களை எடுக்க முடியாது. இந்நாட்டு பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டை அபிவிருத்தியை நோக்கி முன்னெடுத்துச் சென்று சிறந்த நாடாக ஆக்குவதற்கு ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கத்திற்கு ஆற்றல் இருக்கின்றது. இதற்காகவே இன்று இந்நாட்டு மக்கள் எங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வழங்கியிருக்கிறார்கள். இந்நாட்டு மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையை பாதுகாத்து மக்கள் நலனில் அக்கறையுள்ள தலைவர்களாக செயற்படுவதற்கு நாங்கள் அனைவரும் கட்டுப்பட்டு இருக்கிறோம்.



**கே: நல்லாட்சி அரசாங்கம் கொண்டு வந்த 19ஆவது திருத்தத்தினால் இந்நாட்டுக்கு எதுவும் நடக்கவில்லை என்றா நீங்கள் கூறுகின்றீர்கள்?**

பதில்: ஆம். நிச்சயமாக எந்த சேவையும் இடம்பெறவில்லை. நாட்டின் பாதுகாப்பிற்கு என்ன நடந்தது? நாட்டின் அபிவிருத்திக்கு எதுவுமே நடக்கவில்லை. நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் சீர்குலைந்து சென்றது. ஐந்து வருட காலமாக நல்லாட்சி அரசாங்கத்தினால் இந்த நாட்டிற்கு எந்த ஒரு முக்கியமான சேவையும் செய்ய முடியாமல் போனது. இவ்வாறான பல விடயங்களைக் குறிப்பிடமுடியும். எனவேதான் நாம் 19 ஆவது திருத்தத்தை நீக்கி 20 ஆவது திருத்தத்தை கொண்டு வரவேண்டும் என்று கூறுகின்றோம்.

**19 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு பாராளுமன்றத்தில் அதிகாரம் கண்டிப்பாக தேவை. மக்கள் இதனை தெளிவாக புரிந்து கொண்டார்கள் என்பது தேர்தல் முடிவுகளின் மூலம் எமக்கு விளங்கியது. மக்கள் எங்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பாராளுமன்றத்தில் வழங்கியி–ருக்கிறார்கள். இந்த தேர்தல் முடிவின் ஊடாக எமது முக்கியமான எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கிறது. இந்த 19ஆவது திருத்தத்தின் ஊடாக இந்த நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை இந்நாட்டு மக்கள் தெளிவாக கண்டு கொண்டார்கள்.**



# கசப்பும்... இனிப்பும்...

– தமிழ்மணி மானா மக்கீன்

### கசப்பு

வடதிசை யாழ் மாவட்டத்தில் ஒருவரது இறப்பின் நினைவேந்தலாகக் 'கல்வெட்டு' என்று அழைக்கப்படும் ஒரு நூல் முக்கியத்துவம் பெறுகிறது. மரணித்த 31 அல்லது 33ஆம் நாளில் அந்தியேட்டிக்கிரியைகள் எனப்படுபவை நடத்தப்பட்டு உணவுபசாரமும் நிறைவெய்தபிறகு, பதிப்பிக்கப்பட்ட நூலை வழங்குவார்கள். அதில்! நிழற்படங்களுடன் வாழ்க்கை வரலாறும் பணிகளும் நிறைவாக இடம்பெற்றிருக்கும். கிழக்கிலும் இது ஓரளவு இருக்கலாம் எனக் கருதுகிறேன்.

இருக்கட்டும். முஸ்லிம் சமுதாயம் எப்படி? இல்லவேயில்லை. 31-33 என்பதெல்லாம் கிடையாது. எனினும் 40ஆம் நாள் நினைவேந்தல் இல்லங்களில் உண்டு. அப்போது பிரார்த்தனைகள் (ஃபாத்திஹா), அல்குர்ஆன் ஓதல்கள் மட்டும் நடக்கும். அபூர்வமாக சிலர் வைபவ முடிவில் அல் – குர்ஆன் பிரதிகளை அன்பளிப்புச் செய்வார்கள். தாளொன்றில், மரணித்தவர் பெற்றோர் விவரம், அவரது முழுப்பெயர், பிறந்த திகதி, இறப்பு நாள் மற்றும் முக்கிய குடும்ப உறுப்பினர் விவரங்கள் அச்சிடப்பட்டு ஓட்டப்பட்டிருக்கும் அவ்வளவே.



ஆனால் பாருங்கள் அபிமானிகளே, இரண்டாண்டுகளுக்கு முன் அநுராதபுரம், கெக்கிராவைக்கு அண்மிய மரதன்கடவெலயில் அதிசயத்திலும் அதிசயமான அபூர்வ நிகழ்வு.

புகழுக்குரிய முஸ்லிம் எழுத்தாளப் பெண்மணி ஒருவருக்குக் கல்வெட்டு!

பிரபல இலக்கிய இதழான 'மல்லிகை' சஞ்சிகை வளர்த்து மிக விரைவாக இலக்கிய வானில் பளிச்சிட்டு மறைந்த 'கெக்கிராவை ஸஹானா' என்ற அநுராதபுர வட்ட இலக்கிய ஆளுமைக்கே இந்த 2018களில் கல்வெட்டு நூல்!

முகலாய மாமன்னர் ஷாஜஹான் மகள், அவ்ரங்கஸேப் சகோதரி, கவிதாயினி ஜஹானாராவின் பெயரையே கொண்டிருந்தும் அதை மறைத்து 'ஸஹானா' என ஒருபிரபல இசை ராகப் பெயரில் இலக்கிய ரீங்காரம் செய்தார்.

அவர் பற்றிய அந்தக் கல்வெட்டுக்கு, பங்களிப்புச் செய்தோராக, கல்வியாளர், எழுத்தாளர் அன்பு ஜவஹர்ஷா முதற் கொண்டு, திக்குவல்லை கமால், மாத்தளை பண்ணாமத்துக் கவிராயர், லெ. முருகபூபதி, நாச்சியாதீவு பர்வீன், பாத்திமா மைந்தன் (தமிழகம்) ஈறாக,

மேமன்கவி, கெக்கிராவை சுலைஹா, பரணீதரன் வரை நவமணிகள் ஒன்பதுபேர்!

யாழ். 'ஜீவநதி' இலக்கிய சஞ்சிகை ஆசிரியர் க. பரணீதரன் பதிப்பாசிரியராகப் பொறுப்பெடுத்துப் பதிப்பித்துக் கொடுத்திருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது.

அவர் எனக்கு வழங்கிய தகவலின்படி 250 பிரதிகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இங்கேதான் நெருடல்! நெருடல்! இலக்கியம் சார் எத்தனை பேர் கரங்களுக்குக் கிடைத்தது என ஒரு பட்டியல் தரமுடியுமா? அனுப்பவில்லை என்றால் ஏன் அடித்தீர்கள்? யாருக்காக ?

நான் சேகரித்த தகவலின்படி, அன்று 40ஆம் நாள் நினைவஞ்சலிக்கு சமூகமளித்த சுமார் 75 பேருக்கு வழங்கப்பட்டது. உண்மையிலும் உண்மை! ஆனாலும் முழுச் சபையினரும் இலக்கியம் சார்ந்தோர் அல்லர். மேலும் ஒரு 25 பிரதிகள் தமிழக மூதாதையர் ஊர் வாசிகளுக்கு (காயா மொழி) அனுப்பப்பட்டுள்ளன.

அப்படியானால் எஞ்சிய 150 பிரதிகளும் எங்கே எவர் வீட்டுப் பரணில்?

முஸ்லிம் சமூகம் சார் மறைவில் முதல் தடவையாக (அப்படி வர்ணிக்கலாம் அல்லவா?) நாற்பதாம் நாள் நினைவேந்தல் மலர் ஒன்று வித்தியாசமான முறையில் யாழ். பரணீதரன் தம்பியால் பதிக்கப்பட்டு 'காட்டில் எரித்த நிலா' போல யார் கண்ணிலும் காட்டப்படாமைக்குக் காரணம்?

எவ்வாறாயினும் பங்களித்த ஒன்பது பேரும் பாக்கியசாலிகள் எப்படியோ பெற்றுப் பாதுகாக்கின்றனர்!

ஓர் அடிக்குறிப்பு:

இது சம்பந்தமாக ஒரு விதண்டாவாத விளக்கம் வழங்கப் படலாம், "இலக்கியத்துறையினருக்காக பதிப்பிக்கவில்லை. ஒரு குடும்பச் சமாசாரம். கசப்புவில்லை கொடுக்காதீர்கள்" என்று!

தீர்ப்பை அபிமானிகளிடமே விட்டு ஒதுங்கிக் கொள்கிறேன்.

### இனிப்பு 1



இந்தக் கிழமை கைநிறைய விதவிதமான இனிப்பு வகைகள். ஒன்றுடன் நிறுத்துவது கஞ்சத்தனம். ஆகவே கைப்பை' (பத்தி எழுத்துப்பக்கம்) கொள்கிற அளவுக்குக் கொட்ட முயன்று பார்க்கிறேன்.

முதல் இனிப்பு முக்கியமானது. அரசியல் ரீதியில் நம் சந்ததிகளுக்கு அன்னை தமிழ் காப்பாற்றிக் கொடுக்கப்பட்ட வரலாற்றுப் பதிவு.

ஒரு தகவலைத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போதைய நாடாளுமன்றத்தின் இயக்கத்திற்கு ஒரு முன்னோட்டமாக அமைக்கப்பட்டது. "இலங்கை சட்ட சபை" நன்கு நாமறிந்த ஜே.ஆர். ஜெயவர்தனா அச் சபையில் 'பெரிய தலை'!

அவர் 1943 ஜுன் 22ல் மூன்று பிரேரணைகளைச் சமர்ப்பித்துத் தமிழ் பேசும் சமூகத்தினரைச் சங்கடத்திற்குள்ளாக்கினார்.

★ அனைத்துப் பாடசாலைகளிலும் சிங்களம் மட்டுமே போதனாமொழி.

★ பொதுப்பரீட்சைகளில் சிங்களமே கட்டாயம்.

★ சபை அலுவல்கள் யாவும் சிங்களத்திலேயே நடைபெற வேண்டும்!

பிரேரணைக்கான விவாதங்களும் வாக்கெடுப்பும் கிட்டத் தட்ட ஓராண்டு வரையில் இழுத்தடிக்கப்பட்டு 1944மே மாதம் சபையில் இறுதியாக நடந்தது.

'நல்லையா' என்றொரு உறுப்பினர் ஒரு குரலோசையாக உரத்துக்குரல் எழுப்பி பல நியாயங்களை எடுத்துச் சொல்லி "இது அநியாயம்" எனச் சீறினார்.

" 'சிங்களம் மட்டும்' என்பதை 'சிங்களமும் தமிழும் போதனாமொழி' எனத் திருத்துங்கள்" என்றார்.

வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, தமிழன்னைக்கு 28 ஆதரவுக்கரங்களும் 08 எதிராகவும் உயர்ந்தன.

ஆக, தமிழ்ப் போதனாமொழியாக இல்லாமல் போகவிருந்த மாபெரும் அபாயம் நீங்கியது. அன்று மட்டும் அவர் பிரேரணை வெற்றி பெறாது போயிருந்தால் தமிழ்ப்பேசும் மக்கட் செல்வங்களுக்கு தமிழ்க் கல்வி போயிருக்கும் தாய்மொழி அறியா ஒரு சமூகம் உருவாகியிருக்கும்.

யார் அய்யா, இந்த நல்லையா? தேனகத்தின் (கிழக்கிலங்கை) திருமைந்தர். மட்டக்களப்பு, சிங்கள வாழ்ப்பிரதேசம் பிறந்தகம். அவரே ஒரு தமிழ்ப் போதனா மொழிப் பாடசாலையை நிறுவினார். அதுவே 'வந்தாறு மூலை மத்திய மகா வித்தியாலயமாகப் பரிணமித்தது. இன்றோ 'கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக' மாகப் பளிச்சிடுகிறது!

அன்னவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், 'நல்லையா மண்டபம்' காட்சியளிப்பதைக் கண்டதுண்டா, கேட்டதுண்டா?

தமிழ்ப் போதனா மொழிக்கு சட்டத்தில் இடமளிக்க வைத்தவரை நாமும் நன்றியுடன் நினைவு கூர்வோம்.

### இனிப்பு 2

'புத்தக வாசிப்புப் போச்சு!"

போச்சு என்ற அவலக்குரல்களுக்கு மத்தியில் கொழும்பில் நடந்த புத்தகத் திருவிழாவில் புத்திசாலிகளாய் புத்திஜீவிகளாக நடந்து கொண்டோர் பெரும்பான்மைச் சமூகமே! பிள்ளை குட்டிகளுடன் குடும்பச் சமேதரர்களாக! நம்மவர்கள் பற்றிச் சொல்ல இனிப்பில் இடமில்லை. கசப்பில் தான்! அதற்கேற்றாப் போல் தமிழக இறக்குமதியும் அறவே இல்லாமல் அம்போ!

போகட்டும் அந்தப் புலம்பல் ஒரு நல்ல சேதி கிழக்கே அக்கரைப்பற்றிலிருந்து!

ஒரு தனிமனித முயற்சியாக, தன் தாயாரின் பாரம்பரிய வீட்டையே புத்தகக் கண்காட்சிக் கூடமாக மாற்றி, நூல் வெளியீடுகளும் நடத்தி புதுமையும் புரட்சியும் புரிந்திருக்கிறார் ஒரு சிராஜ் மன்சூர்!

இவர், எழுத்தாளர், கவிஞர், நல்ல ஆய்வாளர். அத்தோடு 'மீள் பார்வை' இஸ்லாமிய சஞ்சிகையின் ஆசிரியர் அக்கரைப்பற்று மைந்தரான இவர், எந்த மண்டபத்தையும் தேடாமல், நாடாமல் தன் தாய் வீட்டையே மற்றொரு (தமிழ்) தாயின் மேம்பாட்டுக்குத் திறந்து விட்டு விட்டார்!

இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த 'தனிமனித முயற்சி புத்தக விழா' இன்று 04/10 ஞாயிறு இரவு முற்றுப் பெற்றாலும், தொடர்ந்து தனது பாரம்பரிய வீட்டை புத்தக காட்சிக் கூடமாகவே மாற்றி அமைக்கும் இலட்சியத் திட்டத்தில் இருக்கிறாராம்.

அவர் தம் முயற்சி பற்றி பலதும் பத்துமாகப் பகிர்ந்து கொண்ட பாவேந்தர் பாலமுனை பாறூக், இலக்கிய உலகில் நீங்கா இடம் பெற்றுள்ள அ.ஸ. அப்துஸ்ஸமத் பிறந்து பிரகாசித்த அக்கரைப்பற்றுவில் இம் முயற்சி நடப்பதையும், அதே கண்காட்சியில் அவரது மகனார் அகமது கியாஸ் நாவல் 'இனி எல்லாம் சுகமே' வெளியீட்டுவிழா கண்டிருப்பதையும் பெருமகிழ்ச்சியுடன் விவரித்தார்.

அப்படியானால், கிழக்கிலங்கை இலக்கிய வளர்ச்சியை பொறுத்தளவில் விசேடமாக வாசிப்பு 'இனி எல்லாம் சுகமே' என இனிப்புகளை அள்ளிக் கொட்ட ஆசை, ஆசை! ஏற்றிடுக.

### இனிப்பு 3

கனவா, நனவா என என்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டேன்! தமிழ் நாடக விழாவாம் தலை நகரில்! அதுவும், ஒருகாலப் படமாளிகையாக இருந்து அதி நவீன நாடக அரங்கமாக அரசே பரிபாலிக்கிற மருதானை எல்பின்ஸ்டனில்!

இப்போதையப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஒரு பெரிய அரசியல்வாதியாகப் பரிணமித்திருந்தாலும், ஒரு கால மேடை நாடக – திரைக்கலைஞர் என்பது தித்திப்பு. அந்த வகையில் கலைஞர்களின் கலைக்காவலராகவும் இருப்பதை வெகு சிலரே புரிவர், அறிவர்.

'டவர் மண்டப அரங்கியல் மன்றம்' (டவர் பவுண்டேசன்) அவர் பரிபாலனத்திலேயே உள்ளது. பாருங்கள், கொரோனா கிருமித்தொல்லைக்கு மத்தியிலும் கடந்த மாதத்திலும் இம்மாதத்திலும், சிங்கள மொழியில் முழு நீள நாடகங்கள், குறு நாடகங்கள், சிறுவர் நாடகங்கள் என சுமார் 70 நாடகங்களுக்கான அரங்கேற்றங்களை, டவர் மண்டபப் பணிப்பாளர் நாயகமாக நியமனமாகியுள்ள பிரபலக் கலைஞர் டக்ளஸ் சிறிவர்தன மூலமாக நிறைவேற்றிவிட்டார்!

அவரே நீண்ட இடைவெளியில் ஒரு தமிழ் நாடகவிழாவுக்கும் ஏற்பாடுகள் செய்திருக்கிறார். அவரின் கீழ் தமிழ் நாடக வளர்ச்சிக்கான ஒரு துறையும் இயக்கம். அதன் பொறுப்பாளராக, தமிழ்நாட்டில் நாடக இயல் பயின்று பட்டம் பெற்றவரான வாலிபர் ஜெயப்பிரகாஷ் சண்முகசர்மா கடமை அவரது பக்க துணையுடன் ஒரு தமிழ் நாடக விழாவையே நேற்று (03/10/2020) எல்பின்ஸ்டனில் ஆரம்பித்து விட்டார் டக்ளஸ் சிறிவர்தன!

பாராட்டுகளை அள்ளி வழங்குவது, என் போன்ற 'வாழ்நாள் நாடகக் கீர்த்தி'யின் தலையாயக கடமையாகின்றது.

இவ்விழா 13ஆம் திகதி வரை நிகழ்வுறும், ஒவ்வொரு நாளும் ஒன்றுக்கு மேற்பட்ட குறுநாடகங்கள். இறுதி, மூன்று நாட்களிலும் முழு நீள நாடகங்கள். மொத்தமாக பத்தொன்பது குறுநாடகங்கள், ஐந்து முழு நீள நாடகங்கள். (இவ்விவரங்கள் சிலவேளை வித்தியாசப்படலாம்)

கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் மலையகப் பகுதிக் கலைஞர்களின் ஆளுமை நலிந்து விடவில்லை என்பதை நேருக்கு நேர் பார்த்துப்பரவசப்பட நல்ல சந்தர்ப்பம்.

கொழும்பு வாழ் கலாரசிக மணிகள் கொஞ்சம் தொ(ல்)லைக் காட்சிப்பெட்டிகளை மூடி விட்டு, ஆறுமணிக்கு சொகுசான எல்பின்ஸ்டன் இருக்கைகளில் அமர்ந்தீர்களானால் 08,09 மணிக்கிடையில் இல்லம் திரும்பி விடலாம். திரையரங்குகளும் மூடிக்கிடக்கும் காலத்தில் ஒரு பழைய திரையரங்கு மிக நவீனமாகப் புனரமைக்கப்பட்டிருப்பதையும் ரசித்து மகிழலாமே!

## மலையக கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்தும்

# ஜனாதிபதி

## கல்வியில் சமநிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும்



**'பெருந்தோட்டப் பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டபோது காணப்பட்ட அதே நிலையே இன்னும் பறைசாற்றி நிற்கின்றது. பௌதீக ரீதியிலான வள அதிகரிப்பில் பாரிய புறக்கணிப்புகள் இருப்பதையே இது உணர்த்துகின்றது. தேசிய ரீதியிலான கல்வி கொள்கைக்கு மேலதிகமாக மலையகக் கல்வி அபிவிருத்திக்கென சிறப்பு ஏற்பாடுகள் அவசியம்'**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் ஹப்புத்தளை பகுதிக்கு விஜயம் செய்திருந்தார். அவரது பார்வையில் ஹப்புத்தளை தமிழ் மத்தியக் கல்லூரியும் பதிவானது. அதன் பேறாக இதனை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

உண்மையில் இது அவசியமான ஒரு காரியம். தேசிய ரீதியில் சுகாதாரத் துறையைப் போலவே கல்வித்துறையும் தென்கிழக்கு ஆசியவிலேயே முதன்மை நிலையை தக்கவைத்துக் கொண்டுள்ள பெருமை இலங்கைக்கு இருக்கிறது. ஆனால் மலையகத்தை பொறுத்தவரை இவ்விரு துறைகளுமே பின்னடைந்து காணப்படுகின்றது. கொரோனா தொற்றால் நாடே முடக்கப்பட்டிருந்த நிலையில் பெரும்பாலான பெருந்தோட்டங்கள் நோய் தொற்று அச்சுறுத்தலையும் மீறி இயங்கின.

அதிர்ஷ்டவசமாக கொரோனா தொற்று ஏற்படவில்லை. அப்படி நடந்திருந்தால் வைத்தியசாலை வசதி கிடைத்திருக்காது. தனிமைப்படுத்தலுக்கு பெரும் தடுமாற்றம் ஏற்பட்டிருக்கும். சுருக்கமாக சொல்வதாயின் மலையகத்தில் சுகாதார நிலைமை பெரும் சவாலையே எதிர்நோக்கியிருக்கும்.

இதே போலதான் கல்வி நிலைமையும். கொரோனா முடக்கத்தால் சுமார் 43இலட்சம் மாணவர்கள் வீடுகளுக்குள்ளிருந்தே தமது படிப்பைத் தொடர வேண்டி நேர்ந்தது.

இதற்காக நவீன தொழில்நுட்ப வசதிகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் அவ்வாறான ஏற்பாடுகளுக்கான வாய்ப்பு எத்தனை மலையக மாணவர்களுக்கு கிடைத்ததென்பது ஆராயப்பட வேண்டிய விடயம்.

நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தக்கூடிய அளவு பொருளாதார வசதி மலையக பெற்றோரிடம் இல்லை. இதனால்தான் கல்வியில் சமநிலை பேணல் இங்கு சாத்தியமாகாமலே போகின்றது. இதற்கு அடிப்படை காரணம் என்ன?

பெருந்தோட்டப் பிள்ளைகளுக்கான கல்வி சம்பந்தமான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு வரலாற்று ரீதியாக அதற்கான பொறுப்பை பெருந்தோட்ட முகாமைத்துவமே ஏற்றுக்கொண்டிருந்தது. பிரித்தானிய அரசாங்கம் ஆங்கில மொழி மூலமான பாடசாலைகளை அறிமுகப்படுத்தியதன் பின்னர் கட்டணமுறை நடைமுறைக்கு வந்தது. இது வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே வசப்படுத்த முடியுமாயிருந்தது. இதனால் பெருந்தோட்ட சமூகம் அந்த வாய்ப்பை அடைய முடியவில்லை.

1820இல் தோட்டப் பகுதிகளில் கட்டாயக் கல்விச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1939களில் தோட்டப் பாடசாலைகளின் பாடத்திட்டம் சுதேச கல்விக்கு அப்பாலும் நடத்தக்கூடிய சட்டம் இயற்றப்பட்டது. 1832 ஆம் ஆண்டு கோல்புறுக் சிபார்சு செய்த கல்வி முறைமையால் பெருந்தோட்டப் பிள்ளைகள் எதுவித நன்மைகளையும் பெறவில்லை என்பது ஆய்வாளர்களின் அபிப்பிராயம். ஏனெனில் ஏட்டளவில் திட்டங்கள் இருந்தாலும் தோட்டப்புற பிள்ளைகளை உள்ளீர்க்கும்படியாக அமையாமல் போனமை துரதிர்ஸ்டமே. தோட்ட முகாமைத்துவங்கள் தோட்டப் பிள்ளைகளுக்கு கல்வி என்னும் கொள்கையை ஆபத்தான விடயமாகவே கருதினர். அவர்களைப் பொறுத்தவரை சிந்திக்கத் தெரியாத தலைமுறையே தமது தொழிலை முன்னெடுக்க உதவியாக இருக்கும் என்ற கருதுகோள் இருந்திருக்கலாம். இக்காலகட்டத்தில் தோட்டக்கட்டமைப்பின் பொறுப்பில் இல்லாத வேறு பாடசாலைகளும் இங்கு ஆரம்பிக்கப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. இவ்வாறான பாடசாலைகளை கிறிஸ்தவ மிஷனரிகளே நடத்தின. இவர்களின் நோக்கம் மதத்தை பரப்புவதேயாகும்.

இதேவேளை இந்து சமயம் சார்ந்த நிறுவனங்கள், எச்சமயமும் சாராத தனியார் அமைப்புகள் பாடசாலைகளை அமைக்க தலைப்பட்டன. பாடசாலைகள் பெருமளவில் ஆரம்பித்தாலும் அதனால் பெருந்தோட்ட சமூகம் உரிய பயனை அடையவில்லை. தோட்டப் பாடசாலைகள் யாவும் அரசுடமையாக்கப்பட வேண்டும். அதன் மூலம் அனைத்துச் சமூகத்துக்கும் பொதுவான தேசிய கல்விக் கொள்கைக்கூடான வரப்பிரசாதங்களை பெருந்தோட்டப் பிள்ளைகளும் பெற வேண்டும் என்னும் கோரிக்கை மலையகத்தில் கற்ற சமூகத்தினால் அடிக்கடி எழுப்பப்பட்டது. எனினும் 1972வரை இதுபற்றி எந்தவொரு அரசாங்கமும் கரிசனை கொள்ளவில்லை. தோட்டங்களை நிர்வாகம் செய்த அந்நிய முகாமைத்துவங்களும் இதற்கு ஆதரவுதர முன்வரவில்லை. எனினும் 1972களில் பெருந்தோட்டங்களை வெளிநாட்டுக் கம்பனிகளிடம் இருந்து ஸ்ரீமாவோ அரசாங்கம் சுவீகரித்தது.

1947இல் நாடு சுதந்திரமடைந்தது. அக்காலகட்டத்தில் காலனித்துவ கல்விக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு தேசியக் கல்விக் கொள்கையொன்று உருவாக்கம் பெற்றது. ஆனால் பெருந்தோட்டப் பிள்ளைகளுக்கான கல்வி இதனுடன் இணைக்கப்படவில்லை. தோட்டப்பாடசாலைகள் என்ற முத்திரையின் கீழ் தொடர்ந்தும் அப்பாடசாலைகள் தோட்ட முகாமைத்துவத்தின் பொறுப்பிலேயே இயங்கி வந்தன. அதே நேரம் அரச மானியங்களும் கிடைத்தன. இவற்றில் 350 பாடசாலைகள் 1981இல் அரசினால் பொறுப்பேற்கப்பட்டன. இவ்வாறு மொத்தமாக சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 845 ஆகும். 2002ஆம் ஆண்டளவில் 945 ஆக பாடசாலைகளின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது. அதேநேரம் 563 பாடசாலைகள் வெளிநாட்டு நிதியுதவியுடன் (சுவீடன்) அபிவிருத்தி கண்டன.

ஆனால் 55 வருடங்களாக இலவசக் கல்வியை அனுபவித்துக் கொண்டிருக்கும் தேசிய கல்விக் கொள்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள பிற சமூக மாணவர்கள் பெற்றிருக்கும் அபிவிருத்தியைப் பெருந்தோட்டப் பிள்ளைகள் பெறமுடியாத தொய்வு நிலை இன்னும் நீட்சிபெற்றுள்ளது. இதற்கான காரணம் மலையக பாட சாலைகளை இன்றும் கூட தோட்டப் பாடசாலைகளாகவே எடைபோடும் கல்வி துறைச் சார் அதிகாரிகள் இருப்பதேயாகும்.

(21ஆம் பக்கம் பார்க்க)





பன். பாலா ...

## மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமைகள்

## பூங்குன்றம் சஞ்சிகை ஆசிரியர்

# ஜெ.சற்குருநாதன்

ஜெ. சற்குருநாதன் ஓர் இலக்கிய ஆய்வாளர், சஞ்சிகை வெளியீட்டாளர், ஆசிரியர், திராவிடப்பற்றாளர், இலக்கிய ஆர்வலர் என பல பரிமாணங்களைக் கொண்டவர். பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தற்போது மட்டக்களப்பில் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார்.

இவர் மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர். பதுளை கிளையை கே. இராமசாமியுடன் இணைந்து ஸ்தாபித்து அதன் செயலாளராக பணியாற்றியவர். மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர். 60களின் இறுதிப் பகுதியில் புதிய உத்வேகத்துடன் இர. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் தலைமையில் இயங்கிய மலையக இளைஞர் முன்னணியின் செயற்பாட்டாளராக 1983வரை பணியாற்றியவர். சமத்துவ சங்கத் தலைவர் முருகன் திருவுளம், வ. ஞானபண்டிதன் ஆகியோருடனும் இணைந்து பணியாற்றியவர்.



பதுளையில் இயங்கிய இந்து மகாசபை, சைவபரிபாலனசபை, இந்துமா மன்றம் ஆகியவற்றில் இணைந்து பணியாற்றியவர். இந்தியாவிலிருந்து வருகைதந்த இர. நெடுஞ்செழியன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் பதுளைக்கு வந்து உரையாற்ற ஒழுங்குகளை செய்தவர்.

பதுளை நாராங்கலை லெஜர்வத்தையில் 30.07.1936இல் பிறந்தார். தனது திருமணத்தின்போது தாலி கட்டமாட்டேன் என பிடிவாதமாக இருந்தவர். மாத்தளையை சேர்ந்த தெய்வராணி தாமோதரம் என்பவரை 31.03.1980இல் திருமணம் செய்தார். இன்றும் இவ்வாறான பல விடயங்களில் தனது நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ளாமல் வாழ்ந்து வருகிறார். அக்காலத்தில் சஞ்சிகை ஒன்றை வெளியிடுவது சிரமமான விடயமாக காணப்பட்டபோதிலும், இவரின் அயராத அர்ப்பணிப்பால் அதுவும் மலையகம் தொடர்பான சஞ்சிகையை அச்சிட்டு வெளியிட்டது துணிச்சலான விடயமாகும். இவர் வெளியிட்ட பூங்குன்றம் என்ற சஞ்சிகையினூடாக இலக்கியப் பணியாற்றினார். இச்சஞ்சிகைமூலம் பல எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தார். 1960களில் இவரோடு மலையக பட்டதாரிகளான எஸ். தம்பிஐயா, வி.ரெங்கன், கல்விச் செயற்பாட்டாளர் பாரதி கே. இராமசாமி, பேராசிரியர் சோ.சந்திரசேகரன், லண்டன் மு.நித்தியானந்தன் போன்றோர் இணைந்து செயற்பட்டனர்.

அச்சக உரிமையாளரான இவர், பலருக்கு இலவசமாக அச்சுப் பணிகளை செய்து கொடுத்துள்ளார். இவரது 'பூங்குன்றம்' இலக்கிய சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீடு பதுளை விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. பதுளையின் முன்னணி வர்த்தக பிரமுகர், மொடன் படமாளிகை கே. இரத்தினசாமி வெளியிட்டு விழாவுக்கு தலைமை வகித்தார். சஞ்சிகை ஆய்வுரையை பேராசிரியர் சோ.சந்திரசேகரன் நிகழ்த்தினார். ஒருசில இதழ்களே வெளிவந்தாலும் சாரணாகையூம், பதுளை ராகுலன், மொழிவரதன், மு. நித்தியானந்தன் ஆகிய பலரின் ஆக்கங்கள் அதில் வெளிவந்தன. பல படைப்பாளிகளுக்கு இச்சஞ்சிகை களம் அமைத்துக் கொடுத்தது.

சற்குருநாதன் பதுளையில் எழுச்சிப் பெற்ற படைப்பாளிகள், இலக்கிய ஆய்வாளர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து சிந்தனை ஒன்றியம் என்ற பெயரில் ஓர் அமைப்பை (ஜூலை 1978) உருவாக்கினார். 1982 ஜூலை மாதத்தில் இவ்வொன்றியமானது, அறிவும் தெளிவும் எம்மிரு கண்கள் என்ற தொனிப்பொருளில் பாரதி சித்திரக்கண்காட்சி, பாரதி நூற்றாண்டு மலர், பாரதி புத்தகக் கண்காட்சியையும் நடத்தியது. யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த மு.நித்தியானந்தன் நூல் கண்காட்சிக்கு பல நூல்களை தந்து உதவினார். பாரதி தொடர்பான கட்டுரைப் போட்டிகளையும் இவ்வமைப்பு நடத்தி இளையவர்களுக்கு ஊக்கமளித்தது.

இவ்வமைப்பு, சமயமும் சமுதாயமும் எனும் தலைப்பில் கல்வி கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இதில் பேராசிரியர் சோ. சந்திரசேகரன், மெய்யியல் ஆய்வாளர் எஸ். அமிர்தலிங்கம், முன்னாள் அமைச்சர் செல்லையா இராஜதுரை போன்றோர் இக்கருத்தரங்கில் உரையாற்றினர். அக்காலத்தில் வெளிவந்த கல்வி வெள்ளை அறிக்கை (1981) பற்றிய கருத்தரங்கு ஒன்றையும் சற்குருநாதன் ஒழுங்கு செய்திருந்தார்.

சற்குருநாதனின் சிந்தனையில் பிறந்த பாரதி நூற்றாண்டு விழா மலர் அவர் முன்னின்று நடத்திய பாரதிவிழாவின் ஒரு பிரதான அம்சமாகும். பாரதியின் ஆளுமை சிந்தனைகள், எழுத்துப் பணிகள் பற்றிய கட்டுரைகள் பலவற்றை பாரதி நூற்றாண்டு விழா மலரில் பேராசிரியர்களான சந்திரபோஸ், தில்லைநாதன், மலையக சிந்தனையாளர் ஏ.பி. வி.கோமஸ், எஸ்.கணேசன், செல்வி ஞானசீலி என்போரும் மொழிவரதன், பதுளை ராகுலன், கவிஞர் அப்துல்காதர் லெப்பை போன்றோரின் கவிதைகளும் மலரில் இடம்பெற்றிருந்தன.

விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக பாரதி கல்லுளரி நிறுவகர் கே. இராமசாமியின் கல்வி, சமூகப் பணிகளை பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இவ்விழாவில் இர.சிவலிங்கம், இளங்கீரன், தெளிவத்தை ஜோசப் ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர். பதுளையில் உருவாகிவந்த இலக்கிய எழுச்சி, இலக்கிய ஆர்வலர்களின் செயற்பாடுகள் என்பவற்றுக்கு சற்குருநாதனின் இந்த விழா முயற்சிகள் ஒரு குறிகாட்டியாக அமைந்தன.

இத்தகைய எழுச்சியின் தொடர்ச்சிக்கு 1983இல் நிகழ்ந்த தமிழர் எதிர்ப்பு கலவரங்கள் ஒரு பெருந்தடைக் கல்லை ஏற்படுத்தின. சற்குருநாதனின் அச்சகம் எரியூட்டப்பட்டு பல நூல்களும் கவிஞர் தமிழோவியன் எழுதிய கவிதைகளும் எஸ். திருச்செந்தூரனின் சிறுகதைகளும் இர. சிவலிங்கத்தின் பல்வேறு ஆக்கங்களும் உடைமைகளும் பறிபோயின.

அத்தோடு சற்குருநாதனும் மட்டக்களப்புக்கு புலம்பெயரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சற்குருநாதன் அவருடைய இலக்கியப் பணிகள் பற்றிய இக்குறிப்பு பதுளையில் இலக்கிய இயக்கத்தின் மீள் எழுச்சிக்கான உந்துசக்தியாக அமைவதோடு பதுளை சிந்தனை ஒன்றியம் பதித்த தடமும் பாராட்டுக்குரியதே!

எச்.எச். விக்கிரமசிங்க ...

## சடங்கு சுத்துது மானம் போகுது!



ஐந்தடியில் கூடுகட்டி
அதற்குள் முடக்கவைத்து
ஓடித்திரிந்த காலையும்
மனதையும் கட்டிப்போட்டு
வெயில்படாது வீட்டுக்குள்
மதிமுகத்தில் மஞ்சள் பூசி
வெட்கமும் நாணமும்
ஊற்றெடுக்க வைக்கும்
விஞ்ஞானம்தான் தமிழனின்
பூப்புனித நீராட்டு வைபவம்
தாய்மாமன் சீருவரும்
மாட்டுவண்டியில
தட்டுதட்டா சீருவரும் அந்தவண்டியில
ஆட்டுகடா தானும் வரும் அத
அடிச்சுபோட ஆளு ஒன்னு சேர்ந்தே வரும்
முட்டையும் மொச்சகொட்டையும்.
நன்றாக வறுத்த நவதானியமும்
தூளாக்கி நல்லெண்ணெயும்
நெய்யும் கலந்து கொடுத்து .
அடுத்த பரம்பரை உருவாக்கும்
போருக்கு ஒரு வீராங்கனையை
தயார்செய்வதற்குதான்
இந்த நீராட்டு சடங்கு
கும்பத்தாரை கூட்டி என்வீட்டில்
பெண்ணிருக்கு என சாடை காட்டும்
சடங்குதான் இந்த
பூப்புனித நீராட்டு விழா!
ஊருக்கே தப்படிச்சு
சம்பவத்தை சொன்னதால
வசந்தி வயசுக்கு வந்திருச்சாம்
வாமச்சான் பாப்போம் என புறப்படும்
பாலத்தடியில் இருந்து ஒரு கூட்டம்.
பிராமண ஐயர் வீட்டு சடங்கா
முடிய ஏழு நாளாகுமே
மஞ்சள் தெளிச்ச மறுநாளே
ஸ்கூல் போகும்
அப்போ பார்த்திடலாம் அதன் அழகை
என்றலையும் இன்னொரு கூட்டம்
இதுல பிரஸ்டிஷ் பிருந்தா சொல்லுவா
நம்ம சடங்கு நகரசபை ஹோலில்
மூணுலட்சம் செலவில் கார்டுவச்சு
நடந்தது என்று
செலவழித்த காசு திரும்பி வராட்டியும்
இல்லை கவலை
கௌரவம் முக்கியம் பாருங்கள்
வட்டிக்கு வாங்கியதோ ஆறு இலட்சம்
வந்த மொய்தொகையோ வெறும்
ஒரு இலட்சம் மிச்சம் எல்லாம்
மது தண்ணியோடதான்.
மாதவருமானம் மூன்று தர
இரண்டாயிரம் மட்டுமே நம்ப
சடங்கு செலவு மூன்று தர
இருநூறு ஆயிரம்
அப்பன் பென்சன் வந்திருந்தா
அதுவும் இதோடு போயிரும்.
எடைகுறைந்த என்வலப்பை
நன்கொடையாக வாங்க
நம்பபுள்ள கைகுலுக்கும்
இந்த நாகரிகம் கெட்ட நடைமுறை
நமக்கெதற்கு?
தோட்டமே ஒரு குடும்பமாக
தோட்டம் முழுதும் தோரணம் கட்டி
தோட்ட கமிட்டி மாதர் கமிட்டி
தொண்டர் கமிட்டி என
சீர் கொண்டுவந்த சிறப்பான காலம்
இன்று மாறிவிட்டது
போக்கஸ் லைட் போட்டு
பெண்ண நடுதெருவுக்கு கொண்டு வரும்
இந்த சடங்கு வைபவம்
தமிழன் தன் மானத்தை
தலைகுனிய செய்யுமடா!

நவகவி நவராஜா

## மறைந்தும் மறையாத ஊடக பண்பாளர்

# மஸ்கெலிய துரைசாமி



ஊடகத்துறையில் 45 ஆண்டுகளுக்கும் மேலாக பிராந்திய ஊடகவியலாளராகப் பணியாற்றிய மஸ்கெலியாவைச் சேர்ந்த சோழமுத்து துரைசாமி கடந்த மாதம் 20ம் திகதி தனது 84வது வயதில் தனது மஸ்கெலிய இல்லத்தில் காலமானார். முக்கியமான, மூத்த மலையக செய்தியாளர் எம்மைவிட்டுப் பிரிந்துள்ளார்.

சோழமுத்து துரைசாமி அக்கரபத்தனை நிவ்போட்மோர் தோட்டத்தில் (ஜெர்மன் தோட்டம்)' 1936ம் ஆண்டு பிறந்தவர். இவர் குடும்பத்தினர் பின்னர் மஸ்கெலியா சோலங்கந்தை தோட்டத்தில் குடியேறினர். இவரது தந்தை தோட்டத்தில் கணக்குப்பிள்ளையாக கடமையாற்றினார்.

அங்கிருந்து ஓய்வு பெற்று மஸ்கெலியா பழைய நகரில் குடியேறி வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தார். துரைசாமி தனது ஆரம்ப கல்வியை மஸ்கெலியா சென் ஜோசப் தமிழ் கலவன் பாடசாலையிலும் அதன் பின் அட்டன் சென்ஜோன் பொஸ்கோ கல்லூரியில் ஆங்கில மூலமும் கல்வியைத் தொடர்ந்தார்.

தந்தையாருக்கு உதவி செய்கின்ற நோக்கில் வர்த்தகத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்தபோது தந்தையார் மறைந்தார்.

அதன் பின் வர்த்தகத்தை நடத்த முடியாது தவித்துக்கொண்டிருக்கும்போது தனது உயர்தரக் கல்வியை பூர்த்தி செய்தார்.

தாயாரின் பிடிவாதத்தால் தமிழகத்திலிருந்து சின்னசாமி செல்வம் என்ற பெண்ணை திருமணம் முடித்தார். இக்காலக்கட்டத்தில் பத்திரிகைத்துறையில் ஈடுபாடு கொண்டு லேக்கவுஸ் தினகரனில் மஸ்கெலிய நிருபராக கடமையாற்றி வந்தபோது, லேக்கவுஸ் Daily News பத்திரிகையின் நிருபராகவும் தெரிவானார்.

1960ம் ஆண்டு தனியார் பாடசாலை உருவாகியது. அதற்கு முன்னோடியாக எஸ்.வி.கதிரேசன் தம்பதிகள் நோட்டனில் கணபதி வித்தியாலயத்தையும் மஸ்கெலியாவில் செட்டியப்பா கல்லூரியையும் பொகவந்தலாவையில் காமாட்சி வித்தியாலயத்தையும் ஆரம்பித்து நடத்தி வந்தார்கள்.

அக்காலகட்டத்தில் தனியார் பாடசாலைகளின் புகழ் ஓகோவென ஓங்கி வளர்ச்சிபெற்று வந்தது. அதன் காரணமாக கே.வி. மூக்கப்பிள்ளை நோட்டன் கணபதி வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி வந்தபோது கதிரேசன் தம்பதிகளின் வேண்டுகோளை ஏற்று பொகவந்தலாவ காமாட்சி வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றார்.

அப்போது மூக்கப்பிள்ளை தனியாக பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க நோர்வூட்டில் அமைக்க ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தபோது மாத்தளையைச் சேர்ந்த எம்.சி.முத்துகிருஷ்ணன் திடீரென சென்ரல் கல்லூரியை நோர்வூட் நகரில் ஆரம்பித்தார்.

அதனால் வெறுப்படைந்த மூக்கப்பிள்ளை உடனடியாக சாமிமலை பௌத்த பன்சலையில் சரஸ்வதி வித்தியாலயம் என்ற பெயரில் மே மாதம் 2ம் திகதி 1960ல் சரஸ்வதி வித்தியாலயத்தை ஆரம்பித்தார். பி.எம். லிங்கம் ஆசிரியரானார். அந்த சந்தர்ப்பத்தில் எஸ்.துரைசாமிக்கு ஆங்கில ஆசிரியராக நியமனம் வழங்கப்பட்டது. அப்போது 100 ரூபா சம்பளம் .

பின்னர் காசல்ரீ நீர்த்தேக்க நிர்மாண திட்டத்தில் களஞ்சிய சாலை பொறுப்பாளராக பணியாற்றினார். மஸ்கெலியா பழைய நகரம் நீரில் மூழ்கியதும் புதிய நகரில் தமது குடும்பத்தாருடன் வாழ்ந்த துரைசாமி 5 ஆண் பிள்ளைகளின் தந்தையாவார்.

1970க்குபின் ஸ்ரீமாவோ அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. அதனை தொடர்ந்து தோட்டப்பாடசாலைகள் அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டது.

1972ம் ஆண்டு தோட்டப் பாடசாலைகள் அரசின்கீழ் வந்தபோது துரைசாமி டிக்கோயா டங்கல்ட் தமிழ் வித்தியாலயத்தில் பயிற்சி ஆசிரியராக நியமனம் பெற்றார்.

இரண்டாண்டு பயிற்சிக்குப்பின் மஸ்கெலியா சென்ஜோசப் வித்தியாலயத்தில் ஆசிரியரானார். பின்னர் பிரதி அதிபராகக் கடமையாற்றி 2000 ஆண்டில் ஓய்வு பெற்றார். அமரர் தே.வி.மூக்கப்பிள்ளை மரணத்தை தொடர்ந்து துரைசாமி மலையக தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராக கடமையாற்றி வந்தார்.

சுமார் 15 ஆண்டுகள் தலைவராக கடமையாற்றிய பெருமைக்குரியவர். ஆங்கில மொழியிலும் தமிழிலும் ஊடகத்துறையில் கடமையாற்றிய துரைசாமியின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்.

ஆன்மீகத்துறையிலும், சமூகநலத் துறையிலும் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் தன்னை அர்ப்பணித்தவர். அது போலவே ஊடகத்துறையிலும் 1957ல் தொடங்கி 2000 ஆண்டு வரை பணியாற்றி வந்தவர்.

தன் வாழ்நாள் முழுவதும் நல்ல பண்பு கொண்ட பெருமகனாகவே வாழ்ந்து மறைந்துள்ளார்.

கடந்த இரண்டாண்டு காலமாக மஸ்கெலியாவில் தனது வீட்டிலேயே தங்கி சிகிச்சை பெற்று வந்த அவர் கடந்த மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் மரணத்தை தழுவினார்.

மஸ்கெலியா
செ.தி. பெருமாள் ...

# 20ஆம் திருத்தம் அதிகாரப் பகிர்வை மீறக்கூடாது!

## இதுவே எமது நிலைப்பாடு

**வடக்கில் தமிழ் தேசியக் கட்சிகளின் இணைவானது தேர்தல் கூட்டாக பரிணமிக்குமா இல்லையா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்கிறார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ,சுமந்திரன். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய செவ்வியில் இந்தக் கூட்டு தேர்தலை இலக்கு வைத்ததாக மட்டும் இருக்கக் கூடாது என்றும் தேர்தல் என்று வருகின்ற பொழுது ஒன்றாய் இருக்கிற கட்சிகளே உடைவதே சரித்திரம் என்றும் கூறுகின்றார். அவரது செவ்வி முழுமையாக....**

எஸ்.நிதர்ஷன்
பருத்தித்துறை விசேட நிருபர்

**கேள்வி: அரசாங்கம் கொண்டு வருகின்ற 20 ஆவது திருத்தம் தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** 20 ஆவது திருத்த யோசனையை நாங்கள் முற்று முழுதாக எதிர்க்கிறோம். அதனை ஒட்டு மொத்தமாக ஒரு ஜனநாயக விரோத செயற்பாடாகவே பார்க்கிறோம். அது மட்டும் இல்லாமல் அதிகாரப் பகிர்வு என்ற தத்துவத்தை மீறி செயற்படுத்தப்படுகிறது. உண்மையில் அரச அதிகாரங்கள் 3 நிறுவனங்களிடம் இருக்க வேண்டும். அதில் ஒவ்வொன்றும் இன்னொன்றினுடைய செயற்பாட்டை மேற்பார்வை செய்ய வேண்டும். ஆனால் இது அந்த தத்துவத்தை மீறி அனைத்து அதிகாரங்களும் ஒரு நிறுவனத்திடம் கொடுப்பதாகவே அமைகிறது.

தனிமனிதனைக் கொண்ட நிறைவேற்று நிறுவனத்திடம் முழு அதிகாரங்களையும் கொடுப்பது இது. ஏனைய நிறுவனங்கள் கூடுதலான எண்ணிக்கையானவர்களைக் கொண்டது. நீதித்துறையில் ஏராளமான நீதிபதிகள் இருக்கின்றார்கள். சட்டவாக்கத்துறையில் 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

ஆனால் நிறைவேற்றுத் துறையிலும் நிறையப் பேர் இருந்தாலும் அதில் ஒேருவர் அதியுச்சத்தில் இருக்கின்றார். அவரிடம் தான் எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன. அவ்வாறான நிறைவேற்றுத் துறைக்கு எல்லலா அரச அதிகாரங்களையும் கொண்டு போய்க் குவிப்பதுதான் 20 ஆம் திருத்தத்தில் காணப்படுகிறது. அதனால் இந்த திருத்தத்தை முற்று முழுதாக கூட்டமைப்பு எதிர்க்கிறது.

**கேள்வி: இது குறித்த கூட்டமைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?**

**பதில்:** முதலாவது நடவடிக்கையாக இந்த திருத்த சட்ட மூலத்தை நாங்கள் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தியிருக்கிறோம். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடைய பெயரில் அதற்கு எதிரான மனுவொன்று தாக்கல் செய்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதற்கு அப்பால் இந்த திருத்தத்தை முதலில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கும் அதற்குப் பிறகு சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்பட்டால் சர்வஜன வாக்கெடுப்பில் நிறைவேற்றுவதற்கும் நாங்கள் எதிர்ப்பை தெரிவிப்போம். அதற்கமைய இந்த திருத்தத்தையும் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்போம். இதுநிறைவேறாமல்இருப்பதற்கான எங்களால் இயன்ற சகலதையும் நாங்கள் செய்வோம்.

**கேள்வி: அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்கப் போவதாக கூறப்படுகின்ற நிலையில் அதற்கான சாத்தியங்கள் உள்ளனவா?**

**பதில்:** 13 ஆவது திருத்தம் நீக்கப்படாது. மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி அதைக் கட்டியெழுப்பி அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக ஆக்குவேன் என்று இந்தியாவுக்கு மூன்று தடவை எழுத்துமூல வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

ஓரிரு நாட்களுக்கு முன்னர் இந்திய பிரதமர் மோடியோடு நடந்த இணையவழி பேச்சுவார்த்தையின் போது கூட இந்த விடயம் பேசப்பட்டிருப்பதாகவும் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவதில் இருந்து தமிழ் மக்களுடைய அபிலாசைகள் நிறைவேற்றப்படுவதுவரை இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றும் தங்களுடைய கருத்தை இந்தியா தரப்பில் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த விடயங்கள் ஒரு கூட்டறிக்கையிலே வெளிவந்திருக்கிறது. ஆகையினால் இப்படியான பின்னணியில் மாகாணசபை முறைமையை அரசாங்கம் இல்லாமல் செய்யாது என்று தான் நான் நினைக்கிறேன்.

**கேள்வி: இந்த 13 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று அரச தரப்பு சொல்கின்ற நிலையில் இந்தியா அதற்கு இணங்குமா?**

**பதில்:** அரசிலும் எல்லாரும் இதனைச் சொல்லவில்லை. சிலர் தான் இதனை சொல்கிறார்கள். அதாவது சிலர் மாற்ற வேண்டாம் என்கின்றனர். இன்னும் சிலர் அதனை தொடமாட்டோம் என்கின்றனர். ஆனால் அது இந்திய இலங்கை ஒப்பந்தம் என்கிற ஒரு சர்வதேச ஒப்பந்தத்தின் அடிப்படையிலே செய்யப்பட்டிருக்கின்றது.

அந்த ஒப்பந்தத்திற்குரிய மற்றைய நாடு எங்களுடைய அண்டைய நாடு. அது ஒரு பிராந்திய வல்லரசு. ஆகையினாலே இவை எல்லாவற்றையும் கணக்கிலெடுக்கிற பொழுது இலங்கை அரசாங்கம் அதை இல்லாமல் செய்யாது. இந்தியாவும் அதனை நீக்க இடமளிக்காது என்றே கருதுகின்றேன்.

**கேள்வி: தமிழ் தேசிய கட்சிகள் ஓரணியில் திரண்டிருப்பதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில்:** தமிழ் தேசிய கட்சிகள் இப்படியாக ஒன்று சேர்வது மிகவும் ஆரோக்கியமான ஒரு விடயம். அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக நாங்கள் சேர்ந்து தான் செயற்பட வேண்டும். அதை இத்தனை கட்சிகளும் வெளிப்படுத்துவது மிகவும் நல்லதொரு விடயமாகத் தான் தென்படுகிறது.

எதிர்காலத்தில் இந்தக் கூட்டு எப்படியாகப் பரிணமிக்கிறது என்பதை நாங்கள் பார்க்க வேண்டும். இந்த அரசாங்கத்தினுடைய செயற்பாடுகள் பிற்போக்கானவையாக இருக்கிற காரணத்தினாலே தொடர்ச்சியாக பல விடயங்களில் நாங்கள் சேர்ந்து செயற்பட வேண்டியதாக இருக்கும்.

20ஆவது திருத்தம் அதற்குப் பிறகு புதிய அரசியலமைப்பு உருவாக்குகிற முயற்சி என்றெல்லாம் வருகிற பொழுது தமிழ் தேசியக் கட்சிகளாவது குறைந்தது ஒரு நிலைப்பாட்டிலே இருப்பது மிகவும் அத்தியாவசியமானது.


எம்.ஏ. சுமந்திரன் எம்.பி

**கேள்வி: இந்த தமிழ் தேசியக் கட்சிகளின் கூட்டத்திலும் அவர்கள் முன்னெடுத்த போராட்டத்திலும் நீங்கள் கலந்து கொள்ளவில்லை. ஆகையினால் இதில் உங்களுக்கு உடன்பாடில்லையா?**

**பதில்:** அந்த நேரத்தில் நான் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. பாராளுன்ற அமர்வுகள் இருந்தன. அதற்கு முதல் வாரத்தில் முக்கியமான சில வழக்குகள் இருந்தது. குறிப்பாக நீராவியடிப் பிள்ளையார் ஆலய வழக்கு உட்பட சில முக்கிய வழக்குகள் இருந்த காரணத்தினால் அதற்கு என்னால் வர முடியவில்லை. அப்படியான ஒரு ஒற்றுமை முயற்சிக்கு நாங்கள் எல்லாருமே முழுமையான ஆதரவைக் கொடுத்தோம்.

**கேள்வி: இந்த கூட்டு மாகாண சபைக்கு தேர்தல் கூட்டாக பரிணமிக்குமா?**

**பதில்:** தெரியவில்லை. தேர்தல் கூட்டாக அது பரிணமிக்குமா இல்லையா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால் ஒற்றுமையாக கூட்டு தொடர வேண்டும். ஆனால் அது தேர்தலை இலக்கு வைத்ததாக மட்டும் இருக்கக் கூடாது.

தேர்'தல் என்று வருகின்ற பொழுது ஒன்றாய் இருக்கிற கட்சிகளே உடைகிற ஒரு சரித்திரம் இருக்கிறது. ஆகையினால் இந்தக் கூட்டு தேர்தலுக்கு நின்று பிடிக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**கேள்வி: திலீபன் விடயத்தில் ஒன்று சேர்ந்தது போல் தொடர்ந்து ஏனைய பிரச்சினைகளுக்கும் ஒன்று சேர்ந்து செயற்பட முடியுமா?**

**பதில்:** திலீபன் விடயத்தைப் போன்று ஏனைய விடயங்கள் வருகிற பொழுதும் சேர்ந்து செயற்படுமென்று தான் நான் எதிர்பார்க்கிறேன். அவ்வாறு தான் செயற்பட வேண்டும். ஆகையினால் இந்த விடயம் போன்று இனிவரும் காலத்திலும் எமக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற அரசின் செயற்பாடுகளுக்கு எதிரான ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று தான் எதிர்பார்க்கிறேன்.

**கேள்வி: தமிழ் தேசிய கட்சிகள் பாராளுமன்றத்தில் ஒருமித்து செயற்படுமா?**

**பதில்:** பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு திருத்தங்கள் அல்லது அரசாங்கம் கொண்டு வருகின்ற ஏதாவது சட்ட மூலங்களின் போது அதற்கு வலுவான ஒரு எதிர்ப்பைக் காண்பிக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் சேர்ந்து தான் செயற்பட வேண்டும்.

இதேவேளை மலையக தமிழ் கட்சிகளுடனும் இரண்டு முஸ்லிம் கட்சிகளுடனும் ஒரு இணக்கப்பாடு ஏற்கனவே எங்களுக்கு இருக்கிறது. இப்பொழுது இந்த பாராளுமன்றத்திற்கு புதிதாக வந்த சேர்ந்திருக்கிற இரண்டு தமிழ் தேசிய கட்சிகளையும் இணைத்து பயணிக்க வேண்டும்.

**கேள்வி: பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் உரைக்கு பாராளுமன்றில் எதிர்ப்பு ஏற்பட்ட போது அவருக்கு ஆதரவாக நீங்கள் செயற்பட்டதை ஒற்றுமைக்கான ஒரு ஆரம்பமாக கருதலாமா?**

**பதில்:** பொதுவான பிரச்சனைகளில் எங்களுடைய உரிமை சார் பிரச்சினைகளில் நாங்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாகச் செயற்படுவதில் ஒருகாலமும் பின்நிற்கக் கூடாது. அதில் நாங்கள் தெளிவாக சேர்ந்து செயற்பட வேண்டும். அன்றைக்கு பாரர்ளுமன்றில் நான் அப்படி தான் செயற்பட்டேன்

முக்கிய விடயம் சம்பந்தமாக கேள்வி எழுப்புகிற உரிமை கட்சித் தலைவருக்கு இருக்கிறது. அதை சபாநாயகர் மறுத்த போது தான் அதற்கு எதிராக பேசினேன். அப்படிப் பல சம்பவங்கள் திரும்பவும் திரும்பவும் ஏற்படலாம். நாங்கள் ஒருவருக்கொருவர் மிகவும் ஆதரவாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய நிலைப்பாடு.

**கேள்வி: தமிழரசுக் கட்சிக்குள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதா?**

**பதில்:** தமிழரசுக் கட்சிக்குள் குழப்பங்கள் இருக்கின்றன. அண்மையில் பொதுச் செயலாளர் ராஜினாமா செய்திருக்கிறார். அது தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவு. வெகு விரைவாக அந்த விடயங்களும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

**கேள்வி: தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் தரப்பு ஒரு அணியாக செயற்படுகிறதா?**

**பதில்:** அது பொய்யான குற்றச்சாட்டு. எந்த அணியாகவும் செயற்படவில்லை. ஆனால் தேர்தல் காலத்தில் மிகவும் விசேடமாக கட்சிக்குள்ளே இருந்து எனக்கு எதிராக பல அணிகள் செயற்பட்டன என்பது எல்லாருக்கும் தெரிந்த விசயம். இன்றைக்கும் அப்படி சிலர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தேர்தல் காலத்தில் அப்படியாக எதிராக செயற்பட்டதை எந்தக் கட்சியும் ஒருகாலமும் மன்னிக்காது. ஆனால் எங்கள் கட்சியில் அவ்வாறானவர்கள் தொடர்ச்சியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். தற்போதும் அங்கம் வகிக்கிறார்கள். அவ்வாறானவர்கள் தொடர்ச்சியாக எதிர் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தலில் வென்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.. அது சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் கட்சி இன்னும் பாரிய பின்னடைவுகளைச் சந்திக்கும்.

**கேள்வி: உங்கள் கட்சியை சேர்ந்தவர்களே உங்கள் மீது ஏன் விமர்சனங்களை முன்வைத்து எதிராக செயற்படுகின்றனரே?**

**பதில்:** ஆம். தேர்தல் நேரத்திலும் பலராலும் பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவை எல்லாவற்றிற்கும் தேர்தல் முடிவு பதில் சொல்லியுள்ளது அந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் எல்லாம் தோல்வியடைந்திருக்கிறார்கள். நான் வெற்றி பெற்றிருக்கிறேன். அதிலிருந்து அந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மையாவையா இல்லையா என்பது அவர்களுக்கு தெரிய வேண்டும்.

**கேள்வி: கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியில் மாற்றம் ஏற்படுமா?**

**பதில்:** பாராளுமன்றக் குழு அதனை நியமனம் செய்வது வழக்கம். பாராளுமன்றக் குழுவில் இன்னும் அந்த நியமனங்கள் செய்யப்படவில்லை. அது செய்யப்படுகிற பொழுது சில வேளைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

**கேள்வி: கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் பேச்சாளர் மற்றும் கொரடா பதவிகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்று கோருவதுடன் அவ்வாறு மாற்றம் ஏற்படாதவிடத்து மாற்று நடவடிக்கை எடுக்கப்படுமென்று எச்சரிக்கை விடுத்துள்ளதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில்:** அதில் ஒரு பிரச்சினையும் இல்லை. பாராளுமன்றக் குழுவில் அந்த தீர்மானங்கள் எடுக்கப்படும். அது என்னவாக இருந்தாலும் அந்த தீர்மானத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆகையினால் பாராளுமன்றக் குழு கூடித் தீர்மானம் எடுக்கும் வரை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். மேலும் இந்தப் பதவி நிலைகள் தொடர்பில் சாதாரணமாக அவர்கள் செய்கிற ஒரு மிரட்டல் தான் அது. அதனை நாங்கள் அவ்வளவு சீரியசாக எடுக்க தேவையில்லை.

**கேள்வி: சமகால நிலைமையில் தமிழ் தரப்பினர் எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமெனக் கருதுகின்றீர்கள்?**

**பதில்:** தமிழ் தேசிய பரப்பில் இருக்கிற கட்சிகளுக்கு இந்த தேர்தலில் ஒரு பெரிய சவால் ஏற்பட்டிருக்கிறது. அதாவது தேசிய கட்சிகள் அதிலும் விசேசமாக ராஜபக்ஷ அணியினருடன் சேர்ந்த கட்சிகளுக்கு இந்த பொது தேர்தலில் பாரிய செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் என்றுமில்லாத அளவிற்கு அவர்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு கிடைத்துள்ளது. அது ஒரு அபாயச் சங்கு அது குறித்து நாங்கள் மிக மிக அவதானமாக இருக்க வேண்டும்.

அதிலிருந்து எமது மக்களை சரியான வழிக்கு கொண்டு வருவதாக இருந்தால் அதனை ஒரு கட்சி மட்டும் செய்ய முடியாது. தமிழ் தேசிய பரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளும் அதை தங்களுடைய பொறுப்பாக எடுத்து ஒரு வேலைத் திட்டத்தில் அதனைச் செய்ய வேண்டும். இந்த தேர்தலில் வந்த முடிவுகள் அவ்வாறு தேசிய கட்சி ஒன்றுக்கு கூடுதலான ஆதரவு என்று காண்பித்தாலும் கூட அடுத்த தேர்தலுக்கு முன்னர் அது எந்த தேர்தலாக இருந்தாலும் அந்த நிலைமை முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**கேள்வி: பொது தேர்தலில் கூட்டமைப்பு பின்னடைவை சந்தித்திருக்கிற நிலைமையில் அடுத்து வரும் மாகாண சபை தேர்தலில் ஏதும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமா?**

**பதில்:** மாகாண சபைத் தேர்தலைப் பற்றி எந்தவொரு நடவடிக்கையையும் நாங்கள் எடுக்கவில்லை. அந்த மாகாண சபை தேர்தல் எப்போது நடக்கும் என்று எங்களுக்கு இன்னும் தெரியாது. இதே முறையில் நடக்குமா அல்லது மாற்றங்கள் சிலவற்றைச் செய்து அதற்குப் பிறகு தேர்தல் நடக்குமா என்றும் இன்னமும் தெரியாது. அது தெரிகிற வரைக்கும் நாங்கள் அதைக் குறித்து ஆயத்தம் செய்ய முடியாது.

---

# இருபதுக்கான ஆதரவு அதிகரிப்பு..!

சுஐப் எம்.காசிம்

ஒரு மொழிச் சமூகங்கள் ஒன்றுபடும் அரசியல் பொதுமைகள் அடையாளங் காணப்படுவதில் ஏற்பட்டுள்ள தெளிவின்மைகளால், பெரும்பான்மையின மேலாண்மைகள் வலிமையடையும் காலமிது. மொழியாலும், வாழிடங்களாலும், பொருளாதாரத்தாலும் தமிழ் பேசுவோராக அடையாளம் காணப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண பெரும்பான்மை சமூகங்கள், இன்று வெவ்வேறு வழித்தடங்களால் பயணிப்பது, தமிழ் மொழிச் சமூகங்களின் பொதுமைகளைத் துருவப் படுத்திவிட்டன. வாய்ப்புக்காகவும், வசதிக்காகவும், சந்தர்ப்பம் பார்த்தும் பேசப்படுவது நிறுத்தப்படும் வரை, சிறுபான்மைப் பொதுமைகள் துருவமாகித் தொலைவதை எவராலும் தடுக்கவும் இயலாது. இந்த, இயலாமைகள்தான் சிங்களத்தைப் பலப் படுத்துகிறது.

வாழ்ந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட வடபுல முஸ்லிம்களின் காணிகளைக் கூடக் கையளிப்பதற்கு காட்டப்படும் தயவு, தாட்சண்யம் மற்றும் தமிழர் அரசியலிலிருந்து விலகி தனிவழி சென்றதற்கான காரணங்கள் நியாயப் படுத்தப்படாமை என்பவைகள்தான், இன்னும் இவர்களின் அரசியலை மீளிணைக்காதுள்ளது. வெவ்வேறு கட்சிகளாக ஒரு கூட்டில் இருப்பது, ஒன்றுபட்டதற்கான அடையாளமாகுமா? இல்லையே!' முஸ்லிம்களுக்கான சுய ஆட்சி குறித்து, இலங்கை தமிழரசுக் கட்சிதான் எழுத்தில் சொல்லியுள்ளது. முஸ்லிம் கட்சிகளில் கூட இது எழுத்தில் இல்லை'என்கிறார் கூட்டமைப்பின் பேச்சாளர்.

ஆகவே, தனிவழி சென்றதற்கான காரணங்களைத் தனித்துவ தலைவர்கள் கூறியே ஆக வேண்டும். இல்லாவிட்டால், இவர்களது அரசியல் செயற்பாடுகளாவது நியாயத்தை நிரூபிக்க வேண்டும். இவை, எவையும் இதுவரைக்கும் இல்லாத நிலையில்தான் 'இருபதும்' வருகிறது.


பிராந்திய, பிரதேச தேவைப்பாடுகள் தான், இருபதுக்கான ஆதரவிலும் எதிர்ப்பிலும் செல்வாக்குச் செலுத்தப் போகின்றதே தவிர, கட்சிக் கட்டுக்கோப்பு மற்றும் சமூக விசுவாசமெல்லாம் இரண்டாம் பட்சம் தான். நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரம், மட்டக்களப்பு மங்களாராம மத குருவின் விடயங்கள் மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம், பொத்துவில் விகாரை உள்ளிட்ட பிரதேச விவகாரங்கள் சிலரைத் தனித் தீர்மானத்துக்கே தூண்டவுள்ளன. உண்மையில் தேசிய தலைமைகளால் தங்களது பிரதிநிதிகளின் பிரதேச விவகாரங்களைக் கையாள முடியாதுள்ளதா? அல்லது இவ்விவகாரங்கள் தான் சமூக அரசியலில் சங்கமித்து பொதுமைகளைத் துருவப்படுத்துகிறதா? என்ற தீர்மானத்துக்கு வரவே முடியாமலுள்ளது.

52நாள் அரசில், ஜனநாயகத்தைக் காப்பாற்றப் போன தமிழ் மற்றும் முஸ்லிம் தலைமைகளால் சமூகங்கள் ஓரங்கட்டப் பட்டுள்ளதான உணர்வுகள் இருக்கவே செய்கின்றன. இந்த ஒற்றுமைகள் எதில் ஏற்பட்டவை? இவர்களால் காப்பாற்றப் பட்ட ஆட்சியில் சிறுபான்மையினரின் பொதுமைகள் அடையாளங் காணப்படாதது ஏன்?. ஒருமொழிச் சமூகங்களின் பிரதேச, பிராந்திய பிணக்குகளும் கூட இவர்கள் காப்பற்றிய அரசினால் தீர்க்கப் படவில்லையே! இந்த உணர்வுகள்தான் மாற்றுத் தலைமைகளைப் பலப்படுத்துவதுடன் சிலரைத் தனித் தீர்மானத்துக்கும் தூண்டுகிறது.

'சமூக அபிலாஷைகளை வெல்வது தான் எமது வேலை. ஜனநாயகத்தைக் காப்பாற்ற தேசியக்கட்சிகள் உள்ளன. சட்டங்கள் உள்ளன' ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரின் நிலைப்பாடு இது.

எனவே, குழப்பங்கள்தான் ஒவ்வொரு கட்சிகளுக்குள் இருந்தும் கருத்துச் சுதந்திரம், தனிப்பட்ட கருத்து என்ற போர்வையில் வெளியாகின்றன என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மாற்றுத் தலைமைகளாக வந்துள்ள கட்சிகளின் கடுந்தொனிகள், தனி ஈழத்தை நியாயப் படுத்துவதால், இவர்களுடன் சேர்ந்து 'இருபதை' எதிர்ப்பது, பெரும்பான்மைப் பெரும்பரப்பில் முஸ்லிம்களைத் தனிமைப்படுத்தலாம் எனத் தனித்துவ மாவட்டத்தின் எம்.பி ஒருவர் அச்சப்படுவதாகவும் தெரிகிறது. இவைகள் எல்லாம் 'இருபதுக்கான' உதிரி வருவாய்கள். சில எம்.பிக்களின் தனிப்பட்ட ஆசைகள், தேவைகளும் 'இருபதுக்கு' நிலையான இருப்புத் தான்.




எனவே, அணைக் கல்லுக்கும் அடங்காத வெள்ளம் போன்று, வரவுள்ள அரசியலமைப்பின் 'இருபதாவது' திருத்தத்தில் எவ்வாறு நடப்பதென்பதுதான், இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை. இவ்விடயத்தில் முஸ்லிம் எம்.பி க்களை மாலை தொடுத்து, கௌரவித்து, மகிழ்ச்சி தெரிவிக்கும் சிவில் சமூக அமைப்புகள், மக்களையோ அவர்களின் பிரதிநிதிகளையோ தெளிவுபடுத்தும் வகையில் கருத்தாடல்கள், சந்திப்புக்களை நடத்தியதாக தெரியவில்லை. எனவே, சமூகத்தை வழிநடத்தும் பாத்திரத்தில் இருந்து இந்த அமைப்புக்கள் வழுகியுள்ளதாகவே கவலையுடன் கருத வேண்டியுள்ளது.

நடுநிலை என்பது எதிலும் சாராதது என்ற பொருளுடையதும் அல்ல. வாக்கெடுப்பு ஒன்று பத்துப்பேரின் ஆதரவால் வெல்லப்பட இருக்கையில், பத்து எம்.பிக்கள் உள்ள கட்சி நடுநிலை வகிப்பது, எதிர்த்ததாகவே அர்த்தப்படும். இதே, பத்து வாக்குகளால் தோற்கவுள்ள அதே பிரேரணைக்கு நடுநிலை வகிப்பதும் எதிர்த்ததாகவே பொருள்படும். எண்ணிக்கையின் சமநிலைகளில்தான் நடுநிலையின் அர்த்தங்கள் தென்படுகின்றன.

ஆனால், வரவுள்ள இருபது, சமநிலைகளை அளவுக்கு அதிகமாகத் தாண்டும் அரசியல் சூழ்நிலையில் சிறுபான்மைத் தலைமைகள் எதனைச் செய்யலாம்? பேரம் பேசல் விலையின்றிப்போன சந்தையில் இலாபத்தைப் பார்க்காது முதலையாவது காப்பாற்றும் வணிக வியூகம் அவசியம். இதே அரசியல் சந்தையில் தமிழ் பேசும் தலைமைகள் காப்பாற்றவுள்ள சமூக முதலீடுகள் எவை? “பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறாத நிறேவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை, தனி நபர் ஒருவரை நெப்போலியன் ஆக்கலாம் அல்லது முசோலினியாக மாற்றலாம். சட்டத்தின் ஆட்சி மதிப்பிழந்தால் ஜனநாயகத்தின் நிலை என்னவாகும்?” என்றெல்லாம் நீதி மன்றத்தில் இருபதாவது திருத்தம் வழக்காடப்படுகிறது.

மேலும், இந்த இருபது பாராளுமன்றம் நிராகரிக்கும் ஏதாவதொரு சட்டமூலத்தை சர்வஜன வாக்கெடுப்பால் நிறைவேற்ற ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்குகிறது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் செயலகங்களின் செலவினங்களை, கணக்காய்விலிருந்தும் விடுவித்துள்ள இந்த இருபது, கணக்காய்வாளர் நாயகத்தின் நியமனத்தையும் ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது. எனவே, சிறுபான்மைச் சமூகங்களுக்கு இதிலுள்ள முதல்களையாவது சிந்தித்தே செயலாற்ற வேண்டி உள்ளன இத்தலைமைகள்.

# திகாம்பரம் என்னையும் நம்பவைத்து கழுத்தறுத்து விட்டார்!

## தொழிலாளர் தேசிய சங்கம் கொடுக்காத மரியாதையை ஐ.தே.க கொடுத்தது;

## ட்ரஸ்டில் சம்பளம் வழங்கவில்லை



பெருந்தோட்ட மனிதவள நிதியத்தின் முன்னாள் தலைவர்
**வீ. புத்திரசிகாமணி**
வாரமஞ்சரிக்கு வழங்கிய நேர்காணல்

### மனந்திறக்கிறார் புத்திரசிகாமணி

**நடந்து முடிந்த தேர்தலை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? படுதோல்வி நிச்சயம் என்பது அனைவரும் அறிந்திருக்க ரணில் தலைமையிலான ஐ.தே.க வேட்பாளராக போட்டியிடத் துணிந்தது எப்படி? அரசியல் கணக்கில் தவறு நேர்ந்து விட்டதா?**

ஐக்கிய தேசிய கட்சி படுதோல்வியடைந்து எங்கள் கட்சியின் தலைவரும் படுந்தோல்வியடைந்தார். நானும் தோல்வியடைந்தேன். அதற்காக நான் கவலைப்படப் போவதில்லை. இந்நாட்டில் மலையக மக்களுக்காக சேவையாற்றிய மிகப்பெரிய கட்சி ஐ.தே.க. இவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே மலையக மக்கள் சிறப்பாக வாழ்ந்தார்கள். ஆனால் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் மலையகத்தில் பணம்தான் பெரிதாக பேசப்பட்டது. பணத்தை வீசியவர்கள் வென்றார்கள். புதிதாக அரசியலுக்கு வந்தவர்கள் கூட இந்த தேர்தலில் ஐ.தே.க.வை விட இரு மடங்கு வாக்குகளைப் பெற்றார்கள். பணம் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது.

குறிப்பாக பணம் என்று பார்க்கும்போது சாராய போத்தல்களும் போதைப்பொருட்களும் நடந்து முடித்த தேர்தலின்போது இளைஞர்களுக்கு வழங்கப்பட்டதாக கூறப்பட்டது. நான் தோட்டப் பகுதிகளுக்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு சென்றவேளை மக்கள் அனைவரும் ஐ.தே.க.வுக்கே வாக்களிப்பதாக கூவித் திரிந்தார்கள். ஆனால் தேர்தல் முடிவுகளை பார்க்கும்போது என்ன வாயிற்று என்பதே தெரியவில்லை. நான் முதன் முதலாக அரசியலுக்கு வந்தபோது நுவரெலியா மாநகர சபையிலேயே போட்டியிட்டேன். அப்போது 2000 ரூபா மாத்திரமே எனது தேர்தல் செலவாக அமைந்தது. அன்று நான் பணம் செலவழிக்காமல் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றமையால் இன்று வரை பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் இருந்ததில்லை.

**நீங்கள் ஏன் கட்சி மாறிக் கொண்டே இருக்கிறீர்கள்? நன்பகத் தன்மையற்றவர் என்ற பிம்பத்தை அல்லவா இது உருவாக்கும்?**

நான் மட்டுமா கட்சி மாறுகின்றேன். எத்தனைபேர் கட்சி மாறிக் கொண்டேதான் இருக்கின்றார்கள். எத்தனை கட்சி மாறிவிட்டதாக எண்ணி என்னிடம் இக்கேள்வியை கேட்கிறீர்கள்? என்னைப் பொறுத்தவரை ஒரேயொரு முறைதான் கட்சி மாறியிருக்கின்றேன். ஐ.தே.க.விலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு மாறியிருக்கின்றேன். அதற்கு காரணம் அன்று ஐ.தே.க.வில் எனக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்காமையால் அங்கிருந்து செல்ல வேண்டியதாயிற்று. நடந்து முடிந்த தேர்தலின் போதும் ஐ.தே.க.விலேயே போட்டியிட்டேன். அக்கட்சியில்தான் தொடர்ந்து இருக்கின்றேன். 2014ம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடன் நான் இருக்கவில்லை. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுடனே இருந்தேன். ஒரு தீபாவளித் தினத்தன்று ஐ.தே.வுக்கு எதிராக பெரிய போராட்டம் ஒன்றை நடாத்தினர். நாம் தீபாவளி தினமாததால் போராட்டத்தை அன்றைய தினம் நடாத்த வேண்டாம் என்று கூறினேன். தமிழர்கள் அதிகமாக வாழும் கொழும்பில் தீபாவளித் தினத்தன்று ஒரு போராட்டமா அதனை பின்தள்ளி போடுமாறும் கேட்டேன். அதற்கு அவர்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை. ஆதலால் அன்றே அக்கட்சியிலிருந்து விலகி மீண்டும் ஐ.தே.கவுக்குச் சென்றேன்.

**2015 இல் ட்ரஸ்டின் தலைவரானீர்கள். 2019 தேர்தலில் உங்களுக்கு பதவி வழங்கிய திகாம்பரத்தை விட்டு விலகி ஐ.தே.க.வுக்கு தாவினீர்கள். இது என்னவிதமான அரசியல்?**

திகாம்பரத்தை விட்டு வரக்காரணம் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் மனித அபிவிருத்தி நிதியத்தின்

தலவாக்கலை
**பி.கேதீஸ்...**

தலைவராக பணியாற்றினேன். சம்பளம் எதுவும் இல்லாமல் கௌரவ பதவியாகவே அதனை செய்தேன். மூன்றரை ஆண்டுகளுக்கு பின்னர் சிறிய ஒரு கொடுப்பனவை திகாம்பரம் வழங்கினார். நான் அதனைக்கூட பொருட்படுத்தவில்லை. 2015 ம் ஆண்டு திகாம்பரத்துடன் இணைந்தபோது அப்போது இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிப்பதாக கூறியிருந்தார். ஆனால் வழங்கவில்லை. திலகராஜுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டது. அதனை நான் ஏற்றுக்கொண்டேன். பின்னர் தேசியப் பட்டியலில் வாய்ப்பளிப்பதாக தெரிவித்தார். அதனை மனோகணேசனின் நெருங்கிய பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தோழி ஒருவருக்கு வழங்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் எனக்கு நிச்சயமாக திகாம்பரம் வாய்ப்பளிப்பார் என்ற நம்பிக்கையிலேயே இருந்தேன். ஆனால் என்னை நம்ப வைத்து ஏமாற்றி விட்டார். அப்போது ஐக்கிய மக்கள் சக்தியில் நான் போட்டியிடுவதற்கு திகாம்பரமே காரணமாக இருந்தார். மனோ கணேசனுக்கும் திகாம்பரத்திற்கும் கூறிவிட்டே ஐக்கிய மக்கள் சக்தி காரியாலயத்தில் கையொப்பமிட்டு விட்டு வீட்டுக்கு சென்றேன். வீட்டுக்கு சென்று சில நிமிடங்களில் மின்னஞ்சல் ஒன்று வந்தது. நான் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு விட்டதாக. மறுநாளே திகாம்பரத்திடம் சென்று கேட்டேன். ஏன் என்னை கட்சியை விட்டு விலக்கிவிட்டீர்கள்? உங்கள் விருப்பத்தின் பேரில்தானே அங்கு சென்றேன். இப்போது என்னை கட்சியிலிருந்து விலக்கிவிட்டதாக கூறுகிறீர்கள் என்றேன். அதற்கு அவர் பதில் கூறவில்லை. மறுநாள் ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்திற்கு சென்று பார்க்கும்போது என்ன நடந்தது என்று எனக்கே தெரியவில்லை. என்ன மாயாஜாலமோ தெரியவில்லை. நான் கையொப்பமிட்ட படிவங்கள் எதுவும் அங்கு இருக்கவில்லை. ஆனால் முதல் நாள் நான் மாத்திரமே தேர்தல் வேட்பு மனுவில் கையொப்பமிட்டிருந்தேன். ஏதோ சூழ்ச்சி நடந்துள்ளதை எண்ணி மனம் உடைந்த நிலையில் அங்கிருந்து வெளியேறி ஐ.தே.க.வுக்கு சென்று தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கேட்டேன். உடனடியாக அந்த வாய்ப்பினை எனக்கு தந்தார்கள். ஆனால் இத்தேர்தலில் ஐ.தே.க.வின் தலைவரும் கட்சியும் தோல்வியடைந்தது பெரிய விடயமல்ல.

**உங்கள் எதிர்கால அரசியல்...?**

எதிர்கால அரசியல் என்றால் அது ஐ.தே.க.தான். நான் அரசியலை ஆரம்பித்ததே ஐ.தே.க.வில்தான் அதனால் தொடர்ந்தும் அதிலேயே இருப்பேன். எதிர்காலத்தில் ஐ.தே.க எவ்வாறான முடிவுகளை எடுக்கின்றதோ அதற்கு கட்டுப்பட்டு செயற்படுவேன்.

**சீக்கிரமே 2025க்கு சென்று விடுவோம். அப்போது மலையக சமூகத்தின் நிலைமைகளும் தேவைகளும் மாறி இருக்கும். கேள்வி என்னவென்றால், எதிர்காலத்துக்கு ஏற்றமாதிரி எவ்வாறான மாற்றங்களை செய்ய வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

எனக்கு அவசரமாக செய்யக்கூடிய விடயங்கள் என எதுவும் இல்லை. எதையும் அவசரமாக செய்யவும் முடியாது. ஐ.தே.க படுதோல்வியடைந்துள்ள நிலையில் அடுத்த தலைவர் யார்? அதன் செயற்பாடுகள் எப்படி இருக்க போகின்றது என்பதை பொருத்திருந்து பார்க்க வேண்டும். ஆனால் நான் மீண்டும் ஐ.தே.க.வில் சேர்ந்தமை மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. எனது அரசியல் அனுபவத்துக்கோ கல்வி தகமைக்கோ தகுந்த மரியாதை தொழிலாளர் தேசிய சங்கத்தில் கொடுக்கவில்லை. இவை அனைத்துமே எனக்கு ஐ.தே.க.வில் கிடைத்தது. தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஒரு சில கூட்டங்களின்போது நான் அமர்வதற்கு ஆசனமே கொடுத்ததில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது நான் மிகவும் வேதனையடைந்தும் இருக்கின்றேன். ஒரு மனிதனுக்கு மரியாதைதான் முக்கியம். அந்த அங்கீகாரம் ஐ.தே.க.வில்தான் எனக்கு கிடைத்தது.

(22ஆம் பக்கம் பார்க்க)



# ஓநாய் கூட்டத்திற்குள் அனுப்பப்படும் ஆடுகளாக பல்கலைக்கழக மாணவர்கள்!

இலங்கையில் தமிழ் தரப்பின் அரசியல் போக்கானது தீர்க்கதரிசனம் இல்லாததும் இலக்கு இல்லாமலும் பயணித்துக் கொண்டுள்ளது.

தமிழ் அரசியல் தலைமைகளின் அரசியல் ஞாமின்மை அல்லது விவேகமின்மையானது அவர்களின் போராட்ட வடிவங்கள் தெளிவாகவே தமிழ் மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டி வருகின்றது.

யுத்த காலத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் கொள்கைகளற்ற தங்கள் அரசியலை மூட்டை கட்டி வைத்து விட்டு உறங்கு நிலையில் பயணித்தனர். விடுதலைப் புலிகளால் சில அரசியல் தலைமைகள் ஒன்றிணைக்கப்பட்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு எனும் பெயரில் தமிழ் மக்கள் மத்தியில் களம் இறக்கப்பட்டிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த துப்பாக்கிக்கு பயந்து ஒன்றிணைந்த அரசியல் தலைமைகள் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ் செல்வன் எடுக்கும்



முடிவுகளை ஜனநாயக முலாம் பூசி மக்களிடம் எடுத்துச் சென்றனர்.

இறுதி யுத்தமானது 2009 ஆம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் குறித்து எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் தங்கள் அதிகாரங்களையும், சுகபோக பாராளுமன்ற வாழ்க்கையையும் தக்க வைக்கும் அரசியலை தமிழ் தேசியம் எனும் பெயரில் தமிழ் தலைமைகள் தமிழ் மக்களின் பெயரால் முன்னெடுத்திருந்தனர். தமிழ் தேசியத்தின் பெயரால் தமிழ் மிதவாத அரசியல் தலைமைகளால் முன்னெடுக்கப்பட்ட அரசியல் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நம்பிக்கையையும் ஊட்டுபவையாக இருக்கவில்லை மாறாக தங்கள் இருப்பே கேள்விக்குறியாகிவிடுமோ என்னும் பயத்திற்குள் ஆட்பட்டிருந்தனர்.

இறுதியுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களுடைய வாழ்வில் ஒளியேற்றப்படும் என்ற நம்பிக்கையில் தமிழ் தலைமைகளுக்கு வாக்களித்த மக்கள் பெரும் ஏமாற்றத்தை சந்தித்தனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் பிரச்சினை, பட்டதாரிகளின் பிரச்சினை, வீடிழந்தவர்களின் பிரச்சினை, ஊனமுற்றவர்களின் பிரச்சினை, அரச திணைக்களகங்களின் முழுமையான சேவை கிடைக்காமை போன்ற பிரச்சினைகள் உட்பட அனைத்து மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாத நிலைமையை மக்கள் தொடர்ச்சியாக உணர்ந்தனர்.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு செட்டிக்குளம் முட்கம்பி முகாம்களுக்கு அடைக்கப்பட்ட தமிழ் மக்கள் மெல்ல மெல்ல மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போதிலும் அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் வீதியிலேயே தமிழ் அரசியல் மிதவாத தலைமைகளால் விடப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் இறுதி யுத்தத்தின் பின்னர் ஜனாதிபதி தேர்தல்கள், பாராளுமன்ற தேர்தல்கள் மாகாண சபை தேர்தல் என பல தேர்தல்களை எதிர் கொண்டு பல அரசியல் தலைமைகளை வெற்றி பெறச் செய்தும் எந்தவிதமான தீர்வுகளும் இன்றி தொடர்ந்து வீதிகளில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

யுத்தத்தால் சீரழிந்த வடக்கு கிழக்கை சேர்ந்த மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னெற கல்வியை ஒரு கயிறாக பிடித்து முன்னேறிவரும் தருணத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் தங்கள் தறிகெட்ட அரசியலை பல்கலைக்கழக மாணவர்களிடமும் திணித்துள்ளனர்.

தமிழ் அரசியல் பரப்பில் ஹர்த்தால், ஊர்வலம் மற்றும் உண்ணாவிரதம் என்பன புதுமையான யுக்தி கிடையாது. தமிழ் மேட்டுக்குடி தலைமைகள் தங்களின் மேட்டுக்குடி குழுமத்தின் சிந்தனையை பாதுகாப்பதற்காக காலம் காலமாக பயன்படுத்திவரும் ஒரு யுக்தியே இவ்வாறான போராட்டங்கள்.

தமிழ் மக்களின் உரிமைக்கான நீண்ட நெடிய போராட்டத்தில் அதன் வீரியம் புரியாத அல்லது அரசியல் தெரியாத அப்பாவி பல்கலைக்கழக மாணவர்கள் அரசியல் தலைமைகளின் சொந்த நலனுக்காக வீதியில் இறக்கப்பட்டு தங்கள் வாழ்க்கையை தொலைத்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த ஜனாதிபதி தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக கோட்டாபய ராஜபக்ச மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் போட்டியிட்ட நிலையில் தமிழ் தேசிய தலைமைகளிடம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தமிழ் மக்களுக்கு அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தொடர்ச்சியாக தமிழ் மக்களின் முதுகில் குதிரை ஓடி வந்த தமிழ் தலைமைகள் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வகையாக சிக்கிக் கொண்டனர். 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேனவை நிபந்தனைகள் இன்றி தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரித்ததன் விளைவை எந்தவிதமான அனுகூலங்களும்; இன்றி நான்கு ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் சூனியத்தை தமிழ் மக்கள் அனுபவித்திருந்தனர்.

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கி அழகு பார்த்தார் மைத்திரிபால சிறிசேன. ஆனால் தமிழ் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி வீதியில் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர்.

அரசாங்கத்தின் சகல கொடுப்பனவுகளையும் சலுகைகளையும் அனுபவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு, மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய ஒரு சூழ்நிலைக்குள் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தள்ளப்பட்டனர்.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இதயத்திற்கும் இதயத்திற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் என தெரிவித்து மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு தெரிவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு பொங்கல் மற்றும் தீபாவளிக்கு தீர்வு என சகட்டு மேனிக்கு தமிழ் மக்களை முட்டாளாக்கியது.

2019 ஆம் ஆண்டு நடைபெற இருந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தலைமைகள், விக்கினேஸ்வரன் அணி, சம்பந்தர் அணி, கஜேந்திர குமார் அணி, வரதராஜ பெருமாள் அணி என பிரிந்து நின்றாலும் தமிழ் மக்களிடம் வாக்குகளை தொடர்ச்சியாக பெற வேண்டுமேனில் ஒற்றுமையை காட்ட வேண்டும் என்பதுடன் நடைபெறப்போகும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களுக்கு விரோதமாக செயற்பட்டால் அல்லது எதிரணி அவ்வாறு பிரச்சாரம் செய்தால் தாங்கள் நிரந்தரமாக அரசியல் தோல்வியை தழுவ நேரிடும் என உணர்ந்த தமிழ் தலைமைகள் கூட்டாக முடிவெடுக்கும் ஒரு திட்டத்தை தீட்டினர்.

அந்த திட்டத்தின் அடிப்படையில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் தலைமையில் அரசியல் கட்சிகள் அல்லது குழுக்கள் ஒன்று கூடி முடிவெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டு அரசியல் கூத்து ஆரம்பமானது. இது எதுவும் தெரியாத பல்கலைக்கழக அப்பாவி மாணவர்கள் தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் முடிவில் பங்களிப்பு செய்வதாக நினைத்து நடுநிலைக்கு ஒத்துக்கொண்டு இறுதியில் தமிழ் கட்சிகளின் திட்டத்திற்கு பலியாகி போனார்கள்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் தலைமையில் ஒன்று கூடிய தமிழ் தலைமைகள் 13 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய பேரம் பேசலுடன் புறப்பட்டனர். தமிழ் தலைமைகள் தயாரித்த 13 அம்சக் கோரிக்கையை அப்போது இருந்த அரசில் சூழ்நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்கள் ஏற்றுக்கொள்வார்களா அல்லது ஏற்றுக்கொள்ள மாட்டார்களா? என்பது பற்றிய எந்த விளக்கமும் இல்லாத பல்கலைக்கழக மாணவர்கள் வெறும் பகடைக்காய்களாக அன்று உருப்பட்டனர். தமிழ் தலைமைகளின் கோரிக்கைகளை உடனடியாக நிராகரித்த கோட்டாபே ராஜபக்ச பெரும்பான்மை பலத்துடன் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒரு பெரும் அரசியல் சூறாவளிக்குள் தாங்கள் இழுக்கப்பட்டு ஏமாற்றப்பட்டோம் என்பதை அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு பல்கலைக்கழக மாணவர்களின் அரசியல் அறிவு மற்றும் குறிந்தேசியவாதத்தின்பால் கொண்ட மன மூலப்பதிவு என்பன அவர்களின் சுயசிந்தனையை கட்டிப்போட்டிருந்தது.

2020 நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலானது தமிழ் தேசிய தலைமைகளுக்கு பலத்த அடியை கொடுத்ததுடன் புதியவர்களை நாடாளுமன்றம் நோக்கி பயணிக்க வைத்தது.

தமிழ் தேசிய தலைமைகளுக்கு ஏற்பட்ட தோல்விக்கான காரணத்தை புரிந்துகொண்டு அதை சரிசெய்ய முயலாத தமிழ் தலைமைகள் மீண்டும் விக்கிரமாதித்தன் வேதாளத்தை சுமந்த கதையாக தமிழ் தேசியத்தை உயர்த்திப் பிடிக்கும் நோக்கத்துடன் கையில் எடுத்துக் கொண்ட உபாயம்தான் திலீபனின் நினைவு தினம்.

வடக்கு கிழக்கில் அதிகளவான குடியேற்றங்கள் நில ஆக்கிரமிப்புக்களுக்கு முஸ்தீபுகள் நடந்துவரும் நிலையில் தமிழ் நாட்டில் இன்றும் அகதிகளாக வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களை கொண்டு வந்து வடக்கு கிழக்கில் குடியேற்ற நடவடிக்கை எடுக்காத தமிழ் தரப்புக்கள், தமிழ் மக்களுக்கு பாதகமான ஒரு சூழலில் திலீபனின் நினைவு தினத்தை தூக்கி வைத்து அரசியல் வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இந்தியாவில் அகதிமுகாம்களில் ஏதிலிகளாக வாழ்ந்துவரும் நிலையில் அவர்களை வடக்கு கிழக்கில் கொண்டு வந்து குடியமர்த்தினால் இரண்டு பாராளுமன்ற ஆசனங்களை மேலதிகமாக பெற முடிவதுடன் எமது காணிகள் வயல் நிலங்களையும் காப்பாற்ற முடியும். அதற்காக அரசாங்கத்துடன் இணைந்து ஒரு பொறி முறையை உருவாக்க முடியாத அரசியல் தீர்க்கதரிசனமில்லாத தமிழ் தலைமைகள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் திலீபனின் தியாகத்தை விற்பனை பொருளாக மாற்றி அரசியல் செய்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

எம்.ஜீ.ரட்ணகாந்தன்...

Repeat Your Ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk




தினகரன் BUDGET adz
It suits your budget


RATNAPURA
Three storied 5000 sqft Commercial Building for Sale or Lease situated in main street. ample parking. 15 perch land. Ideal for bank, finance institutions or any other business.
077 7280736 / 071 8229836

போட்டோ குறும் விளம்பரம்


Mazda Brawny HH, 10 Ft. in length, Aluminium body, AC/ P, Auto, New Tyre, Battery Paint
075 89 79 254
059917

# விலைமனு அழைப்பு

## லங்கா சதொச லிமிட்டட் இற்கு வெப்பதாள்களை வழங்கல்

06 மாத காலப்பகுதிக்கு லங்கா சதொச லிமிட்டட்டின் விற்பனைக்கூட வலையமைப்பிற்கு வெப்ப தாள்களை (Thermal Paper) வழங்க விரும்பும் உள்ளூர் வழங்குநர்கள், உள்ளூர் முகவர்கள், இறக்குமதியாளர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை லங்கா சதொ லிமிட்டட்டின் தலைவர் கோருகின்றார்.

**விபரக்குறிப்புக்கள்:** விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டவாறானது.

**தேவைப்படுத்தல்:**

| அம்ச விளக்கம் | எண்ணிக்கை |
|---|---|
| Casio Thermal Paper Roll | 10,500 |
| Price Marking Thermal Paper Rolls | 4,500 |
| Price Marking Ink | 300 |
| Sticker Rolls for the weighing Scale | 36,000 |
| POS Machine Paper Rolls | 180,000 |
| SAM 4s Thermal Paper Rolls | 9,000 |

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2020.10.05 ஆம் திகதியிலிருந்து 2020.10.21 ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 3,000 ரூபாவை கொழும்பு-02, வொக்ஷால் தெரு, 27 ஆம் இலக்கத்திலுள்ள கூமொவி செயலக கட்டிடம், லங்கா சதொச லிமிட்டட்டின் தலைமையக 3 ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவிலிருந்து அலுவலரொருவரினால் அதிகாரமளிக்கப்பட்ட கம்பனி தலைப்புக் கடிதத்தில் விண்ணப்பக் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**2020 ஒக்டோபர் 13 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு** விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**2020.10.21 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-02, வொக்ஷால் தெரு, 27 ஆம் இலக்கத்திலுள்ள கூமொநி செயலக கட்டிடத்தின் 3 ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். முத்திரையிடப்பட்ட விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Supply of Thermal Papers to Lanka Sathosa Limited" என குறிப்பிடப்படல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களுடனும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள **பெறுமதியின் 2% (மீளளிக்கப்படுவது) தொகையை விலைமனுப்பிணையொன்றாக** இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2020.10.21 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். **சித்திகரமான விலைமனுதாரர் மீளளிக்கப்படாத தொகையாக 15,000 ரூபாவை** பதிவுக் கட்டணமொன்றாகவும் (பதிவு பெற்றுள்ள வழங்குநர்கள் நீங்கலானது) அத்துடன் **மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியின் மீளளிக்கப்படும் 10% தொகையையும் செயற்பாட்டு பிணையாக செலுத்துமாறு** தேவைப்படுத்தப்படுகின்றனர்.

தெளிவுறுத்தல்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள அலுவலருடன் தொடர்பு கொள்ளவும்.

பிரதி பொது முகாமையாளர் - பெறுகை – லங்கா சதொச லிமிட்டட் - 0711506120

கேள்வியை/ ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தீர்மானத்தை எடுக்கும் உரிமையை **லங்கா சதொச லிமிட்டெட்டின் தலைவர்** கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**லங்கா சதொச லிமிட்டெட்.**

வர்த்தக அமைச்சு
குறைந்த விலையில் உங்களிடத்தில்
லங்கா சதொச



பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியற்றுறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# முப்பதே ஆண்டுகளில் முதலாம் உலகத்திற்குச் சென்ற சிங்கப்பூர்

**'பல்லின சமூகத்தின் மிடுக்கை இனங்கண்டு போற்றிக் கொண்டாடிய நாட்டுக்கு சிங்கப்பூர் சிறந்த உதாரணம். சந்தையை சரியான திசையில் இயங்க வைப்பதற்கு அரச தலையீடுகள் பயன்படுத்தப்பட்டனவேயன்றி கட்டளைப் பொருளாதாரமாக அது மாறவில்லை. சிங்கப்பூரை உள்ளடக்கிய தென் கொரியா, தாய்வான் மற்றும் கொங்கொங் ஆகிய நாடுகளிலும் இவ்வாறான கொள்கைகளே பின்பற்றப்பட்டன'**

மூன்றாம் உலகத்திலிருந்து முதலாம் உலகத்திற்கு முப்பதே ஆண்டுகளில் துரிதமாக விரைந்து சென்ற சிங்கப்பூரின் கதை 'சிங்கப்பூரின் சிற்பி' என அழைக்கப்படும் லீகுவான் யூவின் அனுபவத் தொகுப்பாக 2000 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இயற்கை வளங்கள் எதுவும் கிடையாத வெறும் 645 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட துறைமுக நகரான சிங்கப்பூரின் தலா வருமானம் 1959ல் $ 400 மாத்திரமேயாகும். 1990 இல் அது $ 12, 200 ஆகவும் 1999 இல் $ 22, 000 ஆகவும் துரிதமாக அதிகரித்துச் சென்றது. 2020 இல் அதன் தலாவருமானம் $ 64, 829 ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் பல நாடுகளின் தலைவர்களின் புருவங்களை உயர்த்திப் பார்க்க வைத்த சிங்கப்பூரின் அசுர சாதனையின் பின்னாலிருந்த கதை இனிமையான ஒரு கற்பனைக் கதையல்ல. காலனித்துவ காலப்பகுதியில் பிரித்தானியாவின் ஒரு கடற்படைத்தளமாக முக்கியத்துவம் பெற்றிருந்த சிங்கப்பூரின் வருமானத்தின் பெரும்பகுதி பிரித்தானிய கடற்படையின் மூலம் பெறப்படுவதாகவே இருந்தது. அருகில் இருந்த பெரிய நாடான மலேசியாவுடன் இணைவதன் மூலமே சிங்கப்பூரின் எதிர்காலம் பாதுகாக்கப்படும் என சிங்கப்பூர் தலைவர்கள் நம்பினார்கள். தனது 35 ஆவது வயதில் சிங்கப்பூரின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட லீகுவான் யூ பிரித்தானியாவில் கல்வி கற்றுத் திரும்பி அரசியலில் ஈடுபட்டு வெற்றிபெற்ற தலைவராவார். சிங்கப்பூர் தனித்திருப்பதைவிட மலேசியாவின் கூட்டாட்சியில் இணைந்திருப்பதன் மூலம் சிங்கப்பூரின் நீண்ட எதிர்காலம் சிறப்பாக இருக்குமெனக் கருதினார். இவ்வெதிர்பார்ப்பின் பலனாக 1964 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சிங்கப்பூர் மலேசியாவுடன் உத்தியோகபூர்வமாக இணைக்கப்பட்டது. ஆயினும் அடுத்து வந்த ஆண்டில் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் மலே இனத்தவர்களுக்கும் சீன இனத்தவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றிப்போனதன் காரணமாக வெடித்த இனக்கலவரம் இவ்வெதிர்பார்க்கைகளைச் சிதறடித்தது.

இந்த இனக்கலவரங்களில் மலேசியாவின் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் நீதி நியாயம் என்பதற்கு அப்பாற் சென்று மலேசியாவின் பெரும்பான்மையாகிய மலே இனத்தவர்களுக்கு சாதகமானதாக அமைந்திருந்தது. ஆனால் சிங்கப்பூரில் சீன இனத்தவர்களே பெரும்பான்மையாக இருந்தனர். அத்துடன் பொருளாதார ரீதியில் சீனர்களே இருநாடுகளிலும் பலம் பொருந்தியவர்களாகவும் இருந்தனர். மலேசியா மலே இனத்தவர்களுக்கானது என்னும் கொள்கையை மலேசியா முதன்மைப்படுத்தியது. ஏனைய இனத்தவர்கள் (இலங்கையில் அளக்கப்பட்ட நமக்கு நன்கு பரிச்சயமான செடிகொடி கதைபோல) இரண்டாந்தரப் பிரசைகளாக வாழலாம் எனக் கூறப்பட்டது. ஆனால் சிங்கப்பூர் இக்கொள்கையை முற்றாக நிராகரித்தது. மாறாக மலேசியக் கூட்டாட்சி அனைத்து மலேசியர்களுக்குமானது என்றும் பரந்த மனதுடனான கொள்கையை முன்னிலைப்படுத்தியது. இன வன்முறையின்போது ஏற்பட்ட உயிரிழப்புகளும் அவலங்களும் அச்சங்களும் தம்மையும் தமது அரசாங்கத்தையும் இனம் மொழி சமயம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளாமல் அனைத்துப் பிரசைகளுக்கும் சமமான அந்தஸ்தை வழங்கும் பல்கலாசார சமூகமொன்றை உருவாக்குவதில் பற்றுறுதியுடன் செயற்பட வைத்ததாக லீகுவான் யூ கூறுகிறார்

மலே இனத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் கொள்கைக்கு ஆதரவு வழங்காமல் அதற்கு எதிராகச் செயற்படுவதால் சிங்கப்பூர் மலேசியாவுடன் இணைந்திருப்பது பிழை என்று கருதிய மலேசியத் தலைமை மலேசியக் கூட்டாட்சியிலிருந்து சிங்கப்பூரை வெளியேற்றுவதாக 1965 ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஒருமாநாட்டில் அறிவித்தது. வளமான ஒரு மலேசியக் கூட்டாட்சியை எதிர்பார்த்த லீகுவான் யூ கண்ணீருடன் ஆற்றிய உரை இன்னும் இணைய வெளியில் பார்க்கக் கிடைக்கும். ஒரு சுண்டைக்காய் நாடு மலே இனத்தவர்களின் எதிர்ப்பார்க்கைகளுக்கு எதிராகச் செயற்படுவதா? கூட்டாட்சியிலிருந்து விரட்டிவிட்டால் பாடம் படிப்பார்கள் என்பதே மலேசியத் தலைவர்களின் எதிர்ப்பார்ப்பாக இருந்தது.



வளங்கள் இல்லாத நிலையில் குடிநீருக்குக் கூட வெளிநாட்டில் தங்கியிருக்க வேண்டிய நிலையில் இருந்த சிங்கப்பூர் தானாக வழிக்கு வந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். மறுபுறம் பிரித்தானியாவின் காலனித்துவக் கட்டமைப்பு கலைக்கப்பட்டதனால் சிங்கப்பூரில் கடற்படைத்தளத்தைப் பேணவேண்டிய தேவை பிரித்தானியாவுக்கு இருக்கவில்லை. எனவே அது மூடப்பட்டால் சிங்கப்பூரின் பிரதான வருவாய் மூலாதாரம் வற்றிவிடும் ஆபத்தும் இருந்தது.

தூக்கி வீசப்பட்டதால் ஏற்பட்ட அவமானமும் வலியும் ஒருபுறம் பொருளாதார சவால்கள் மறுபுறம் என்று மன உளைச்சல்களோடு புதிய பயணத்தை சிங்கப்பூர் ஆரம்பித்தது. 1970 ஆம் ஆண்டளவில் சற்று ஆறுதல் தரும் வகையில் போதியளவு தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

ஆனால் 1973இல் ஏற்பட்ட பெற்றோலிய விலையேற்றம் எண்ணெய் விலையை நான்கு மடங்கு அதிகரித்தது பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும் இந்தச் சவால்களுக்கு முகம் கொடுப்பதைத் தவிர வேறு மாற்றுவழி இருக்கவில்லை. வளங்கள் ஏதுமில்லாத நிலையில் இருக்கும் ஒரேயோரு வளமாகிய மனித வளத்தை முறையாகப் பயன்படுத்துவதே ஒரே வழியாக இருந்தது. கடுமையான உழைப்பு சரியான திட்டமிடல் குறைகளை இனங்கண்டு முன்னேறிச் செல்லல் என்னும் மூன்று செயற்பாடுகளும் ஒருங்கிணைந்து செயற்படுத்தப்பட்டன. நாட்டின் பொருளாதாரம் உலகின் பிரதான கைத்தொழில் மயநாடுகளுடன் வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு முதலீட்டின் ஊடாக இணைக்கப்பட்டன.

சிங்கப்பூர்வாசிகள் முன்னொரு போதும் கருதியிராத கடமைகளைச் செய்ய லீகுவான்யூ தனது சகபாடிகளை அழைத்தார். முதலாவதாக சிங்கப்பூர் நகரத்தைத் தூய்மைப்படுத்தும் பணி. இரண்டாவதாக அண்டை நாடுகளுடன் ஆரம்பத்தில் ஏற்படக் கூடிய முரண்பாடுகளை நீக்குவது மூன்றாவது உள்நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணல். நாட்டின் உயர்ந்த செயலாற்றத்தின் மூலம் இவற்றை அடையலாம் என கருதப்பட்டது. இந்த மூன்று நடவடிக்கைகளின் போதும் மீயுயர் அறிவு ஒழுக்கம் மற்றும் நேர்மைத்திறன் என்பவற்றின் அடிப்படையில் செயற்பட வலியுறுத்தப்பட்டது.

அறிவு ஒழுக்கம் நோர்மைத்திறன் என்பவற்றுடன் கூடிய கட்டுக்கோப்பான வினைத்திறனான நிருவாகக் கட்டமைப்பு பக்கச்சார்பற்று சுயாதீனமாக இயங்கும் அரசாங்கக் கட்டமைப்புகள் திட்டமிடலுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம். வெளிநாட்டு சந்தைகளுடன் தொடர்புகளைப் பேணுவதற்கு வழங்கப்பட்ட முன்னுரிமை என்பன இணைந்து அடுத்து வந்த மூன்று தசாப்த காலப்பகுதியில் சிங்கப்பூரை மூன்றாம் உலகத்திலிருந்து முதலாம் உலகத்திற்கு உயர்த்திவிட்டது.

கைத்தொழில் துறையின் வளர்ச்சி, வியாபார சேவைகள் மற்றும் அறிவுசார்ந்த சேவைகளின் வளர்ச்சி என்பவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டதுடன் மனித மூலதனத்தைக் கட்டியெழுப்ப ஏராளமாக முதலீடு செய்யப்பட்டது. இன்று உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் இம்முதலீடுகளின் வெற்றிக்குச் சான்றாகும்.

அங்குள்ள சிறந்த வைத்திய சேவை காரணமாக இலங்கையிலிருந்தும் பிரபலங்கள் அங்கு ஓடுகிறார்கள். சுற்றுலா சிங்கப்பூரின் ஒரு அங்கம் என்றாலும் அதற்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைவிட கைத்தொழில் மற்றும் பெறுமதிசேர் உயர்வே வைத்தியத்துறைக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் மிக அதிகம். அரசாங்கத்தினால் வழங்கப்படும் வினைத்திறன் மிக்க போக்குவரத்துச் சேவையும் அங்குதான் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

சந்தைப் பொருளாதாரமா சிறந்தது அல்லது அரச துறையால் வழிநடத்தப்படும் கட்டளைப் பொருளாதாரமா சிறந்தது என்ற விவாதம் வரும்போது சிங்கப்பூரின் அனுபவம் நம் கண்முன்னே வந்து நின்று அவை இரண்டுமல்ல என்று கட்டியம் கூறும். உண்மையில் சந்தையை சரியான திசையில் இயங்க வைப்பதற்கு அரச தலையீடுகள் பயன்படுத்தப்பட்டனவேயன்றி கட்டளைப் பொருளாதாரமாக அது மாறவில்லை. சிங்கப்பூரை உள்ளடக்கிய தென்கொரியா, தாய்வான் மற்றும் கொங்கொங் ஆகிய ஆசியாவின் நான்கு வேங்கை நாடுகளிலும் இவ்வாறான கொள்கைகளே பின்பற்றப்பட்டன. ஆயினும் சிங்கப்பூரின் சிறப்பம்சம் யாதெனில் ஊழலற்ற ஒழுக்கமான நேர்மையான நிருவாகக் கட்டமைப்பைச் சாத்தியமாக்கியமையாகும்.

லீகுவான் யூ ஒரு சர்வாதிகாரி என்று விமர்சிப்பவர்கள் இல்லாமல் இல்லை. ஆனால் உலகின் தலைசிறந்த பொருளியலாளர்களில் ஒருவரான மில்டன் பிரீட்மன் 1990 சிங்கப்பூரின் அனுபவமானது ஒரு கருணைமிக்க சர்வாதிகாரியின் சர்வாதிகார ஆட்சி முறைமையினுள் தாராளவாத சந்தைப் பொருளாதாரமொன்றை இணைக்க முடியும் என்ற சாத்தியத்தை வெளிப்படுத்துவதாகக் குறிப்பிடுகிறார். ஆனால் லீகுவான் யூ போன்ற தலைவர்களை நடைமுறையில் காண்பது அரிது. அவர் இயற்றிய சட்டங்களை அவர் மீறிச் செயற்படவில்லை. நாட்டின் நிருவாக அலகுகளும் நிறுவனங்களும் முறையாகச் செயற்பட அனுமதித்தார். குற்றம் புரிந்தவர் தனது ஆதரவாளரோ உறவினரோ ஆயினும் நீதித்துறையில் தனது மூக்கை நுழைத்ததில்லை. ஒரு தொலை நோக்குள்ள தலைவருக்கு நல்ல உதாரணம் லீகுவான் யூ.



லீகுவான் யூ

பல்லின சமூகத்தின் மிடுக்கை இனங்கண்டு போற்றிக் கொண்டாடிய நாட்டுக்கு சிங்கப்பூர் சிறந்த உதாரணம். வரலாற்றிலிருந்து பாடம் கற்காத எந்த ஒரு நாடும் வளர்ந்ததாக வரலாறில்லை.

# ஆர்மேனியா- அசர்பைஜான் மோதல் முடிவுக்கு வருமா?

ஆர்மேனியா அசர்பைஜான் மோதல் போக்கானது பிராந்திய சர்வதேச அரசியலில் முக்கியமான ஒன்றாக கொரனோ அரசியலுக்கு பின்பு ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையானது முன்னாள் சோவியத் யூனியனது பிரிவினையிலிருந்து தொடங்கியதாகும். முன்னாள் சோவியத் யூனியனது அரசியல் வரைபானது இனங்களது சுயநிர்ணயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததுடன் பிரிந்து செல்வதற்கான ஏற்பாடுகளை லெனின் காலத்தில் முதன்மைப்படுத்தியிருந்தது. அதனடிப்படையில் ஒன்று சேர்ந்த சோவியத் குடியரசுகளில் ஒரு இனக்கூறாக அசர்பைஜானிகள் காணப்பட்டனர். 1991 இல் ஆர்மேனியர்கள் அசர்பைஜானிலிருந்து பிரிந்து செல்வதாக அறிவித்தனர். இதன்பிற்பாடு ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்ச்சியான மோதலுக்கு வழிவகுத்தது.

புவியியல் ரீதியில் ரஷ்யா ஜேரர்ஜியா, ஈரான், துருக்கியை எல்லைகளாகக் கொண்ட இரு நாடுகளும் நகொர்னோஹபக் பிராந்தியத்தை மையப்படுத்திய மோதலில் ஈடுபட்டுவருகின்றன. 1991 முதல் 1994 வரை இரு நாடுகளுக்குமான முரண்பாட்டை தீர்ப்பதற்கான பேச்சுகளில் ஈடுபட்ட போதும் சுமூகமான நிலை ஏற்படுத்த போர் நிறுத்த உடன்பாடு இரு தரப்புக்கும் இடையில் எட்டப்பட்ட போதும் அதனை முழுமையாக பின்பற்றாத சூழலின் விளைவான அவ்வப்போது மோதல் போக்கு நிலவியது. கடந்த 27.09.2020 முதல் அத்தகைய மோதல் பெரும் போராக வெடித்துள்ளது. இதில் ஆசர்பைஜான் ஆர்மேனியரது நடவடிக்கையை விட மோதலுக்கு பின்னால் பிராந்திய அரசுகளும் அதன் புவிசார் அரசியலும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றதைக் காணமுடிகிறது. இதில் ரஷ்யா துருக்கி மட்டுமன்றி பிரான்ஸ்சும் அதிக செல்வாக்கு பெறும் நிலையைக் காணமுடிகிறது.

நகொர்னோஹரபாக் பிரிவினர் அசர்பைஜானின் பகுதிக்குள் இருந்த போதும் ஆர்மேனியாவில் இருக்கும் இனங்களில் பெரும்பான்மையினரை சார்ந்தவர்கள். ஆனாலும் ஆர்மேனியன் அரசிலிருந்து விலகியிருக்கவும் தனி அடையாளத்தை பேணவும் விரும்பியதுடன் அதற்கான முயற்சியாக தன்னாட்சி பிரகடனம் ஒன்றினை முன்வைத்திருந்தனர். தற்போது ஆர்மேனியப் படைகள் சர்ச்சைக்குரிய பிராந்தியத்தில் இருந்து விலகும் வரை தாம் தொடந்து போர் செய்யப் போவதாக அசர்பைஜான் ஜனாதிபதி இல்ஹாம் அலியேவ் அறிவித்துள்ளார். அவர் குறிப்பிடும் போது ஆர்மேனிய படைகள் தமது நிலத்திலிருந்து நிபந்தனை இன்றி முழுமையாக வெளியேற வேண்டும் என்பதே தமது நிபந்தனை எனக்குறிப்பிட்டுள்ளார்.

அசர்பைஜான் பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்டது. ஆர்மேனியன் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையைக் கொண்டது. அஸர்பைஜானின் நட்பு நாடாக துருக்கி விளங்குகிறது. அவ்வாறே ரஷ்யாவின் நட்பு நாடாகவும் இராணுவ உறவுடைய நாடாகவும் ஆர்மேனியா விளங்குகிறது.இது வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடத்தில் காணப்படுவதுடன் ஐரோப்பாவின் தென் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மலைப்பாங்கான பிரதேசம் என்பதுடன் மூலோபாய ரீதியில் முக்கியமான பிரதேசமாக உள்ளது. இப்பகுதி முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அறிவியல் ரீதியான முக்கியம் பெற்ற பிரதேசமாகவும் அமைந்துள்ளது. 1920 களில் இரு பிரதேசமும் சோவியத் யூனியனின் பிராந்தியமாக மாற்றப்பட்டது. நகொர்னோஹரபாக் பிரதேசம் ஆர்மேனியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசமாகக் காணப்பட்டது.

ஆனால் இப்பிரதேசத்தை சோவியத், அசர்பைஜான் கட்டுப்பாட்டுப் பகுதியாக பிரகடனப்படுத்திக் கொண்டது. சோவியத் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆர்மேனியாவுடன் இணைவதற்கான உடன்பாட்டை இப்பிராந்திய பெரும்பான்மையினர் எடுத்துக் கொண்டனர் என வரலாற்றுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இவ்வகை குழப்பம் நிறைந்த சூழலுக்குள் பிராந்திய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் செல்வாக்குடைய ரஷ்யா இரு நாடுகளும் போர்நிறுத்த உடன்பாடு ஒன்றினை எட்டுவதன் மூலம் அமைதிக்கான சூழலை ஏற்படுத்த முனைந்துள்ளது. இதுவரை நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர். அதில் இரு நாட்டுப்படைகளும் பொது மக்களும் அடங்குவதாக தெரியவருகிறது. ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமை அமைப்பும் மனிதாபிமானச் சட்டங்களை பின்பற்றுமாறும், பொதுமக்களை தாக்காது செயல்படுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளன. இதனை அடுத்தே ரஷ்யா இரு நாட்டு வெளியுறவு அமைச்சுக்களையும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்துள்ளது.




இந்த மோதல் குறித்து புட்டினும் மக்ரோனும் தொலைபேசியில் உரையாடியதுடன் மோதலை நிறுத்துமாறு ரஷ்யா, பிரான்ஸ் உட்பட வல்லரசு நாடுகள் கோரிகை விடுத்துள்ளன. ஆர்மேனியாவுடன் இராணுவ உறவைக் கொண்டுள்ள ரஷ்யா அந்நாட்டின் பகுதிக்குள் இராணுவ முகாம் ஒன்றையும் பராமரித்துவருகிறது. இதனால்போர் நிறுத்தம் ஒன்றுக்கான தேவைப் பாட்டை அதிகம் கொண்டுள்ள ரஷ்யா இப்பிராந்திய மோதலை தடுக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

பிரான்ஸ்ஸைப் பொறுத்தவரை அந்நாட்டில் அதிக ஆர்மேனியர்கள் வாழ்வதனால் அதிக தலையீட்டை பிரான்ஸ் மேற்கொள்ள முனைகிறது.

அது மட்டுமன்றி பிரான்ஸ் ஒரு நேட்டோ நாடு என்பதனால் அதற்கான வாய்ப்புக்களையும் இப்பிராந்தியத்தில் ஏற்படுத்த முனைகிறது. குறிப்பாக சோவியத் யூனியனின் குடியரசுகளுக்குள் ஏற்கனவே முன்னெடுத்த நோட்டோவின் நகர்வுகள் தோல்வியடைந்தமையால் தற்போது எழுந்துள்ள மோதலை பயன்படுத்தி ஒரு நுழைவைச் சாத்தியப்படுத்த பிரான்ஸ் முனைகிறதைக் காணமுடிகிறது. அதே நேரம் நேட்டோவின் இன்னொரு நாடான துருக்கி அத்தகைய பிரான்ஸின் நகர்வை தடுப்பதுடன் அது தற்போது ரஷ்ய நட்பு நாடாகவும் விளங்குகிறது. அதாவது அசர்பைஜான் மீதான ஆர்மேனியாவின் ஆக்கிரமிப்புக்கு பிரான்ஸ் உதவுவதாக துருக்கிய வெளியுறவு அமைச்சர் மவ்லுத் கவுசொக்லு குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதனால் இரு நாடுகளும் தமக்குள் மோதிக் கொள்வதுடன் அண்மைக்காலமாக நோட்டோவிலிருந்து கொண்டு துருக்கி அதிக முரண்பாடுகளை நோட்டோ நாடுகளுடன் ஏற்படுத்தி வருகிறது. காரணம் நேட்டோ நாடுகளில் ஒன்றான அமெரிக்காவுக்கும் துருக்கிக்கும் இடையில் ஏற்பட்ட ஆயுத விநியோகம் தொடர்பான இழுபறியே ஆரம்பநிலைக் காரணமாக அமைந்திருந்தது. அச்சந்தர்ப்பத்தில் ரஷ்யாவின் நகர்வுகளும் துருக்கிக்கு வாய்ப்பானதாக அமைந்திருந்ததனால் இரு நாடுகளும் இராணுவ ரீதியில் நட்புடைய நாடுகளாக மாறிக் கொண்டன. இதன் பிரதிபலிப்பே துருக்கி ரஷ்ய நெருக்கமாகும். துருக்கி தனது எதிரி நாடுகளிலிருந்து தன்னைத் தக்கவைத்துக் கொள்ள அத்தகைய ஆயுத தளபாடம் அவசியம் எனக் கருதியே அமெரிக்காவிடம் கோரியபோதும் அமெரிக்கா தனது தயாரிப்பான எப்16 விமானங்களை வழங்க மறுத்திருந்தமையே முரண்பாடு பெரிதாவதற்கு பிரதான காரணமாகும்

தற்போது அசர்பைஜான் ஆர்மேனிய மோதலில் துருக்கி ரஷ்யா என்பன எதிரெதிர் தரப்பில் காணப்படுகின்ற நிலை எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் குழப்பமாகவே தெரிகிறது. ஆனால் மேற்காசியாவின் நெருக்கத்தைக் கொண்டுள்ள ரஷ்யா ஒரு போதும் துருக்கியுடன் மோதுவதற்கோ முரண்படுவதற்கோ தயாராகாது. அவ்வாறு செயல்படுவதென்பது நேட்டோவுடனோ அல்லது அமெரிக்காவுடனோ துருக்கியை மீண்டும் இணைப்பதாகவே அமைந்துவிடும். அதனால் ரஷ்யா போர்நிறுத்தத்தை ஏற்படுத்தி இந்த விடயத்தை சுமூகமாக்கவே அதிகம் முனையும். அதுவே ரஷ்யாவுக்கும் பாதுகாப்பு, துருக்கிக்கும் இலாபகரமானதாக அமையும்.

எனவே ரஷ்யாவின் தலையீட்டுக்கு பின்பு சுமூகமான முடிவை நோக்கி ஆர்மேனிய ஆசர்பைஜான் மோதல் மாறும் என்ற எதிர்பார்க்கை எழுந்துள்ளது.



கலாநிதி
கே.ரீ. கணேசலிங்கம்





# எங்கும் காணாத தனித்துவங்கள் நிறைந்த யாழ். பிரதேசம்




## கலகலப்பாக நிகழ்ந்த யாழ். தினகரன் விழா






அருள் சத்தியநாதன்

தினகரன் நாளிதழ் யாழ். மண்ணில் புதுப்பொலிவுடன் மீளவும் அறிமுகம் செய்யும் தினகரன் விழா கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அறுபதுகளில் இளந்தலை முறையினராக விளங்கிய யாழ். மைந்தர்கள் அனைவருக்குமே தினகரன் என்றால் உடனடியாக நினைவுக்கு வருவது யாழ். முற்றவெளியில் நடைபெறும் தினகரன் விழாவும் மாட்டு வண்டில் சவாரியும் தான். பெருங்காயம் தீர்ந்த பின்னரும் டப்பா மணக்கும் என்பார்கள். அன்றைய தினகரன் விழாவும் இன்றளவும் பேசப்படுகிறது என்றால் அது மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதே பொருள். அக்காலத்தின் பின்னர் அனைவர் கண்களையும் ஈர்க்கும் வகையில் சிறப்பாக நடைபெற்ற குறிப்பிடத்தக்க ஒரு விழா என்று நேற்று முன்தின நிகழ்வைக் குறிப்பிட முடியும்.

காலை ஏழரை மணிக்கு நல்லூர் கந்த சுவாமி கோவிலில் பூஜைகள் நடைபெற்றன. காலை ஒன்பதரை மணியளவில் கைலாசபதி அரங்கில் விழா கோலாகலமாக ஆரம்பமானது.

அக்டோபர் இரண்டாம் திகதி முதல் தினகரன் பத்திரிகை யாழ். மண்ணின் செய்திகள், புதினங்கள், மக்கள் பிரச்சினைகள், அபிவிருத்தி நடவடிக்கைகள், குறைபாடுகள் என சமூகம் சார்ந்த அனைத்து விஷயங்களையும் தொட்டும், ஆழமாக ஆராய்ந்தும் செல்லும் வகையில் நான்கு பக்கங்களை ஒதுக்கித் தந்துள்ளது. அதே போல கிழக்கு மாகாணத்துக்கு இரண்டு பக்கங்களையும் மலையக செய்திகளுக்காக இரண்டு பக்கங்களையும் ஒதுக்கித் தந்திருக்கிறது.

இதற்கு விளம்பரம் தரும் வகையிலேயே அன்றைய தினகரன் இதழ் 92 பக்கங்களுடன் சிறப்பு யாழ் மலராக வெளிவந்தது. யாழ் மண் மற்றும் மக்கள் சார்ந்த ஏராளமான பயனுள்ள பல கட்டுரைகளைத் தாங்கியதாக அவ்விதழ் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தது. அன்று யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் பத்திரிகை இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் நடமாடும் இசை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

கைலாசபதி அரங்கு விழாவுக்கு ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தபால் மற்றும் ஊடக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன், தமிழரசு கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, நல்லை ஆதீனம், பல்கலைக்கழக துணை வேந்தர் சற்குணராஜா, யாழ். ஊடகக் கற்கைப் பிரிவின் தலைவர் கலாநிதி ரகுராம், வட மாகாண சபைத்தலைவர் சிவஞானம் உட்பட பல யாழ். பிரமுகர்களும் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யு. தயாரத்ன, நிறுவன பணிப்பாளர்கள், தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் உட்பட நிறுவனத்தில் உயர் அதிகாரிகள் பலர் விழாவில் பங்கேற்றனர்.

இங்கு சிறப்புரையாற்றிய அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, நாட்டின் 25 மாவட்டங்களிலும் ஒரு பாடசாலை ஊடகத்துக்கான பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டு அப் பாடசாலைகளில் ஊடகக் கற்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்ற செய்தியை சபையோரின் கரகோஷத்துக்கு மத்தியில் தெரிவித்தார். விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச, நாடெங்கும் விளையாட்டுத் துறை அபிவிருத்தியை மனதில் கொண்டு விளையாட்டுத் துறைக்கான பாடசாலைகள் ஏற்படுத்தப்படவுள்ளதைப் போலவே இந்த ஊடகத்துறை பாடசாலைகளும் இயங்கும் என்றார்.

ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு இது உவப்பான ஒரு தகவல், ஏனெனில் அச்சு கோர்க்கும் காலத்தில் இருந்து, வானொலிப் பெட்டியைத் திருகி நிகழ்ச்சி கேட்கும் காலத்தில் இருந்த ஊடகத்துறை, இன்று வளர்ச்சி பெற்று இணையம், கைபேசி என்று வந்து விட்டது. இவ் வளர்ச்சி வேகம் இங்கே நின்றுவிடப் போவதில்லை. மேலும் பல பிரமிக்கத்தக்க மாற்றங்கள் ஏற்படப்போகின்றன. ஊடகத்துறை, இலங்கையிலும் சர்வதேச அளவிலும் சமூக, அரசியல் அரங்குகளில் பெரும் சொல்வாக்கு செலுத்தத்தான் போகிறது.

எனவே நாம் கூட்ஸ் வண்டியில் பயணித்துக் கொண்டிருக்க முடியாது. ஜெட் வேகம் பிடிக்க வேண்டுமானால் ஊடகத்தை




படங்கள் ஐ.சிவசாந்தன்

**' விளையாட்டுத்துறை பாடசாலை போல எல்லா மாவட்டங்களிலும் ஊடக பாடசாலைகள் அமைக்கப்படும் என்று அறிவித்தார் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல '**

விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இளைய சமூகத்துக்கு அக் கல்வியை அளிக்கவும் வேண்டும். யாழ். பல்கலைக்கழக ஊடகப் பிரிவு வெகு சிறப்பாக செயற்பட்டு வருவதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

இங்கே உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகத்தை இன்னொரு கோணத்தில் பார்த்தார். ஒரு பொய்யைத் திரும்பத் திரும்ப சொல்லி வந்தால் அது உண்மை போலவாகிவிடும் என்று குறிப்பிட்ட அவர், ஊடகங்கள் அப்படியும் செய்கின்றன என்றார். ஒரு கட்சிப் பத்திரிகை கூறி வந்தவற்றை அப்படியே நம்பி ஆயுதபலத்தால் மட்டுமே உரிமைகளைப் பெறலாம் என தாம் நம்பி ஆயுதம் தூக்கியதாகவும் தற்போது உரிமைகளை ஜனநாயக வழிகளிலும் அடையமுடியும் என உறுதியாக நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். செய்திகள் செம்மையாகவும், நேர்மையாகவும் அமையவேண்டும், புண்படுத்துவதாக அல்ல என்பதுதான் அவர் சொல்ல வந்த விஷயம்.

இவ்விழாவில் வெகு சிறப்பான உரையை நிகழ்த்தியவர் யாழ். பல்கலைக் கழக துணை வேந்தர் சற்குணராஜா. விழாவுக்கு பெருமளவில் தென்னிலங்கையில் இருந்து வந்தவர்களே அதிகம் என்பதை மனதில் இருத்தி அவர் தனது உரையை சரளமான ஆங்கிலத்தில் கம்பிரமாக நிகழ்த்தினார். யாழ். மண்ணின் பெருமைகளையும் தனித்துவத்தையும் ஆற்றோட்டமாகச் சொன்னார்.

ஆசியாவின் முதலாவது மருத்துவமனையும் மருத்துவக் கல்லூரியும் யாழ். மண்ணிலேயே ஆங்கிலேயரால் அமைக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டிய அவர், இந்த நாட்டில் வேறெங்கும் காணப்படாத ஒரு பண்பு யாழ்ப்பாணத்தில் காணப்படுகிறது என்றார். அவை பிராந்திய பத்திரிகைகள். யாழ் மண்ணிலே பிராந்திய தினசரிகள் வேர் விட்டு வளர்ச்சி அடைந்துள்ளன என்றும் அவை இச் சமூகத்தில் முக்கிய பங்காற்றி வருகின்றன என்று உரைத்தார் உபவேந்தனர்.

கலை கலாசாரமும் பற்றி பேசும்போது நாட்டில் வேறெங்குமே காணமுடியாத சங்கீத சபையை யாழ்ப்பாணத்தில் காண முடியும். இச் சபை பாரம்பரிய கர்நாடக இசை மற்றும் நடனத்துறைகளில் அகில இந்திய ரீதியாக தேர்வுகளை நடத்தி சான்றிதழ்களை வழங்கி வருகிறது. இதற்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இந்த சான்றிழ்கள் இலங்கையில் மட்டுமின்றி சர்வதேச ரீதியாகவும் அங்கீகாரம் பெற்றவை. நாட்டில் வேறெங்கும் இவ்வாறான இசை, நடனத்தை மேலாண்மை செய்யும் ஒரு சுதந்திர அமைப்பைக் காண முடியாது. இவ்வாறு யாழ். பிராந்தியம் தனித்துவம் பெற்று விளங்குகிறது. கல்விக்கு முக்கியத்துவம் தரும் மண்ணாக இருப்பதால்தான் இலங்கையில் தரப்படுத்தல் அறிமுகமான போது தமிழர்கள் அதை ஏற்காமல் போராடினார்கள்" என்று தனது உரையில் குறிப்பிட்டார் யாழ். உபவேந்தர்.

தனது உரையின் இறுதிப் பகுதியில் தன் ஐந்து விரல்களையும் விரித்துக் காட்டிய அவர், ஐந்தும் தனித்தனி விரல்கள்தான். ஒரு விரல் இன்னொரு விரலுடன் இணையக்கூடாது. இணைந்தால் குறைபாடான கையாகிவிடும். விரல்கள் ஐந்தும் தனித் தனியாக இருக்கும் அதே சமயம் அவை இணைந்து கை முஷ்டியானால் எதிரியைத்தாக்கும் ஆயுதமாகிவிடும். தனித்துவம் கொண்டவர்களாக இருப்போம். அவசியம் ஏற்படும் போது இணைந்து கைமுஷ்டியாக மாறி எதிரிகளைத் தாக்கி வீழ்த்துவோம் என்பதில் ஒரு அருமையான அரசியல் இருந்தது.

இவ்விழா முடிவடைந்த பின்னர் யாழ். திண்ணை உணவகத்தில் லேக்ஹவுஸ் விற்பனை முகவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.









# முடக்க நிலை தேவை!



காலபூஷணம், ஏறாவூர் தாஹிர்

மாதமிரு தடவை,
அன்றியொருதடவை
அகில உலகளவில்
முடக்க நிலை தேவை!
ஓசோன் படலத்தின்
ஓட்டை விரிதலையும்
ஓட்சிசனின் அளவு
விகிதம் குறைதலையும்
காபனீரொட்சைட்டின்
கனவளவு மிகுதலையும்
கடல்மட்டம் உயர்தலையும்
எரிமலைகள் உருகலையும்
தொற்றுநோய் பரவலையும்
தொற்றாநோய் படர்தலையும்
வம்பு, வழிப்பறிகள்
வன்முறைகள் மலிதலையும்
சீரற்றவை குறைந்து,
சீரடையும் புவியமைய
அகில உலகளவில்
அடக்க நிலை! ஆமாம்
முடக்க நிலை தேவை!
வாகனங்கள் விரையாத
வானூர்தி இரையாத
விண்கலங்கள் ஏவாத
விழாக்கள் கொலு வேறாத
விளையாட்டு, களியாட்டம்
வித விதமாய் விரியாத
இயந்திரிங்கள் இயங்காத
இலத்திரனியல் செயல்கள்
இயன்றளவு மிகையாத
வேட்டொலிகள் கேட்காத
வேடிக்கை நிகழாத
குண்டுமழை பொழியாத
குருதி நதி வழியாத
ஊர்வலங்கள் நீளாத
உருளும்தேர் நகராத
ஒலிபெருக்கும் சாதனங்கள்
ஓங்கியொலியாத
ஆறு, குளம், கடலின்
அமைதி குலையாத
வளிமாசடையாத
வாழுயிர்கள் அலையாத
உரிய வழி முறையாக
ஊரடங்கி, உலகடங்கி
வீடடங்கி ஓய்வடைய
மாதமொரு தடவை
முடியுமெனில் இருதடவை
அகில உலகளவில்
அடக்க நிலை ஆமாம்
முடக்க நிலை தேவை!

# நஞ்சற்ற உணவே நலம்



திவுளான் சவாஹிர், பொலன்னறுவை

மெய்யாகவே
நம் மெய்யை
நாமே அழிக்கின்றோம்
அவசரமாய்
காசாக்க
உணவுகளை
நாம் மாசாக்கி
அதன் போசாக்கை
அழிக்கின்றோம்
இதை நாம்
இலேசாக நினைக்கின்றோம்
உயிர் கொல்லும்
இரசாயனத்தை
உணவுகளில்
கலக்கின்றோம்
அரிசியில்
ஆசனஞ்சாம்
பழங்களில்
காபயிட்டாம்
மரக்கறிகள்
நடுகை முதல்
அறுவடைவரை
இரசாயன
அபிசேகமாம்
உன் கையே உனக்குத் துணை
ஆனால்,
இப்போதெல்லாம்
உன் செய்கையே
உனக்கு வினை
நஞ்சற்ற
உணவுகளை
நாம் தேடி
அலைகின்றோம்
நாலா திசைகளிலும்
கலப்படங்கள்
கூடியதால்
குழப்பத்தில்
நாமுள்ளோம்
தொற்றாநோய்
தொல்லை துயர்
துன்பமெல்லாம்
துடைத்தெறிய
நாம் விழிப்போம்
விரைவில்
நாம் இயற்கைக்கு
மாற வேண்டும்
இல்லையெனில்
இருப்பற்று
போய்விடுவோம்
அவசரமாய்

# உனக்கான கவிதை...



என். கே. வேணி, பலாங்கொடை

என் காதலை
உன்னிடம் சொல்லி
உனக்கான காதல்
கவிதை எழுத
என் பேனாவை
திறந்த போது
உன்னிதயம்
பேனாவும்
திறக்காமலே
இறுக்காமாக
மூடிக்கொண்டதால்
என் கரங்கள்
உனக்காக காதல்
கவிதைகள்
எழுத துடிக்கின்றது
என்னை அறியாமலே
என் அன்பே

# கடந்து வந்த பாதை

மருதகவி அஷ்ரப் இஸ்மாயில்
சாய்ந்தமருது

பாடிவரும் குயில்கள் தேடிவரும் நட்பு
பழகிப்போன பழுதிலா மனங்கள்
பூத்திருக்கும் மலர்கள் புன்னகைக்கும் நொடிகள்
பரவசத்தே தோய்ந்து இலயித்திருக்கும் கண்கள்
வேர்த்திருக்க மேனி வேலியினைத் தாண்டி
பறந்துவரும் பந்தை பிடித்தெடுக்கும் வேளை
பாய்ந்துவரும் நீரில் குதித்தெழுந்த பொழுது
காணுகின்ற காட்சியில் களிப்படையும் கண்கள்
வீடுவரை நட்பு விடியலிலே தொடங்கும்
வீடடையும் நேரம் நள்ளிரவு காணும்
தேடிநிற்கும் தந்தை துடித்திருக்கும் அன்னை
பார்த்திருக்கும் தங்கை பழகிப்போன வழமை
பக்கத்துத் தெருவிலே பூவிழியின் வாஞ்சை
பயணிக்கும் பாதையறிந்த ஈருருளி
நோக்கின்றிக் கரைந்திடும் பகலின் பொழுது
இரவின் நகர்விலே கவிதையாய் வடிக்கும்
போரென்று வந்து மண்மறைந்தார் பலபேர்
பட்டம் பெற்றதால் பட்டணத்தில் சிலர்
புலம் பெயர்ந்தே தொலைவானார் அனேகர்
மீதமாகி கவியெழுத எம்போல் சிலபேர்

# மனம் இல்லையே!



அலிறிஸாப், அக்குறணை

அப்பா அப்பா நீங்கள்
எமக்காக உருக்குலைந்தீர்கள்
தப்பா ஒரு வார்த்தை சொல்லாதிருக்க
ஓடாய் எம் சுகம் காத்தீர்கள்
தோளிலும் மார்பிலும் போட்டு
கண்ணிமை காத்தல் போல்
நாளும் பொழுதும் எமக்காக
அர்ப்பணம் செய்தீர்கள் வாழ்வை
பசிவாட்டம் நாம் அறியாதிருக்க
பொருள் தேடி பலபுறம் சென்று
புசிப்பதற்கு உணவும் பொருளும்
நலமாய் தந்தீர்கள் எமக்காக
தரணியில் உம்போல் யாருண்டோ
தாளா உம்சேவைக்கு நிகருண்டோ
பரணி பாடி உமைப் புகழ்ந்தாலும்
பாரில் உமக்கு இணையுண்டோ
அறிவு நாம்பெற வழிகாட்டி
ஆற்றல் பல எம்மில் வளர்த்தீர்கள்
பரிவு மிகக்கொண்டு பாரில்
பல்கலை நாம்பெற உதவினீர்கள்
முதுமை வாட்டும் இந்நாளில்
உம் நலம் காக்க ஆளில்லையே
பதுமைபோல் பிள்ளைகள் இருந்தும்
பார்க்கும் மனம் இல்லையே!

# அந்நாள் நினைவுகள்



எம். கே. ஸிம்ரா குல்ஸும்
திக்குவல்லை


என் பச்சைக்கிளியே!
தேமாலை உருசித்த
அந்த நாள் – இன்பகரமான
இரசனைமிகு நாள்
நட்புத் தேவதையின்
நகைச்சுவை பேச்சில்
களித்த நாட்கள் பல
என்றும் மறக்காத அந்தநாள்
நாணிக்கோணி நடுக்கமின்றி
நாளும் களித்தோமே
நட்புப் பூந்தோட்டத்திலே!

# மரணம்

கலாபூசணம்
நிந்தவூர் மக்கீன் ஹாஜி

படித்தவைகள்
பறந்துபோகும்
பசைகள்
பதர்களாகும்
பட்டங்கள்
கோவையில்
கிடக்கும்
திட்டங்கள்
தவிடுபொடியாகும்
பெயரும்
பெயர்ந்துபோகும்
பெருமைகள்
பெட்டிகட்டும்
வறுமை
வானில் உயரும்
வற்றாத ஆசைகள்
வாழத் துடிக்கும்
உறவுகள் அப்போது
உயிராய் நடிக்கும்
உடலும் அவ்வேளை
உசும்பாமல் கிடக்கும்
ஊர் வாயும் அன்று
உழறி, அவலாய் மென்று
உண்மை அது மட்டும் என்று
உள்ளம் ஒத்துக்கொள்ளும்
தேனான குடும்பமும்
தெவிட்டியே போகும்
தேடிய தெலாம்
தெருவோரமாகும்
பட்டவேதனையின்
பரிதவிட்டே மீதம்
பாரில் வாழ்ந்ததோ
பார்ப்பதற்கு சில நிமிடம்
போட்டுத்திரிந்த தெல்லாம்
போலி வேசம்
பொல்லாத உலகிலே
போதும் அவகாசம்
நல்லது செய்திருந்தால்
நம்முன் வரும்
நாளை வந்தாலும் மரணம்
நாமும் போக வரும்

# விசக் கற்கள்



இராணி பௌசியா, கல்லளை

ஒரு குளவிக்கூட்டுக்குள்
இரு கற்கள்
எறியப்பட்டன
இன்னும்
ஆவேசம் கொள்ளவில்லை
அவை
குளவிகள்
வெளி வருவதை
வேடிக்கை பார்த்தவர்கள்
விறைத்துப்போயினர்
பயந்து மூடிக்கொண்டவர்
பாதிப்போர்வையை
விலக்கிப்பார்த்தனர்
கற்கள் வீழ்ந்த மாத்திரத்தில்
கருகி விட்டனவாம்
குளவிகள்
எறியப்பட்டவை
சாதாரண கற்களா என்ன
குளவிகளை மிஞ்சிய
விஷம் கொண்ட
நாவெறிந்த
வார்த்தைக்கற்கள்
நாவெறியும்
விசக்கற்கள்
மதம் கொண்ட யானையையும்
மடக்கிப்போடும்
பேதமை மிக்க
பெண்ணினத்தை மாத்திரம்
விட்டு வைக்குமா
மானிடச் சொல்லம்புகள்

# மரணத்தை மறக்காதே!

காத்தான்குடி கலைமதி றபாய்தீன்

மரணத்தை மறக்காதே
மண்வாழ்வு நிலைக்காதே!
பொன்னாசை மண்ணாசை
பெரிதாகக் கொள்ளாதே!
பெண்ணிலே இணக்கங்கண்டு
தன்னை நீ இழக்காதே!
விண்ணலவாய் வாழ்வில் நீ
விரைந்து என்றும் திரியாதே!
மரணம் உனக்கு
மறுகணம் வந்துவிடும்!
இருந்த உயிர் உடனே
உன்னைவிட்டுச் சென்றுவிடும்!
உதிர்ந்த மலர் போல
என்னுடல் ஆகிவிடும்!
உணர்வுகள் எல்லாமே
உன்னைவிட்டு மறந்துவிடும்!
பேச்சும் மூச்சும்
உன்னிடம் இல்லையென்றால்
சடலம் என்றென்றே
என்னுடலுக்குப் பெயர் வைப்பர்!
அனைத்தும் உன்னோடு
அடங்கி விடுவதனால்
அடக்கம் செய்வதற்கு உன்னுடலை
உறவுகள் எடுத்துச் செல்வர்!
மரணித்த உடலோடு மனிதா!
பொன்பொருள் வந்திடுமா?
உடன்பிறப்புகள் வந்திடுமா?
இருந்த போதிருந்த செல்வம்
எல்லாமே வந்திடுமா? –நீ
மரணத்தை மறந்து வாழாதே
மண்வாழ்வில் மயக்கம் கொள்ளாதே
கண்முன்னே மரணத்தை
காலமெல்லாம் காண்கின்றாய்
உனக்கும் மரணம்
வரத்தான் போகிறது
மரணத்தை உணர்ந்து நீ
மண்ணிலே வாழ்வாயா?
புனிதத்தை வளர்த்து நீ
புனிதனாய் வாழ்வாயா?

# பூவே உன்னை நேசித்தேன்

வான்மதி

பூவே உன்னை நான்
பூக்கள் கொண்டு பூஜித்தேன்
பூவைப் போலவே உன்னை
நான் என் கையில் தாங்கினேன்
நீயும் என்னை பூஜித்தாய்
இந்த உண்மை கலந்த
அன்பு இறுதி வரைத்தொடர
நான் எதையும் இழக்கத் தயார்
பட்டாம் பூச்சிக் காதல்
பூக்களைத் தேடி வரும்
பட்டாம் பூச்சிக் காதல்
செய்யும் தேன் உண்ணும்
ஆனால், தன் தேவை
முடிந்ததும் பூவை விட்டு
சிறகடித்துப் பறந்து போகும்

# குருவிக்காவல்

கிண்ணியா ஜெனீரா

கருமுகில்கள்
கருகி வீழ்ந்தனவா
களனியில்.... அவை
*
உயிர்த்தெழுந்து
பாட்டம்.... பாட்டமாய்....
நெற்கதிர்களை
அமுதமென நசித்துரிஞ்சுகையில்...
*
விவசாயிகளின்
விசனமும்... வேதனையும்
வெடித்துச் சிதறி
ஒப்பாரியாகக் கூக்குரலிட
*
பாலர் பருவமதில்
ஊது குழல்
ஊதி
உற்சாகித்த நினைவுகளை
குருவிக் காவலுக்காய்
மீண்டுமொலிக்கையில்...
*
இருள் படர்ந்த
அக்கணங்குக்காய்
காவல் செய்கிறான் விவசாயி...!
*
முன்னெப்போதுமில்லா
வெட்டுக்கிளிகளும்,
அந்துப்பூச்சிகளும்
குருவிக் கூட்டங்களும்
வயல்களை
நாசம் செய்வதற்கென்றே
கட்டவிழ்த்து விடப்பட்டனவோ?

# தூங்காதே மகனே!



கலாபூசணம், எம்.வை.எம். மீஆத்

காலம் நேரம் பார்க்காது
தூங்காதே! மகனே
மித மிஞ்சி தூங்கினால்
மிகைப்பது சோர்வும் சோம்பலும்
அளவுக்கதிகம் சயனித்தவர் வாழ்வு
படுதோல்விதான்!
காலையில் தூங்கியவன்
கல்வியிழப்பான்!
மாலையில் தூங்கியவன்
ஆரோக்கியம் அற்று வாழ்வான்
ஆனால், வழக்கமாய்
இரவில் தூங்குபவன்
உடலுக்கு நன்றாய் ஓய்வு
வழங்குவான்
அளவாய்த் தூங்கி
அளவாய் விழித்து
காலம் நேரம் நன்கு கழித்து
வாழ்வில் உயரவழி செய்துகொள்
வளரும் மகனே!
வளர்ந்தோர் புத்திமதி
நன்கு செவி சாய்த்து ஒழுகிடு

# வைரசுகளும் வாழ்வியலும்?

கவிப்புனல் சாந்தமருதூர்
கேயெம்மே அஸீஸ்

ஆச்சரிய உலகில் சில
அதிசயங்கள் பீச்சுகின்றன
அண்டங்காக்கைகளின்
எச்சங்களாக
ஏன்... எதற்கு.... யாரால்?
விடைகாண முடியாத வெப்பிசாரத்தில்
மனித, மண்டை ஓடுகள்
மரித்துப்போகும் சில விநாடிகளில்
எண்டரிக், எபிடமிக்
பண்டமிக், இபொலா
சார்ஸ், நிபா, சிகா
வைரசுப்பட்டியல்களில் இன்று
“ஹைபவராகி” வலம் வருகிறதாம்
கொரோனா என்கின்ற கோதாரி
சீனாவை சிறைப்பிடித்தவாறு
விஞ்ஞான உலகமே விழிபிதுங்க
அஞ்சி, நடுங்கி ஆராய்ச்சி நடத்தும்
அற்ப அறிஞர்கள் மத்தியில்
மலேரியா, சிக்குன்குன்யா
கொள்ளை, காசநோய்
டெங்கு, அது இது என்று
அறியப்படாத எத்தனையோ
ஆட்கொல்லிகளின் அட்டகாசம்
ஆட்டிப்படைக்க
கொட்டம் அடங்காமல்
கொலோச்சும்
எட்டப்பர்களுக்கான
இறுதிச்சவாலா கொரோனா?
எங்குப் பார்த்தாலும் யுத்தம்
இறப்பு, குருதி சிந்தல்
இனவாதம், மதபேதம்
கழுத்தறுப்பு, கறுமகாண்டம்
கட்டுக்கடங்காமல் முட்டிமோத
விட்டு விடுமா இறை நீதி?





இலங்கை ராணுவத்தின் 71 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளிவாசலில் நேற்று காலை 3 ஆம் திகதி இஸ்லாமிய மத நிகழ்வு நடைபெற்றது. மௌலவி ஹம்ஹர் ஹகம்டீன் துஆ பிரார்தனை செய்வதையும் கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளிவாசல் தலைவர் மொஹமட் கலீல் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வாவுக்கு நினைவு சின்னம் வழங்குவதையும் படங்களில் காணலாம். பள்ளிவாசல் பிரதி தலைவர் சலாஹுதீன் மற்றும் ராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

படம். ருசையிக் பாரூக்

# கொழும்பு லேடி றிச்வே சிறுவர் மருத்துவமனையில் என்பு மச்சை மாற்று அறுவைச் சிகிச்சை

கொழும்பு லேடி றிச்வே சிறுவர் மருத்துவமனையில் சிறுவர்களுக்கான எலும்பு மச்சை மாற்று சிகிச்சைப்பிரிவு கடந்த வியாழக்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியும் கலந்து கொண்டார்

தலசீமியா உட்பட்ட பல குருதி நோய்களுக்கு எலும்பு மச்சை மாற்று சிகிச்சையே தீர்வாக அமைகின்றது. எதிர்காலத்தில் இவ்வாறு நோய்வாய்ப்பட்ட எமது சிறுவர்களை இந்நோய் தாக்கத்திலிருந்து விடுபட்டு நல்ல சுகதேகிகளாக உருவாக்குவதே எமது குறிக்கோளாகும் என்கிறார் வைத்தியர் மனோரி பிரபாசிகா.

இவர் எலும்பு மச்சை மாற்று அறுவை சிகிச்சை பட்டப்படிப்பை லண்டன் பல்கலைகழகத்தில் மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எலும்பு மச்சை மாற்றுதல் (பி.எம்.டி), அல்லது ஸ்டெம் மாற்று சிகிச்சை என்பது சேதமடைந்த, உடைந்த மச்சையை அல்லது நோயுற்ற எலும்பு மச்சையை ஆரோக்கியமான இரத்தத்தை உருவாக்கும் ஸ்டெம் செல்கள் மூலம் மாற்றுவதற்கான செயல்முறை எனக் கூறலாம்.

எலும்பு மச்சை சரியாக வேலை செய்யாதபோது போதுமான ஆரோக்கியமான இரத்த அணுக்களை உருவாக்காதபோது அதனை மாற்றவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

எலும்பு மச்சை மாற்று அறுவை சிகிச்சையின் போது உடன் பிறந்தவர்களின் உடலிலிருந்து எடுத்த செல்கள் பொருந்தாவிட்டால்






பொருத்தமான நன்கொடையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் கொடையாளர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பது மிகமிக அவசியம். இரத்தம் இரண்டு அல்லது மூன்று கிழமைகள் தொடர்ச்சியாக பரிசோதனை செய்யப்படவேண்டும். இதில் கீமோ தெரப்பி முக்கிய இடம் வகிக்கிறது.

தனியார் வைத்தியசாலைகளில் எலும்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்கு ரூபா 50 லட்சத்திற்கும் மேல் அறவிடுகிறார்கள். இங்கே எந்த விதமான கட்டணமும் அறிடப்படுவதில்லை.

2015ஆம் ஆண்டு எலும்பு மச்சை மாற்று அறுவை சிகிச்சை தொடங்கப்பட்ட போதும் அதனை செயற்படுத்த முடியாமல் போய்விட்டது. அரசின் வேலைத்திட்டத்தின் கீழ் பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்களால் சகல வசதிகளையும் கொண்ட இரண்டு படுக்கைகள் கொண்ட அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் ஒன்பது மாடிகளை கொண்ட நவீன கட்டடம் ஒன்று நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நோயாளர்களை பார்வையிட வரும் பெற்றோருக்கு, தனியான வசதகள் கொண்ட பார்வையிடம் அமைக்கப்பட்டுள்ளது. எக்காரணத்தை கொண்டும் தந்தையோ, தாயோ தவிர வேறு எவரும் வாட்டுக்குள் செல்ல அனுமதி கிடையாது. நோயாளிகளுக்கு தேவையான சகல வசதிகளும செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் அமைந்துள்ள கிறிஸ்டியன் மெடிக்கல் கொலேஜ் இதற்கான சகலவித ஒத்துழைப்பையும், உதவியையும் நல்கி வருகிறது. CMC மெடிக்கல் கொலேஜ் மூலம் விசேட வைத்தியர்கள் ஒன்பது பேருக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கப்பட்டது. தற்போது ZOOM மூலம் இப்பியற்சி வழங்கப்பட்டு வருகிறது.

எலும்பு மச்சை மாற்று அறுவை சிகிச்சைக்கு விசேட வைத்தியர் நிபுனிக்கா சேனாதீர பொறுப்பாக கடமையாற்றுகிறார். அவருடன் சேர்ந்து பயிற்சி பெற்ற அந்த ஒன்பது வைத்தியர்களும் இணைந்து செயற்படுகிறார்கள்.

இந்தப் பிரிவு வெற்றிகரமான பாதையை நோக்கி நகருகிறது என்பதில் நாம் பெருமிதம் கொள்ளலாம்.

எலும்பு மச்சை மாற்று அறுவை சிகிச்சை இந்தியா மற்றும் லண்டன் போன்ற நாடுகளில் தற்போது வெற்றிகரமாக செயற்பட்டுவருகிறது. சிகிச்சைக்காக இந்தியா செல்வோர் இனிமேல் அங்கு செல்ல வேண்டிய அவசியமில்லை சகலவசதிகளையும் கொண்ட மருந்துவமனை உள்ளதென்பதை பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன் என்றார் வைத்தியர்.

தற்போது 100 நோயார்கள் பதிவு செய்துள்ளார்கள். 12 நோயார்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூடிய சீக்கிரத்தில் அவர்களுக்கான சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்நோய் எமது அண்டைய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், நாடுகளிலும் அததிகளவில் உள்ளது.

ஹொட்ஜ்கின்ஸ் நோய் அல்லாத மற்றும் ஹொட்ஜ்கின்ஸ் லிம்போமா இரத்த புற்று போன்ற போன்ற நோய்களுக்கு எலும்பு மச்சை மாற்று அறுவை சிகிச்சைசையே பலனளிக்கின்றது.

எலும்பு மச்சை என்பது ஒரு சிறப்பான பஞ்சு போன்ற கொழுப்பு இழையமாகும்.

இது இரத்த ஸ்டெம் கலங்களைக் கொண்டது. இரத்த ஸ்டெம் செல்கள் வெள்ளை மற்றும் சிவப்பு இரத்த அணுக்கள் மற்றும் பிளேட்லெட்களாக மாறுகின்றன.

இந்த நோய்க்கான அறிகுறிகள்

பரம்பரை இரத்தக் கோளாறு, பல்வேறு வகை மரபணு கோளாறுகள், ஒற்றை மரபணு குறைபாடு, உடல் போதுமான இரத்த அணுக்களை உருவாக்காத போது நாட்பட்ட இரத்த புற்றுநோய் ஆபத்தான மற்றும் மீள் புற்றுநோய் கடுமையான இரத்த கசிவு, குறைமாதப் பிறப்பு, இரத்த சோகை, ஹூமோகுளோபின் குறைபாடு, தலசீமியா, பரம்பரை எலும்பு மச்சை நோய், மைலோமா, எலும்பு மச்சை மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின்னர் வயிற்றுப் போக்கு, வாந்தி எரிச்சல், சளி, இரத்த போக்கு, இரத்தக்கசிவு தொற்றுகள் போன்றவை ஏற்படாது பார்த்துக் கொள்ளுதல் மிக அவசியம்.

எலும்பு மச்சை மாற்று அறுவை சிகிச்சைக்கு பிறகு நோய் தொற்றுகளிலிருந்து தவிர்த்துக் கொள்ளுதல், நல்ல சுகாதாரத்தை பேணுதல், எளிய முறை உடற்பயிற்சி செய்தல், சத்தான உணவை உட்கொள்ளுதல்

ஆரோக்கியமான வாழ்க்கை, மன அழுத்தம், மருந்துகளை கிரமமாக உட்கொள்ளல் பரிசோதனைகளை தவறாது செய்தல், என்பனவற்றின் மூலம் ஆறு மாதங்களுக்கு பிறகு கல்வியை தொடரலாம்.

-லில்லி நாதன்

# வலம்புரி கவிதா வட்ட நிர்வாகிகள் தெரிவு

2013 ல் மீள் ஆரம்பம் செய்யப்பட்ட வகவம் எனும் வலம்புரி கவிதா வட்டத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வரும் நிர்வாக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

**சிரேஷ்ட ஸ்தாபகர்:** கலாபூஷணம் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி
**தலைவர்:** என்.நஜ்முல் ஹுசைன்
**செயலாளர்:** இளநெஞ்சன் முர்ஷிதீன்
**பொருளாளர் :** ஈழகணேஷ்
**தேசிய அமைப்பாளர் :** எஸ். தனபாலன்
**செயற்குழு:** தமிழ்த் தென்றல் எஸ். எம். அலி அக்பர், கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ், இலங்கை பொன்மனச்செம்மல் எம். எஸ். தாஜ்மஹான், சுதர்ஸனி பொன்னையா, கலாபூஷணம் மஸீதா அன்ஸார், வை. சுசீலா ஆகியோர்.

## ஓநாய் கூட்டத்திற்குள்...

(10ஆம் பக்கத் தொடர்)

கடந்த 2020 பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்றவர்கள் நடைபெறவிருக்கும் மாகாணசபை தேர்தலில் வெற்றி பெறுவதற்காக கையிலேடுத்த ஆயுதம் தான் திலீபனின் நினைவு தினம்.

ஒரு கோரிக்கையை முன்வைத்து போராடுவது என்பதும், அதற்கான உகந்த வழிகள், மாற்று வழிகள் என பல பரிசோதனை செய்யப்பட வேண்டும் அத்துடன் போராட்டமானது தொடர்ச்சியானதாக இருக்க வேண்டும்.

ஒரு நாள் கர்த்தால் அனுஸ்டித்து பின் வீடு சென்று உண்டு குடித்து உறங்குவதால் என்ன பயன் கர்த்தாலின் பின் தொடர்ச்சியான நடவடிக்கை என்ன என ஏன் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவிக்கவில்லை. திலீபன் இலங்கை அரசாங்கம் தடைசெய்த விடுதலைப்புலிகள் அமைப்பை சேர்ந்த உறுப்பிர் மட்டுமல்லாது இராணுவத்தில் வழங்கப்படும் பட்டமான லெப் கேணல் என்ற பட்டத்தையும் விடுதலைப்புலிகள் திலீபனின் இறப்புக்கு பின் வழங்கியிருந்தனர். அவ்வாறு இலங்கையில் தடை செய்யப்பட்ட ஒரு நபருக்காக கர்த்தால் மற்றும் உண்ணாவிரதம் இருந்த அரசியல்வாதிகளை மிரட்டாத கைது செய்யாத படைகள் இதற்குள் அல்லது இந்த தமிழ் தேசிய அரசியல் தலைமைகளின் ஏமாற்று அரசியல் உள்ளது என புரிந்துகொள்ள முடியாத அப்பாவி பல்கலைக்கழக மாணவர்களை மிரட்டியதுடன் அவர்களை நோக்கி துப்பாக்கிகளை நீட்டிய சம்பவம் அனைவரையும் கலங்க வைத்தள்ளது.

ஆர்ப்பாட்டம் உண்ணாவிரம் என தமிழ் தேசிய அரசியல்வாதிகள் ஊதிவிட்ட நெருப்பில் எரிந்து சாம்பலாகாமல் தப்பித்துள்ளனர் பல்கலைக்கழக மாணவர்கள். அன்றாடம் கூலி வேலை செய்து தங்கள் பிள்ளைகளை கல்வி கற்க அனுப்பும் ஆயிரக்கணக்கான ஏழை பெற்றோரின் கனவாக பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் மாணவர்கள் இருக்கின்றார்கள். தமிழ் அரசியல் தலைமைகளின் குறுந்தேசிய பார்வையானது தங்களை இல்லாமல் செய்யும் பெரும் நெருப்பு என்பதனை மாணவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். சர்வதேச அரசியல், தேசிய அரசியல் உள்ளூர் அரசியல் என்பனவற்றுடன் சுயநிர்ணய உரிமை, தேசியம், வடக்கு கிழக்கு இணைப்பு, இறையாண்மை போன்றவற்றை கற்றுத் தேர்ததன் பின்னர் மாணவர்கள் அரசியலில் ஈடுபட்டால் அது முதிர்ச்சி, தமிழ் அரசியல்வாதிகளின் உணர்ச்சி பேச்சுக்கு உணர்ச்சிவசப்பட்டு அடிமையானால் மாணவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும்.

1970 வதுகளில் ஏற்பட்ட சாதிய ரீதியிலான போராட்டங்களை முடக்குவதற்காக தமிழரசுக் கட்சியின் தலைவர் அமிர்தலிங்கம் ஆயிரம் தமிழ் இளைஞர்களை எனக்கு தாருங்கள் தமிழீழத்தை நான் பெற்றுத் தருகிறேன் என முழங்கியதை நம்பி உணர்ச்சிவசப்பட்ட இளைஞர்கள் தங்கள் கைவிரல்களை பிளேட்டால் கிழித்து அமிர்தலிங்கத்தின் நெற்றியில் இரத்த திலகமிட்டனர். இவ்வாறாக தமிழ் தேசிய தலைமைகளின் தீர்க்க தரிசமில்லாமல் மூட்டப்பட்ட அரசியல் தீயானது அத்தலைவர்களையும் எரித்து எமது இனத்தையும் நசம் செய்து ஓய்ந்து போனதுதான் வரலாறு எமக்கு கற்றுத் தந்த பாடமாக இருக்கின்றது.

திலீபனின் நினைவு தினத்தை அனுஸ்டிக்க உரிமை கோரி உண்ணாவிரதம் இருந்த அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக உரிமையை அடையும் வரை ஒவ்வொரு தலைவராக மாறி மாறி உண்ணாவிரதம் இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இருந்து மரணம் அடைந்திருந்தால் நாட்டில் பெரும் எழுச்சி உருவாக்கியிருக்கும், அதை விடுத்து கோயிலுக்கு விரதம் இருப்பதுபோல் காலையில் ஆரம்பித்து மாலையில் நிறைவு பெற்றுள்ளது கர்த்தால் மற்றும் உண்ணாவிரதம்.

திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதமிருந்து மரிணித்து போனார், ஆனால் திலீபனால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் மரணிக்கவில்லை திலீபனின் கோரிக்கையை கையிலெடுத்து பயணிக்க தமிழ் அரசியல் தலைமைகள் தயாரில்லை. ஆகவே தமிழ் தலைமைகளின் கபட நாடகம் இதன்மூலமே தோலுரிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு விடயத்தை குறிப்பிட்டாக வேண்டும் திலீபனின் நினைவு தினத்தை அனுஸ்டிக்க நிதிமன்றம் தடையுத்தரவு போட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணியும், அரசியல்வாதியுமான சிறிகாந்தா நீதிமன்றம் தடையுத்தரவு போட்டாலும் அது மீறப்படாமல் உண்ணாவிரதம் அனுஸ்டிக்கப்படும் என தெரிவித்திருந்தார். ஆக அரசாங்கத்தால் எதிர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாது என்பதை உறுதி செய்த பின் தங்கள் சித்து விளையாட்டை ஆரம்பித்துள்ளனர் தோல்வியுற்ற தமிழ் தலைமைகள்.

இக் கர்த்தால் காரணமாக கூலிவேலை செய்யும் குடும்பங்கள் தங்கள் வருமானத்தை இழந்துள்ளன, மாணவர்கள் கல்வியை இழந்துள்ளனர், வர்த்தகர்கள் தங்கள் வருமானங்களை இழந்துள்ளனர் ஆனால் தமிழ் தலைமைகளின் போலியான தேசிய உண்ணாவிரம் அன்று அரசியல்வாதிகளுக்கு இலாபத்தை மாத்திரமே பெற்றுக் கொடுத்துள்ளது, பாராளுமன்றத்தின் கொடுப்பனவு மாத முடிவில் அவர்களுக்கு வழங்கப்படும்.

வடக்கு கிழக்கில் அனுஸ்டிக்கப்பட்ட கர்த்தாலுக்கு அரசாங்கம் மறைமுக ஆதரவை வழங்கியதுடன் மட்டக்களப்பில் தேரர் ஒருவர் இது தமிழீழத்தை அடைவதற்கான கர்த்தால் என்ற ரீதியில் அறிக்கை விட்டது நடை பெறப்போகும் மாகாணசபை தேர்தலில் வடக்கை தவிர்த்து எட்டு மாகாணங்களையும் அரசாங்கம் கைப்பற்றும் என்பதனை உறுதி செய்துள்ளது.

அகவே மக்களுக்காக உயிர்த்தியாகம் செய்ய முன் வராத தமிழ் தலைமைகளின் போராட்டங்களின் பின்னணியிலுள்ள மாபெரும் அரசியலை புரிந்து கொண்டு பல்கலைக்கழக மாணவர்கள் செயற்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் தமிழ் உணர்வுகளை தூண்டிவிட்டு அதில் குளிர் காயும் அரசியலில் மாணவர்கள் சிக்கிக் கொண்டால் ஓநாய்க் கூட்டத்திற்குள் அனுப்பப்படும் பலியாடுகளாக மாறிப்போகும் அபாயமே ஏற்படும் என்பதனை கடந்த காலத்தின் வரலாறு எமக்கு கூறி நிற்கிறது.

## தேயிலைச் சாயமும்...

(20ஆம் பக்கத் தொடர்)

குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இந்தக் கண்காட்சியை நடத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக ச் சொன்னார். இவ்வாறாக பலர் தம்முடைய கருத்துக்களை பதிவு செய்தனர். இருந்தபோதும் மூதாட்டியொருவரின் கருத்து எல்லோரையும் சிந்திக்க வைத்தது. '4 வயசுல நா எங்க ஐயா கூட இங்க வந்தேன். .நீலகிரில கீரமங்கலம் தான் எங்க ஊரு. இப்ப என்ன தொரமார். அப்ப உள்ள தொரமார பாக்கணுமே வெள்ள தொரமாறு குதுரைல வருவாக நம்ம சிரிச்சமுன்னா அவகள பாத்து ஏய் புள்ள என்ன சிரிக்கிறது கொழுந்து புடுங்குனு சொல்லுவாக. அப்ப எல்லாம் எவ்ளோ வேணுனாலும் றாத்தல் போடலாம் அப்புடி கொழுந்து புடிக்கும்.' என்று தனது கதையைச் சொன்ன மூதாட்டிக்கு 106 வயது. அவர் எவ்வாறு இங்கு வந்தாரோ அதே நிலையிலேயே இன்றும் வாழ்ந்து வருகிறார்.

மலையகத்தின் உண்மை நிலையினை வெளிக்கொண்டுவர போராடும் இந்த இளைஞர்களுக்கு ஆதரவு வழங்கும் முகமாக விளையாட்டுத்துறை அமைச்சரான நாமல் ராஜபக்ச தான் எழுதிய குறிப்பேட்டில் 'ஜெயவேவா'வெற்றிபெறுக என்று எழுதிச்சென்றிருந்தார்.

இக்காட்சிக்கான ஆதரவு நிறைந்து கொண்டிருந்தாலும் எதிராக சில குரல்களும் ஒலித்தன. இப் புகைப்பட கண்காட்சிக்காக மாணவர்களை பயிற்றுவித்த மலையக புகைப்பட கலைஞன் பிரதீப் குறிப்பிடுவது போல 'தேயிலைச் சாயம்' புகைப்படக் கண்காட்சி மலையக தமிழ் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது. இரண்டு வருடங்களாக மலையக இளைஞர், யுவதிகள், மாற்றுக்கொள்கைகளுக்கான நிறுவனம், உவாசக்தி நிறுவனம் மற்றும் GIZ நிறுவனம் ஆகியோரின் கூட்டு முயற்சியின் பலனாக வெளிகொண்டுவரப்பட்ட இக் கண்காட்சியானது தலைநகரில் காட்சிப்படுத்தப்பட்டதன் பின்னரே பாரியதொரு பேசுபொருளாக மாறியது என்பது நிதர்சனமான உண்மை. உரிமைகளுக்காகவும், அபிவிருத்திக்காகவும் மற்றும் மாற்றங்களுக்காகவும் போராடும் ஒரு காலகட்டத்தில் எமது மலையக இளைஞர், யுவதிகள் புகைப்படக் கலையினூடாக தங்களது மறைக்கப்பட்ட வாழ்வியல் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வந்திருப்பதானது பாராட்டப்பட வேண்டியதாகும்..

மலையகத்தின் பிரதான வீதிகளில் பயணிக்கும் நாம் வீதிக்கு அருகில் இருக்கின்ற அழகிய தேயிலைத் தோட்டங்களையும் இயற்கைக் காட்சிகளையும் ரசிக்கின்றோமே தவிர, மலையக தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் வாழ்வாதார பிரச்சினைகளை ப் பற்றிச் சிந்திப்பதில்லை

எம் எல்லோருக்கும் தெரிந்தது அழகிய மலையகம் மாத்திரமே, விடுமுறைக்கு மலையகத்துக்கு சுற்றுலா சென்று அங்குள்ள அழகினை ரசிக்க பழக்கப்பட்டுள்ளோமே தவிர ஒருபோதும் அந்த அழகின் பின்னால் மறைந்திருக்கும் ஒரு சமூகத்தின் வாழ்வியல் போராட்டத்தை கண்டுகொண்டதில்லை. ஒவ்வொரு நாளையும் ஒரு கோப்பை தேநீருடன் ஆரம்பிக்கும் நாம் அதேநாளின் அந்த தேனீருக்கான கொழுந்தை பறிக்கச் செல்லும் மக்களின் அவல நிலையை பற்றிச் சிந்தித்ததில்லை.

'தேயிலைச் சாயம்' படமெடுத்து காட்டியிருப்பதோ அழகிய தேநீர் கோப்பைக்குப் பின்னால் இருக்கும் அவல நிலையினையே. பிரச்சினைகளை பேச முற்படும் போதே அதற்கான தீர்வினை எம்மால் அணுக முடியும். அந்த வகையில் மலையக இளைஞர் யுவதிகளின் முயற்சியினால் வெளிவந்த இப் புகைப்படங்கள் மலையக சமூகத்தின் மனித உரிமை மீறல் உட்பட அவர்களின் அனைத்து பிரச்சினைகள் தொடர்பாகவும் பேசவைத்துள்ளது.

அந்த இளைஞர் யுவதிகளின் புகைப்படக் கலை திறமையை அங்கீகரிக்க மறுத்த ஒருசாரார். 'மலையகத்தின் வறுமையை விற்பனை செய்கிறார்கள்' என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார்கள் . இத்தகைய ஒரு குற்றச்சாட்டை முன்வைப்பவர்கள் இந்த புகைப்படங்கள் தெரிவிக்கும் செய்தி ' உண்மையானதா போலியானதா ' என்று தம் மனசாட்சியை கேட்டுப் பார்க்க வேண்டும்.

புகைப்படங்களினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் மலையக தமிழ் சமூகம் மாத்திரமல்லாது சகோதர சமூகத்தை சேர்ந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் என அனைவரும் தங்களது பாராட்டுகளை தெரிவித்துவருவது விசேட மானதாகும். புகைப்படங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் பிரச்சினைகள் மிகவும் சொற்பமே. இது போன்ற இன்னும் கண்களுக்கு தெரியாத எத்தனையோ பிரச்சினைகள் அழகிய மலைகளுக்கும், பச்சை தேயிலைக்கும் மத்தியில் பேசப்படாமல் மறைந்து அல்லது மறைக்கப்பட்டு கிடக்கின்றது என்பதே உண்மை.

# வாரமஞ்சரி சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

116

### வாகனங்கள் வாடகைக்கு/ குத்தகைக்கு

AAA SAKO என்ற எமது நிறுவனத்தில் Premio, Axio Cars, EDH, Dolphin, Van கள் சாரதி உடனே அல்லாமலோ கொடுக்கப்படும். 0777253545 061217

## வர்த்தகம்

207

### வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கொழும்பில் மாத்திரம் ஆதனங்களை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். மொஹமட் காணித் தரகர். 0776502878. 060952

209

### வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

கேகாலை நகர மத்தியில் பிரதான பாதைக்கு 150 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள 10000 சதுர அடி ஐந்து மாடி கட்டிடம் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வழங்கப்படும். 0777328263, 0711 945829 060510

211

### விதைகளும் செடிகளும் தேவை

செங்காந்தல் மலர் (கார்த்திகைத் தாய்) நன்கு உலர்நத விதைகள் கொள்வனவு செய்யப்படும். றொக்கப்பணக் கொடுப்பனவு தொடர்பு 0779795349 053160

242

### கோழிகள், முட்டைகள்

நாட்டுக்கோழிக் குஞ்சு ரூ.80/=, நீர்கொழும்பு, தங்கொட்டுவ, பன்னல, நாத்தாண்டியா விற்பனை நிலையங்களில் உள்ளன. CR நாட்டுக்கோழிப் பண்ணை 0723409941. 059896

## வேலைவாய்ப்பு

308

### வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

கொழும்பில் அமைந்துள்ள பிரதான புத்தக கம்பனிக்கு ஆண்/பெண் விற்பனையாளர்கள் தேவை. சம்பளம் ஆண் 35000/, பெண் 20,000/ வயதெல்லை 1835 இடைப்பட்ட, அழையுங்கள் 0773305791/2320139 ருஹுனு ஸ்டேஷனரி, LG 180/14, பீபள்ஸ் பார்க் கட்டிடம், கொழும்பு 11. 058426

முன்னணி நிறுவனமொன்று கொழும்பு புறநகர் பகுதியில் பணிபுரிய சந்தைப்படுத்தல் நிறைவேற்றதிகாரிகளை (Marketing Executive) சேர்த்துக் கொள்கின்றது. சம்பளம், கமிஷன், மருத்துவம், கார், எரிபொருள், ஊக்குவிப்பு கொடுப்பனவு உண்டு. மாதமொன்றிற்கு சம்பளம் 100, 000 இற்கு மேற்படும். அழையுங்கள், 07739 28246, 071 6226578, 0777697622, 071 81443 2 0, 071 3530876 059147

318

### வெற்றிடங்கள் டிரைவர்கள்

நாட்டின் முதல்தர பொருட்கள் போக்குவரத்துக் கம்பனிக்கு சாரதி மற்றும் உதவியாளர்களுக்கு வெற்றிடங்கள். சிங்களம் கதைக்கக் கூடியவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். தங்குமிட வசதி உண்டு. கொழும்பு. 071 5122036. 060532

320

### வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கண்டி ஹோட்டலுக்கு ரூம்போய், ஹவுஸ் கீப்பிங், ஊழியர் குழாம் உடன் சேர்த்துக் கொள்ளப்படுவர். 0759292902 060726

வீட்டு பணிப்பெண் தேவை. வயது 35 க்குக் கீழ், தங்கும் இடம் வசதி, உணவு வசதி இலவசம். திருமணம் ஆகாத குழந்தைகள் இல்லாத சிங்களம் பேச தெரிந்தவராக இருக்க வேண்டும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். 0772280112. tony3243@gmail.com 061074

323

### வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

அம்பலங்கொடை கட்டிடப் பொருட்கள் விநியோகிக்கும் நிறுவனத்திற்கு தொழிலாளர்கள் தேவை. (சிங்களம் கதைக்கக் கூடியவர்கள்) 091 2253022. 060536

325

### தொழில்துறை பொது

சேவை, வசதிகளை வழங்கும் இலங்கையின் முன்னணி சர்வதேச கம்பனியான NCW Holdings நிறுவனத்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்காக உடனடியாக ஆண்/பெண் ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். சுத்திகரிப்பு உதவியாளர் (ஆண்/பெண்) (ரூ.30, 000.00 முதல் அதற்கு மேல் சம்பளம்) ஆண்/பெண் பரிசோதகர்கள் (ரூ.40,000.00 முதல் கூடுதல் சம்பளம்), பாதுகாப்பு அதிகாரிகள் (ஆண்/பெண்) (ரூ.35 , 000.00 முதல் கூடுதல் சம்பளம்) தொடர்புகள் இல.177/1, நாவல வீதி, நுகேகொடை. தலைமையகம் 0114693377, மேஜர் துஷான் 0761377873, குமாரசிங்ஹ 0763605555. 057863

பமுனுகம பிரதேசத்திலுள்ள நிறுவனமொன்றின் லொறிகள் நிறுத்தி வைக்கப்படும் முற்றவெளியில் பாதுகாப்புக் கடமைகளுக்கு தங்கி பணியாற்றுவதற்கு இயலுமையுள்ள ஆட்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்படுவர். பொலிஸ் மற்றும் கிராம அலுவலரின் சான்றுகள் தேவை. அழைக்கவும் 0777671156, 0777877139. 059414

மொறட்டுவை கொங்கிரீட் வேலைத்தளத்திற்கு அப்பொருட்கள் பற்றிய தெளிவுடைய சாரதி உதவியாளர் தேவை. கவர்ச்சியான சம்பளம், உணவு தங்குமிடம் இலவசம். 0763339333/ 0775252154 060428

076098 9122 நட்சத்திர வகுப்பிலான ஹோட்டல் இற்கு சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் உணவு, தங்குமிடம் இலவசம். ஒரு நாள் சம்பளம் ரூபா 2,500/ (24 மணி நேரம்) கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு (12 மணி நேரம்) இற்கு ரூ. 1, 400/ உணவு, தங்குமிடம் இலவசம் கொழும்பு. 076 0989121, 0718653779. அலுவலகம் 0760898129 061099

சொப்பிங் பேக் உற்பத்தி நிறுவனத்திற்கு பேக் கட்டிங், ஒபரேட்டர் தேவை. சர்பெக் இன்டஸ்ட்ரீஸ். இல. 09, 3ஆம் ஒழுங்கை மாளிகாவ வீதி, இரத்மலானை. 0773030 55 8 , 0112 625634 060310

## பொது

431

### நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

தணி சவக்குழி (9X4) பொரள்ள பொது மயானம் (கிறிஸ்துவ பிரிவு) கூடுதலான விலைக்கு 0776436002. 059494

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 35 அடி நீளம், 20 அடி அகலம். ஆட்டுப் பட்டி விற்பனைக்கு. குருநாகல் தெலம்புகல்ல பிரதேசத்தில் 0772945268 061029

## சொந்த விடயம்

502

### தங்க ஆபரணங்கள் மாணிக்கக் கற்கள்

சுயதொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக Jewel CAD, முப்பரிமாண, ஆபரண வடிவமைப்பு (Jewellary Designing and Manufacturing Teachniqes) சான்றிதழ் பாடநெறிகள் Jewel Trade Training Institute, Dehiwalla. தொ. பே : 077 7303 030. 2005 முதல் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 059157

## காணி/தோட்டம்

616

### வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கந்தானை பாலசூரிய மாவத்தை மெஸனவ் கல்லூரி ரயில் நிலையத்திற்கு அருகில் 10.8 பேர்ச் காணி விற்பனைக்கு சகல வசதிகளுடன். 0772830060, 0703502785 060731

கொட்டாவ, மத்தேகொட பொல்கஸ்ஓவிட்ட வீதி, ரனதிஸர உயன 10 பேர்ச் காணி விற்பனைக்கு. அதி கூடிய குடியிருப்பு பிரதேசம். அதிவேக நெடுஞ்சாலை மற்றும் பல்கலைக்கழகத்திற்கு அருகில். ஒரு பேர்ச் 430, 000/ , 0725677230 060678

கொழும்பில் மாத்திரம் ஆதனங்களை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். மொஹமட் காணித் தரகர். 0776502878. 060948

கொழும்பு15, 17,5 பேர்ச் 24/1 ஜோசப் டயஸ் லேன் கொழும்பு 15, முக்கியமான இடங்கள், வங்கிக்கு ஓரளவு அருகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுதி அளுத்மாவத்த வீதியிலிருந்து 40 மீட்டரில் அடையாளம். குடியிருப்பு 1 வர்த்தக சொத்து ஒரு பேர்ச் 24 இலட்சம். தொடர்பு 0112237168, 0726702381 060692

கேகாலை நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியால் சுவீகரிக்கப்பட்ட 40 பேர்ச்சு வதிவிடக் கட்டிடங்கள் 03 சகிதம் காணியொன்று விற்பனைக்குண்டு. விலைமனுக்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விசேட சொத்து முகாமைத்துவப் பிரிவு, இலக்கம் 242 யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரியுடன் 2020/ 10/ 18 அல்லது அதற்கு முன்னர் தொடர்பு கொள்ளுங்கள். 7.6 மில்லியனிற்கு மேற்படும் வேண்டுகோள்கள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும். 0771542693 059814

617

### வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

வத்தளை பிரீதிபுர Fregasas ஹோட்டலுக்கு முன்னால் பிரீதிபுர 6 பேர்ச் காணித்துண்டொன்று விற்பனைக்கு. ஒரு பேர்ச் 4 இலட்சம். தொகையில் ஒரு பகுதியைச் செலுத்தி, மிகுதி தவணைக் கொடுப்பனவு முறையில். 07 61730582 060982

618

### வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

பேருவளை, மஸ்ஸல, காலி வீதிக்கு 300 மீ. தூரத்தில் (முஸ்லிம் பிரதேசத்தில்) 42 பேர்ச் சகல வசதிகளுடனான காணி விற்பனைக்கு. 0714696972, 0710414942. 060551

619

### வீடு சொத்து குருணாகல் மாவட்டம் விற்பனைக்கு

ரிதீகமுவ தெலும்புகல்ல முஸ்லிம் பள்ளி வாசலுக்கு அருகில் சகல வசதிகளுடன் 40 பேர்ச் 06 காணித்துண்டுகள் விற்பனைக்கு. (வட்டி இல்லாத கொடுப்பனவு வசதிகள்). 0779908218, 0772851665. 060547

621

### வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கம்பளையில் காணி விற்பனைக்கு. மறைந்த R. S. பெல்பொல விற்குச் சொந்தமான 50 பேர்ச் காணி பி.டீ. பெல்பொல மாவத்தைக்கப்பால், பூஜாகொட தோட்டத்தில் உள்ளது. மேலதிக, 50 பேர்ச்சு 2 காணித் துண்டுகளும் விரைவில் விற்கப்படும். தொடர்பு ரன்ஜித் பெல்பொல. 0112821504/ 077 3251404 059460

641

### வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

களுபோவில சந்தியில் ஒரு வீடு (2 பேர்ச்) உடனடியாக வாடகைக்கு. களுபோவில பஸ் தரிப்பிடத்திற்கு அடுத்தாக. 2 அறைகள், சிறிய மண்டபம், சமையலறை மற்றும் குளியலறை. கார் நிறுத்துமிடமில்லை. மாதாந்தம் 23,000/ 6 மாத முற்பணம். அழையுங்கள் 0765 600420 மாணவர்கள் மற்றும் வேலை செய்யும் பெண்கள் விரும்பப்படுவர். முஸ்லிம் மற்றும் தமிழர் மட்டும். 061068

672

### வீடு சொத்து வாடகைக்கு/குத்தகைக்கு தேவை

பிலியந்தலை வேரஹெர பிரதேசத்தில் 3 அறைகள் மற்றும் வாகன நிறுத்துமிட வசதியுடன் வீடு வாடகைக்கு தேவை. 0772945268 061027

## மாங்கல்ய மாலை

### மணமகள்

கொழும்பு மாவட்ட கௌரவமான முஸ்லிம் குடும்பம் தம் ஆங்கிலம் கற்றுள்ள மிகவும் அழகிய, பொது நிறமான மகளுக்கு சிறந்த தகைமையுள்ள 28 33 மணமகன் தேவை. officeal42@gmail.com B152043

---

## வழங்குநர்களை பதிவு செய்தல் – 2021
## தளவைத்தியசாலை – கந்தளாய்

2020 வருட கந்தளாய் தளவைத்தியசாலைக்கு பொருட்கள், சேவைகள் வழங்குநர்களின் பதிவு சம்பந்தமாக இலங்கை கம்பனிகள், கூட்டுறவு சபைகள், கூட்டுத்தாபனங்கள், அரச பிரிவுகள், கிராமிய அபிவிருத்தி சபைகள் ஒப்பந்தக்காரர்கள், பராமரிப்புக்கான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட வணிக நிறுவனங்கள் என்பவற்றின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக தகவல்கள், விண்ணப்பப்படிவம் தளவைத்தியசாலை கந்தளாய் அலுவலகத்தில் அல்லது 9 x 5 முத்திரையிடப்பட்ட கடித உறையை அலுவலகம், தளவைத்தியசாலை, கந்தளாய் எனும் முகவரிக்கு அனுப்பியும் அல்லது வைத்தியசாலை மின்னஞ்சலிலும் bhkantaacc@gmail.com பெற்றுக்கொள்ளலாம்.

- * அனைத்து விண்ணப்பங்களும் :- 2020-11-06 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பவும்.
- * தொ.பே :- 026-2234261-212
- * நிதிப்பிரிவு :- 026-2234945
- * நிர்வாகப்பிரிவு :- 026-2234948
- * வைத்திய அத்தியட்சகர் :- 026 -2234262
- * மின்னஞ்சல் :- bhkantaacc@gmail.com

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**தளவைத்தியசாலை**
**கந்தளாய்.**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

## மாவட்ட பொது வைத்தியசாலை, திருகோணமலை

## 2021ம் ஆண்டுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

2021ம் ஆண்டு திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பொருட்கள் சேவைகள் வழங்குநர்களின் பதிவு சம்பந்தமாக இலங்கை கம்பனிகள், கூட்டுறவு சபைகள், கூட்டுத்தாபனங்கள், அரச பிரிவுகள், கிராமிய அபிவிருத்தி சபைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட வணிக நிறுவனங்கள் என்பவற்றின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை மாவட்ட பொது வைத்தியசாலை திட்டமிடல் பிரிவு திருகோணமலை எனும் முகவரியில் வேலைநாட்களில் (திங்கள் கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை காலை 9.00 - மாலை 4.00 மணிவரை) பெற்றுக்கொள்ள முடியும்.

✣ **Suppliers are registered under following categories of goods & services**

**(A): Goods:**

- i. All categories of stationery (Including Fax papers & computer papers).
- ii. All categories of Office Equipment & Furniture (Timber/Steel/Plastic etc.)
- iii. All Categories of Medical Equipment
- iv. All Categories of Surgical equipment
- V. All Categories of Laboratory equipment
- vi All Surgical consumables.
- vii. Electrical appliances (Accessories of Hose Wiring, Bulbs, Torch Batteries, Florescent Lamp Wires etc.)
- viii. Electronic appliances (Roneo machines, photocopy machines, fax machines, Rizo Graph machines, Duplo Machine, supermarket trolley, Refrigerators and Air Conditioners etc.)
- ix. All categories of Aluminumware and Hardware items (building materials, paints, sanitary items etc)
- x. All categories of trolleys (for Patients, for dressing, for food, for drugs, trolley wheels, Wheel chair, Intravenous stands etc.)
- xi. Hospital clothes (uniform materials, checked cloths, mosquito nets, GS towels, curtains, white towels etc.)
- xii. All categories of kitchen utensils (aluminum items, plastic items, ceramic items, water filters, knives, cutting boards etc.)
- xiii. All categories of cleaning Items (soaps, washing powders, toilet cleaning items, hand wash. Vim Liquid, Harpic. Garbage Bags etc.)
- xiv. Tires, tubes & batteries for vehicles.
- xv. Shoes, boots, slippers, rexin & rubber products,
- xvi. Hospital Mattresses, brooms, brushes & various products. (rubber mixed/ fiber)
- xvii. Milk powders.
- xviii. LP Gas. (for cooking purposes)
- xix. Sand, bricks & timber.
- xx. Medical books & magazines.
- xxi. Medicine & dressings.
- xxii. Computers & relevant fittings
- xxiii. Dustbins with Lids
- xxiv. Buckets with Lids
- xxy. Motor spare parts
- xxvi. Chemicals for laboratories,
- xxvii. Washing Machines, Dryer, Ironing Machines

**(B): Services:**

- i. Repair & service of office equipment (Roneo machines, photocopy machines, fax machines, computers & Accessories, Rizo Graph machines (Duplo Machine).
- ii. Repair & service of all types of Motor Vehicles
- iii. Repair of steel/wooden furniture (Weaving of chairs, painting and polishing, etc)
- iv. Repair & service of refrigerators, air conditioners and Coolers (Drugstore, Mortuary)
- v. Repairing of iron beds, patient trolleys, stretchers, and Intravenous (IV) stands etc.
- vi. Repairing or ceiling fans, wall clocks and other electrical Items.
- vii. Repair of buildings (up to Rs. 300,000.00
- viii. Repair of buildings (up to Rs. 10 Million)
- ix. Repair & service of all hospital medical equipment
- x. Repair & service of all hospital surgical equipment
- xi. Repair & service of all hospital laboratory equipment and other items.
- xii. Making of rubber stamps
- xiii. Printing
- xiv. Tailoring of Hospital clothes
- xv. Collection of non-degradable waste
- xvi. Repair and service of computers, WLAN Network, Servers, Printers & UPS etc.
- xvii. Repair and Services of Heavy Duty Washing Machines, Dryer and Ironing Machines

1. For each Good and or service, a separate application should be submitted.
2. A non-refundable registration fee of Rs.500/- should be paid for each supply of goods and services. The above mentioned amount should be paid to the Shroff of this office and the receipt received in return should be attached to the application form. Cheques and money orders will not be entertained.
3. Even though priority is given to registered suppliers to supply goods and services, while calling for quotations this establishment reserves the right to call quotations from those who have not registered to obtain goods and services. Without notice, action will be taken to remove the names of the suppliers who don't supply goods and services as per stimulated standards and who don't offer the response while calling for quotations
4. All applications should be sent by Registered post to Director, District General Hospital, Trincomalee, on the top left - hand corner of the envelope marked "Registration of Suppliers for the year 2021"
5. The last date of accepting applications is 09.11.2020 on or before 3.45PM and all applications received after this date will be rejected.
6. All the details in the application form should be correctly and completely filled in English.
7. All applicants should attach the following compulsory information with the application form.
   - 01. Paying slip number & amount paid. (Original)
   - 02. Letter of authorization/ sole agent(copy)
   - 03. VAT Clearance certificate (copy)
   - 04. VAT Registration certificate (copy)
   - 05. Photocopy of the Business Name Registration

**Director,**
**District General Hospital, Trincomalee.**

---

www.adz.lk
it's what you want

# மீண்டெழு

சுகந்தி மணிமாறன்

# பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் சேஷ்டைகள்

பாலினபாகுப்பாடு என்பது சர்வதேச அளவில் ஒரு பொதுப்பிரச்சினையாக நீடித்து வருகிறது. பெண்களும் மூன்றாம் பாலினரும் ஆணாதிக்கத்தின் அடக்குமுறைக்குள் சிக்கித் தவித்து வருகின்றனர். சமூக கலாசார பண்பாட்டு வழிமுறை இன்று வளர்ந்திருந்தாலும் கூட ஒரு பாலினம் மற்றையதை விட உயர்ந்தது என்கிற கருத்தியல் பலமாகத் தான் இன்றும் நிலவுகின்றது. பாலினவாதமானது பாலின கொடுமைகளை உடல், உள ரீதியில் பாதிப்பை செலுத்தும் காரணியாக வளர்ந்துள்ளது. இப்பிரச்சினை தொடர்பாக புரிந்துக் கொள்ளப்படாத ஒரு சூழலே சமூகத்தில் காணப்படுகின்றது. இந்தச் சிக்கல்களை கையாள்வதற்கான ஆய்வுகளும் தரவுகளும் கூட குறைவாக காணப்படுவதும் இப்பிரச்சினையின் பண்புகளில் ஒன்று. எனவே, இதற்கான தீர்வுகளை எட்டுவதிலும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் கூட சிக்கல்கள் நிலவுகின்றன.

1969 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் UNFPA (UNITED NATIONAL FUND POPULATION ASIA) நிறுவப்பட்டது. அப்போதிலிருந்து ஆரோக்கியமான இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்கான சாத்தியங்களை விரிவுப்படுத்தும் செயற்பாடுகளில் இந் நிதியம் ஈடுபட்டு வருகின்றது. பெண்களின் மீதான வன்முறையற்ற நாடாக இலங்கையை மாற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் UNFPAஇணைந்துள்ளது.



நது.பெண்கள் தமது பொருளாதார தேவைக்காகவும் கல்வி நடவடிக்கைக்காகவும் அன்றாடம் பொதுப்போக்குவரத்தையே பயன்படுத்தி வருகின்றார்கள். இவ்வாறு பொதுப்போக்குவரத்தை பயன்படுத்தும் பெண்களில் 90 வீதமானவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த துன்புறுத்தல்களின் விளைவாக பெண்கள், சிறுமிகளின் வாழ்க்கையில் மட்டுமன்றி, அவர்களின் கல்வி, வாழ்வாதாரங்கள் என அனைத்து வழிகளிலும் பல விளைவுகளை ஏற்படுத்தி வருவதாக அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் குடும்ப பெண்கள் தமது அன்றாட பயண வழியாக பொதுப்போக்குவரத்தையே நம்பியுள்ளனர். 2015ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி ஆய்வில் 15 க்கும் 35க்கும் இடைப்பட்ட பெண்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் பாதிபேர் தொழிலுக்குச் செல்வதற்காகவும் மேலும் 28 சதவீதமான பெண்கள் கல்வி நடவடிக்கைகாகவும் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்துவது தெரியவந்துள்ளது.

துஷ்பிரயோகம் என்பது வெறுமனே உடல் ரீதியான தொந்தரவுகளை மட்டும் குறிப்பவையல்ல. சில சந்தர்ப்பங்களில் வாய்மொழி மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வசனங்களும் சுடுசொற்களும் கூட துஷ்பிரயோகங்களாக அதிக பாதிப்புகளை ஏற்படுத்தி விடுகின்றன. பெரும்பாலும் பெண்களை கிண்டல் செய்தல், கடுமையான தொனியை பயன்படுத்துதல், கீழ்த்தரமான நகைச்சுவை போன்றதாகவும் அவை அமையும். பெண்களின் சுய மரியாதையை முற்றிலும் பாதிக்கும் சொற்களும் இதில் உள்ளடங்கும்.

74% பெண்கள் விரும்பத்தகாத தொடுகைக்கு உள்ளாவதாகவும், 60% பெண்கள் தங்களது தனிப்பட்ட இடங்களில் துன்புறுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதில் 52% பெண்கள் குறிப்பிடும்போது குற்றவாளிகள் பிறழ்வான நடத்தையில் ஈடுப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். இவற்றில் 97% வீதமான ஆண்களே குற்றவாளிகளென அடையாளம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வில் பங்கேற்ற 23 வயதான வருணி மானெல்ல என்பவர் "பல சந்தர்ப்பங்களில், ஆண் பயணிகள் தகாத முறையில் சிறுவர் சிறுமிகளை தொட்டு சாய்ந்துக்கொண்டிருப்பதை நான் கண்டுள்ளேன். பேருந்து நடத்துனர்களும் பேருந்தில் செல்லும் சிறு குழந்தைகளை தேவையில்லாமல் தொடுகின்றார்கள்" என தெரிவித்துள்ளார். 18 வயதான ராணிகுமாரி என்பவர் குறிப்பிடுகையில் "சுமார் 15 வயது சிறுவன் பாலியல் சேஷ்டை புரிந்தபோது நான் அசௌகரியமாக உணர்ந்தேன்" என்றும் கூறியிருந்தார். இவ்வாறு அன்றாடம் தமது தேவைக்காக பொதுபோக்குவரத்தை பயன்படுத்தும் பெரும்பாலான பெண்கள் பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

பொதுப்போக்குவரத்துகளில் இடம்பெறும் துன்புறுத்தல்கள் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை பாதித்ததாக 44 சதவீத பெண்கள் தெரிவித்துள்ளனர். 29 சதவீதம் பேர் இது தங்கள் பள்ளி செயல்திறனில் தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் 37 சதவீதம் பேர் இது அவர்களின் பணி செயல்திறனை எதிர்மறையாக பாதித்ததாகவும் கூறியிருந்தனர்.

இந்த முறைகேடுகளும் அவை உருவாக்கும் சமத்துவமின்மையும் பெண்களின் பொருளாதார ஓரங்கட்டலுக்கு அதிக பங்களிப்பை செலுத்துகின்றன. 2006 இல் இருந்து 2014 வரையான காலப்பகுதியில் முறையே 6% இருந்து 35% மாக பெண்களின் தொழிற் பங்களிப்பு சரிந்துள்ளதாக மக்கள் தொகை மற்றும் வீட்டு வசதி கணக்கெடுப்பில் இருந்து தெரியவந்துள்ளது. இவ்வாறான பிரச்சினைகள் வெறுமனே பெண்களின் பாதுகாப்பில் மாத்திரம் தாக்கம் செலுத்துவதில்லை. பாலின வன்முறை,பெண்களின் உரிமைகள், பாலின சமத்துவம் என்பவற்றிலும் பாரியளவிலான செல்வாக்கை செலுத்துகின்றது.

2019 டிசம்பர் மாதம் 29ம் திகதி UNFPA இன் மற்றுமொரு அறிக்கையின்படி, குடும்ப சுகாதார பணியகத்தின் புள்ளிவிவரங்களில், இலங்கையில் ஆண்டு தோறும் 20 வயதுக்குட்பட்ட 20,000 சிறுமிகள் துஷ்பிரயோகம் காரணமாக கர்ப்பமாகியுள்ளார்கள் எனக் கூறுகின்றது. தேசிய இளைஞர் சுகாதார கணக்கெடுப்பின்படி, 50% இளைஞர்கள் முறையான பாலியல், இனப்பெருக்க சுகாதார கல்வியைபெற்றதில்லை. இதனால் 2015 ஆம் ஆண்டில் 15 வயதிற்குட்பட்ட 75 குழந்தைகளுக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளில் இலங்கை மிகக் குறைந்த மகப்பேறு இறப்பு விகிதத்தை கொண்டுள்ளது. இலங்கை சுகாதார சேவையில் முன்னேற்றத்தை கண்டுள்ளமைக்கு UNFPAயுடன் இணைந்து செயற்பட்டு வருவதும் ஒரு காரணமாக அமைகிறது. அத்தோடு UNFPA இலங்கையில் பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பான விடயங்களில் 2015ஆம் ஆண்டுக்கு பின்னர் அதிக கவனத்தை எடுத்து வருகின்றது.

இலங்கையுடன் இணைந்து UNFPA 2017ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வின் மூலம் பெண்களின் மீதான பாலியல் வன்முறைகள் தொடர்பாக அறிக்கையினை வெளியிட்டிருந்தது. அவ்வறிக்கை, இலங்கையின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்கு அளப்பரியதெனக் குறிப்பிடுகி

இலங்கையில் பொது இடங்களில் பெண்கள், சிறுவர்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்படுவதாக இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது. பெண்கள் இதுபோன்ற அசௌகரியத்திற்கு உட்படுத்தப்படும்போது பயம், அவமானம் போன்ற காரணங்களால் அருகில் உள்ளவர்களிடமோ அல்லது காவல்துறையினரிடத்திலோ புகார் அளிக்க சங்கடப்படுகின்றார்கள். துஷ்பிரயோகங்கள் குறித்து புகாரளிப்பது தொடர்பில் பெண்களுக்கு வழிப்புணர்வு ஊட்ட யு.என்.எஃப்.பி.ஏ உடன் இணைந்து இலங்கை அரசாங்கம் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்தாண்டு பெப்ரவரி 27ஆம் திகதியன்று யு.என்.எஃப்.பி.ஏ இலங்கையில் பாலின சமத்துவம், பாலியல் வன்முறை தொடர்பாக இலங்கை சுகாதார அமைச்சுடன் முதல் கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. பாலின அடிப்படையிலான வன்முறை என்பது உலகில் பாரிய அளவில் நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறலாகும். மூன்றுக்கு ஒரு பெண் தன் வாழ்நாளில் உடல் மற்றும் பாலியல் வன்முறைகளை அனுபவிப்பதாக மதிப்பீடுகளின் ஊடாக அறியமுடிகிறது. பெண்கள் அல்லது சிறுமிகள் வன்முறையில் பாதிக்கப்படும் போது தேவையற்ற கர்ப்பங்கள் பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள் மற்றும் HIV உள்ளிட்ட பரவும் தொற்றுக்களுக்கும் உள்ளாக நேரிடுகிறது.

இவ்வாறான வன்முறைகளினால் உளவியல் ரீதியான அதிர்ச்சியில் இருக்கும் தரப்பினர்களுக்கான வலுப்படுத்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்கவேண்டும். பாலியல் அடிப்படையிலான வன்முறை குறித்த தேசிய வழிகாட்டல்களில் இலங்கை அரசுடன் யு.என்.எஃப்.பி.ஏ இணைந்து செயற்பட தொடங்கியுள்ளது. துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல் பெண்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வைக் கட்டுப்படுத்துகின்ற ஒன்றாக அமைகின்றது.

இக்குற்றங்களைச் செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். பெண்களின் மீதான வன்முறையாளருக்கு எதிராக புகார் செய்வதற்கான செயல்முறைகளும் நடைமுறைகளும் நெறிப்படுத்தப்படுகின்ற அதிகார அங்கங்களில் சட்டம் திறம்பட இயங்குதல் அவசியம். பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு அனைவருக்கும் பாதுகாப்பானதொரு பொதுப்பயண கலாச்சாரத்தை உருவாக்குவதல் முக்கியமானதாகும்.

பெண்களின் மீதான தனித்துவமான சிக்கல்களை தீர்ப்பதற்கான பொறிமுறைகளை அடையாளம் காணும் வகையில் கொள்கை வகுப்பை மேற்கொள்வதற்கான சிறந்த வழிமுறைகள் இலங்கையில் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக அதற்கான பெண்கள் பட்டயம் வலுவானதாகவும் இல்லை. பெண்களின் பிரச்சினைகளை கையாள்வதற்கான ஆணைக்குழுவை ஏற்படுத்துவது தொடர்பான உரையாடலும் வெறும் சிந்தனை மட்டத்தில் மாத்திரமே சுருங்கிவிட்டிருக்கிறது. அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கான நிர்ப்பந்தங்கள் சமூக மட்டத்தில் இருந்து எழாதததும் இந்த பலவீனத்துக்கு காரணம் எனலாம். இது தொடர்பில் வெகுஜன பொது அபிப்பிராயத்தை கட்டியெழுப்புவது காலத்தின் கட்டாயம்.

என். பவித்ரா

# தன்விழிப்புக்கான உறுதிமொழி

மனிதியாகிய நான்,

மானமும் அறிவும் தன்விழிப்பும் கொண்டவளாய் இருப்பேன்.

மனிதியாகிய நான் சக மனிதர்களிடம் சாதி மத வர்க்க பேதம் பார்க்க மாட்டேன்.

மனிதிகள் அனைவரின் இன்ப துன்பங்களில் பங்கேற்பேன். என் படிப்பு, என் வேலை, என் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பதில் தன்னுரிமையை விட்டுத்தராதவளாய் இருப்பேன்.

குடும்பம், உறவுகள், நட்புகளால் என் விருப்பங்களும் கருத்துக்களும் ஒடுக்கப்படுவதை எதிர்ப்பேன்.

என்னை பாலியல் பிண்டமாகவும் இரண்டாந்திரக் குடிமகளாகவும் கருதி நடக்கும் அத்தனை அடக்குமுறைகளையும் எதிர்ப்பேன்

காதலும் இணைத்தேர்வும் மனித உரிமையே. சாதி மதம் கடந்த திருமணங்களுக்கு எதிரான தாக்குதல் மற்றும் அது தொடர்பான சாதியக் கொலைகளைத் தடுக்கப் போராடுவேன்.



சம உழைப்புக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் அனைத்துப் பணிகளிலும் ஆண் கூலி பெண் கூலி என்ற பாகுபாட்டை ஒழிக்கப் பாடுபடுவேன்.

பூமியில் பாதியாக உள்ள மனிதிகளின் நிலம் சொத்து மற்றும் அரசியல் உரிமைகளுக்காகப் போராடுவேன்.

நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் சமுதாயத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் சம உரிமை கோரிப் போராடுவேன்.

மனிதியாகிய நான் சக மனிதர்களிடம் சாதி மத வர்க்க பேதம் பார்க்க மாட்டேன்.

மனிதிகள் அனைவரின் இன்ப துன்பங்களில் பங்கேற்பேன்.

மனிதி நான் மௌனம் உடைப்பேன்
மனிதி நான் உரக்கப்பேசுவேன்
மனிதி நான் தட்டிக்கேட்பேன்
மனிதி நான் ஒன்று படுவேன்
மனிதி நான் ஒன்று திரட்டுவேன்
மனிதி நான் தடையுடைப்பேன்
மனிதி நான் விடுதலை அடைவேன்

- மனிதி -

# உயர் பதவிகளில் பெண்கள் 'கண்ணாடிக்கூரை' களாக விளங்கும் தடைகள்

பெண்களுக்கு உயர்கல்வி அளிப்பது அதிகரிக்க அதிகரிக்க, பிறப்பு விகிதம் வீழ்கிறது. ஒரு தம்பதியருக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஐந்து அல்லது ஆறு என்று வழக்கமாக இருந்த சமூகங்களில் தற்போது ஓரிரண்டோடு நிறுத்துவது வழக்கமாகிறது என்பது பல நாடுகளில் பல பண்பாடுகளில் காணப்படும் மாற்றம். இதை மக்கள் தொகைக் கணக்கியலாளர்கள் பல நாடுகளில் நடந்த சமூக மாற்றமென நிறுவி இருக்கிறார்கள். உலகில் இன்னமும் மிகையான பிறப்பு விகிதம் உள்ள நாடுகள் பெரும்பாலும் பெண் கல்வி அதிகம் இல்லாத நாடுகளாகவும் இருப்பதைக் காணலாம்.

வளரும் நாடுகளில் பெண்கள் அதிகாரப் பதவிகளுக்கு வரத் துவங்கியிருப்பது அண்மைக் காலங்களில்தான். ஆனால் வளர்ந்த நாடுகளிலும் கூட இந் நிலையே காணப்படுகிறது என்பது எளிதில் புரிந்து கொள்ள முடியாத செய்தி. நியூயோர்க் டைம்ஸின் ஒரு ஆய்வின்படி, 2009ஆம் ஆண்டில் ஐரோப்பிய யூனியனின் முக்கியமான 300 நிறுவனங்களில், நிர்வாகக் குழுக்களில் உள்ள பெண்கள் 9.7 சதவிகிதத்தினர் மட்டுமே. அமெரிக்காவின் பெரும் நிறுவனங்களில் முதன்மையானவையாகப் பட்டியலிடப்படும் போர்ச்சூன் 500 (Fortune 500) நிறுவனங்களில், 15 சதவிகித பெண்களே நிர்வாகக்குழு அங்கத்தினர்கள். இந்தியாவிலும் சரி, சீனாவிலும் சரி முதன்மை நிறுவன நிர்வாகக் குழுக்களில் பெண்கள் 5% மட்டுமே. ஜப்பானிலோ முக்கிய நிறுவனங்களில் 1.4% மட்டுமே.

மேலை நாடுகளில் பல்வகை நிர்வாகப் பொறுப்புகளில் பெண்கள் பல வருடங்களாக இருந்திருப்பினும், உயர் நிர்வாகக்குழுக்களில் இத்தனை குறைவாக காணப்படுவது ஆச்சரியம் அளிக்கும் விடயம்தான். பேறு காலம், குழந்தைப் பராமரிப்பு ஆகியனவற்றுக்காக வேலையிலிருந்து விடுப்பிலோ அல்லது தற்காலிகமாக நீங்கியோ விலகிப் போகும் பல பெண்கள், பேறுகாலம் முடிந்தவுடனோ, குழந்தைகள் ஓரளவு வளர்ந்து பள்ளிக்குப் போகத் துவங்கியவுடனோ தம் பணிகளில் மீண்டும் இணைவதில்லை. இது கீழை நாடுகளுக்கு மட்டுமே உரிய எண்ணப் போக்கு அல்ல. மிக வளர்ச்சியடைந்த நாடுகளிலிலும் கூட குழந்தைகளுடன் வீட்டில் இருந்து குழந்தைப் பராமரிப்பில் முழு நேரமும் ஈடுபடாமல் வேலைக்குப் போக முயலும் பெண்கள் சமூகத்தில் விமர்சனத்துக்கும் கேலிக்கும் ஆளாகிறர்கள்.

குழந்தை பராமரிப்பை இரு பாலரில் பெண்கள் மட்டுமே இதைச் செய்ய வேண்டும் என்பதை அனேமாக மொத்த சமூகமும் இயல்பாகவே நம்புகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். இதை நிறைய பெண்களும் நம்புவது வேறொரு விதப் பிரச்சினை. இவ்வாறான குடும்பப் பொறுப்பின் கட்டாயங்களால் வேலையிலிருந்து வீடு திரும்பத் தாமதம் ஏற்படுத்தும் பொறுப்புகளிலிருந்து ஒதுங்கிக் கொள்ளும் நிர்பந்தத்தில் பெண்கள் இருக்கிறார்கள். நிறுவனங்களில் அனேகமாக இப்படி வேலை நேரத்தைக் கடுமையாக கடைப்பிடிப்பதை உயர் பதவிகளில் இருப்பவர்கள் மேற்கொள்ள இயலாது. அவர்களுக்கு வேலைபளு அதிகம் என்பதையும்விட, வேலை என்பது வரையறுக்கப்பட முடியாத வேலையாய் இருக்கும் என்பதே உண்மை.

மேலாளர்கள், அதுவும் உயர் நிலை மேலாளர்களுக்கு வேலை என்பது அலுவலகத்தோடு நிற்பதல்ல. தனிவாழ்விலும் தொடர்ந்து ஊடுருவும். வீடு திரும்பினாலும் வேலை கூடவே வந்து கொண்டிருக்கும். விடுமுறை நாட்கள் என்று பெயரளவில் இருந்தாலும் தாம் தொழில் செய்யும் இடத்திலிருந்து எந்நேரமும் தொலைபேசி மூலம் அழைப்பு வரும், போக வேண்டி வரலாம் அல்லது இருந்த இடத்திலிருந்தே பிரச்சினைகளை தீர்க்க பேச்சுவார்த்தை நடத்த வேண்டி வரலாம். ஏன், நினைத்த நேரத்தில் பயணம் மேற்கொள்ள நேரிடலாம். எப்போது திரும்புவோம் என்பதும் உறுதியாக இல்லாத பயணங்களாக இவை இருக்கலாம்.

குழந்தைகள், வீடு ஆகியவற்றைப் பராமரிக்கும் வேலையை முழுதுமாகத் தாமே செய்ய நேரிடும். பெண்கள் இத்தகைய பொறுப்புகளை, அவற்றைச் செய்ய தமக்கு எத்தனை தகுதியும், திறமையும், விருப்பமும் இருந்த போதும், தவிர்த்து வந்துள்ளனர். இதைப் பல நாடுகளிலும் நாம் காண முடியும்.

அதேநேரம், நிறுவனங்களில் உயர் நிலைக்கு வர படிப்பும், அந்தத் துறை குறித்த விவர ஞானமும் மட்டும் போதாது. நடைமுறையில் எழும் பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அனுபவம் இருப்பதும் அவசியம். தொடர்ந்து முடிவுகளை எடுத்து, சிக்கல்களை அவிழ்க்கும் பொறுப்புகளை மேற்கொண்டால் மட்டுமே இவை குறித்த நிபுணத்துவம் ஒரு நபரைச் சேரும்.

இத்தகைய அனுபவமும், பல வகை பிரச்சினைகளைத் தீர்ப்பதால் கிட்டும் அறிவுச் சேமிப்பும் தொடர்ந்து கிட்டாமல் போவதால், தொடர்ந்து உயர்நிலைப் பொறுப்புகளுக்கு உயர முடியாமல், அத்தகைய பதவிப் பொறுப்புகளை நிர்வகிப்பதற்கான தகுதிகள் உடைய பெண்கள் குறைவாகவே இருக்கிறார்கள். மேல்மட்டத்தில் பெரும்பாலும் ஆண்களே இருப்பதால் அவர்கள் ஆண்களையே இத்தகைய பொறுப்புகளுக்குத் தகுந்தவராய் எண்ணித் தேர்ந்தெடுப்பதும் ஒரு காரணம்.

சரி, பெண்களை நிர்வாகக்குழுக்களில் ஈடுபடுத்தவேண்டிய கட்டாயம் என்ன? ஆண் பெண் சமத்துவத்துக்கு இது தேவை என்பது மட்டும் தானா?

பெண் சக்தி என்பது சமூகத்திலும் சந்தையிலும் ஒரு மிகப்பெரிய பரிமாணம். பெண்களின் கருத்துக்கள், தேர்வுகள், உழைப்புப் பங்கெடுப்பு ஆகியன எந்த நிறுவனத்தின் செயல்பாட்டுக்கும் அதற்காகும் செலவின் மதிப்பை விடப் பல மடங்கு கூடுதல் மதிப்பையே திரும்பத் தரும் என்பதில் ஐயம் இல்லை.

குடும்பங்களில் பொருட்களை வாங்கும் பொறுப்பை நிர்வகித்துப் பழக்கப்பட்ட பெண்களுக்கு நிறுவனங்களின் சந்தையைப் பற்றிய புரிதலும் இருக்கும் என்பதால் அவர்களுடய பங்களிப்பின் மூலம் நிறுவனங்கள் பயனடையும் வாய்ப்பு அதிகம். பெண் பிரதிநிதிகள் இருக்கும் நிர்வாகக்குழுக்கள் எடுக்கும் முடிவுகள் பெண் தொழிலாளர்களின் நன்மைக்கு அனுகூலமாய் இருக்கும் வாய்ப்புகள் அதிகம். இத்தகைய குழு அமைப்பு நிறுவனங்களின் இலாபத்திற்கும் பயனளிக்கும் என்பதற்கான புள்ளிவிவரங்களும் ஆங்காங்கே தென்படுகின்றன.

உலகம் முழுவதிலும் வேலைகளில் பெண்கள் எதிர்கொள்ள நேர்கிற தடைகளுக்கு, மொத்தமாக ஒரு உருவகம் கொடுக்கப்படுகிறது. அது, வேலைகளில் பெண்களை உயர விடாமல் தடுக்கும் 'கண்ணாடிக்கூரை' என அழைக்கப்படுகிறது. நிறுவனங்களின் உயர் தளங்கள் தகுதி உள்ள பெண்களால் அடையக் கூடியவை என்ற தோற்றம் தரும். ஆனால் உயர முயற்சி செய்யும்போதுதான் ஏதோ ஒரு தாண்டமுடியாத தடை அங்கிருப்பது தெரியும். ஒரு பெண்ணை சமுதாயம் எப்படிப் பார்க்கிறது என்பது அச்சமுதாயத்தின் மொத்தப் பெண்களின் முன்னேற்றத்துக்கும் அடிப்படையான வேர்.

இதற்காகவும் பெண்களை இத்தகைய உயர்பதவிகளில் அமர்த்துவது மிகச் சிறந்த ஒரு நடவடிக்கையே. பெண்களின் பொது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் எந்தவொரு சட்டமும் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்பதில் மாற்று சிந்தனை இருக்க வாய்ப்பில்லை.



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

# தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்புவதற்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பதவிகள் | சம்பள வகுதி | வெற்றிடம்/ தேவைப்பாடு |
|---|---|---|---|
| 01 | பொது முகாமையாளர் (பிரதான நிறைவேற்று அதிகாரி) | HM 2-3 | 01 |
| 02 | பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணம்) | HM 1-3 | 01 |
| 03 | பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) | HM 1-3 | 01 |
| 04 | பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) | HM 1-3 | 01 |
| 05 | பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) | HM 1-3 | 01 |
| 06 | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | HM 1-1 | 01 |
| 07 | உதவிப் பொது முகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி மற்றும் நிர்வாகம்) | HM 1-1 | 01 |
| 08 | உதவிப் பொது முகாமையாளர் (நிதிக் கணக்குகள்) | HM 1-1 | 01 |
| 09 | உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணம்) | HM 1-1 | 01 |
| 10 | உதவிப் பொது முகாமையாளர் (வீடு வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்) | HM 1-1 | 01 |
| 11 | உதவிப் பொது முகாமையாளர் (தகவல் பிரசாரம்) | HM 1-1 | 01 |
| 12 | உதவிப் பொது முகாமையாளர் (வீடமைப்பு அபிவிருத்தி) | HM 1-1 | 01 |
| 13 | உதவிப் பொது முகாமையாளர் (காணிகள்) | HM 1-1 | 01 |
| 14 | உதவிப் பொது முகாமையாளர் (வழங்கல் மற்றும் போக்குவரத்து முகாமைத்துவம்) | HM 1-1 | 01 |
| 15 | உதவிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) | HM 1-1 | 01 |
| 16 | உதவிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள்) | HM 1-1 | 01 |

## 01. பொது முகாமையாளர் (பிரதான நிறைவேற்று அதிகாரி)

சேர்த்துக் கொள்ளப்படும் அடிப்படை : நிரந்தரம்
வெற்றிட எண்ணிக்கை : 01
பணியாற்றும் இடம் : தலைமை அலுவலகம்

**கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்**

**1.1 வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

I. அரச நிர்வாகம், வியாபார நிர்வாகம், பொறியியல், கட்டிடக் கலை, அளவு கணப்பீடு, நகர மற்றும் கிராமிய உருவாக்கம், முகாமைத்துவம், வர்த்தகம், கணக்கியல், சட்டம் அல்லது இயைபுடைய விடயத் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

மேற்குறிப்பிடப்பட்ட விடயத்துறைக்கு இயைபாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் (Fellow/ Corporate Member) பெற்றிருத்தல்.

**உள்ளடங்கலாக**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவப் பட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 20 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (இந்த 20 வருடங்களில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவியாக இருத்தல் வேண்டும்)

**அல்லது**

II. அரச நிர்வாகம், வியாபார நிர்வாகம், பொறியியல், கட்டிடக் கலை, அளவு கணப்பீடு, நகர மற்றும் கிராமிய உருவாக்கம், முகாமைத்துவம், வர்த்தகம், கணக்கியல், அபிவிருத்திக் கல்வி, சட்டம் அல்லது இயைபுடைய விடத் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

மேற்குறிப்பிடப்பட்ட விடயத் துறைகளுக்கு இயைபாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கலாநிதிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளடங்கலாக**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவப் பட்டப் பதவியொன்றில் 05 வருடங்கள் மிகச் சிறந்த சேவைக்கால அறிக்கையைக் கொண்ட உத்தியோகத்தராயிருத்தல்.

**1.2 உள்ளக விண்ணப்பதாரிகள்:**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் (HM 1-3) பிரதிப் பொது முகாமையாளர் பதவியொன்றில் குறைந்தபட்சம் 04 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

பல்வகைக் காரியத்தில் ஈடுபட்டுள்ள குழுவுக்கு தலைமைத்துவத்தை வழங்குவதோடு மானுட மற்றும் ஏனைய வள வினைத்திறன் முகாமைத்துவத்தில் நிலையான தேர்ச்சி.

## 02. பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணம்)

சேர்த்துக் கொள்ளப்படும் அடிப்படை : நிரந்தரம்
வெற்றிட எண்ணிக்கை : 01
பணியாற்றும் இடம் : தலைமை அலுவலகம்

**கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்**

**2.1 வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

சிவில் பொறியியல் அல்லது கட்டிடக் கலை போன்ற விடயத் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

மேற்குறிப்பிடப்பட்ட விடயத்துறைக்கு இயைபாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் (Fellow / Corporate Member) பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய விடயத் துறையில் முகாமைத்துவப் பட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 16 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**2.2 உள்ளக விண்ணப்பதாரிகள்:**

i. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

**அல்லது**

ii. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் (HM 1-1) உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல் சேவைகள் / கட்டிடக்கலை அல்லது திட்டமிடல்) பதவியொன்றில் குறைந்தபட்சம் 03 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## 03. பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல், ஆரர்ய்ச்சி மற்றும் அபிவிருத்தி)

சேர்த்துக் கொள்ளப்படும் அடிப்படை : நிரந்தரம்
வெற்றிட எண்ணிக்கை : 01
பணியாற்றும் இடம் : தலைமை அலுவலகம்

**கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்**

**3.1 வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, முகாமைத்துவம், வர்த்தகம், அரச நிர்வாகம், வியாபார முகாமைத்துவம் அல்லது புள்ளிவிபரவியல் போன்ற விடயத் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

மேற்குறிப்பிடப்பட்ட விடயத்துறைக்கு இயைபாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் (Fellow / Corporate Member) பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய விடயத் துறையில் முகாமைத்துவப் பட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 16 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**3.2 உள்ளக விண்ணப்பதாரிகள்:**

i. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

**அல்லது**

ii. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் (HM 1-1) உதவிப் பொது முகாமையாளர் பதவியொன்றில் குறைந்தபட்சம் 03 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## 04. பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

சேர்த்துக் கொள்ளப்படும் அடிப்படை : நிரந்தரம்
வெற்றிட எண்ணிக்கை : 01
பணியாற்றும் இடம் : தலைமை அலுவலகம்

**கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்**

**4.1 வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

i. கணக்கியல், வர்த்தகம் அல்லது வியாபார நிர்வாகம் (நிதி, கணக்கியல்) போன்ற பாடங்களுக்கு இயைபாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

மேற்குறிப்பிடப்பட்ட விடயத் துறைக்கு இயைபாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின்படிப்புப் பட்டம் அல்லது விடயத்துறைக்கு இயைபாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் (Associate Member) பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய விடயத் துறையில் முகாமைத்துவப் பட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 16 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

ii. விடயத்துறைக்கு இயைபாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் (Fellow Member) பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய விடயத் துறையில் முகாமைத்துவப் பட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 16 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

ஜீவன் தொண்டமான் எதிர்காலத்தில் ஒரு சிறந்த அனுபவமிக்க தலைவராக வரவேண்டும். அவர் பிரித்தானியாவில் சட்டக்கல்வியை கற்றவர். நன்கு படித்த ஒருவர். அவர் இளைஞர்களை மாத்திரம் நம்பியிருக்காமல் அனுபவமிக்கவர்களையும் ஆதரித்துக்கொண்டு சென்றால் மாத்திரமே சிறந்த தலைவராக வரலாம். நான் அவரோடு உரையாடியிருக்கின்றேன். அவர் மிகவும் நல்லவர். மலையக மக்களுக்கு நிறைய சேவைகள் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அவரிடம் இருக்கிறது. ஜீவன் தொண்டமான் வெறுமனே இளைஞர்களை மாத்திரம் வைத்து அரசியல் செய்வேன் என்று நினைக்காமல். இளைஞர் யுவதிகளையும் அனுபவமிக்கவர்களையும் இணைத்துக் கொண்டே பயணிப்பார் எனின் எதிர்காலத்தில் மலையகத்தின் சிறந்த தலைவராக வருவார்.


# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிட்டுள்ள பதவி வெற்றிடத்திற்கு இலங்கையின் தகைமையுள்ள பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

### 1. பிரதிப் பணிப்பாளர் நாயகம் - ஏச்எம் 1-3 (01 பதவி வெற்றிடம்)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. ப.மா.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட சமூக விஞ்ஞானம்/ விஞ்ஞானம்/ பொது நிருவாகம் / வியாபார நிருவாகம்/முகாமைத்துவத்தில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று.

   **அத்துடன்**

   பதவியின் பாடப்பரப்பிற்கு உரித்தான வகையில் சமூக விஞ்ஞானம்/ விஞ்ஞானம்/பொது நிருவாகம்/வியாபார நிருவாகம்/முகாமைத்துவம் ஆகியவற்றில் பெறப்பட்ட பட்டப் பின் பட்ட தகைமை (முதுமாணி) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகமொன்றின் கூட்டுரு அங்கத்துவம்.

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்டசபை/அரசாங்க நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

2. பதவிக்குரித்தான துறையொன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவம்.

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்டசபை/அரசாங்க நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலேயுள்ளவாறான வெளியக விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்குரித்தான பாடப்பரப்பில் சிரேஷ்ட முகாமையாளர் வகுதியில் (ஏச்எம் 1-1) பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

- **வயது:** 35 வயதிற்கு குறையாமலும் 55 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகிக்கப்பட மாட்டாது.
- **ஊழியர் வகுதியின் சம்பள செய்விதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:**

  முசேதி சுற்றறிக்கை 2/2016(I) - ஏச்எம் 1-3 ரூபா [86.865-15x2270-120,915] முசேதி சுற்றறிக்கை இல. 02/2016(I) அட்டவணை II (ஏ) மேலேயுள்ளதிற்கான 2020.01.01ஆம் திகதியன்று ஆரம்ப சம்பள படிநிலையானது 86,865 ரூபாவாகும்.
- **ஏனைய அனுகூலங்கள்:**

  ஆரம்ப சம்பளத்திற்கு மேலதிகமாக இப்பதவிக்கு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி, வாகனம்/போக்குவரத்து படிகளுக்குமான தகுதியையும் பெற்றுத் தரும். அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அனுகூலங்களுடன் எரிபொருள் படியும் வழங்கப்படும்.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை (உள்ளக மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது)**

  நியமிக்கும் அதிகாரிகளினால் நியமனஞ் செய்யப்பட்ட குழுமமொன்றினால் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தெரிவு நடைமுறைப்படுத்தப்படும்.

### 2. பணிப்பாளர் (நீதி) ஏச்எம் 1-1 (01 பதவி வெற்றிடம்)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது**

ப.மா.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்றுடன், உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

சட்டத்தில் பட்டப் பின் பட்ட (முதுமாணி) தகைமை.

**மற்றும்**

அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் அமைப்பொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 12 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளியக அபேட்சகர்களுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட சட்டத்தரணியாகவும் பதவிக்குரித்தான பாடப்பரப்பில் முகாமையாளர் வகுதி (எம்எம்) Iஆம் தரத்திலுள்ள பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 3. பணிப்பாளர் (சட்ட அமுலாக்கம்) ஏச்எம் 1-1 01 பதவி வெற்றிடம்)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட சட்டத்தரணி தகைமையுடன் ப.மா.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட குற்றவியல் அல்லது LLB இல் பெற்ற பட்டதாரிப் பட்டம்.

   **அத்துடன்**

   பட்டப் பின் பெற்ற பட்டதாரி தகைமை பட்டம் (முதுமாணி)

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட, அரசாங்க நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 12 வருட அனுபவம்.
2. ப.மா.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்று.

   **அத்துடன்**

   ஆகக் குறைந்தது 5 வருட ஆகக் குறைந்தது பொலிஸ் அத்தியட்சகர் பதவி அடங்கலாக பொலிஸ் சேவையில் ஆகக் குறைந்தது 12 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளியக விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்குரித்தான பாடப்பரப்பில் முகாமையாளர் வகுதி (எம்எம்) Iஆம் தரத்திலுள்ள பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 4. மருத்துவ முறையிலான உளவியலாளர் - ஏச்எம் 1-1 (01 பதவி வெற்றிடம்)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

1. ப.மா.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட உளவியலில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று.

   **அத்துடன்**

   இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு பெற்ற மருத்துவ முறையிலான உளவியலில் பெற்ற பட்டப்பின் பெற்ற பட்டம் (முதுமாணி) அல்லது நிகரானது.

   **மற்றும்**

   மருத்துவ சிகிச்சை நிலையமொன்றில் மருத்துவ முறையிலான உளவியலாளராக இரு (02) வருட அனுபவத்துடன் கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/அரசாங்க நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 12 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளியக அபேட்சகர்களுக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளை பெற்றிருத்தல்.
2. மருத்துவ முறையிலான உளவியலில் பட்டப்பின் பட்ட (முதுமாணி) பட்டத்துடன் முகாமையாளர் வகுதியில் (எம்எம் 1-1) I ஆம் தரத்திலுள்ள பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**ஏனையவை (மேலேயுள்ள 02, 03 மற்றும் 04 ஆகிய பதவிகளுக்கானது)**

- **ஊழியர் வகுதியின் சம்பள செய்விதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:**

  முசேதி சுற்றறிக்கை 2/2016(I) - ஏச்எம் 1-1 ரூபா [80.295-15x2270-114,345]

  முசேதி சுற்றறிக்கை இல. 02/2016(I) அட்டவணை II (ஏ) மேலேயுள்ளதிற்கான 2020.01.01ஆம் திகதியன்று ஆரம்ப சம்பள படிநிலையானது 80,295 ரூபாவாகும்.
- **வயது:** வயதானது 35 இற்கு குறையாமலும் 55 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.
- **ஏனைய அனுகூலங்கள்:**

  ஆரம்ப சம்பளத்திற்கு மேலதிகமாக இப்பதவிக்கு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி, வாகனம்/போக்குவரத்து படிகளுக்குமான தகுதியையும் பெற்றுத் தரும். அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அனுகூலங்களுடன் எரிபொருள் படியும் வழங்கப்படும்.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை: (உள்ளக மற்றும் வெளியக விண்ணப்பதாரிகளுக்கானது)**

  நியமிக்கும் அதிகாரிகளினால் நியமனஞ் செய்யப்பட்ட குழுமமொன்றினால் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தெரிவு நடைமுறைப்படுத்தப்படும்.

### 5. உதவிப் பணிப்பாளர் (ஊடகம் மற்றும் தகவல்) (எம்எம் 1-1) (01 பதவி வெற்றிடம்)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது**

ப.மா.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட வெகுசன தொடர்பாடல்/ வெகுசன ஊடகத்தில் பெற்ற விஷேட பட்டம் அல்லது வேறேதாவது உரித்தான பட்டம்.

**மற்றும்**

பதவிக்குரித்தான துறையில் ஆகக் குறைந்தது இரு (2) வருட பட்டப் பின் தகைமைப் பட்ட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளியக அபேட்சகர்களுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகள்.
2. பதவிக்குரித்தான பாடப்பரப்பில் கனிஷ்ட முகாமையாளர் (ஜேஎம்) வகுதியின் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 6. உதவிப் பணிப்பாளர் (சட்ட அமுலாக்கம்) - (எம்எம் 1-1) (01 பதவி வெற்றிடம்)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது**

ப.மா.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட குற்றவியலில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று அல்லது LLB பட்டம் அத்துடன் சட்டத்தரணிக்கான தகைமை.

**மற்றும்**

பதவிக்கான உரித்தான துறையில் ஆகக் குறைந்தது இரு (02) வருட பட்டப்பின் தகைமைப் பட்ட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளியக அபேட்சகர்களுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட சட்டத்தரணியாகவும் கனிஷ்ட பதவிக்குரித்தான பாடப்பரப்பில் முகாமையாளர் (ஜேஎம்) வகுதியின் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**ஏனையவை (மேலேயுள்ள 5 மற்றும் 6 ஆம் பதவிகளுக்கானது)**

- **ஊழியர் வகுதிக்கான சம்பள செய்விதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:**

  முசேதி சுற்றறிக்கை 2/2016 – எம்எம் 1-1 ரூபா [53,175-10x1,375-15x1,910 – 95,575.00]

  முசேதி சுற்றறிக்கை இல. 02/2016 II ஆம் அட்டவணையின் பிரகாரம், 2020.01.01ஆம் திகதியன்று மேலேயுள்ளதிற்கான ஆரம்ப சம்பளமானது ரூபா 53,175.00 ஆகும்.
- **வயது:** வயதானது 22 இற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லையானது உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை:**

  நியமிக்கும் அதிகாரிகளினால் நியமனஞ் செய்யப்பட்ட குழுமமொன்றினால் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு நடைமுறைப்படுத்தப்படும்.

### 7. நிகழ்ச்சித்திட்ட அலுவலர் - ஜேஎம் 1-1 (01 பதவி வெற்றிடம்)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/சமூக விஞ்ஞானங்கள்/சுகாதார ஊக்குவித்தல் அல்லது வேறேதாவது உரித்தான துறை ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்றுடன் உரித்தான துறையில் பெற்ற ஒரு வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

ப.மா.ஆ. இனால் அல்லது மூன்றாம்தர தொழிற்பயிற்சி கல்விசார் ஆணைக்குழு ஆகியனவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட பிள்ளைகளுக்குரித்தான பாடங்களில் அல்லது ஆலோசனை ஆகியவற்றில் பெற்ற டிப்ளோமா சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது: (கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளியக விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. உரித்தான பதவிக்காக பாடப் பரப்பில் ''இணைந்த அலுவலர் வகுதி'' (எம்ஏ 03) பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
3. உரித்தான பதவிக்காக பாடப் பரப்பில் முகாமைத்துவ உதவியாளர் - "தொழில்நுட்பம்சாராத'' (எம்ஏ 01) II ஆம் தர பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 8. ஊடக மற்றும் தகவல் அலுவலர் - ஜேஎம் 1-1 - (01 பதவி வெற்றிடம்)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெகுசன ஊடகத்தில் பெற்ற விஷேட பட்டதாரிப் பட்டமொன்று அத்துடன் உரித்தான துறையில் ஒரு வருட பட்டப்பின் பெற்ற தகைமைப்பட்ட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது:: (கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளியக விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. உரித்தான பதவிக்காக பாடப் பரப்பில் ''இணைந்த அலுவலர் வகுதி'' (எம்ஏ 03) பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
3. உரித்தான பதவிக்காக பாடப் பரப்பில் முகாமைத்துவ உதவியாளர் - "தொழில்நுட்பம்சார்ந்த'' (எம்ஏ 2) II ஆம் தர/''முகாமைத்துவ உதவியாளர்'' - "தொழில்நுட்பம்சாராத'' (எம்ஏ 1) II ஆம் தர பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**ஏனையவைகள் (மேலேயுள்ள 07 மற்றும் 08 ஆம் பதவிகளுக்கானது)**

- **ஊழியர் வகுதியின் சம்பள செய்விதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:**

  முசேதி சுற்றறிக்கை 2/2016 – ஜேஎம் 1-1 ரூபா [42.600-10x755-18x1,135 – 70,580]

  முசேதி சுற்றறிக்கை இல. 02/2016 அட்டவணை II மேலேயுள்ளதிற்கான 2020.01.01ஆம் திகதியன்று ஆரம்ப சம்பள படிநிலையானது 42,600 ரூபாவாகும்.

**வயது:** 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

- **ஆட்சேர்ப்பு நடைமுறை:**

  நியமிக்கும் அதிகாரிகளினால் நியமனஞ் செய்யப்பட்ட குழுமமொன்றினால் எழுத்து மூலமான போட்டிரீதியிலான பரீட்சையொன்றின் பெறுபேறுகள் மற்றும்/அல்லது கட்டமைப்பு நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தெரிவு நடைமுறைப்படுத்தப்படும்.

**அனுகூலங்கள்:**

- அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக, மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து பதவிகளுக்கும் வாழ்க்கை செலவு படியும் வழங்கப்படும். ஊசேநி இற்கு 12% மற்றும் 3% ஊநநி இற்கும் அதிகாரசபையினால் செலுத்தப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கை பிரஜையாகவிருப்பதுடன் மிகச்சிறந்த குணவியல்புகளையுடையவராகவும் பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கான உடல் உளரீதியில் பொருத்தமானவராகவும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு தயாராகவுமிருத்தல் வேண்டும்.

www.childprotection.gov.lk என்ற தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து மாதிரி விண்ணப்பமானது பதிவிறக்கம் செய்யப்படலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2020 ஒக்ரோபர் 19 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரியை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ், கல்விசார், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவ சான்றிதழ்களுடன் அனுப்பப்படல் வேண்டும். நீங்கள் ஒரு பதவிக்கு மேலதிகமாக விண்ணப்பிப்பதற்கு விரும்பினால், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடப்படல் வேண்டும். அரச துறை/ கூட்டுத்தாபனம் / நியதிச்சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் அவர்களின் நிறுவனங்களின் தலைமையூடாகவே விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்படாத, தெளிவில்லாத விண்ணப்பங்கள் மேலேயுள்ள தேவைப்படுத்தல்களுக்கு ஒத்திசைவில்லாதவைகள் மற்றும் மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். எவ்வகையிலும் ஆதரவு தேடுவது தகைமையை இழப்பதற்கான வழியை வகுக்கும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைகளுக்கு அழைக்கப்படுவர். மேலே குறிப்பிட்டுள்ள ஆட்சேர்ப்புக்களுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,**
**இல.: 330, தளவத்துதொட வீதி, மாதிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர.**
**தொலைபேசி இலக்கம் - 0112778911-14**
**இணையதளம் - www.childprotection.gov.lk**



# சிறுவர் உலகம்

- சிங்கம் -

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 291

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 07 | ■ | 08 | ■ | 09 | ■ |
| 10 | ■ | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | ■ | 17 | 18 | ■ |
| ■ | 19 | ■ | ■ | ■ | 20 |
| 21 | 22 | 23 | ■ | 24 | 25 |

பெயர் ..............................

வகுப்பு ..............................

பாடசாலை பெயர் ..............................

பாடசாலை முகவரி ..............................

..............................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் / பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

1. இயற்கைத் துறைமுகம் அமைந்திருப்பதன் காரணமாக இந்நகரம் இலங்கையில் முக்கியத்துவம் மிகுந்த இடமாகத் திகழ்கின்றது.
11. மாணவர்களாகிய உங்களுக்கு மனதுக்குப் பிடித்த இடம் இது. சக நண்பர்களுடன் கவலை மறந்து விளையாடி மகிழும் இடம்.
15. அக்கால அரசர்கள், போர் வீரர்களிடம் இருந்த கூரிய ஆயுதம். (தலைகீழான சொல்)
17. பார்த்து ரசிக்கக் கூடிய காட்டு மிருகம். எமது நாட்டுக் காடுகளிலும் வாழ்கின்றது. சிறுத்தைகள் போன்றவற்றால் மட்டுமன்றி, மனிதர்களாலும் வேட்டையாடப்பட்டு வருகின்ற சாதுவான மிருகம்.
21. ஆண் ஒருவனுக்கு வாழ்க்கைத் துணைவி இவள்.
24. திணிவு, இடத்தை அடைக்கும் இயல்பு கொண்ட சடப்பொருள். ஆனால் இதனை கண்ணால் பார்க்க முடியாது. அசையும்போது எம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

### மேலிருந்து கீழ்

1. மாதம், நிலவு, வாரத்தின் குறித்ததொரு தினம் ஆகியவற்றைக் குறிக்கும் சொல்.
3. நெல் போன்று இதுவும் ஒரு தானியம். உலக மக்களில் பெருமளவானோரால் உணவுத் தேவைக்காக பயன்படுத்தப்படுவது.
5. உலகில் ஜனநாயகம் மலர்வதற்கு முன்னர் ஒரு நாட்டின் ஆட்சித் தலைவன் இவன்தான்.
12. எம்மை ஈன்றெடுத்த அன்னை. (தலைகீழான சொல்)
16. மணம் என்பதைக் குறிக்கும் சொல்.
20. செங்கல், மட்பாண்டம், கூரையோடு போன்றவற்றை தயாரிப்பதற்கான மூலப்பொருள்.

குறுக்கெழுத்துப் போட்டி
இல. 291சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834. கொழும்பு

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 290

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அரண்மனை 07. பதவி 10. தாரா
17. கல்லூரி 21. கரும்பு

**மேலிருந்து கீழ்**

1. அகராதி 03. விண் 04. மதன் 05. பனை
13. காரியம் 15. மேகம் 18. புல்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 289 பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
எம்.ஏ. அத்ரா,
தரம் 10,
பு/ பாத்திமா முஸ்லிம் பெண்கள் கல்லூரி,
போல்ஸ் வீதி, புத்தளம்.

**இரண்டாம் பரிசு**
ஸெய்ன் ஷாமில் மஸாஹிம்,
தரம் 09 B, மா/ஸாஹிரா தேசிய பாடசாலை,
மாத்தளை.

**மூன்றாம் பரிசு**
ம. ருத்ராமிகா,
தரம் 08, பெரியகல்லாறு மத்திய கல்லூரி,
பெரியகல்லாறு.

## பாராட்டு பெறுவோர்


1. **எம். சஹ்னாஜ்,**
தரம் 10 B, அந்நகார் ம.வி.,
ஆலய வீதி,
மூதூர் 05.

2. **எம்.ஏ.எப். அஸ்மா,**
தரம் 06 B, க/ பதிஉதீன் மகளிர் வித்தியாலயம்,
கண்டி.

3. **எம்.எப். சுமையா,**
தரம் 05 B, கு/அல் இர்பான் மத்திய கல்லூரி,
மடலகம,
பொல்கஹவெல.

4. **வி. கோணேஸ்வரன்,**
தரம் 05, தி/பே/பரமேஸ்வரா ம.வி.,
சிவன் வீதி,
கந்தளாய்.

5. **கோ. ஜெரிஷ்,**
தரம் 02 A,
கமு/கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை,
கல்முனை



குறளமுதம் :

**தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்**

**தெளிவுரை:** ஒருவன்தன்நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக் குறித்துப் பொய் சொல்லக்கூடாது. பொய் சொன்னால் அதைக் குறித்துத்தன்நெஞ்சமேதன்னைவருத்தும்.

## பொன்மொழிகள்

- நான் எதையும் சாதிக்கக்கூடியவன் என்ற நம்பிக்கையுடன் நீ இருந்தால், பாம்பின் விஷம் கூட உன்னிடம் செயலிழந்துவிடும். **– விவேகானந்தர்**
- பொறுமையோடு இடைவிடாமல் முயற்சி செய்பவனுக்கே வெற்றி கைகட்டிச் சேவகம் செய்யக் காத்திருக்கிறது **– ஹெக்டர்**
- கடினமான வேலைகளைச் செய்வதில் மகிழ்ச்சியடைபவர்களே எப்போதும் புகழ் பெறுகிறார்கள் **– மகாகவி மில்டன்**
- விசிறியை அசைக்காமல் காற்று வராது. வியர்வை சிந்தாமல் உயர்வு வராது **– ஜப்பான்**
- உன்னிடமுள்ள திறமை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் பயன்படுத்தத் தயங்காதே. இனிய குரல் கொண்ட பறவைகள்தான் பாட வேண்டும் என்றால் காடு அமைதியாகி விடும். **– ஹென்றி வேன்டேக்**
- வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தை வீணாக்காதே. காலத்தால் செய்யப்பட்டதே வாழ்க்கை **– ரிச்சர்ட் சாண்டர்ஸ்**

எஸ். வித்யோஷனி,
தலவாக்கலை.

## இவ்வார மழலை



லிஹித் ஹரிராம்,
ரமணன் - ஆர்த்தி
கொழும்பு 06.

## ரூபிகாவின் பிரியமான வேப்பமரம்

ரூபிகா தரம் ஆறில் கல்வி பயிலும் மாணவி. இவரின் வீட்டு முற்றத்தில் சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க வேப்ப மரமொன்று நன்கு கிளைபரப்பி செழிப்பாக வளர்ந்திருந்தது.

இம் மரத்திலிருந்து பருவகாலத்திற்கேற்ப இலைகள் உதிர்வதும், பூக்கள் சொரிவதும், பழங்கள் வீழ்வதும் இயல்பாகவே நடந்தேறிக் கொண்டிருக்கும். இதனைவிட வேப்பமரத்தை நாடிவரும் பறவைகள் மற்றும் விலங்குகள் எச்சமிடுவதும் கூட இங்கு வருடம் முழுவதும் காணக்கூடிய நிகழ்வுகளாகும்.

ரூபிகாவின் தந்தை குமரனிற்கு தினமும் காலை வேளைகளில் வேப்பமரத்தின் கீழ் உள்ள குப்பைகளையும் கழிவுகளையும் கூட்டி அள்ளுவது பிரதான கடமையாகவும் காணப்பட்டது.

அன்றொருநாள் ரூபிகா தனது வகுப்பறை நண்பர்களுடன் ஐந்து நாட்கள் கல்விச் சுற்றுலா ஒன்றிற்கு சென்றிருந்தார்.



ரூபிகா கல்விச் சுற்றுலா சென்ற மறுதினம் இவரின் தந்தை குமரன் தன் காலைநேர வேலைப்பளுவை குறைப்பதற்காக வேப்ப மரத்தைத் தறித்துவிட்டார். அடிமரத்தை கொல்லன் பட்டறைக்கும், மேல் கிளைகளை விறகாலைக்கும் விற்று பணத்தைப் பெற்று அதனை ரூபிகாவின் பெயரில் வங்கியிலும் வைப்பிலிட்டார்.

இப்போது வேப்பமரம் இருந்த இடம் வெறிச்சோடி சோபை இழந்த இடம்போல் தோன்றியது. வீட்டின் முகப்புச் சூழலும் வெப்பம் மிகுதியாகக் காணப்பட்டது.

ஐந்து நாட்கள் கல்விச் சுற்றுலாவை முடித்து கொண்டு வீடு திரும்பிய ரூபிகா வீட்டின் முற்றத்தில் நின்ற வேப்பமரம் இல்லாததைப் பார்த்து அழ ஆரம்பித்தாள். எவ்வளவு சமாதானப் படுத்தியும் அழுகையை நிறுத்துவதாயில்லை.

ரூபிகாவின் சிறிய தந்தை குகனும் சென்று சமாதானப்படுத்த முயற்சித்த போதும் அவள் மேலும் தேம்பித் தேம்பி அழுதாள்.

அவள் அழுதபடியே "சித்தப்பா இந்த மரத்தில் நிறைய அணில்கள், காகங்கள், கிளிகள் இருந்தன. இவற்றுக்கெல்லாம் இம்மரந்தானே வீடு? இப்போது அவ் உயிரினங்கள் எல்லாம் எங்கே தங்கும்?" கவலை தோய்ந்த முகத்துடன் சித்தப்பாவை நோக்கி தொடர்ந்து வினா தொடுத்த வண்ணமிருந்தாள் ரூபிகா.

தனது அண்ணனின் தவறான செயற்பாட்டால் குகனும் கவலை அடைந்தவனாய் வீட்டினுள் இருந்த ரூபிகாவின் அண்ணன் மதுரனையும் அழைத்து ரூபிகாவின் கவலையைப் போக்க பல்வேறு சுவாரஸ்யமான சம்பாசனைகளிலும் ஈடுபட்டார்.

ஒருவாறாக மாலை வேளையில் ரூபிகாவின் அழுகை ஓரளவு ஓய்ந்தாலும் கவலை போகவில்லை. ரூபிகாவிற்கு மட்டுமன்றி குகன், மதுரன் போன்றோருக்கும் கவலைதான்.

சித்தப்பா குகன் தனது பெறாப்பிள்ளைகளுக்கான அறிவுரைகளை வழங்கினார். "மரத்தை வெட்டுவதால் அதில் வசிக்கும் ஜீவராசிகளுக்கு மட்டுமல்ல நமக்கும் தீமைதான். எப்படி நாம் ஒட்சிசனை சுவாசித்து காபனீரொட்சைட்டை வெளியேற்றுகிறோம் அல்லவா? மரங்களோ இதற்கு நேரெதிரான வேலையைச் செய்கின்றன. இவை ஒளித்தொகுப்பு எனும் உணவு தயாரிக்கும் பணிக்காக காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளியிடுகின்றன. எனவே நாம் சுவாசிக்கும் வளியில் ஒட்சிசன் இருக்க வேண்டுமாயின் மரங்கள் இருக்கத்தான் வேண்டும்" என தன் கருத்தை முன்வைத்தார்.

பெறாப்பிள்ளைகள் இருவரும் அவரது ஆலோசனையை ஆவலுடன் கேட்கவே அவர் மேலும் தொடர்ந்தார். "விலங்குகளால் சுவாசத்தின் போதும், சூழலில் நடைபெறும் பல்வேறுபட்ட செயற்பாடுகளின்போதும் வெளியிடப்படும் காபனீரொட்சைட்டின் அளவு சூழலில் அதிகரிக்கும்போது, சூழல் வெப்பநிலை உயரும். அதன் விளைவாகப் புவியின் துருவப்பகுதியிலுள்ள பனிக்கட்டிகள் உருகும். இதன்பேறாகக் கடல்மட்டம் உயரும். இதனால் கடல் நாட்டுக்குள் வரும்" என்றார். "மரத்தை வெட்டுவதால் இவ்வளவு பாதிப்புகள் எல்லாம் வருமா? என வினவினான் மதுரன்.

இவற்றையெல்லாம் சாய்பு நாற்காலியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த ரூபிகாவின் தந்தை குமரன் தன் தவறை உணர்ந்து கொண்டதுடன் மறுநாளே இரண்டு வேப்பங்கன்றுகளை வாங்கிவந்து வீட்டின் முற்றத்தின் இருமருங்கிலும் நாட்டினார்.


தவறை உணர்ந்த ரூபிகாவின் தந்தை தனது பிள்ளைகள் இருவரையும் அழைத்து இந்த உலகத்தில் வாழ்வதற்கு நமக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமை மரம் உட்பட அனைத்து ஜீவராசிக்கும் இருக்கிறது" எனக்கூறினார்.

அன்று முதல் இன்று வரை ரூபிகாவின் தந்தை குமரன் இரு பிள்ளைகளைப்போல் இரண்டு வேப்பங்கன்றுகளையும் கண்ணும் கருத்துமாகப் பேணிக் காத்து வருகிறார்.

ப. அருந்தவம்,
உரும்பராய்.

## சிறுவர் சித்திரங்கள்



எம்.எப்.எப். அபா,
தரம் 04, கே/தெஹி நாபாவல மு.ம.வி.,
நாபாவல.



ரஞ்சன் அரஞ்சிகா
தரம் 11,
பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்,
குமரம்புலம் மூளாய், சுழிபுரம்.



எஸ். மரியம்,
அக்னாஸ் கொன்வன்ட் முன்பள்ளி,
மாத்தளை.



எஸ். மின்ஹா,
தரம் 04, மா/பாக்கியம் தேசிய பாடசாலை,
மாத்தளை.

### மாணவர் கழக அங்கத்துவ இல : 422



எஸ். மரியம்,
அக்னாஸ் கொன்வன்ட் முன்பள்ளி,
மாத்தளை

### மாணவர் கழக அங்கத்துவ இல : 423



எஸ். மின்ஹா,
தரம் 04, மா/ பாக்கியம் தேசிய பாடசாலை,
மாத்தளை.

## மாணவர் கழக அனுமதி

வர்ணப் புகைப்படம்

மாணவர் பெயர் ..............................

பிறந்த திகதி ..............................

வகுப்பு ..............................

பாடசாலை ..............................

..............................

..............................

வகுப்பாசிரியர் கையொப்பம்

மாணவர் கழகம்
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834 கொழும்பு.



# விளையாட்டு



# நாட்டின் விளையாட்டுத்துறைக்காக முதலீட்டுத் திட்டமொன்று அவசியம்

## இலங்கையின் இளம் வயது ஆலோசகர் ரோஹித்த ராஜபக்ஷ



இலங்கையின் விளையாட்டுத்துறை அறிவிற்காக முதலீடு செய்யும் திட்டமொன்று அவசியமென்று வயதுகுறைந்த றகர் விளையாட்டு ஆலோசகரும் சி. எச். என்ட். எப். சி. அணியின் தலைமை பயிற்றுவிப்பாளருமான ரோஹித ராஜபக்ஷ கூறினார். நாட்டில் அநேகமாக விளையாட்டு உபகரணமோ அல்லது வேறு வசதிகளை மேம்படுத்துவதற்காகவே விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டினார். கிரிக்கெட் பயிற்சியாளர்களின் சம்பளம் 6 மில்லியனாக இருக்கும் போது றகர் உள்ளிட்ட அநேகமான விளையாட்டுப் பயிற்சியாளர்களுக்கு 30,000 ரூபா அளவிலேயே சம்பளம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் கிரிக்கெட்டைத் தவிர ஏனைய விளையாட்டுகளுக்கு நல்ல பயிற்சியாளர் உருவாவது எவ்வாறு? அவர்களின் திறமைக்கு பெறுமதி இல்லாத போது அவர்களுக்கு கிடைக்கும் தைரியம் என்ன? என ரோஹித ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார். அதனால் கொழும்புக்கு வெளியே கஷ்டப் பிரதேச பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக நல்ல திறமையுடைய பயிற்சியாளர்களை உருவாக்குவதற்காக அறிவுக்காக முதலீடு செய்யும் திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென கூறினார்.

சி. எச். என்ட். எப். சி அணியின் தலைமை றகர் பயிற்சியாளராக பொறுப் பேற்றபோது நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். எமது விளையாட்டு வீர வீராங்கனைகள் சர்வதேச மட்டத்துக்கு செல்லக்கூடிய திறமை வாய்ந்தவர்கள். ஆனால் அவர்களுக்கு சரியான வழிகாட்டும் பயிற்சியாளர்களுக்கு 'கோச் எடியூகேஷன்" இல்லை. அதற்காக அவர்கள் தமது பணத்தை செலவு செய்கிறார்கள். அவ்வாறு எத்தனை பேருக்கு அதனை செய்ய முடியும். அதற்கு இன்னும் சரியான முறைகள் இல்லை. புதிதாக சிந்தித்து அறிவைப் பெறுவதற்கான முதலீடு செய்யும் முறையொன்றை தயாரிக்க வேண்டும். இல்லாவிட்டால் நல்ல பயிற்சியாளர்கள் உருவாக மாட்டார்கள். கிரிக்கெட்டுக்கும் ஏனைய விளையாட்டுக்களுக்குமிடையே சமநிலையை உருவாக்கி, அனைவரிடையேயும் நம்பிக்கை ஏற்படுத்தும் சூழலை உருவாக்க வேண்டும் என பயிற்சியாளர் ரோஹித ராஜபக்ஷ தெரிவித்தார்.

ரோஹித ராஜபக்ஷ சி. எச். என்ட். எக். சி. அணியின் பயிற்சியாளராவதற்கு முன்னர் கல்கிசை விஞ்ஞான கல்லூரி மற்றும் கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி ஆகியவற்றின் றகர் பயிற்சியாளராக இருந்தார். அவர் இலங்கையில் உருவாகிய மிக இளவயது றகர் பயிற்சி ஆலோசகரும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணித விஞ்ஞான கலாநிதி பட்டம் பெற்றுள்ளதோடு தற்போது வணிக முகாமைத்துவம் தொடர்பான கலாநிதி பட்டப்படிப்பையும் மேற்கொண்டு வருகிறார்.

'றகர் பயிற்சியாளராக நடவடிக்கையில் ஈடுபட தேவையான பாடநெறியில் சித்தி பெற்றே சீ. எச். என்ட். எப். சி அணிக்காக இணைந்தேன். பயிற்சியாளருக்கு அறிவும் மற்றும் கல்வியும் மிக முக்கியமாகும். விளையாட்டு வீரர்களின் திறமையை அறிந்து அவர்களுக்குப் பொருத்தமான இடத்தையும் நேரத்தையும் முகாமைத்துவம் செய்து கொடுக்க வேண்டியது பெறும் பொறுப்பாகும். நான் விளையாட்டை நேசிப்பதால் றகர் விளையாட்டுக்காக இதனை விருப்பத்துடன் செய்கிறேனே தவிர பயிற்சியாளர் பதவியின் மூலம் பணம் சம்பாதிக்கும் எதிர்பார்ப்பினால் அல்ல என ரோஹித்த ராஜபக்ஷ கூறினார்.

"விளையாட்டு வீரர்களுக்கு முதலில் தங்களுடைய எதிர்காலம் பற்றி நம்பிக்கை ஏற்பட வேண்டும் சி. எச். என்ட். எப். சி. அணியின் முகாமைத்துவம் அந்த நம்பிக்கையை ஏற்படுத்தித் தந்தது. அதனால் எதிர்வரும் போட்டிகளில் விளையாட நல்ல பலம்வாய்ந்த அணியொன்று எம்மிடமுள்ளது. எமது விளையாட்டு கழகத்தின் வீரர்களின் கல்வியை முதலில் பார்ப்போம். அதற்கான திட்டமொன்றை தயாரிப்போம். அதன்பின்னர் நல்ல தொழில் தொடர்பாக கவனம் செலுத்துவோம். வீரர்களுக்கு றகர் விளையாட்டு இல்லாதபோது வாழ்க்கையை வாழ்வது என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எம்முடன் இணைந்தவர்களுக்கு நாம் அவர்களை கைவிட மாட்டோம் என்று தெரியும்.

2015ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் யாரும் தன்னை றகர் விளையாட அழைக்காத போது கிடைத்த சி. எச். என்ட். எப். சி. அணியின் அழைப்பு ஒரு போதும் மறக்க முடியாததனால் அணியின் பயிற்சியாளராக செயல்பட பொறுப்புடனும் மகிழ்ச்சியுடனும் அவ்வணியின் அழைப்பை ஏற்றுக்கொண்டதாகக் கூறினார்.

எனக்கு பல றகர் அணிகள் அழைப்பு விடுத்தன. முடியாத போது கைகொடுத்தவர்களை மறக்க முடியாது. அது எமது மனதில் உள்ள ஒன்றாகும்.

அன்று எம்முடன் இருந்த வீரர்கள் தான் இன்றும் இருக்கிறார்கள். இம்முறை மாற்றத்தை ஏற்படுத்த எம்மால் முடியும் என அவர் கூறினார்.

இலங்கை பாடசாலை றகர் அணியில் வயதெல்லை 21 வயது குறைந்தது என மாற்றுவது காலத்துக்கு ஏற்றதென ரோஹித ராஜபக்ஷ தெரிவித்தார்.

"இன்று உலகில் பாடசாலைகளில் இளைஞர் றகர் அணி 21 வயதுக்கு கீழ் என்றே காணப்படுகிறது. கொரோனா தொற்றுக்காரணமாக பாடசாலை றகர் போட்டிகளை நடத்த முடியாமற் போயுள்ளது. அதனால் இறுதி வருடத்தில் விளையாடும் பாடசாலை அணியினருக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் றகர் விளையாட்டு வீரர்களின் அழகான நாட்கள் பாடசாலை றகர் காலமாகும். அவர்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்க பாடசாலை றகர் விளையாட்டின் வயதெல்லையை திருத்தம் செய்து உலகிற்கு பொருந்துமாறு 21 வயதுக்கு கீழான அணியென மாற்றுமாறு ஆலோசனை கூறுகின்றேன். எமது பாடசாலை றகர் விளையாட்டும் 21 வயதுக்கு கிழ் எனத் திருத்தப்பட்டால் இம்முறை கடைசி வருடம் விளையாடிய வீரர்களுக்கு அநியாயம் இழைக்கப்படமாட்டாது. அதே போல் நல்ல இளைஞர் அணியை தெரிவு செய்யவும் இலகுவாக இருக்கும்.

"எமது விளையாட்டை முன்னெடுத்துச் செல்ல விளையாட்டு கழகங்களினதும் மற்றும் மைதானங்களுக்கு பொறுப்பான அதிகாரிகளினதும் கருத்துக்களில் மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியமாகும். இலங்கை றகர் மற்றும் பாடசாலை றகர் என இரண்டாகப் பிரிந்து றகரை முன்னேற்ற முடியாது. விளையாட்டு கழகங்கள் சொந்த அரசியல் நீங்கி விளையாட்டை மேம்படுத்தும் நோக்கில் மாத்திரம் சிந்திக்க வேண்டும். இன்று குதிரை பந்தய மைதானத்தை போட்டிக்காகப் பெறுவதற்கு இரண்டரை இலட்சம் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது. அவ்வாறென்றால் அங்கு யார் போட்டியை நடத்திச் செல்வார்கள். குதிரை பந்தயத்திடல் சும்மாவே கிடக்கின்றது. இந்த தேசிய வளத்தை சரியாக விளையாட்டுக்காகப் பயன்படுத்த வேண்டும். அத்தேவை விளையாட்டுத்துறை அமைச்சருக்குள்ளது. புதிய விளையாட்டு துறை அமைச்சர் விளையாட்டைப் பற்றித் தெரிந்தவர். போட்டிகளில் விளையாடியவர். அதனால் அனைவருக்கும் நன்மை கிடைக்கும் விளையாட்டுத்துறையை நாம் எதிர்காலத்தில் காணலாம்" என ரோஹித ராஜபக்ஷ தெரிவித்தார்.

## தமிழ் யூனியன் கழகத்துக்காக சதமடித்து அசத்திய ரவிந்து பெர்னாண்டோ

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கழகங்களுக்கிடையிலான 23 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியின் ஐந்தாவது கட்டப் போட்டிகளின் கீழ் கடந்த வியாழக்கிழமை (01) பத்து போட்டிகள் நிறைவுக்கு வந்தன.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டிகளில் தமிழ் யூனியன், கோல்ட்ஸ், ராகம, பதுரெலிய, எஸ் எஸ்சி, சோனகர், செபஸ்டியன்ஸ், விமானப்படை, களுத்துறை நகரம், மற்றும் நுகேகொட விளையாட்டு கழகம் என்பன வெற்றிகளைப் பதிவு செய்தன.

கண்டி சுங்க விளையாட்டுக் கழகத்துக்கு எதிராக பி.சரா ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ரவிந்து பெர்னாண்டோவின் அபார சதத்தின் (107) உதவியுடன் 216 ஓட்டங்களால் தமிழ் யூனியன் கிரிக்கெட் கழகம் அபார வெற்றயீட்டியது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கண்டி சுங்க விளையாட்டுக் கழகம் 68 ஓட்டங்களுக்கு சுருண்டது. பந்துவீச்சில் கனிஷ்க ஹசித 12 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இம்முறை போட்டித் தொடரில் தமிழ் யூனியன் கிரிக்கெட் கழகம் பெறும் ஐந்தாவது வெற்றி இதுவாகும்.

குழு சி இற்காக நடைபெற்ற போட்டியில் சரசென்ஸ் விளையாட்டுக் கழகத்தை 47 ஓட்டங்களுக்கு சுருட்டிய கொழும்பு கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகம் 162 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகத்துக்காக தனஞ்சய லக்ஷான் துடுப்பாட்டத்தில் 88 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுக்க, பந்துவீச்சில் டில்ஷான் மதுஷங்க 4 விக்கெட்டுக்களையும், ரொஹான் சன்ஜய 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி வலுச்சேர்த்தனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற போட்டிகளில் குழு டி இற்கான போட்டி ஒன்றில் எஸ்எஸ்சி கழகம், கொழும்பு கிரிக்கெட் கழகத்திற்கு எதிராக 51 ஓட்டங்களால் வெற்றி பெற்று இந்த தொடரில் தமது ஐந்தாவது வெற்றியினைப் பதிவு செய்தது.



எஸ்எஸ்சி கழகத்துக்காக நிபுன் தனன்ஞய ஆட்டமிழக்காது 84 ஓட்டங்களையும், அஷேன் பண்டார 57 ஓட்டங்களையும் எடுத்து வலுச்சேர்த்தனர்.

இதனிடையே, சிலாபம் மேரியன்ஸ் கழகத்துடனான போட்டியில் 39 ஓட்டங்களால் வெற்றியீட்டிய ராகம கிரிக்கெட் கழகம்,இம்முறை போட்டித் தொடரில் முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது.

## அட்லெடிகோ மாட்ரிட் சுவாரஸ் ஒப்பந்தம்

பார்சிலோனா அணிக்காக கடந்த ஆறு ஆண்டுகளாக விளையாடிய உருகுவே வீரர் சுவாரஸ் பார்சிலோனா அணியில் இருந்து அட்லெடிகோ மாட்ரிட் செல்கிறார்.

உருகுவே கால்பந்து அணியின் நட்சத்திர ஸ்டிரைக்கர் லூயிஸ் சுவாரஸ். 33 வயதாகும் இவர் கடந்த ஆறு ஆண்டுகளாக ஸ்பெயின் நாட்டின் லா லிகா புகழ் பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்தார். மெஸ்சி, நெய்மர் ஆகியோருடன் இணைந்து அணிக்கு வெற்றிகளை குவித்துக் கொடுத்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் நெய்மர் பிஎஸ்ஜி அணிக்கு சென்றார். அதன்பின் பார்சிலோனா ஆட்டம் காண ஆரம்பித்தது. அண்மையில் நடைபெற்ற சம்பியன்ஸ் டிராபியில் படுதோல்வியடைந்ததால் மெஸ்சியும் வெளியேற முடிவு செய்தார். ஆனால், ஒப்பந்தத்தை மீற முடியாமல் இந்த பருவகாலத்தில் விளையாட இருக்கிறார்.

இந்நிலையில் லூயிஸ் சுவாரஸ்ஐ அட்லெடிகோ மாட்ரிட் அணிக்கு கொடுக்க ஒப்பந்தம் செய்துள்ளது. இதனால் அட்லெடிகோ மாட்ரிட் 7 மில்லியன் டொலர் பார்சிலோனாவுக்கு போனஸாக வழங்க இருக்கிறது, பார்சிலோனாவுக்காக 198 கோல்கள் அடித்துள்ள சுவாரஸ், 2014ல் இருந்து ஒருமுறை சம்பியன்ஸ் லீக், நான்கு முறை லா லிகா, நான்கு முறை கோபா டெல் ரே கோப்பைகளை வாங்க முக்கிய காரணமாக இருந்துள்ளார்.







## ஐபிஎல்: 5,000 ஓட்டங்கள் கடந்து ரோகித் சர்மா சாதனை

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் விராட் கோலிக்கு, சுரேஷ் ரெய்னா ஆகியோருக்குப்பின் 5 ஆயிரம் ஓட்டங்கள் கடந்து ரோகித் சர்மா சாதனை படைத்துள்ளார். மும்பை இந்தியன்ஸ்-கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் அபு தாபியில் நடைபெற்றது. மும்பை இந்தியன்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரரர் ரோஹித் சர்மா தான் சந்தித்த முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டினார். 2 ஓட்டங்கள் அடித்தால் 5 ஆயிரம் ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டுவார் என்ற நிலையில், பவுண்டரி அடித்து இலக்கை எட்டினார். இதன் மூலம் ஐபிஎல் கிரிக்கெட்டில் 5,000 ஓட்டங்களை கடந்த 3வது வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். விராட் கோலி 5,430 ஓட்டங்களுடனும் முதல் இடத்திலும், 5,368 ஓட்டங்களுடனும் சுரேஷ் ரெய்னா 2வது இடத்திலும் உள்ளனர்.

## ஓய்வு முடிவை திரும்பப் பெறுகிறார் யுவ்ராஜ் சிங்

கடந்த ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்த இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் யுவ்ராஜ் சிங் தற்போது தன்னை அதிலிருந்து விடுவிக்கக் கோரி பிசிசிஐ க்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்த நிலையில், கொவிட் – 19 வைரஸ் காரணமாக கடந்த சில மாதங்களாக பஞ்சாப் வீரர்களான சுப்மன் கில், அபிஷேக் சர்மா, பிரப்சிம்ரன் சிங், அல்மோல்பிரீத் சிங் உள்ளிட்ட வீரர்களுக்கு பயிற்சி அளித்துவந்த யுவ்ராஜ் சிங், பஞ்சாப் மாநில அணிக்காக விளையாட வேண்டும் என பஞ்சாப் கிரிக்கெட் சங்க செயலாளர் புனீத் பாலியினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று பஞ்சாப் அணிக்காக ரி20 போட்டிகளில் விளையாடுவது குறித்து விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் தலைசிறந்த சுழல்பந்து வீச்சு சகலதுறை வீரராகத் திகழ்ந்தவர் யுவ்ராஜ் சிங். களத்தடுப்பு, துடுப்பாட்டம், பந்துவீச்சு என மூன்று துறைகளிலும் அவர் அசத்தியவர்.

கடந்த 2007ஆம் ஆண்டு இந்திய அணி ரி20 உலகக் கிண்ணத்தையும், 2011ஆம் ஆண்டு ஒருநாள் உலகக் கிண்ணத்தையும் இந்தியா கைப்பற்ற முக்கிய வீரராக திகழ்ந்தார்.

அபுதாபியில் நடைபெற்ற ரி10லீக் மற்றும் கனடாவில் நடைபெற்ற குளோபல் ரி20 தொடர்களில் இவர் விளையாடினார். இதனால் உள்நாட்டு கிரிக்கெட் போட்டிக்கு மீண்டும் திரும்பும் வகையில் ஓய்வு முடிவை திரும்ப பெற இருப்பதாக தகவல் வெளியானது. இந்நிலையில் அதை யுவராஜ் சிங் தற்போது உறுதி செய்துள்ளார். இது குறித்து யுவராஜ் சிங் க்ரிக்பஸ் இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வியில் கருத்து தெரிவிக்கையில்,

நான் இளம் வீரர்களுடன் மகிழ்ச்சியாக நேரத்தை செலவிட்டேன். விளையாட்டு குறித்து பல்வேறு அம்சங்கள் பேசினோம். அவர்களிடம் நான் பேசும்போது பல்வேறு விடயங்களை அவர்கள் கேட்டுக் கொண்டார்கள் என உணர்கிறேன்.

நான் இரண்டு மாதங்களாக பயிற்சிகளை மேற்கொண்டேன். துடுப்பாட்டத்தில் அதிக கவனம் செலுத்தினன். பயிற்சி ஆட்டத்தில் போதுமான அளவிற்கு ஓட்டங்களைக் குவித்தேன். பஞ்சாப் கிரிக்கெட் சங்கத்தின் புனீத் பாலி என்னை அணுகி, ஓய்வு முடிவை திரும்ப பெறுவது குறித்து பரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

ஆரம்பத்தில் அவரது கோரிக்கையை நான் ஏற்க விரும்புகிறேன் என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடியாது. உள்ளூர் கிரிக்கெட் தொடரை நான் முடித்துவிட்டேன். பிசிசிஐ அனுமதி கொடுத்தால், வெளிநாட்டு லீக்குகளில் விளையாட விரும்புகிறேன். ஆனால் என்னால் பாலியின் வேண்டுகோளையும் நிராகரிக்க முடியாது. கடந்த மூன்று அல்லது நான்கு வாரங்களாக ஏராளமான நினைப்புகள் வந்தன. ஆனாலும், எது குறித்தும் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.

பஞ்சாப் அணி சம்பியனாக வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. அந்த அணிக்காக விளையாடி நானும், ஹர்பஜன் சிங்கும் முக்கிய தொடர்களை வென்று கொடுத்துள்ளோம். ஆகவே, இது என்னுடைய இறுதி முடிவில் முக்கிய காரணியாக இருக்கும் என தெரிவித்தார். இதையடுத்து தன்னுடைய துடுப்பாட்ட திறமை இன்னும் குறையவில்லை என்பதையும் தான் உணர்ந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அவுஸ்திரேலியாவின் பிக் பாஷ் லீக் தொடரில் பங்கேற்று யுவராஜ் சிங் விளையாடுவார் என்றும் அதற்கான அணியை தேர்ந்தெடுப்பதில் அவருக்கு கிரிக்கெட் அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபை உதவி செய்து வருவதாகவும் கடந்த சில தினங்களுக்கு முன்பு செய்திகள் வெளியாகின.





இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ஹைதர்கால நடைமுறைகளை இன்றும் கடைப்பிடிப்பதா?

## வாழ்வாதாரமா சேதாரமா 149



தமிழ்க் கவி பேசுகின்றார்

ழ்க்கை வாழ்வதற்கே. அதற்காக அவரவர் தமக்கு விரும்பியபடி வாழ்வதற்கல்ல. மனிதர்களின் நடத்தைகள் வெவ்வேறானவை. அதேபோல அவர்களது வலிமையும் (பணபலமாகட்டும் கல்வி வளர்ச்சியாகட்டும், பிறந்த குலம் கோத்திரமாகட்டும்) வெவ்வேறானவை தான்.

ஆதிகால மனிதன் வேட்டையாடி உணவுண்டு வாழ்ந்தபோது வல்லவனே வாழ்ந்தான். பலமற்றோர் அவர்களது அடிமைகளாக நடாத்தப்பட்டார்கள். நாட்டின் சகல சுக போகங்களும் அரசனுக்கே சொந்தமாக இருந்தது. அரசனுக்கு சேவகம் செய்யும் உயர் அதிகாரிகள் எட்டாத்தொலைவிலுள்ள அரசனை மக்கள் அண்டவிடாது பார்த்தது மட்டுமன்றி தமது அதிகாரத்தை அவர்கள்மீது பிரயோகித்தும் சுக போக வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

மன்னராட்சிகளில் சர்வாதிகாரம், மக்களாணை பெற்று முடிவெடுத்தல் என. இருவகை அரசுகள் இயங்கினாலும் நாம் முட்டாள்களின் அரசாட்சிகள் பற்றியும் கதைகளில் படித்திருக்கிறோம். காலம் எப்போதும் ஒரே இடத்தில் நிற்பதில்லையல்லவா? மன்னராட்சிகளுக்கெதிரான மக்கள் புரட்சி பல நாடுகளில் ஏற்பட்டு அதுவே மக்களாட்சி என்கிற இன்றைய ஜனநாயக ஆட்சியை பல நாடுகளில் நிறுவ முடிந்திருக்கிறது. அரசு ஒரு போதும் மாறுவதில்லை அரசாங்கம் மாறியாக, அதாவது மாற்றியாக வேண்டும்.

சகல மக்களும் சமமாக நடாத்தப்பட வேண்டும். எனவே சட்டதிட்டங்கள் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. முதல்முதலில் ஏதென்ஸ் நகரத்தின் மன்னன் மக்களுக்கான சட்டங்களை எழுதி ஒரு பாறையில் அதை செதுக்கி சந்தை கூடும் இடத்தில் வைத்தானாம். அந்த சட்டம் மிக அதிகமானதாக தெரிந்தது. அதாவது ஒருவனுடைய கண் பறிக்கப்பட்டால் அதைப் பறித்தவனின் கண்ணும், பல்லை உடைத்துவிட்டால் உடைத்தவனின் பல்லை உடைக்கவேண்டும் எனவும் காணப்பட்டதாகும்.

அப்பாடி, அந்தக் காலத்தில் நாம் இல்லை. இன்றும் அரசாங்கமே மக்களை அடக்கி வைத்திருக்கிறது. தனியொருவன் தனது வல்லமைகொண்டு பலமற்றவனை அடக்கிவிடாமல் அரசாங்கமே தனது பலத்தை பிரயோகித்து மக்களை கட்டி வைத்திருக்கிறது. ராணுவ பலத்தைக்கொண்டு நாட்டின் எல்லையையும், நீதிமன்றுகளின் பலத்தை கொண்டு மக்களை மறைமுகமாகவும் அடக்கி வைத்திருக்கிறது. இதனால் ஒருவருடைய உரிமையை மற்றவரது எதிர்ப்பில்லாமல் அனுபவிக்க முடிகிறது. அப்படி இல்லையென்றால் என்ன நடக்கும் ஒருவர் தனக்கு விருப்பமான ஒரு நகையை வாங்கி கழுத்தில் போட்டால் அதை மற்றொருவர் பறித்தெடுக்கலாம் அல்லவா? எனவே சட்டம் அதை தடுக்கிறது. இந்த சட்டம் நீதிமன்றுகளின் வழியாக நடைமுறைப்படுத்துகிறது.

இந்த சட்ட வழிமுறைகளையும் இருவகை பெரும்பிரிவுகளாக வகுத்திருக்கிறார்கள். குற்றவியல், குடியியல். என்பதாக அவற்றுள்ளும் பல சிறு பிரிவுகள் உண்டு. குடியியல் எனப்படுவது தனிநபர் உரிமைகளைக் கொண்டது. அந்த உரிமைகள் சார்ந்தும் எது எப்படி இருக்கவேண்டும் என்பதாக சட்டங்கள் தெளிவாக உண்டு. ஒருவருக்கு சொந்தமான உடைமையை அது நிலபுலமோ பொருள்பண்டமோ வாகனமோ, எதுவாயினும் அவற்றைக் கையாளும் விதி முறைகளும் அவற்றை எப்படி கைமாற்றலாம் என்பவை பற்றியும் தெளிவான வரையறைகள் உண்டு.

அடுத்தவன் மனைவியை இன்னொருவன் கொண்டு செல்ல முடியாது. அதே போல இன்னொருத்தியின் கணவனை வேறு பெண் உரிமை கோர முடியாது. வயது வந்த பெண்ணையோ ஆணையோ வற்புறுத்தி திருமணம் செய்து வைக்க முடியாது. இன்னோரன்ன ஏராளமான சட்டதிட்டங்கள் இருக்கின்ற போதிலும். தமது வாழ்க்கையை வாழ முடியாமல் தற்கொலை செய்வோரைப்பற்றி நாம் அடிக்கடி என்ன தினசரி கேள்விப்படுகிறோம் எங்கோ தொலைவில் என நாம் கேட்டதெல்லாம் இப்போது எமது அயலிலும் என்பதாக தொடர்கிறது.

இருவரும் காதலித்தனர். இருவருமே சம்பளம்பெறும் அரச ஊழியர்கள். திருமணம் செய்து கொண்டு வாழ முடியாமல் ஒரே கையிற்றில் தூக்கில் தொங்கி விட்டார்கள். பரீட்சை பெறுபெறு நன்றாக வராது என நினைத்த சிறுமி தூக்கில் தொங்கினாள். நுண்கடன் வாங்கிவிட்டு அதை கட்டமுடியாமல் தற்கொலை செய்து கொண்டார்கள். கணவன் சுடு சொற்களை சொல்லிவிட்டான் என்பதற்காக பச்சைக் குழந்தைகளை விட்டுவிட்டு தாய் தூக்கில் தொங்கினாள். இதெல்லாம் நடந்து முடிந்த பின் பெற்றோர் கதறும் அந்த பரிதாப காட்சி இருக்கிறதே படுமோசம். தென்னிந்தியாவில் அநேகமாக பெண்கள் காஸ் அடுப்பு வெடித்து இறக்கிறார்கள். அரசியல் காரணங்களுக்காக மின் கம்பங்களில் தொலைபேசி கோபுரங்களில் ஏறி தற்கொலை செய்கிறார்கள். எங்கு நடந்தாலும் தற்கொலைகள் அனைத்துமே சட்ட விரோதமானவைதான். தற்கொலை செய்ய முயலுவது குற்றம். தற்கொலைக்கான முயற்சியை செய்பவர்களை கைது செய்து அவர்களுக்கு மனநல சிகிச்சை அளிப்பது கட்டாயமானது.



சென்ற வாரம் இணையத்தில் ஒரு செய்தி பார்த்தேன். ஒரு பெண் தனக்கு காணி தரவில்லை என்பதற்காக, தற்கொலை செய்ய முயன்றிருக்கிறார். பாவம் அந்த பெண்ணுக்கு மனநலம் பாதிக்கப்பட்டிருக்கலாம். அவரது கோரிக்கை அப்படிப்பட்டது. எங்களது இரக்கமுள்ள குற்றப்புலனாய்வுத் துறையினர் கூட்டமாக வந்து அந்தப்பெண்ணை காப்பாற்றி, அவரது கோரிக்கையை பிரதேச செயலருடன் கலந்துரையாடி அவருக்கொரு காணி வழங்க முடிவெடுத்திருக்கிறார்களாம். இது இணையத்தில் வந்த செய்தி. படங்களும் போட்டிருந்தார்கள்

ஏராளமான மக்கள் போராட்டங்கள் அந்த அலுவலகங்களின் முன்னராக நடந்திருக்கின்றன. பல கிராம வாசிகள் கூட்டம் கூட்டமாக போராடியதையும் நான் கண்டிருக்கிறேன். இனி அவர்களும் இப்படி ஒரு வழியை கையாளலாம் என்று கூறியிருக்கிறது இந்தச்சம்பவம். மேற்படி போராட்டமும் தற்கொலையை தடுத்து நிறுத்திய குற்றப்புலனாய்வுத் துறையினரும், நல்ல நோக்கத்தோடு நடந்து கொண்டிருப்பதால். மக்களது நன்மதிப்பை பெற்றிருப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

இந்த சம்பவங்களின் அடிப்படை மிகவும் பேசப்படவேண்டியதுதான். காணி வழக்கு கோட்டுக்குப் போனால் தீர்ப்பு வரும்போது வழக்காளியின் பேரன்தான் அதை பெறுவார். அவ்வளவு காலம் எடுக்கும் என்பது உலக நடைமுறை. அட விடுங்கப்பா காணிக்கென கச்சேரி ஒன்றிருக்கிறது. அதற்கு சர்வ வல்லமை பொருந்திய அதிகாரிகள் கடமையிலுமிருப்பார்கள். ஆனால் கடமை? கோர்ட் பிச்சை வாங்க வேண்டும். ஒரு தந்தை தன் மகளுக்கொரு காணியை சீதனமாக கொடுத்தார். அதை அவளது பெயருக்கு மாற்ற, அதாவது தந்தை தான் பெற்ற மகளுக்கு மாற்றி அனுமதிப்பத்திரம் பெற ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாயிற்று. இப்போது அந்த நிலம் அவர்களுக்கு அரசால் வழங்கப்பட்டு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாயிற்று. ஆச்சா அதற்கு உறுதிப்பத்திரம் பெற இன்றுவரை முடியவில்லை. சுமார் இருபத்தைந்து வருடங்களாக முயற்சியிலிருக்கிறார்கள். அனைத்து மக்களுக்கும் இதுதான் நிலைமை.

புதிதாக இப்போது ஜனாதிபதி காணி அனுமதிப்பத்திரங்களை விரைந்து வழங்குமாறு பணித்துள்ளார். வாய்வழி வழங்கும் கட்டளைகளை சுற்றறிக்கையாக கொள்ள வேண்டும் என்பதும் இதில் அடக்கம். என்ற செய்திகள் மகிழ்ச்சியை தருகிறது. ஆனாலும் எங்கள் அதிகாரிகள் அங்கிருந்தும் இங்கிருந்தும் கடிதம் கடிதமாக போட்டு (கணனிகள் பாவம் அவை மேசைகளை அலங்கரிக்கவே) கைதர் கால நடைமுறைகளை கடைப்பிடிக்கும் வரை இதுதான் நிலை.

2018ம் ஆண்டு குருநாகல் பிரதேசசபைக்கும், நகர சபைக்கும் சிறந்த சபைகளுக்கான முதற்பரிசு கிடைத்தது. நாங்கள் அங்கு நேரில் சென்று அவர்களுடைய விரைவான சேவைக்கு என்ன காரணம் என்று கேட்டோம். அவர்கள் சுருக்கமாக சொன்ன பதில் அவர்களது நடவடிக்கைகளை (கணனி மயப்படுத்தியுள்ளோம்) என்பதுதான். மக்களுடைய உரிமைகள் நிறைவேற்றப்படுவதில் தாமதம் இல்லை என்றார்கள். என் தந்தை ஒரு கருத்துக்கூறுவார். ஒரு சிவில் வழக்கு காலத்தை நீடிக்க பல குற்ற வழக்குகள் பெருகிவரும். வாழ்க்கையை வாழ எவ்வளவு பிரச்சினைகள் மண்டையை குடைகிறது. சட்டங்கள் பட்டங்கள் என்பதெல்லாம் மக்கள் வாழ்வதற்கான ஆதரமே. அவை எப்போது மக்களுக்கானதாக முழு மனதோடு வழங்கப்பட ப்போகிறது.



அன்றாடம் மாறிவரும் உலகில், மாணவர்கள் பல அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர். இவ்வழுத்தங்களால் மாணவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். பிரச்சினைகளில் இருந்து மீள வழி தெரியாது போதைக்கு அடிமையாகி விடுகின்றனர். போதையில் மிதப்பது பிரச்சினைகளில் இருந்து மீள வழிவகுப்பதாக அவர்கள் எண்ணுகின்றனர்.

பாடசாலைக்குச் சென்று பல்கலைக்கழகம் முடித்து பட்டதாரிகளாக வருவதற்கு பதிலாக போதைக்கு அடிமையாகி பரிதாபகரமாக வாழ்க்கையைத் தொலைக்கின்றனர். மாணவர்கள் தங்களது இளமைப்பருவத்தில் அட்டகாசங்களைப் பற்றி சிந்திக்கின்றார்களே தவிர அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி சிந்திப்பதே இல்லை. பலர் போதைக்கு அடிமையாவதன் காரணமும் அதுதான்.

எந்த வொன்றையும் அனுபவித்து பார்க்க வேண்டும் என்ற ஆசையும் ஆவலும் சில நேரம் அவர்களது அழிவுக்கே காரணமாகி விடுகிறது. போதைப்பொருட்களினால் தனிமனிதன் குடும்பம் சமுதாயம் என எல்லா வகைகளிலும் பாதிப்புக்களே ஏற்படுகின்றன. 1000 பேரில் ஒருவர் என்ற அடிப்படையில் மாணவர்கள் புகைத்தல் பாவனைக்கு பழக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் மூலம் அறியமுடிகின்றது. இலங்கையில் 13 – 15 வயதுக்கு உட்பட்ட அதிகமான பாடசாலை மாணவர்கள் புகைத்தல் பழக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவருகின்றது.

# போதைவஸ்து பாவனையும் இன்றைய சமுதாயமும்

போதைப் பொருட்களில் மது, ஹெரோயின், பெத்தனால், ஊசி, கஞ்சா, புகையிலை, பான் மசாலா, அபின், போதை தரும் இன்ஹேலர்கள் மற்றும் இன்னும் பல வகைகள் அடங்கும்.

### போதையினால் ஏற்படும் விளைவுகள்

பள்ளிப் பருவத்திலோ அல்லது கல்லூரிகளிலோ படிக்கும் போது தீய நட்பினால் ஏற்பட்ட பழக்கங்களினாலும் பொழுது போக்காகவும் ஏற்படுத்திய பழக்கங்களை இன்று வரை விட்டு மீளமுடியவில்லை என வருத்தப்பட்டுக் கொள்பவர்களும் இருக்கின்றார்கள். பலமுறை இத் தீய பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும் என முயற்சி எடுத்து தோற்றுப் போனவர்களும் இருக்கின்றார்கள். ஒன்றை தவிர்க்க மற்றொன்றை பயன்படுத்தி அதையும் சேர்த்து அடிமையாகிக் கொண்டவர்களும் இருக்கின்றனர்.

இத்தகைய போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை சமுதாய அந்தஸ்து அலுவலக வேலை நட்பு உறவினர்கள் மற்றும் தொடர்புகள் என எல்லாவற்றிலும் விரிசல் ஏற்பட்டு விடுகிறது. போதைக்கு அடிமையாகி இளமையிலே இறந்தவர்கள் அதிகம் அதிகம். எல்லோருக்கும் எளிமையாகவும் பரவலாகவும் கிடைத்துவிடும் போதைப் பொருள்தான் சாராயம் மற்றும் அதைச் சார்ந்த மது வகைகள். இந்த பழக்கத்துக்கு மாணவர்கள் தற்போது பள்ளிப் பருவத்திலேயே அடிமையாகிவிடுகின்றனர்

மேலை நாட்டுக் கலாசாரம் உயர்வானது எனக் கருதுவதும் இப்பழக்கத்திற்கு ஒரு காரணமாகும். இளம் வயதில் பழகிக் கொள்ளும் இத்தகைய பழக்கங்கங்கள் மெல்ல மெல்ல இவர்களை போதைக்கு அடிமையாக்கி விடுகிறது.

இவ்வாறான போதைப்பழக்கத்தினால் முதலில் பாதிப்படைவது நரம்பு மண்டலம் மூளைக்குச் செல்லும் நரம்புகளைப் பாதித்து நினைவாற்றலைக் குறைக்கின்றது. இதன் காரணமாக சீரான இதயத் துடிப்பு பாதிக்கப்பட்டு இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. உடலில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களினால் இதைப் பாவிப்பவர்கள் மனதளவில் தன்னம்பிக்கை இழக்கின்றார்கள். உடல் சோர்வடைதல் குற்ற உணர்ச்சி தனிமையை நாடுவது போன்ற அவல நிலைக்கு தள்ளப்படுகின்றனர். போதைப் பொருட்களினால் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள் சமுதாயம் மற்றும் குடும்பத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் என பலவகையான தீமைகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

உலக நாடுகளில் போதைப்பொருட்கள் கடத்தலுக்கு எதிராக கடுமையான சட்டம் கொண்டு வரப்பட்டு கட்டுப்படுத்தி வருகின்றன. இருப்பினும் கஞ்சா ஹெரோயின் போன்ற பொருட்களை விற்பதும் பிற நாடுகளுக்கு கடத்துவதும் இதுவரையிலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. கல்லூரி வாசல்களிலும் பாடசாலையை அண்டிய இடங்களிலும் கஞ்சா இனிப்பு வகைகள் விற்கப்படுவதையும் விற்பவர்களை கைது செய்வதையும் நாளுக்கு நாள் பத்திரிகைச் செய்திகளைப் படிப்பதன் மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது.


பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பொருட்கள் பாவிப்பது இன்று வேகமாகப் பரவி வருகின்றது. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் பற்றி உரிய கவனம் எடுக்காத பட்சத்தில் இனிவருங்காலங்களில் அவர்களுக்கிடையில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் என்பது முடியாததொன்றாகும். ஆதனால் போதைக்கு எதிராக பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தானில் இருந்து கொண்டு வரப்படும் போதைப் பொருட்களை ஐரோப்பாவிற்கு கடத்தும் முக்கிய மையங்களாக கொழும்பு மற்றும் மாலே இருப்பது தெரியவந்துள்ளது.

அநேகமாக சட்ட விரோதமான கடத்தல்களின் பின்னால் செல்வாக்கு மிக்க பெரும்புள்ளிகள் இருப்பதினாலும் இதனை இல்லாதொழிப்பது கடினமானதாகவே மாறி வருகின்றது. போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் தீங்குகளும் பாதிப்புக்களும் அழிவுகளும் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஜுன் 26 ஆம் திகதி சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்பதற்கு அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற அமைப்புக்களும் பல்வேறு சேவைகள் வழங்கி வருகின்றன. போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்கு போதைக்கு முற்றுப் புள்ளித் திட்டம் மட்டும் போதுமானதல்ல சகலரது பூரண ஒத்துழைப்பின் மூலமே போதைப் பொருள் ஒழிப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.

நல்ல ஆரோக்கியமான சமுதாயம் அமைய அனைவரும் ஒன்றுபட்டு போராட வேண்டியது அவசியம்.



எம். நவீணா




# எனக்கென்று ஒரு உலகம்

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் பல தமிழ்ப் படங்கள் தயாரிப்பிலிருந்தன. அவற்றில் 'எனக் கென்று ஒரு உலகம்' என்ற படமும் முக்கியமானது.

ஏற்கனவே வெளிவந்த 'வெண் சங்கு' திரைப்படத்தில் ஏ. கணேசானந்தன் பங்குபற்றியிருக்கிறார். அவர் தயாரித்த திரைப்படம் தான் 'எனக்கென்று ஒரு உலகம்'.

ஏற்கனவே பல சிங்கள தமிழ்ப் படங்களை இயக்கியிருந்த எஸ். இராமநாதனே இப்படத்தையும் இயக்கியிருந்தார். ஒளிப்பதிவை லெனின் டி கொஸ்தா பொறுப்பேற்றிருந்தார். இவர்தான் ஏற்கனவே வெளிவந்த 'புதிய காற்று' திரைப்படத்தை ஒளிப்பதிவு செய்தவர்.

அந்தக் காலத்தில் இலங்கையில் 'கீதா' என்ற சினிமாச் சஞ்சிகை வெளிவந்து கொண்டிருந்தது. அதன் ஆசிரியர்களாக தமிழ் நெஞ்சனும் ஜெயசீலனும் விளங்கினார்கள்.

இந்த ஜெயசீலனே இப்படத்துக்கான கதைவசனங்களை எழுதி உதவி இயக்குனராகவும் செயற்பட்டார்.

அனுபவப்பட்ட பல கலைஞர்கள் நடிகர்களாக தெரிவு செய்யப்பட்டனர். டீன்குமார், அலெக்சாண்டர் பெர்ணான்டோ, கலைச் செல்வன், தேவ்கணேஷ், ஏகாம்பரம், டொன்பொஸ்கோ போன்றோர் நடிகர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சந்திரகலா, பரீனாலை, செல்வம் பெர்ணான்டோ, ஜெயதேவி என்று பலர் நடிகைகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பெரும்பாலும் சினிமா அனுபவம் உள்ள கலைஞர்களே படத்துக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார்கள்.

ஒரு பாடகனைப் பற்றிய கதை என்பதால் திரைப்படத்தின் பாடல்கள் இனிமையாக அமைய வேண்டும் என்பது தயாரிப்பாளர்களின் விருப்பமாக இருந்தது.

அதனால் ஒன்று இரண்டு அல்ல நான்கு இசையமைப்பாளர்களை ஒழுங்கு செய்தனர். ஆர். முத்துசாமி, எம்.கே. றொக்சாமி, கண்ணன் நேசன் ஆகியோரே அந்த இசை அமைப்பாளர்கள்.

இவர்கள் அனைவருமே ஒன்று சேர்ந்து ஒன்பது பாடல்களை ஒலிப்பதிவு செய்தனர்.

ஏழைக்குடும்பம் ஒன்றுக்கும் பணக்காரக்குடும்பம் ஒன்றுக்கும் இடையே இடம்பெறும் உயர்வு தாழ்வுப் போராட்டம் தான் படத்தின் கதைக் கரு.



கதாநாயகன் அலெக்சாண்டர் பெர்ணான்டோவும் ஏகாம்பரமும்



டீன்குமாரும் எம். ஏகாம்பரமும்

தேவ் பிலிம்ஸ் சார்பில் ஏ. கணேசானந்தன் தயாரித்த 'எனக்கென்று ஒரு உலகம்' திரைப்படத்தின் ஐம்பது சத வீத படப்பிடிப்பு வேலைகள் முற்றுப் பெற்றிருந்தன.

தயாரிப்பாளர் ஏ. கணேசானந்தனின் மகன் தேவ் கணேஷ் பிரதான பாத்திரத்தில் நடித்தார்.

படத்தின் ஆரம்ப பகுதியில் தேவ் கணேஷ் கதாநாயகனாகவும் பிற்பகுதிக்கு அலெக்சாண்டர் பெர்ணான்டோ கதாநாயகனாகவும் நடித்தார்கள். இவர்களுடன் டீன்குமார், எஸ். என். தனரெத்தினம், கலைச் செல்வன், ஏகாம்பரம், டொன் பொஸ்கோ, ஜெயதேவி ஆகியோரும் நடித்தனர். பாடகனைப்பற்றிய கதை என்பதால் வி. முத்தழகு, எம்.ஏ.குலசீலநாதன், அமுதன் அண்ணாமலை, ஸ்ரனி சிவாந்தன், எஸ். கலாவதி ஆகியோர் பின்னணி பாடினர்.

பத்திரிகைகள் எல்லாம் இப்படத்தைப் பற்றி பெரிதாக எழுதின. தகவல்களை வெளியிட்டன. விளம்பரங்களையும் வெளியிட்டன.

'படம் விரைவாக வெளிவருகிறது' என்ற விளம்பரமும் வந்தது.

அதைவிட விரைவாக 1983 ஜூலைக்கலவரம் வந்து விட்டது. இந்தக் கலவரத்தில் 'எனக்கென்று ஒரு உலகம்' திரைப்பட ரீல்களும் எரிந்து விட்டன.

எங்கள் திரைப்படக் கலைஞர்கள் எடுத்த பெரு முயற்சிகள் இறுதியில் தீ நாக்குக்கு இரையாகின.

# இலங்கையின் முதலாவது உயிரியல் தொழில்நுட்ப உற்பத்தி ஆலையை நிறுவவுள்ள ரதெல்ல ஹோல்டிங்ஸ்




இலங்கையின் முதலாவது உயிரியல் தொழில்நுட்ப உற்பத்தி ஆலையை நிறுவ ரதெல்ல ஹோல்டிங்ஸ் முன்வந்துள்ளது. ரதெல்ல ஹோல்டிங்ஸ் குழுமத்தின் துணை நிறுவனமான பிரீமியம் இன்டர்நஷனல் இன்ஜெக்டபிள் கம்பனி (பிரைவட்) லிமிடெட் மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுடன் இணைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் இந்த ஆலையின் செயற்பாடுகளை முன்னெடுக்கப்படும். கொக்கல ஏற்றுமதி பதப்படுத்தல் வலயத்தில் இந்த ஆலையை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மருந்துப்பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, கிராமிய மற்றும் பாடசாலைகள் விளையாட்டு உட்கட்டமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பெருந்தோட்டத் துறை அமைச்சர் கலாநிதி. ரமேஷ் பத்திரன ஆகியோர் கலந்து கொண்டனர்.

3.5 பில்லியன் ரூபாய் பெறுமதியில் உயிரியல் தொழில்நுட்ப உற்பத்தி ஆலை நிறுவப்படவுள்ளது. இதற்கான முழு முதலீடும் உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆலையில் 200க்கும் அதிகமான விசேடத்துவம் வாய்ந்த பயிற்சிகளைப் பெற்ற நிபுணர்கள் பணியாற்றுவார்கள். இந்த ஆலையின் உற்பத்தி செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் சகல தொழில்நுட்பங்களும் நவீன மயப்படுத்தப்பட்டதாகவும், ஐரோப்பாவின் உயர் நியமங்களின் பிரகாரமும் அமைந்துள்ளன.

இந்த ஆலையில் உற்பத்தி செய்யப்படும் தயாரிப்புகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாத காலப்பகுதியினுள், உள்நாட்டு தேவையை நிவர்த்தி செய்வதாக அமைந்திருக்கும். உள்நாட்டு தேவைக்கு மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் தயாரிப்புகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு பெறுமதி வாய்ந்த அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்ள வழிகோலும்.

இந்த புதிய ஆலை, உலகப் புகழ்பெற்ற SCADA கட்டமைப்புகளைக் கொண்டிருக்கும் என்பதுடன், ஆலையின் சகல செயற்பாடுகளை கண்காணிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இந்த நடவடிக்கை உயர் மட்ட தரக்கட்டுப்பாட்டை உறுதி செய்வதுடன், உற்பத்தி தொடர்பான சகல பதிவுகளும் முற்றிலும் தன்னியக்கமானவையாக அமைந்திருப்பதுடன், சீரான செயற்பாட்டையும் உறுதி செய்யும்.

# உள்நாட்டு திரவ பால் தேவையை பூர்த்தி செய்யும் ஜனாதிபதியின் உறுதிமொழிக்கு Pelwatte Dairy ஆதரவு




உள்நாட்டு பாலுற்பத்தியை மேம்படுத்துவதற்கும், அடுத்த தசாப்தத்தில் உள்நாட்டு திரவ பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அண்மைய உறுதிமொழியை Pelwatte Dairy ஆதரிக்கின்றது. அரசாங்கத்தின் தேசிய கொள்கை கட்டமைப்பான 'செழுமை மற்றும் மேன்மைக்கான நோக்கு', அரச, தனியார் துறை மற்றும் சிறு பால் விவசாயிகளுடன் இணைந்து திரவ பாலுக்கான உள்ளூர் தேவையை பூர்த்தி செய்யும் குறுகிய மற்றும் நீண்ட கால திட்டங்களை உள்ளடக்கவுள்ளது.

Pelwatte Dairy அனைத்து சிறு அளவிலான விவசாயிகளுக்கும் தனியார் பண்ணைகளுக்கும் உத்தரவாத கொள்வனவாளர் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் பால் பண்ணைத் துறையை ஆதரிப்பதில் உறுதியாக உள்ளது. மேலும் அவர்களை உயர்த்தும் பொருட்டு அவர்களின் தயாரிப்புகள் எப்போதும் போட்டித்தன்மையாக விலையிடப்படும்.

எங்கள் பெறுமதி சங்கிலியின் மிக முக்கியமான கூறுகள் விவசாயிகள். இந்த காரணத்தினாலேயே, Pelwatte Dairy Industries இல் இந்த ஏழை சமூகங்களின் சமூக பொருளாதார தரத்தை உயர்த்துவதில் தீவிர கவனத்துடன் பால் விவசாயிகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் நாங்கள் பெருமளவில் முதலீடு செய்கிறோம். புல் வகைகளை வளர்த்தல், கறவை பசுக்களை இனப்பெருக்கம் செய்தல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் சேவைகளை மேம்படுத்தல் போன்ற அண்மையில் ஜனாதிபதி கலந்துரையாடிய முயற்சிகளை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்.

பால் பண்ணைத் துறையை வலுவூட்டல் மற்றும் அதனோடு தொடர்புபட்ட சமூகங்களை நோக்கி பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதைப் பார்ப்பது மிகவும் திருப்தியளிக்கின்றது. Pelwatte அந்த பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் மிகவும் பெருமைப்படுகிறது," என Pelwatte Dairy Industries இன் முகாமைத்துவ பணிப்பாளர் அக்மால் விக்ரமநாயக்க தெரிவிக்கின்றார்.

வாடிக்கையாளரைப் பொருத்தவரையில், எப்போதும் உலகளவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரங்களுக்கு இணங்கும் மிக உயர்ந்த தரமான தயாரிப்புகளை வழங்க Pelwatte Dairy பாடுபடுகின்றது.

## வட இந்திய மற்றும் தென்னிந்திய சுவைகளுடன்

# துவாரகா உணவகம் கல்கிஸையில் திறப்பு



வட இந்திய மற்றும் தென்னிந்திய சுவைகள் நிறைந்த துவாரகா உணவகத்தின் இரண்டாவது கிளை அண்மையில் இல 10, பழைய குவாரி வீதி, கல்கிஸ்ஸ என்ற முகவரியில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கு மேற்பட்ட விருந்தினர்களுக்கு ஒரே நேரத்தில் அமர்ந்து உணவருந்தும் இடவசதிகளுடன் குளிரூட்டப்பட்ட சகல வசதிகளையும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கல்கிஸ்ச துவாரகா உணவகத்தில் வட இந்திய மற்றும் தென்னிந்திய உணவுகளை சமைப்பதில் கைதேர்ந்த சமையற் கலை வல்லுனர்கள் பலர் வட இந்தியாவிலிருந்தும் தென்னிந்தியாவிலிருந்தும் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

வட இந்திய மற்றும் தென்னிந்திய உணவுகளை அதன் அசல் சுவையுடன் வாடிக்கையாளர்களுக்கு பரிமாறும் நோக்கில் இவ்வாறு இந்திய சமையற்கலை வல்லுனர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதோடு, காலை 10 மணி தொடக்கம் இரவு 11 மணி வரை இந்த உணவகம் திறந்திருக்கும். துவாரகா தலைமை கிளை இல 37, ஜாயா வீதி, கொழும்பு 04 முகவரியில் அமைந்துள்ளதோடு காலை 7.00 மணி முதல் இரவு 10.30 வரை திறந்திருக்கும்.

பிரத்தியேகமாக குழுவாக உணவருந்தும் வகையில் 25 விருந்தினர்களுக்கான வசதிகளை கொண்ட இரண்டு விஷேட அறைகளையும் கொண்டுள்ள துவாரகா உணவகத்தில் உங்களுக்கு பல்வேறு சுவைகளிலான நாண் ரொட்டிகள், பராட்டா, மசாலா, செட்டிநாடு, பன்னீர், தோசை, இடியப்பம், சோறு, நூடில்ஸ், ப்ரைட் ரைஸ், கொத்து ரொட்டி, வடை, சூப், புரியாணி, சோர்ட் ஈட்ஸ், ஸ்டார்ட்டர்ஸ், சேலட், ரைட்டா, பழச்சாறுகள், லெசீ, குளிர் பானங்கள், பால், தேநீர் மற்றும் கோப்பி பானம் உள்ளிட்ட ஏராளமான சுவைமிகு உணவு வகைகளை நியாயமான விலையில் பெற முடியும்.

UBER மற்றும் PICK ME ஊடாகவும் இங்கிருந்து நீங்கள் விரும்பும் உணவு வகைகளை தமது வீடுகளுக்கே தருவித்துக்கொள்ள முடிவதோடு, துவாரகா உணவகத்துக்குச் சொந்தமான விநியோக வலையமைப்பொன்றும் இயங்கி வருகிறது.

# நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பிரசன்ன தல்வத்த நியமனம்



நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி பிரசன்ன தல்வத்த அதன் இயக்குனர் குழாமின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளதாக நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி அறிவித்துள்ளது.

பிரசன்ன தல்வத்த 17 வருடங்களாக நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியின் நிறுவன முகாமைத்துவ குழுவில் தனித்திறனுடன் பல செயற்பாடுகளை மேற்கொண்டதோர் சிரேஷ்ட அதிகாரி என்பதோடு 2020 ஏப்ரல் 02 பிரதம நிறைவேற்று அதிகாரி பணிகளை பொறுப்பேற்றிருந்தார்.

வாடிக்கையாளர் வங்கியியல் செயற்பாடுகளுக்கு தலைமைத்துவத்தினை வழங்கி மேற்பார்வை செய்த அவர், வங்கியினுள் சேவை மற்றும் விற்பனை நோக்குடனான பல செயற்பாடுகளையும் மேற்கொண்டார். அதுமட்டுமின்றி, வங்கியின் கிளை வலையமைப்பினை வலுப்படுத்திட மற்றும் டிஜிட்டல் வங்கியியலுக்கான சுயாதீன பங்களிப்பினையும் தொடர்ச்சியாக வழங்கி நிறுவனத்தின் தொடர் வளர்ச்சிக்கு சிறந்ததோர் பங்களிப்பினை வழங்கிய அதிகாரியாவார்.

இலங்கையினுள் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கார்ட் நாமத்தினை நிலைநிறுத்திட நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியின் சார்பில் பிரதான பங்களித்ததோர் அதிகாரியாகவும் பிரசன்ன தல்வத்தவை அறிமுகப்படுத்திடலாம். அத்தோடு, அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அட்டையினை வழங்கிடல் மற்றும் மீள்பெற்றிடல் பிரிவுகளை நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினை முன்னிலையில் திகழ அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் விசேடத்துவமுடையது.

தல்வத்த ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் போஸ்டன் ஹார்வட் வியாபார பாடசாலையில் (AMP 196) பழைய மாணவர் என்பதோடு, ஐக்கிய இராச்சியத்தின் பட்டய விற்பனை நிறுவனத்தின் (CIMUK) தகமையுடைய விற்பனையாளருமாவார். Lanka Clear (PVT Limited, Waldock Mackenzie Limited (WML), Allied Properties Limited (APLI) மற்றும் Nations Insurance Brokers Limited (NIBL) போன்ற நிறுவனங்களின் இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார்.

# செலான் வங்கி 'Merchant Portal' சேவைகளை பெற்றுக்கொள்ளும் அமெரிக்கன் எடியுகேஷன் சென்டர்

செலான் வங்கி, டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு பாதுகாப்பான மற்றும் வசதியான தேர்வை வழங்கும் முதலாவது முழுமையான மற்றும் பல்நோக்கு டிஜிட்டல் கட்டண தளமான 'Seylan Merchant Portal' மூலம், அமெரிக்கன் எடியுகேஷன் சென்டர் லிமிடெட் (ANC) இன் கொடுப்பனவுகளை எளிதாக்க உதவியுள்ளது.

அமெரிக்க மற்றும் அவுஸ்திரேலிய இளங்கலை மற்றும் முதுகலை திட்டங்களை உள்ளடக்கிய ANC எடியுகேஷன் முதன்மை வளாகத்திற்கும், இறுதி ஆண்டு மாணவர்களுக்கான SQA மற்றும் UWL திட்டங்களை வழங்கும் கண்டி மற்றும் மாயா அவென்யூ கிளை வளாகங்களுக்கும் செலான் வங்கி தனது சேவைகளை வழங்குகிறது. ஒரு முழுமையான தனிப்பயனாக்கக்கூடிய கட்டண தளத்தின் மூலம், ANC வலைத்தளத்தின் மூலம் ஒரே 'கிளிக்' கிள் பணமில்லா கொடுப்பனவுகளை தடையின்றி மேற்கொள்ளும் வாய்ப்பை Seylan Merchant Portal வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.

கட்டண துவக்கங்கள் மற்றும் தகவல்தொடர்புகளின் டிஜிட்டல் மயமாக்கல் Seylan Merchant Portal இன் மற்றொரு முக்கிய அம்சமாகும். அதன் பயனர்களை மையமாகக் கொண்ட வடிவமைப்பு மூலம் கட்டண இணைப்புகளைப் பகிரும்போது அல்லது பல்வேறு தகவல் தொடர்பு சேனல்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நினைவூட்டல்களைப் பகிரும்போது, தளத்தை எளிதாக அணுகுவதை உறுதி செய்கிறது.

இலங்கையின் வங்கித் துறையில் நவீன டிஜிட்டல் வர்த்தகத்தில் முன்னணியில் இருக்கும் செலான் வங்கி, நவீனகால டிஜிட்டல் வர்த்தகத்திற்கு ஏற்ற தீர்வுகளைக் கொண்டு நாட்டின் வணிக சமூகம் மற்றும் நாட்டின் தொழில்முனைவோருக்கு உதவுவவதை நம்புகிறது. Seylan Merchant Portal ஐ பயன்படுத்துவதன் மூலம், வாடிக்கையாளர் அனுபவத்தையும் வசதியையும் மேம்படுத்துவதை செலான் வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது.

டிஜிட்டல் பொருளாதாரத்தின் எதிர்காலத்தை எதிர்கொள்ளும் தீர்வுகளைக் கொண்டு இலங்கையர்களை இயக்குவதற்கும் மேம்படுத்துவதற்குமான அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கியின் நோக்கம் Seylan Merchant Portal மூலம் மேலும் முன்செல்கிறது.

# Big Bad Wolf ஒன்லைன் புத்தக விற்பனை; இன்று இறுதி நாள்




உலகின் பிரமாண்ட புத்தக கண்காட்சியாக அறியப்படும் Big Bad Wolf புத்தக விற்பனை இம்முறை ஒன்லைனில் நடைபெறுகிறது. தெற்காசியாவில் முதன் முதலில் ஒன்லைன் மூலமான இந்த விற்பனை, முதலில் ஒக்டோபர் 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட திட்டமிடப்பட்டிருந்த நிலையில் வாசகர்களின் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கிணங்க செப்டம்பர் 30 ஆம் திகதியன்று இரவு 08:00 மணிக்கு (IST) ஆரம்பமானது. இதன் மூலம் புத்தக பிரியர்கள் தீர்மானிக்கப்பட்டதை விட முன்கூட்டியே புத்தக விற்பனையை அணுக முடியும் மற்றும் பிரபலமான 50 முதல் 90%மான Big Bad Wolf புத்தக விற்பனை தள்ளுபடியை தொடரின் முந்தைய தொடர்களை விட மூன்று மடங்கு அதிக புத்தக தலைப்புகளுக்கு இம் முறை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இலங்கையில் நான்காவது முறையாக இடம்பெறும் இந்த புத்தக விற்பனையானது இம்முறை www.bigbadwolfbooks.lk ஒன்லைன் தளத்தின் மூலமாக இடம்பெறுவதுடன், இது கொவிட் சவாலை வெற்றிகரமாக முறியடிக்கின்றது.

மேலும், ஒன்லைனில் ஓர்டர் செய்யப்பட்ட அனைத்து புத்தகங்களுக்கும் சர்வதேச கப்பல் கட்டணம் அறிவிடப்பட மாட்டாது. மேலும் வியக்கத்தக்க குறைந்த கட்டணத்தில் வீட்டு வாசல்களுக்கே விநியோகிக்கப்படும். ரூபா 8000 இற்கும் அதிக ஒரே பரிவர்த்தனைக்கு உள்நாட்டு விரைவு அஞ்சல் கட்டணங்கள் எதுவும் அறவிடப்படாது. இந்த செயற்பாடுகளில் தெரிந்தெடுக்கப்பட்ட புத்தகங்களில் இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம் மற்றும் பல பல் கொள்வனவு டீல்கள் ஆகியவை கிடைக்கின்றன.

புத்தகபிரியர்கள்www.bigbadwolfbooks.lk மூலம் புத்தகங்களை அணுகலாம், மேலும் பிக் பேட் ஓநாய் புத்தக விற்பனை தொடர்பான பிந்திய விபரங்கள் மற்றும் போட்டிகளை Facebook ww.facebook.com/bbwbookssrilanka மூலம் மற்றும் Instagram www.instagram.com/bigbadwolfbooks_lk மூலம்பெற்றுக்கொள்ளலாம்.

# ஏழரைச்சனி

## உங்களுக்கு என்ன செய்யும்?

எதிர்வரும் மார்கழித் திங்கள் இறுதிவாரத்தில் சனிபகவான் கடந்த இரண்டரையாண்டுகாலம் தான் சஞ்சரித்த தனுராசியை விட்டு, தமது சொந்த வீடாகிய மகர ராசிக்கு இடம்மாறுகிறார். இதன்மூலம் மகரத்திற்கு முன்னாலுள்ள கும்பராசிக்காரர்களுக்கு ஏழரைச்சனியின் முதற்கூறும், மகரராசியினருக்கு அதன் நடுக்கூறும், அதன் பின்னுள்ள தனுராசியினருக்கு கடைக்கூறும் நடைபெறவுள்ளன. இதுதவிர நிகழும் செப்டெம்பர் மாதம் 19ம் 26ஆம் திகதிகளிலும் அக்டோபர் மாதம் 3ஆம் 10ஆம் திகதிகளிலும் வரும் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் இந்துக்கள் ஆலயங்களில் சனிக்கிரகத்திற்கு எள்எண்ணெய் எரித்து கிரகசாந்தி பூஜைசெய்தும், அங்கவீனர்களுக்கும், உதவி செய்வர். காலத்தை கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப்பின் என்று பிரிப்பது சரித்திரம். அதுபோல, வாழ்க்கையை ஏழரைச்சனிக்குமுன், ஏழரைச் சனிக்குப்பின் என்று பிரிப்பது சோதிடம்.

தான் பிடித்த ஒருவரை ஏழரையாண்டு காலம் துன்பத்தில் உழல வைத்து, எல்லாவற்றிலும் பட்டுத்தேறி பதப்படுத்தப்பட்ட ஒருவராக ஆக்கிவிடும் வல்லமை இந்தச் சனிக்கு உண்டு. ஏழரைச் சனியின் காலத்தை கடந்துவிட்ட ஒருவருக்கு வாழ்வில் ஏற்படும் தெளிவும் நிதானமும் ஆச்சரியமானது. பட்டுத்தேறிய முதிர்ந்த வார்த்தைகளால் அனுபவ பூர்வமாகப் பேசவும், கற்றுக் கொண்ட பாடங்களைக் கொண்டு நிதானமாக அடியெடுத்து வாழவும் வைக்கிறது அது.



நாம் பிறந்த ராசியிலும், அந்த ராசிக்கு முன்னும் பின்னுமுள்ள ராசிகளிலும் சனி சஞ்சரிக்கும் காலத்தையே ‘ஏழரைச்சனி’ என்பர். சிறுவயதில் வரும் முதல் சுற்றை மங்கு சனியென்றும் வாலிப, மற்றும் மத்திம வயதில் வரும் இரண்டாம் சுற்றை பொங்கு சனியென்றும் நடுவயது கடந்து வயதாகிவிட்ட காலத்தில் வரும் மூன்றாம் சுற்றை கங்குசனி அல்லது மரணச்சனியென்றும் அழைப்பர். (இவ்வாண்டில் கும்பராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனி முதல் கூறும், மகரராசிக்காரர்களுக்கு ஏழரைச்சனி நடுக்கூறும், தனு ராசிக்காரர்களுக்கு ஏழரைச்சனி கடைக்கூறும் நடக்கிறது.

ஒருவரின் சாதக நிலைப்படி பிறந்ததிலிருந்து 19 வயதுக்குள் ஏழரைச்சனிவந்தால் அதன் தாக்கத்தை தெளிவாக உணரலாம்.

இதில் சனியின் முழுத்திறமையும் வெளிப்படும். இவ்விதம் அமைந்த பையனோ பெண்ணோ யார் பேச்சையும் கேட்காமல் தான்தோன்றித்தனமாக நடப்பர், யாராவது கேட்டுக் கண்டித்தால் பெரிதாகக் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணுவார்கள். கூடித்திரிகிற, அல்லது வகுப்புகளில் கூடப்படிக்கிற பிள்ளைகளையும் இவர்கள்தான் கெடுக்கிறார்கள் என்ற மாதிரி புகார்கள் வரும், வீட்டில் எதற்கெடுத்தாலும் சண்டைக்கு முன்நிற்பர். தனது போக்கிற்கு இசையாத பெற்றோரை படியவைப்பதற்காக பட்டினிகிடத்தல் போன்ற சுய தண்டனைகளும் நடக்கும் சொறிசிரங்கு, காலில் புண்கள், முறிவு போன்ற சனிக்கே உரித்தான வியாதிகளும் விபத்துக்களும் ஏற்பட்டு சிகிச்சை செய்தும் குணமாகாது வருத்தும்.

இதனைவிட பெற்றோருக்குக்குள்ளும் இப்பிள்ளையை முன்னிட்டு சண்டை சச்சரவுகள், பிரிவுகள் வரும், அதுவும் மூன்றாம் நபரொருவரின் தலையீட்டால் வரும். அவரும் இந்த ஏழரைச் சனிகாலத்தில் அறிமுகமாகி குடும்பத்துக்கு நெருக்கமாகிப்போன ஒருவராயுமிருப்பார். அதனால் தேன் கூட்டில் கல்லெறிந்து கலைத்ததுபோல் ஆகிவிடும் குடும்பம்! இந்தக் காலகட்டத்தில் தான் பிள்ளைகள் கூடா நட்பில் சிக்கி அலைவார்கள். மதுபோதை, ஆபாசப்படம் என்று ஒரு மாயாலோகத்தில் சஞ்சரிப்பார்கள். இப்படியான சமயத்தில் கண்கொத்திப்பாம்பாயிருந்து கவனித்தால் ஒருவாறு அவர்களை மீட்க முடியும்.

இரண்டாவது சுற்று. 25வயதுக்குமேல் யாருக்கு ஏழரைச் சனி நடந்தாலும் அதற்குப் பெயர் பொங்கு சனி என்பதாகும். பறித்தலும் பாதுகாத்தலும் பல மடங்கு பெருக்குதலுமே இந்த இரண்டாவது சுற்றின் பலன். உள்ளுக்குள் அடங்கிக்கிடந்த ஆற்றல்களையெல்லாம் வெளிக்கொணர்ந்து செயற்பட வைப்பார். அவற்றின் மூலம் செல்வத்தை அள்ளிக் கொடுப்பார். இதனூடே கொஞ்சம் கெடுத்தும் விடுவார். அதனால் தான் கொடுத்துக்கொடுப்பவர், கெடுத்தும் கொடுப்பவர் என்ற பெயர் சனிக்கு உண்டு. “ஒண்டுக்குமே வழியில்லாத ஓட்டாண்டியா இந்த ஊருக்கு வந்தான்; இப்போது வீடுவாசல் வெள்ளாமை தோட்டம் துரவு,

### ஓர் இலகுவான சோதிட விளக்கம்

ஆடுமாடு என்று வசதியா இருக்கிறான். ஊர்லயும் அதிகம்பேர் அவனிட்டத்தான் வேலை செய்றானுகள்’ என்று ஒருவரைக் குறிப்பிட்டுவியந்து பேசுவோமே...? அவரை இந்த ஏழரைச்சனியின் இரண்டாவது சுற்றுத் தான் உருவாக்கும்.

காசு, பணம், துட்டு, பதவி, கல்யாணம், சொத்து, சுகம் எல்லாவற்றையும் கொடுப்பார் சனி, ஆனால் இடையிலேயே அவற்றிலிருந்து கொஞ்சம் கபளீகரம் செய்தும் திண்டாட வைத்துவிடுவார்.

இந்த இரண்டாவது சுற்று நடக்கிறபோது மிதமிஞ்சிய செல்வத்தாலும் செல்வாக்காலும் சிலர் பிரச்சினைகளை உருவாக்குவார்கள். ஆகவே இரண்டாவது சுற்றில் மலைபோல செல்வம் வந்தாலும் கவனமாக, எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

ஏழரைச் சனியாக சனிபகவான் நமக்குள் வந்தால் தான் நமது அறிவுக்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட விடயங்கள் இருக்கின்றன என்பதை உணர்வோம். அப்போதுதான் நம்கையில் எதுவுமில்லையென்ற சரணாகதித் தத்துவம் புரியும். ஏழரைச்சனி நடக்கிற காலகட்டத்தில் முக்கியமாக கோர்ட், கேஸ் என்று போகக் கூடாது. கடன்காரனிடமிருந்து ஒரு இலட்சரூபாவை வசூலிக்க நீதிமன்றம் போனால், பின்னர் அதற்காக பத்து இலட்சம் ரூபா வரை செலவு செய்ய நேரிடும். இதனால் பொலிஸ்காரர்களுக்கும் சட்டத்தரணிகளுக்கும் தான் உங்களால் ஆதாயம்! வசதிகள் இருக்கும்போது ‘நான்’ என்ற அகந்தையை தலையில் ஏற்றிக்கொள்ளக் கூடாது. மாளிகையில் வாழக்கிடைத்தாலும் குடிசையில் வாழுகின்ற மனோநிலையுடன் இருங்கள். எல்லாவற்றிற்கும் ஆசைப்பட்டு அடுத்தவர்களுடையதையும் வாரிச் சுருட்டும் போது, அதைப் பார்த்துக் கொண்டு சனி பகவான் சும்மா யிருக்கமாட்டார். அர்ப்பணிப்போடு அமைதியாக ஒரு நிறுவனத்தில் உழைத்துக் கொண்டிருந்த ஒருவர், தமது ஏழரைச் சனிக் காலத்தில் அந்த நிறுவனத்தையே சொந்தமாக்கிக் கொண்டதையும் நான் பார்த்திருக்கிறேன்.

இந்த இரண்டாவது சுற்றில் வியாபாரம் விருத்தியாக உத்தரவாதமுண்டு. ஆகவே இதர கோசார கிரகநிலைகளையும் அவதானித்து தொழில் தொடங்கலாம், அல்லது உள்ளதை அபிவிருத்தி செய்யலாம். குறுக்குவழிகள் வந்தாலும் பாதை மாறக் கூடாது. மாறினால் இனி அதலபாதாளந்தான்! பிரதிபலன் கருதாது செய்யும் உதவிகளுக்கும் தானதர்மங்களுக்கும் பொங்குசனி நல்ல பலன் கொடுக்கும்.

ஏறத்தாழ 50 வயதைத் தாண்டிவரும் ஏழரைச்சனியின் மூன்றாவது சுற்றுத்தான் உங்கள்வாழ்வின் இறுதிக்காலம் என்று யாராவது சொன்னால் அதற்காக அஞ்சாதீர்கள். சோதிடத்தில் சனி ஆயுட்காரகனாகவும், மரணகாரகனாகவும் இருப்பதால் தான் அப்படிக் கூறுகிறார்கள். உங்கள் சாதகத்தில் ஏற்கனவே ஆட்சி, உச்சம், கேந்திரம், கோணம் போன்ற ஏதாவதொரு வலுவான நிலையில் சனி அமர்ந்து, சுபக்கிரக பார்வையோ, அல்லது சேர்க்கையோ பெற்றிருந்தால் உங்களுக்கு தீர்க்காயுள்தான். அதாவது பூரண ஆயுள்தான். அதில் சந்தேகமில்லை.

அப்படியின்றி துர்ஸ்தானங்களில் சனி அமர்ந்து அசுபக் கிரகங்களின் பார்வையை அல்லது சேர்க்கையை பெற்றிருந்தால், அதுவே முதுமையில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும். விபத்து அல்லது பாரிசவாதம் வந்து கைகால்களை முடக்கிப் படுக்கையில் வீழ்தல். மனைவி மக்களுடன் மனம் கசந்து வீட்டினுள்ளேயே தனிமைப்படுதல், அல்லது வீட்டைவிட்டு வெளியேறி ஊருக்கு ஊர் பரதேசியாய் அலைதல், போர் கலவரம் போன்ற உள் நாட்டுப்பிரச்சினைகளில் சிக்கி எல்லாமிழந்து சித்தம் கலங்கி தனிமைப்படுதல், பிறநாடுகளில் சென்று ஆதரவற்று தனியே வாழ்தல், பிறநாடுகளில் சட்டவிரோதமாக குடியேற முயலும்போது பிடிபட்டு பலநாட்கள் சிறையில் வாடுதல் போன்ற விளைவுகள் சனி தீமையாய் அமைந்த சாதகர்களுக்கு முதுமையில் ஏழரைச் சனியும் நடக்கிற காலத்தில் ஏற்படும்.

வயதான காலத்தில் நெஞ்சில் பயத்தையும் படபடப்பையும் தரும் சுற்று ஏழரைச் சனியின் கடைக்கூறு ஆகும்! வழக்கத்தைவிட அன்றாட நடவடிக்கைகளில் ஒரு நிதானமும், உணவு, பான விடயங்களில் ஒரு கட்டுப்பாடும் ஏற்பட்டுவிட்டால் நீங்களும் இளைஞர்களுக்கு நிகராக சனி பயமின்றி வாழலாம். அதை விட்டு மாபெரும் சபைகளில் நான் நடந்தால் முன்போல் மாலைகள் விழவேண்டுமென்று இக்காலகட்டத்தில் எதிர்பார்க்கக்கூடாது. எங்கேயும் எப்போதும் தன்னைத்தாழ்த்திக்கொண்டு சேவைகள், பணிவிடைகள் செய்ய முந்திக் கொண்டு மற்றவர்களின் மனங்களில் உயரப்பழகிக் கொள்ளுங்கள்.

எந்த விடயத்திலும் குற்றம் கண்டு பிடித்துக்கொண்டிருக்கவும் சிடுசிடுத்துக் கொண்டிருக்கவும் கூடாது. முக்கியமாக தனது வீட்டில் எதிலும் முன்போல் முதல்மரியாதையை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம்.

“நானெல்லாம் முன்பு எவ்வளவு பெரிய பதவியில் இருந்தவன், அல்லது முன்பு எவ்வளவு பெரிய பணக்காரனாக வாழ்ந்தவன்” என்ற இறுமாப்பெல்லாம் இந்த ஏழரை கடைக்கூற்றில் உங்களுக்கு வரக்கூடாது.

ஏழரை சனி நடக்கிற காலத்தில் உங்கள் மனசாட்சிக்குப் பயப்படுங்கள்! மனச்சாட்சியை மீறி எது செய்தாலும் சனியின் பாதிப்புக்கு ஆளாவீர்கள். உங்கள் மனச்சாட்சியும் சனிபகவானும் வேறுவேறல்ல என்பதை உங்கள் ஏழரைச் சனியின் காலத்தின்போது நீங்கள்பெற்ற அனுபவங்களே எடுத்துக் கூறும்!

திருவோணம் ✍

## வர்த்தக மஞ்சரி

## புத்தம் புதிய ZenBook 13 (UX325) மற்றும் ZenBook 14 (UX425) மடிக்கணனிகளை அறிமுகப்படுத்தும் ASUS

ASUS நிறுவனம் தனது ZenBook Classic தொடரில், 13.3 அங்குல ZenBook 13 (UX325) மற்றும் 14 அங்குல ZenBook 14 (UX425) ஆகிய இரண்டு புதிய தலைமுறை ultraportable மடிக்கணனிகள் இரண்டை இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டு மொடல்களும் மிகவும் இலகுவானவை. ZenBook 13 மொடல் வெறும் 1.07 கிலோ எடை கொண்டது. அவை Thunderbolt 3 USBC, பல தரப்பட்ட இணைப்பிற்காக microSD card reader ஆகியவற்றுக்கு மேலதிகமாக முழு அளவிலான HDMI மற்றும் USB TypeA ports உள்ளிட்ட விரிவான I/O திறன்களை வழங்கும் உலகின் மிக மெல்லிய மடிக்கணனிகளாகும்.



ZenBook 13, ZenBook 14 மற்றும் Core i7 தொடர் வரையில், அண்மைய 10 வது தலைமுறை Intel Core புரசசர்களினால் வலுவூட்டப்படுகின்றன. அவை முன்னைய தலைமுறையை விட வேகமான, மென்மையான, பதில் செயலாற்றும் செயல்திறனை வழங்கும். தினசரி பல்வேறு பணிகள் மற்றும் பொழுதுபோக்கு மூலம் பாவனையாளர்களுக்கு உதவுவதற்காக அவர்கள் 32 GB வரை அதிவேக RAM ஐக் கொண்டுள்ளன. செயல் திறனைப் பொறுத்தவரை, மடிக்கணனிகளில் வேகமான திடநிலை சேமிப்பகம் வழங்கப்பட்டுள்ளது, 2TB PCIe 3.0 x4 SSDsகள் வரையானவை விரைவான தொடக்க நேரங்களையும், உடனடி அப்ளிகேஷன் செயற்பாட்டையும் உறுதி செய்கின்றன.

புதிய WiFi 6 (802.11ax) மூலம் பாவனையாளர்கள் WiFi 5 ஐ விட 3X வேகத்தில் வயர்லெஸ் வேகத்தை அனுபவித்து மகிழ முடியும். நன்கு அடக்கமான நான்கு பக்க NanoEdge திரைகள், முழுமையான காட்சிகளுக்கு 90% screentobody விகிதத்தை வழங்குவதுடன், மின்கல ஆயுளை அதிகரிக்கும் ultralow power 1watt display தெரிவையும் கொண்டுள்ளன.

ZenBook 13 மற்றும் 14 ஆகியவை நம்பமுடியாத அளவிற்கு சக்தியை திறம்பட கையாளுவதுடன், ஒரே மின்னேற்றத்தில் 22 மணிநேர மின்கல ஆயுளை வழங்குகின்றன.

## பக்டீரியா எதிர்ப்பு எழுது பொருட்களுடன் சந்தையை மாற்றியமைக்கும் அட்லஸ்

இலங்கையின் முதல் பக்டீரியா எதிர்ப்பு எழுது பொருட்களை அட்லஸ் அக்சிலியா அறிமுகப்படுத்தியுள்ளது. மிகவும் விரும்பத்தக்க கற்றல் தயாரிப்புகள் மற்றும் நாட்டின் மிகப்பெரிய எழுதுபொருள் வர்த்தக நாமமாக, அட்லஸ் ஒரு பாதுகாப்பான கற்றல் சூழலை உருவாக்கி, நம் பிள்ளைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் பாடசாலை தயாரிப்புகள் வழங்குவதில் முன்னோடியாக உள்ளது.




பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நாடு முழுவதிலுமுள்ள தாய்மார் தங்கள் பிள்ளைகளின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு குறித்து அக்கறை கொண்டுள்ளனர். இந்த புரட்சிகர தயாரிப்புகளை SLINTEC (Sri Lanka Institute of Nanotechnology) உடன் இணைந்து அட்லஸ் உருவாக்கியுள்ளது. மேலும் இலங்கையில் உருவாக்கப்பட்ட இந்த அதிநவீன பக்டீரியா எதிர்ப்பு தொழில்நுட்பம், புத்தகங்கள் மற்றும் பேனாக்களின் மேற்பரப்பில் 99.9% பக்டீரியாக்களைக் கொன்று விடுகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

அட்லஸ் பக்டீரியா எதிர்ப்பு தயாரிப்புகள் வரிசை, 2020 செப்டம்பர் 18 ஆம் திகதி கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியில் அமைந்துள்ள அனுபவக்கூடமான Atlas Skills Factory (அட்லஸ்ஸ்கில்ஸ் ஃபெக்டரி)யில் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது. கொழும்பு சர்வதேச புத்தகக்கண்காட்சி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், கடந்த செப்டம்பர் 18 முதல் 27 வரை நடைபெற்றது.

புதிய தயாரிப்பு அறிமுகம் குறித்து அட்லஸ் அக்சிலியா நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் அசித சமரவீர, "60 ஆண்டுகளுக்கும் மேலாக, அட்லஸ் மில்லியன் கணக்கான இலங்கை பிள்ளைகளின் கற்றல் பயணத்தின் ஒரு அங்கமாக இருந்து எழுது பொருள் துறையில் புதுமைகளைத்தூண்டி வருகிறது.

எங்கள் நுகர்வோரின் தேவைகளுக்கு மிகவும் உணர்திறன் உடையவர்களாக அவர்களின் அபிலாஷைகளுடன் எப்போதும் ஒத்திசைவாக இருக்க முயற்சி செய்கிறோம். இந்தநேரத்தில், தாய்மார் தங்கள் பிள்ளையின் நல்வாழ்வை உறுதிப்படுத்த கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர், குறிப்பாக, பிள்ளைகள் ஏற்கனவே அதிகம் இழந்த ஒரு வருடத்தில் அவர்கள் படிப்பில் பின்வாங்காதிருக்க செயல்படுகிறார்களா என்று கூறினார்.

## புதிய வீர வீராங்கனைகளை பலப்படுத்தும் "Crysbro Next Champ"




முன்னணி கோழி இறைச்சி தயாரிப்பு நிறுவனமான கிரிஸ்புரோ தேசிய ஒலிம்பிக் குழுவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளும் வகையில் ‘NOCSLCRYSBRO NEXT CHAMP’ புலமைப்புரிசில் வேலைத் திட்டமொன்றை அண்மையில் அறிமுகம் செய்துள்ளது.

விளையாட்டில் திறமையுள்ள இலங்கை வீர வீராங்கனைகளை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்துவதே இந்த உன்னத வேலைத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

கிரிஸ்புரோ மற்றும் தேசிய ஒலிம்பிக் குழுவினால் எதிர்வரும் இந்த ஒப்பந்தத்திற்கு ஏற்ப சர்வதேச தரத்தை அடையக்கூடிய நிலையிலுள்ள வீர வீராங்கனைகள் 20 பேருக்கு 2022ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள இளைஞர் ஒலிம்பிக் போட்டிகள், ஆசிய போட்டிகள், 2022 பொதுநலவாய நாடுகளுக்கான போட்டிகள் மற்றும் தெற்காசிய போட்டிகள் போன்ற மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளை இலக்காகக் கொண்டு பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

200 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஒலிம்பிக் பதக்கமொன்றை வென்ற ஆசியாவின் ஒரேயொரு வீராங்கனை மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் இந்த நாட்டில் அதிகமாக பதக்கங்களை வென்ற சுசந்திக்கா ஜயசிங்க, கிராமிய மட்டத்திலுள்ள வீர வீராங்கனைகளை சர்வதேச தளத்திற்கு கொண்டு செல்லும் ‘NOCSALCRYSBRO NEXT CHAMP’ புலமைப்பரிசில் வேலைத் திட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் தமது பூரண ஒத்துழைப்புக்களை இதற்கு வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த சுசந்திக்கா ஜயசிங்க “சர்வதேச போட்டியொன்றில் பதக்கமொன்றை வெல்வது என்பது ஒரு நீண்டகால பயணமாகும். இரண்டு தசாப்தங்களாக தெற்காசிய மட்டத்தில் முன்னோக்கிச் செல்வதற்கு முடியாமல் போயுள்ளதை இட்டு நாம் ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. விசேடமாக எண்ணங்களை மாற்ற வேண்டியுள்ளதுடன் வீர வீராங்கனைகளை தேர்ந்தெடுக்கும் போது அது எமக்குத் தெரியவந்தது. அந்த சவாலை நாம் வெல்லவேண்டும்.” என தெரிவித்தார்.

# வாரபலன்

**04.10.2020 - 10.10.2020**



கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஸ்வினி, பரணி, காத்திகை முதலாம் பாதம் )**

மேஷ ராசிக்காரர்கள் சுருண்ட அழகிய கேசம் பெற்றிருப்பார்கள். சிறந்த ஆடை அணிபவர்கள். தர்ம சிந்தனையும் ஓரளவு மனதில் கொண்டவர்கள்.

இதுவரை வக்கிர இயக்கத்தில் இருந்த குருவும் சனியும் வக்கிர நிவர்த்தியாகி விட்டார்கள். எனவே 9 ஆம் 12 ஆம் இடங்களுக்கு அதிபதியான குருக்கிரகம் தனுசு இராசியில் பலம் பெற்றிருப்பதால் பெற்றோரின் முழு ஆதரவு கிடைக்கும். வெளிநாட்டு தகவலும் வந்து சேரும். மேலும் 10ஆம் 11ஆம் ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி குருவோடு சேர்ந்து தனுசு இராசியில் சஞ்சாரம் செய்வதால் நீங்கள் எதிர்பார்க்காத வண்ணம் நல்ல செய்தி வந்துசேரும். அதிர்ஷ்ட திகதி 6, 7.

## ரிஷபம்

**(கார்த்திகை 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)**

ஒரு பொருள் வாங்க கடைக்குச் சென்றால் அதனைப் பற்றி உயர்வாகச் சொன்னாலும் கவர்ச்சிப் பேச்சில் மயங்கிவிட மாட்டார்கள். தாங்கள் திருப்தியடைந்தால் தான் அதனை வாங்குவார்கள்.

தனுசு இராசியிலுள்ள ஆட்சியான குருவினது பார்வை 2 ஆம் 4 ஆம் 12 ஆம் இடங்களை பார்ப்பதால் 2 ஆம் இடமான வாக்கு, தனம், குடும்பம், கல்வி இடங்களையும் 4 ஆம் இடமான தாயினதும் வாகனங்களையும் சொத்துகளையும் குறிக்கும். மேலும் 12 ஆம் இடமான அயன, சயன, போக தானங்களையும் பார்ப்பதால் இவை அனைத்திலும் உங்களுக்கு நன்மைகளே ஏற்படும்.

அதிர்ஷ்ட திகதி 9, 10.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3 ஆம் 4 ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

பல தொழில்களை இழுத்துப் போட்டுக்கொண்டு திண்டாடுவர். ஆனால் வெளியில் மனப்போராட்டத்தை காட்டிக்கொள்ள மாட்டார்கள். அபாரமாக உழைப்பவர்கள்.

உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் தன் சொந்த வீடான தனுசு இராசியில் இருந்தபடி ஆட்சியான குரு பலம் பெற்று உங்கள் இராசியைப் பார்ப்பதால் மிகுந்த தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள், செயலாற்றுவீர்கள். மேலும் தனுசு இராசியில் கண்டகச்சனியாக 7 இல் சனி இருப்பதால் உங்களுக்கோ அல்லது உங்களது மனைவிக்கோ அல்லது கணவனுக்கோ உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றலாம்.

அதிர்ஷ்ட திகதி – 4, 5.

## கடகம்

**(புனர்பூசம் 4 ஆம் பாதம் , பூசம், ஆயிலியம்)**

குடும்பத்தின் முக்கிய நபர்களை பற்றியும் அவர்களுடைய திட்டங்களைப் பற்றியும் சதா சிந்தனை செய்துகொண்டே இருப்பார்கள். சிறிய விடயங்களுக்கு கூட உணர்ச்சிவசப்படுவார்கள். தனுசு இராசியில் உங்கள் இராசிக்கு ஆட்சியான குரு 6ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்கின்றார். 6 இல் குரு ஊரில் பகை என்பதற்கமைய உறவினர்கள், அயலவர்கள் போன்றவர்களால் சிறுசிறு எதிர்ப்புகள் தோன்றலாம். தனுசுவிலுள்ள ஆட்சியான குருவின் பார்வை 2,10,12 இடங்களில் பார்வை படுவதால் உத்தியோக மாற்றங்கள், இடமாற்றங்கள் நன்மையைத் தரும். சுப பிரயாணங்களும் செலவுகளும் ஏற்படும். அதிர்ஷ்ட திகதி 7, 8.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

எடுத்த காரியத்தை வேகமாக சிந்தித்து செயலாற்றும் திறனும் உடல் வலுவும் உள்ளத்திடமும் பெற்று விளங்கும் குணமுடையவர்கள்.

தனுசு இராசியில் ஆட்சி பலம் பெற்ற குருவானவர் 5ஆம் இடத்தில் இருந்து உங்கள் இராசியைப் பார்ப்பதும், பாக்கியஸ்தானமான 9 ஆம் இடத்தைப் பார்ப்பதாலும், இலாப தானமான 11 ஆம் இடத்தைப் பார்ப்பதாலும் பரம்பரைச் சொத்துகள் வந்துசேரும். உத்தியோக வாய்ப்புகள் கிடைக்கும். பதவியும் உயரும். உத்வேகத்துடன் செயற்படுவீர்கள். அதிர்ஷ்ட திகதி 4,5,8,9.

## கன்னி

**( உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

கன்னி இராசி நேயர்கள் தங்களைத் தாங்களே சோதனை செய்து பார்த்து தங்களிடமிருக்கும் குறைகளையும் குற்றங்களையும் நீக்கிக்கொள்ள முயல்வர்.

உங்கள் இராசிக்கு தனுசு இராசியில் ஆட்சியான குரு அர்த்தாஷ்டம குருவாகவும் சனிக்கிரகம் அர்த்தாஷ்டம சனியாகவும் இருப்பதால் தாயாரின் உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுங்கள். தாய்வழி உறவினர்களுடனும் பொறுமையுடனும் விட்டுக்கொடுப்புடனும் நடந்துகொள்ளுங்கள். அர்த்தாஷ்டம சனியின் பிடியில் உள்ளதால் தொழில் துறைகளில் மிகுந்த பொறுப்புடன் நடந்துகொள்ளுங்கள். குருவின் பார்வை 8ஆம் இடத்தில் படுவதால் ஆரோக்கியம் மேம்படும். அதிர்ஷ்ட திகதி 6,7.

## துலாம்

**(சித்திரை 3 ஆம் 4 ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

தாம் மேற்கொள்ளும் செயல்களும் தீர்மானங்களும் தங்கள் மனதுக்கு சரியானவையாகப்படும் வரையில் தீர்க்கமாக சிந்திப்பார்கள். அதுவரை பரபரப்புடன் இருப்பார்கள்.

குருக்கிரகம் தனுசு இராசியில் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். இது சிறப்பல்ல. எனினும் குருபகவானின் பார்வை உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தைப் பார்ப்பதால் திருமணம் போன்ற மங்களகரமான காரியம் கைக்கூடிவரும். 9ஆம் இடத்தைப் பார்ப்பதால் தந்தைவழி சொத்துகள் சேரும். 11ஆம் இடத்தைப் பார்ப்பதால் எதிர்பாராத விதத்தில் அதிர்ஷ்டம் கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி 9

## விருச்சிகம்

**(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

விருச்சிக இராசியில் பிறந்தவர்கள் அவர்களின் இயற்கை குணம் பிரகாசிக்க விரும்புவது. அதாவது, தூண்டித்துருவி பார்க்கும் இயல்புடையவர்கள். புலனாய்வுத்துறையில் வல்லமை பெற்றவர்கள்.

தனாதிபதியான குருக்கிரகம் ஆட்சிபெற்ற குருவாக உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான தனஸ்தானத்திலேயே பலம் பெற்றிருப்பதால் கல்வித்துறையில் உள்ளவர்கள் முன்னேற்றமடைவார்கள். பேச்சைத் தொழிலாகக் கொண்டவர்கள் சிறப்படைவார்கள். குடும்ப உறவும் பலப்படும்.

பணவரவுக்கு குறைவிருக்காது. மேலும் 2 ஆம் இடத்தில் குருவுடன் சனியும் சேர்ந்திருப்பதால் உங்களது வார்த்தைகள் மிகவும் நிதானமாக இருக்கும். மற்றவர்களுக்கு ஆறுதலையும் கொடுக்கும். குருக்கிரகமும் சனிக்கிரகமும் வக்கிர நிவர்த்தி பெற்றுள்ளன. அதிர்ஷ்ட திகதி 10.

## தனுசு

**(மூலம் , பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

சொல்லுக்கேற்ற செயலை இவர்களிடத்தில் பெரும்பாலும் காணமுடியாது. சிலேடையாக பேசுவதிலும் இவர்கள் சமத்தர்கள்.

தனுசு இராசியில் இராசிநாதனான குருவானவர் வக்கிர நிவர்த்தியடைந்து நவம்பர் 15 வரை பலம்மிக்க குருவானவராக சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு 2க்குரிய தானாதிபதியும், 3இல் முயற்சிதானத்துக்குரிய சனிக்கிரகமும் வக்கிர நிவர்த்தியடைவதால் 2 கிரகங்களும் வக்கிர நிவர்த்தியடைந்து உங்களது எதிர்ப்பார்புகள் அனைத்தும் நிறைவேறும் வண்ணம் படிப்படியாகக் கைகூடிவரும். குருவின் பார்வை 5ஆம் இடத்தைப் பார்ப்பதால் பதவியும் 7 ஆம் இடத்தைப் பார்ப்பதால் திருமணமும் 9ஆம் இடத்தைப் பார்ப்பதால் பரம்பரை சொத்துகளும் கைக்கூடிவரும். அதிர்ஷ்ட திகதி 8.

## மகரம்

**(உத்தராடம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1 ஆம் 2 ஆம் பாதம்)**

இந்த இராசியில் பிறந்த குழந்தைகள் சாந்தமான சுபாவம் கொண்டவர்களாக இருப்பர். ஆனால், வெளித்தோற்றம் போல் மனம் அப்படி சாந்தமாக இருக்கும் என்று சொல்ல முடியாது.

உங்களுக்கு விரயதானமான 12 ஆம் இடத்தில் சனிக்கிரகம் சஞ்சாரம் செய்கின்றார். அதேபோன்று குருபகவானும் தனுசு இராசியில் ஆட்சியான குருவாக விரயத்தானமான 12 ஆம் இடத்தில் சனியோடு சேர்ந்து சஞ்சரிக்கின்றார். இப்பொழுது 2 கிரகங்களும் வக்கிர நிவர்த்தியடைந்து பலம்பெற்றுள்ளன. இரும்புத் தொழிலுடன் தொடர்புடையவர்களுக்கும் வண்டி, வாகன தொழிலில் உள்ளவர்களுக்கும் எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். வரவு 8 அணாவாக இருக்கும் செலவு 10 அணாவாக இருக்கும். அதிர்ஷ்ட திகதி 4, 5.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம பாதம்)**

கும்ப இராசியில் பிறந்தவர்கள் பொதுவாக கருத்தாக இருந்து எதிர்ப்படும் வாய்ப்புகளை கைநழுவ விடாமல் பற்றிக்கொண்டு முன்னேறுவதில் கவனமாக இருப்பார்கள்.

உங்கள் இராசிநாதன் சனிக்கிரகம் வக்கிர நிவர்த்தியடைந்து இலாபத்தானமான 11 ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்கின்றார். வண்டி, வாகன யோகம் ஏற்படும். இரும்புடன் தொடர்புடைய தொழில் துறையில் உள்ளவர்கள் பெரும் இலாபத்தை அடைவர்.

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான குடும்ப தானாதிபதியான ஆட்சிபெற்ற குருவோடு சனி சேர்ந்திருப்பதும் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். இப்பொழுது குருவும் சனியும் வக்கிர நிவர்த்தியடைந்திருப்பது மிகவும் நன்மையாகும்.

அதிர்ஷ்ட திகதி 7, 8.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)**

மீன இராசி ஜலராசியானதால் நீரின் மேல் அலாதிப்பிரியம் இருக்கும். நீர் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டவர்களாகவே இருப்பார்கள். கடற்கரை, ஆற்றங்கரை குளக்கரை என்று நீர் நிலைகளுக்கு அருகாமையில் வாழ விரும்பும் குணமுடையவர்கள்.

உங்கள் இராசிநாதன் குருபகவான் தனுசு இராசியில் ஆட்சிபெற்று பலமான குருவாக 10 இல் சஞ்சாரம் செய்கின்றார். அத்துடன், உங்கள் இராசிக்கு 11ஆம்இடத்துக்குரிய வியாழனும் 12ஆம் இடங்களுக்குரிய சனிபகவானும் சேர்க்கை பெற்று சஞ்சரிக்கின்றார். இந்த குருவும் சனியும் வக்கிரநிவர்த்தி பெற்றுள்ளதால் உங்களது தொழில்துறை மிகவும் சிறப்பாக இருக்கும். புதிய வாகனங்கள் வாங்குவதற்கான யோகமும் ஏற்படும். 10 இல் குரு இடமாற்றத்தை ஏற்படுத்தினாலும் உங்கள் இராசிக்கு அது நன்மையான மாற்றத்தையே தரும்.

அதிர்ஷ்ட திகதி 4, 5, 10.

# முதியோர் தினத்துக்காக எடுத்துகாட்டான வவுனியா சன்னிதிப்பாட்டி







இந்த 21ம் நூற்றாண்டில் வாழ நாமே தடுமாறிக் கொண்டிருக்கும் போது, வயது முதிர்ந்தோர் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை கருத்தில் கொண்டுதான் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் திகதி உலக முதியோர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அன்புதான் மனிதனை வாழ்வதற்குத் தூண்டுகிறது. அன்புதான் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது. உறவு என்பது சமூக கட்டமைப்பின் அடித்தளமாக இருந்து சமூக வாழ்வை உயர்த்துகிறது. மனிதன் சமூக விலங்காக கருதப்பட்ட காலம் முதல் உறவுப் பிணைப்பு அவனை வாழ்வதற்கும் மேம்பட்ட வாழ்க்கைச் சூழலை உருவாக்கிக் கொள்வதற்கும் உந்து சக்தியாக இருந்து வழிநடத்துகிறது. இத்தகைய அன்பும், உறவும் காலப்போக்கில் எத்தகைய பரிமாணங்களை அடைந்துள்ளன? வியாபாரமயமாகி விட்ட இந்த நூற்றாண்டில் உறவின் நிலை என்ன?

காலந்தோறும் கூடி வாழ்ந்த குடும்பம் என்ற அமைப்பு மனிதனை உயர்த்தி இருக்கிறது. ஒருங்கிணைந்த உழைப்பால் பெரும் பலன் தந்திருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்களாய் வாழ்ந்த காலத்தில் கூடிவாழ்ந்த குடும்பத்தில் அனைவரும் ஒட்டுமொத்தமாகத் தங்கள் உழைப்பை நிலத்தில் சிந்தி வேளாண்மை பெருக்கி, சீரும் சிறப்புமாய் வாழ்ந்ததை வரலாறு சொல்கிறது. இப்படி வாழ்ந்த சமூகத்தில் பெரியோர் மதிக்கப்பட்டனர். அவர்களின் அனுபவமும் அறிவும் இளையோருக்கு வழிகாட்டக் கிடைத்த பெரும் வரமாக கருதப்பட்டது. ஆனால் இன்றைய காலத்தில் உழைப்பைத் தந்த குடும்பத்தில் முதியவர்கள் உடல் தளர்ந்து, தங்களால் உழைப்பை நிலத்தில் செலுத்த இயலாத காலத்தில் குடும்பத்திற்குப் பாதுகாவலாக இருந்து பேரக்குழந்தைகள் பராமரிப்பு மற்றும் அவர்களை நல்வழிப் படுத்தும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மூன்று முறிப்பு கிராமசேவையாளர் பிரிவின் மதவுவைத்த குளம் என்னும் கிராமத்தில் தள்ளாடும் எண்பத்தைந்து வயதிலும் தளராது உழைத்துவருகின்றார் சன்னதி சிவபாக்கியம். வவுனியாவின் நுழைவாயிலில் அமைந்துள்ள மூன்று மூறிப்பு பிள்ளையாருக்கு அருகில் இயற்கை எழில் கொஞ்சும் மூன்று முறிப்பு சந்தியில் சிறியபெட்டிக்கடையில் அமர்ந்துள்ளார் சிவபாக்கியம் பாட்டி. வெளிமாவட்டங்களில் இருந்து வவுனியா வருபவர்கள் வவுனியாவில் இருந்து வெளிமாவட்டம் செல்பவர்கள் யாராக இருந்தாலும் இந்த முன்றுமுறிப்பு பிள்ளையாரை தரிசிக்காமல் செல்லமாட்டார்கள். மூன்றுமுறிப்பு பிள்ளையாருக்கு அருகில் சிறிய பெட்டிக்கடையில் கோயிலுக்கு வருபவர்களுக்காக பூ பூமாலை, தேசிக்காய் வெற்றிலை பாக்கு வெற்றிலைமாலை தேசிக்காய்மாலை, திருஷ்டிமாலை என தன்னால் முடிந்தவரை தனது கையால் செய்து சந்தோசமாக தனது வாழ்க்கையை நடாத்தி வருகின்றார் சிவபாக்கியம் பாட்டி. வயதானாலும் இளமைத் துடிப்புடன் கோயிலை வலம் வந்து கோயிலைச் சுற்றியுள்ள மரங்களில் உள்ள பூக்களைப் பறித்து மாலைகட்டுவது பாட்டியின் பிரதான தொழில் உழைக்கவேண்டும் என்ற ஆர்வம் இயல்பிலேயே இருந்ததால் இன்று இரண்டு பேரப்பிள்ளைகளையும் வளர்த்து தானும் சந்தோசமாக வாழ்கின்றார் என்றால் அதற்கு பாட்டியின் தன்னம்பிக்கையே காரணம்.

வியாபாரம் செய்து லாபம் பார்ப்பது இன்றைய காலகட்டத்தில் குதிரைக் கொம்பாகத்தான் இருக்கிறது. காலநிலை கைவிரித்ததால், மீண்டும் பட்டினிச் சாவுக்கு ஆளாகும் சூழல் வந்திவிடுமோ என்று தவிக்கிறார்கள் பலர். ஆனால் பாட்டியோ பதினைந்து வருடமாக பெட்டிக்கடையை உயிராக நினைப்பவர். கோயிலுக்கு வருபவர்களுக்கு, குறைந்த விலையில், பொருட்களை விற்று தனது வாழ்க்கையை நடத்துகின்றார். தனது இளம் வயதிலே கணவரையும் தனது மூன்று பிள்ளைகளையும் பறிகொடுத்த பாட்டி தனது விடாமுயற்சியால் ஆறு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கியுள்ளார். ஆறு பிள்ளைகளும் ஆறு திசையில் வாழ்கின்றார்கள் என்றும் யாருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் தான் உழைத்து வாழ்வதாகவும் பெருமைகொள்கிறார் பாட்டி. சோர்ந்துபோகாமல் விடாமுயற்சியுடன் வியாபாரத்தை அதிகரிப்பதற்கு அரசின் உதவித் திட்டங்களைப் பெற்று தனது வாழ்வாதாரத்தை பெருக்க வேண்டும் என கோரிக்கையும் விடுகின்றார். இன்று முதியோர் தினத்துக்கு எடுத்துகாட்டாக மூன்று முறிப்பு சன்னதி சிவபாக்கியம் பாட்டி வாழ்ந்து வருகின்றார். நமக்கு அன்றாடம் ராமாயணத்தையும் பாரதத்தையும் கதையாகச் சொல்லி நம்முடைய பண்பாட்டு விழுமியங்களை இயல்பாக நமக்குள் பதிவுசெய்தவர்களாக நம்முடைய முன்னோர்கள் இருந்தார்கள். அவர்கள் சொல்லித் தந்த கதைகள் வெறும் பொழுது போக்கு அம்சங்களாக இருக்கவில்லை. பின்னாளில் வாழ்வை எதிர்கொள்வதற்கான மனஉறுதியைக் கொண்டிருந்தன. இத்தகைய தாத்தா பாட்டிகளை நாம் தொலைத்துவிட்டு மன அழுத்தத்திற்கு மனநல மருத்துவர்களை நாடிச் செல்வதும், ஆலோசகர்களை அணுகி ஆலோசனை கேட்பதும் பேதைமை நிறைந்தது.

நம் முன்னோர்கள் விவசாயம் அறிந்திருந்தார்கள். பருவநிலையைப் புரிந்திருந்தார்கள். மனித மனங்களைப் பற்றிய தெளிவு அவர்களுக்கு இருந்தது. வாழ்வின் தேவை என்ன? நிம்மதியாய் வாழ்வதற்கான வழிவகை என்ன என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இவற்றையெல்லாம் நமக்குத் தேவையான பொழுது கற்றுத் தருவதற்கும் காத்திருந்தார்கள். இன்றைக்கு அந்தத் தாத்தாக்கள் பாட்டிகள் தொலைந்து போனார்கள்.

ஒவ்வொரு முதியவரும், தமக்குள் கொண்டிருக்கும் ஆற்றல், அனுபவம், அன்பு இவற்றின் தொகுப்பாக விளங்குகிறார்கள். இந்த மதிப்புமிக்க பெரியோர்கள் நம் தேசத்தின் சொத்து. இதனை உதாசீனப்படுத்துவதும், ஒதுக்கி வைப்பதும் நம்முடைய வளர்ச்சியை பாதிக்கும் செயல். இதனை நாம் உணரத் தலைப்படும்பொழுது இன்னும் மிகுந்த வளர்ச்சியோடு வேகத்தோடு நவீன யுகத்தில் நாம் ஆரோக்கியமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டியது, முதியோர்களின் அறிவாற்றலும் திறமையும் உழைப்பும் கொண்டுதான் நாம் வாழும் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையே. இன்று நாம் அனுபவிப்பவை அனைத்தும் நேற்றைய தலைமுறையினரின் உழைப்பின் பலன்தான். நம்மைக் காட்டிலும் முதியவர்கள் எவ்விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்லர். சொல்லப் போனால், வாய்ப்புகள் இத்தனை உலகளாவிய அளவில் வாய்க்கப் பெறாத காலத்திலும் அவர்கள் சமூகத்தை மேம்பட்ட நிலையில் வைத்திருந்தார்கள்.

முதியவர்கள் நமக்கு வழிகாட்டிகள் எனும் எண்ணம் உருவாக வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டிருக்கிறது. இன்றைய உளவியல் சிக்கல்கள் அனைத்திற்கும் தீர்வாக முதியவர்கள் இருக்க முடியும். உடல் ஆரோக்கியம் காப்பதற்கு நம் பாட்டிமார்களை நாம் மீட்டெடுத்துத் தீர வேண்டும். எத்தகைய இக்கட்டான நிலையிலும் இவர்கள் நம்முடைய நலனைப் பேணுபவர்களாக இருந்தார்கள். நமக்குப் பொருள் ஈட்டித் தந்திருக்கிறார்கள்.

சிவகுமார் திவியா

22ஆம் பக்கம் பார்க்க...

# Invitation for Bids

## GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

## MINISTRY OF HEALTH

| | |
|---|---|
| **Date:** | 4th October 2020 |
| **Title of the Project** | Health System Enhancement Project |
| **Contract No. and Title of the Procurement** | HSEP/ PMU/PRO/G 10/86/2020<br>Procurement of Furniture for 45 Facilities – G 10 |
| **Deadline for Submission of Bids** | Before 1000 Hrs. on 3rd November 2020 |

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received financing from the Asian Development Bank (ADB) towards the cost of **Health System Enhancement Project**, and it intends to apply part of the proceeds of this financing to payments under the contracts named above.Bidding is open to bidders from eligible source countries of ADB.
2. The Ministry of Health (the Purchaser) invites sealed bids from eligible bidders for the procurement of following Goods. A brief description of the types of goods are below:

| Lot No. | Brief Description of Goods | | Quantity |
|---|---|---|---|
| 1 | Rest room/on call room beds | 6x3 feet length. 18 inch width | 24 |
| 2 | Mattress | 6x3 feet, 5 inch Thickness, Double layer | 40 |
| 3 | Mattress | 6x2.5 feet, 5 inch Thickness, Double layer | 30 |
| 4 | Mattress | 6x 3.5 feet, 5 inch Thickness, Double layer | 7 |
| 5 | Cushion chair with arm/ conference chair (Patient chair) | With cushion arm. Low back. Fabric upholstery. Steel frame | 151 |
| 6 | Rotating chair/ computer chair (hospital staff) | With nylon plastic arm. Lower back. Fabricupholstery. Rotatable with 5 Nylon caster wheels and height adjustable | 69 |
| 7 | Plastic chair | Steel legs and armless, Overall height 30 to 36 inch, Loading capacity not more than 100 kg | 345 |
| 8 | Dispenser chair with arm | Nylon 5 caster wheels. Adjustable and tilt. Fabric material. Maximum height 44 inches (+ or - 5% tolerance) | 29 |
| 9 | Gang Chairs stainless steel | 3 in 1, Size 160cmx60cmx76cm (+ or – 6cm), stainless steel grade 201 ss | 111 |
| 10 | Gang Chairs stainless steel | 4 in 1, Size 225cmx60cmx76cm (+ or – 6cm), stainless steel grade 201 ss | 106 |
| 11 | Gang Chairs plastic | 4 in 1, iron frame, main area 40 cm x 40 cm, Back rest 40 x 38 cm (Not rigid), total height 78 cm | 45 |
| 12 | Low back executive chair with arm | Nylon 5 caster wheels, height adjustable, fabric finished upholstery, main area 48 cm x50 cm, back rest 45 cm x 53 cm, height 110 cm, (tolerance 6 cm) | 109 |
| 13 | Lobby Chair (Box Model) | Fabric upholstery, Cushion without arm, width 65cm, Height 80cm, length 150cm, with wheels | 6 |
| 14 | Lobby Chair | Should fabricate with fabric upholstery, Box model, Length – 23 (inches), Width – 26 (inches), Height – 32.5 (inches) | 6 |
| 15 | Sofa with Coffee table (Small) | 2 + 1 + 1 seat sofa fabric upholstery Wood frame construction wrapped in foam and fabric upholstery | 5 |
| 16 | High-back executive chair | Nylon 5 caster wheels, height adjustable, fabric finished upholstery, main area 48 cm x50 cm, back rest 68 cm x 53 cm, height 125cm, (tolerance 6 cm) | 47 |
| 17 | Office table (Steel) | L120cmx W75cmx H75cm (tolerance 6 cm), Steel with 20 gauge. 3 Drawers with lockable keys. Melamine Top | 107 |
| 18 | Office table (Wood) | L120cmx W75cmx H75cm (tolerance 6 cm). 3 Drawers with lockable keys. Melamine Top | 57 |
| 19 | Computer Tables | Wood Finish Length – 120cm, Width – 40cm, Height – 77.3cm (tolerance 6 cm), 1 Drawer with lockable keys, key board drawer | 10 |
| 20 | Executive Table (L Shape) | Wood Finish Length – 160cm, Width – 60cm, Height – 77cm (tolerance 6 cm), 3 Drawers with lockable keys | 10 |
| 21 | Reception Table (C Shape) | Wood finish. Three units with overall length – 360cm, Width –60cm+30cm, Height – 75. cm+30cm. (Tolerance 6cm) | 15 |
| 22 | Reception Table (Crescent Shape) | Wood finish, Approximate dimension should be 241cm x 90cm x 107cm,( Tolerance 6cm) Manufactured completely in CKD (Completed in knock down ), Reception Counter riser fixed with minimum of one lockable drawer set and it should include lockable cupboard with two shelves | 3 |
| 23 | Dining Table with 6 chairs | Steel Table with Tempered Glass top : Length – 152cm, Width – 91cm, Height – 76cm, (Tolerance 6cm) Steel Cushion Chairs | 3 |
| 24 | Workstation (Single) | Wood Finish two medium size lockable drawers and one large drawer, Approximate dimension should be length 140cm Width 50cm Height 75cm (Tolerance 6cm) | 3 |
| 25 | Horse shoe shape dispensing counter | Front of table should have opening 18" and side of Tabletop should have rack with compartment to store drugs containers. Size should be 59" x 29" and Tabletop height should be 36" inch. All frame height should be 30" from top of the table. Made up of wooden or melamine board completed in knock down system. | 4 |
| 26 | Steel Cupboard with Glass | Footer Frame in 2.5cm, Cold rolled mild steel Gauge 20, Epoxy Powder coated Board, Four Shelves Adjustable, Lockable door with handle flush with the door Length – 90cm, Width – 45cm, Height – 185cm. | 123 |
| 27 | File cupboard | Wood Finish, front Open three shelves with 2 Lockable doors Below, 180cmx90cmx35cm | 16 |
| 28 | Steel Cupboard without Glass | Footer Frame in 2.5cm, Cold rolled mild steel Gauge 20, Epoxy Powder coated Board, Four Shelves Adjustable, Lockable door with handle flush with the door Length – 90cm, Width – 45cm, Height – 185cm | 28 |
| 29 | Half Cupboards | Cold rolled mild steel Gauge 20, Epoxy Powder coated Board, Three Shelves, Lockable door with handle flush with the door Length – 80cm, Width – 40cm, Height – 123cm | 11 |
| 30 | File rack/ Book Shelf (wood) | Wood Finish Front Open, Five shelves, 180cmx90cmx35cm, 2 Years Warranty | 14 |
| 31 | File rack-iron | Cold rolled mild steel 22 Gauge, Epoxy Powder coated. Four Open shelves length 119cm, Width – 30cm, Height – 120cm | 23 |
| 32 | Workmen lockers | Triple tie Locker 360cmx360cmx720cm with Nine Lockable doors, Powder coated zinc Al, Handle flush with doors | 5 |
| 33 | File lockers (steel) | Cold rolled mild steel Gauge 22, Epoxy Powder coated Board, Four Shelves, Lockable door with the door Length – 45cm \| Width – 60cm \| Height – 130cm. Warranty 2 years | 3 |

3. **The Successful Bidder** must deliver Goods to the locations mentioned in the delivery and completion schedule in the Bidding Document. Also, delivery must be completed within 60 days from signing of contract.
4. **Open Competitive Bidding** (OCB) will be conducted in accordance with ADB's Single Stage: Single Envelope bidding procedure and is open to all bidders from eligible countries as described in the Bidding Document. The eligibility rules and procedures of ADB will govern the bidding process.
5. **Bid for one or multiple lots.** Bidders may bid for one or several lots (contracts), as further defined in the Bidding Document. Bidders who wish to offer discounts in case they are awarded more than one lot (contract) will be allowed to do so provided those discounts are included in the Bid Submission Sheet.
6. Only eligible bidders with the following key qualifications should participate in this bidding and the qualification criteria are more completely described in the Bidding Document:
   - Successful completion as main supplier for furniture within the last 7 years at least cumulative valued for LKR 12.10 Mn.
   - Minimum average annual turnover of LKR 24 Mn.calculated as total payments received by the Bidder for contracts completed or under execution over the last 3 years.
7. To obtain further information and inspect the Bidding Documents free of charge from 0900 Hrs to 1500 Hrs on working days, the bidders should contact:

   **The Project Director,**
   **Health System Enhancement Project,**
   **No. 3/19, Kynsey Road,**
   **Colombo 8, Sri Lanka.**
   **Telephone Number: +94 112 697 173 / +94 112 056 535**
   **Fax: +94 112 697 163**
   **E-mail:**hsep.pmu@gmail.com
8. A pre-bid meeting shall take place at 1500 Hrs on16th October 2020 at above address conducted by the Employer. All bidders are strongly advised to attend this pre-bid meeting.
9. To purchase the Bidding Document in English, eligible bidders should submit a written request/application to the address above requesting the Bidding Document for the **Procurement of Furniture for 45 Facilities – G 10** for the Health System Enhancement Project and pay a non-refundable fee of **LKR 7,000.00** on or before 1500 Hrs on 2nd November 2020.
10. The method of payment will be in the form of bank draft or cashier's certified cheque in favor of the **"Secretary, Ministry of Health, Nutrition and Indigenous Medicine – A/C 7040309"** or in cash, from 0900 Hrs to 1500 Hrs on working days or pay by direct deposit to bank account number 7040309 at Bank of Ceylon.
11. The Bidding Document may also be sent by airmail for overseas delivery and surface mail or courier for local delivery with an additional fee of US$ 100 and LKR 5000.00 respectively in addition to the non-refundable fee stated under para 8. No liability will be accepted for loss or late delivery.
12. Bids shall be delivered to the address given in para 7 above **on or before 1000 Hrs on 3rd November 2020** together with the Bid Security as specified in the bidding document. If the Bid Security is submitted in a form of a Bank Guarantee, it shall be issued using the format given in the Section 4 of Bidding forms by a Commercial Bank approved by central bank of Sri Lanka in favor of **"The Project Director - Health System Enhancement Project".** Late Bids will be rejected and returned unopened.
13. The Bids shall be valid for 90 days from the date of bid opening. The Bid Security shall be valid for 118 days from the date of bid opening.
14. Bids will be opened immediately after the deadline for bid submission in the presence of Bidders' representatives who choose to attend.
15. The Health System Enhancement Project of the Ministry of Health will not be responsible for any cost or expenses incurred by bidders in connection with the preparation or delivery of bids.

**Chairman, Project Procurement Committee,**
**Health System Enhancement Project,**
**No. 3/19, Kynsey Road,**
**Colombo 8, Sri Lanka.**

**Telephone Number: +94 112 697 173 / +94 112 056 535**
**Fax: +94 112 697 163**
**E-mail:**hsep.pmu@gmail.com

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

**தொழில்நுட்பவியல் நிறுவகம்**
**மொறட்டுவைப் பல்கலைக்கழகம்**

## தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா

**கற்கை நெறிக்கான அனுமதி 2020/ 2021**

தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மூன்று (03) வருடகால முழுநேர தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக் கற்கை நெறியானது. தியகம, ஹோமாகமவில் அமைந்துள்ள தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தப்படும்.

**1. தகைமைகள்**

**(அ) கல்வித் தகைமைகள்:**

விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உ/த) பரீட்சையில் கீழ் குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றில் (03) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்:

- பௌதிகவியல்
- இரசாயனவியல்
- இணைந்த கணிதம்
- உயர் கணிதம்

அத்துடன் இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2017 அல்லது 2018 அல்லது 2019 ஆண்டுகளில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ/த) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**(ஆ) வயது :**

விண்ணப்பதாரிகள் 31.12.2019ம் திகதியன்று 24 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

**2. விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பப்படிவமானது அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவம் போல் தயார் செய்யப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை கீழே தரப்பட்ட இணையத்தள முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**http://www.itum.mrt.ac.lk**

**3. மேலதிக தகவல்கள்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 09.10.2020ம் திகதியிட்ட 2197ம் இலக்க அரச வர்த்தமானியில் மாதிரி விண்ணப்பப்படிவமும் விபரங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலுள்ள இணையத்தள முகவரியினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**4. விண்ணப்ப முடிவு திகதி 13.11.2020 ஆகும்.**

**பிரதி பதிவாளர்,**
**தொழில்நுட்பவியல் நிறுவகம்,**
**மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.**
**தியகம,**
**ஹோமாகம.**

**04.10.2020**

நாட்டின் முதன்மை நிதியியல் நிறுவனத்தில் இணைந்து கொள்வதற்கான மாபெரும் வாய்ப்பு



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

இலங்கை மத்திய வங்கி, தகைமைபெற்ற மற்றும் அனுபவமுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து நொத்தாரிக எழுதுவினைஞராக இரண்டாண்டுகள் தகுதிகாண் காலத்திற்குட்பட்டு, இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவ உதவியாளர் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது. இப்பதவியானது கோரப்படுகின்றவாறு பங்களிப்புச் செய்வதற்கு தாமாகவே அர்ப்பணிக்கின்ற இயலுமையுள்ளவர்களுக்கும் குழுவாகப் பணியாற்றும் சூழல் ஒன்றில் பணியாற்றுவதற்கு விரும்புகின்றவர்களுக்குமானதாகும்.

## நொத்தாரிக எழுதுவினைஞர் பதவி

**தொழில் / பொறுப்புக்கள் :**

(அ) கட்டு முறிகள், விடுவிப்பு உறுதிகள், கட்டு சாதனங்கள் மற்றும் ரத்து இரத்துச் செய்தல் சாதனங்கள் போன்ற உரித்து பதிவுசெய்தல் ஆவணங்கள், பல்வேறு ஆவணங்களில் இருந்து தொடர்புடைய தகவல்களைப் பிரித்தெடுத்தல் மற்றும் குத்தகை ஒப்பந்தங்கள் போன்ற மத்திய வங்கிக்கும் வெளிவாரி தரப்பினர்களுக்கும் இடையிலான ஒப்பந்தங்களைத் தட்டச்சு செய்தல் என்பன உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியின் கடன் திட்டங்கள் தொடர்பில் சட்டரீதியான ஆவணங்களைத் தயாரப்படுத்தல்.

(ஆ) காணிப் பதிவகத் தேடல்களை, கம்பனிகள் பதிவாளர் மற்றும் நீதிமன்ற பதிவகங்களின் தேடல்களை மேற்கொண்டு தொடர்புபட்ட ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெற்றுக்கொள்ளல்.

(இ) முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவுகள் மற்றும் உறுதிகள் தொடர்பிலான பதிவுக் கட்டணங்கள் என்பவற்றை உறுதிசெய்வதனை உள்ளடக்குகின்ற இலங்கை மத்திய வங்கியின் நொத்தாரிக தேவைப்பாடுகளுடன் இணங்குதல் மற்றும் மாதாந்தக் கூற்றுகளை தயாரித்து சமர்ப்பித்தல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

- **கல்வித் தகைமைகள்** : க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தது ஆங்கிலம் மற்றும் சிங்களம் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

  அத்துடன்

  க.பொ.த.(உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு துறையில் ஒரே தடவையில் மூன்று பிரதான பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
- **அனுபவம்** : நிதியியல் நிறுவனமொன்றில், சட்டநிறுவனமொன்றில் அல்லது சட்ட நிறுவனமொன்றில் நொத்தாரிக எழுதுவினைஞராக குறைந்தபட்சம் **பத்து (10) வருட அனுபவம்.** கணனிப் பிரயோகங்களைப் பயன்படுத்தி ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் தட்டச்சு செய்யக்கூடிய இயலுமையும் மற்றும் கணனி அறிவினைப் பெற்றிருப்பதும் கட்டாயத் தேவைப்பாடாகும்.

**வயது :** 2020 ஒக்தோபர் 28 அன்று 40 வயது அல்லது அதற்கு குறைந்தவர்களாகவிருத்தல்.

கல்விச் சான்றிதழ்கள் மற்றும் வேலை அனுபவத்துடன் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகிறது. மேற்குறித்த ஆவணங்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் ஏதேனும் கட்டத்தில் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

**ஊதியம் மற்றும் ஏனைய நலன்கள் :** கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் ஆண்டுக்கு இரண்டு மாத சம்பளத்தைக் கொண்ட விசேட கொடுப்பனவு, சேம நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, மருத்துவம் மற்றும் அலுவலர் கடன் வசதிகள் அத்துடன் பயிற்சி வாய்ப்புகள்

**தெரிவு செய்யப்படும் நடைமுறை**

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சையின் செயலாற்றத்தின் அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

**விண்ணப்பங்கள்**

விண்ணப்பங்களை இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ வெப்தளமான **http://www.cbsl.gov.lk.** இலிருந்து தரவிறக்கம் செய்யலாம்.

விண்ணப்பங்களை குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பின்வரும் முகவரிக்கு **பணிப்பாளர், மனிதவளங்களுக்கு 2020.10.28 அன்று அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைக் கண்டிப்பாக பின்பற்றுமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

"நொத்தாரிக எழுதுவினைஞர் பதவிக்கான விண்ணப்பம்" என கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

வேண்டப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத அல்லது குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் ஏதேனும் விண்ணப்பம் அல்லது குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். முடிவுத் திகதியன்று வேண்டப்பட்ட தகைமைகளை மற்றும் அனுபவத்தினைப் பெற்றிராத விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவரானர் என்பதுடன் நேர்முகப்பரீட்சையில் தொடர்புடைய மூல ஆவணங்களை வழங்குவதற்குத் தவறுகின்ற பரீட்சார்த்திகள் எக்காரணத்தின் கீழும் இப்பதவிக்கு நியமிக்கப்படமாட்டார்.

எந்தவிதத்திலேனும் செல்வாக்குத் தேடுவது தகைமை இழக்கச்செய்யும்.

நிரப்பப்படவேண்டிய பதவிகளின் எண்ணிக்கையினைத் தீர்மானிப்பதற்கும் ஆட்சேர்ப்பினை பிற்போடுவதற்கும் அல்லது இரத்துச்செய்வதற்கும் இலங்கை மத்திய வங்கிக்கு உரிமையுள்ளது. தெரிவு அட்டவணைப்படுத்துகையில் இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் அவ்வாறு அனுபவத்தின் இடையிலைத் தீர்மானிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தற்றுணிபினைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர் - மனித வளங்கள்
இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 0112477330 தொலைநகல்: 0112477715

# சட்டத்திற்கு அடிபணி

மையத்து வீடுமாதிரிக் கிடந்தது றசீனாவின் வீடு. மூர்ச்சையாகிக்கிடந்தாள் றசீனா. உறவு முறைகளும், அயலவர்களும் தூரத்து உறவுகளும் அவள் வீட்டுக்குப் படையெடுத்தனர். இவனுக்கு இது தேவைதான்? உருப்படாதவங்களோட கூடினா இதுவும் வரும் இதுக்கு மேலையும் வரும், புள்ள வளக்கிற செப்பம் என்று பலருடனும் பேசிக் கொண்டிருந்தான். அன்சாரின் சின்னப்பா. பாவம் அவன் வெளியில் கிடந்து சாகிறான். இவன் இஞ்ச நம்மட மானத்தையும் போக்கிறான். போங்க யாரும் அவன பாக்கவும் போகக் கூடா. நான் என்ர வேலய நான் பாக்கன், என்றவாறு அந்த வளவை விட்டு வெளியேறினார் அன்சாரின் சின்னப்பாவான அகமது.

இலங்கைத் திருநாடு கொரோனா கெடுபிடியில் கிடக்கின்றது. முப்படைகளினது அர்பணிப்புகளுக்குப் பூட்டு, மக்களை ஒன்று கூட வேண்டாம் என்ற அரசாங்கத்தின் கட்டளை மனிதர்களை தனிமைப் படுத்தி தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க எவ்வளவோ திட்டங்கள்.

இத்தனை கவலைகளுக்கு மத்தியில் தொழிலில்லை, படிப்பில்லை போக்கு வரத்து எதுவுமில்லை, வேலைக்குப் போக முடியாது, இருந்தும் மக்கள் காலடிக்கு உணவுப் பொருட்களை விநியோகித்து மக்களை வீடுகளிலே உட்காரவைத்து சகலவிதத்திலும் மக்களின் நலன்களையே கவனித்துக் கொண்டிருக்கும் எமது அரசாங்கத்துக்கு எவ்வளவு நன்றியுடையவர்களாக நாம் இருக்க வேண்டும், மக்களை வீடுகளிலே இருக்கச் சொல்லி பலவகைகளிலும் உதவும் அரசாங்கத்தின் கவலைகளிலுண்டான கற்பனைகளை பொதுமக்கள் சிதறிடிக்கச் செய்வதா? ஊரடங்குச் சட்டம் எமது நலனுக்குத்தானே! படைகள் எவ்வளவு அர்ப்பணிப்புடன் சேவையாற்றும்போது சே... இவனுகள் நடந்துகொள்ளும் முறை கேடான விசயங்கள பாத்தீங்களா! அன்சாரின் ஒன்று விட்ட பெரியப்பாவான றஹீம் பிறின்சிபல் அவர் படித்தவர் என்பதால் மக்கள் முன் ஒரு பேருரையையே ஆழ்த்திவிட்டு, நம்மட வாலிபர்கள் இப்படி இருக்குமட்டும் எமது சமூகம் முன்னேறுமா? என்ற மனக்கேள்வியுடன் அவரும் அந்த வளவை விட்டு வெளியேறினார்.

உணர்வு வந்தவுடன் மைமுனா வாய்விட்டு கதறி அழுதாள். என்ர புள்ளைய காப்பாத்துங்கம்மா; என்ர ஒரேயொரு புள்ளம்மா; அவனுக்காகத் தான்மா அவரு வெளியில கிடந்து சாகிறாரு! சொன்னா கேப்பானா, எவள்ள புள்ளைகளோட கூடித்திரிந்தானே, என்ரபுள்ள அப்படிச் செஞ்சிரிக்க மாட்டான்மா, கூடுவாரோட கூடாதடா, மொட்ட பைசிக்கல வெளில எடுக்காதடா, என்னவும் என்டா என்னால தாங்க ஏலாடா என்று எத்தின தடவி சொன்னன் மா கேட்டானா ஆ... வென்று அழுது கொண்டேயிருந்தாள் அன்சாரின் தாய் மைமுனா.



அவட வீட்டு முற்றம் நிறைந்த சனம், மச்சான் என்ர வீட்டடிய நேற்று இரண்டு ஆமிக்காறப் பொடியனுகள் வந்தாங்க. நானும் அவங்க பக்கத்தில போய் பேரு, ஊரக் கேட்டிட்டு அவங்களுக்கு ஒரு றிங்சையும் கலந்து கொண்டு வந்து கொடுத்தன். அவங்க ரொம்ப சந்தோசப்பட்டாங்க. சேர், இந்த சப்பாத்து மூன்று நாளைக்கு முன் போட்ட சப்பாத்து அவ்வளவுக்கு எங்களை வேலை வாங்குறாங்க, அப்படி மக்களுக்குச் சேவை செய்யும் போது உங்கட இளைஞர்கள், எங்கள கேலி செய்றாங்க, கல் அடிக்கிறாங்க, சொபிங்பேக்கில தண்ணீர் எடுத்து எங்கள் மீது வீசிறாங்க என்று அந்த இருவரும் மனஸ்தாபப்பட்டாங்க என்று பக்கத்து வீட்டு பரினாவின் புரிசன் சலீம் கிளாக்கர் கூறியதைக் கேட்ட அவ்விடத்தில் நின்று அனைவரும் வாயில் கையை வைத்துக் கொண்டிருந்தனர்.

அன்சார்! மைமுனாக்கு ஒரேயொரு பிள்ளை. அவனை நல்ல நிலமைக்குக் கொண்டுவரவேண்டும், தனது பிள்ளை உயர வேண்டும் என்ற கற்பனையில் சுலைமான் வெளிநாட்டில் இருந்து அவனுக்கு அப்பிள்போன், இரண்டு இலட்சம் கொடுத்து லெப்டோப், தொலைக்காட்சி, மோடபைசிகள் எல்லாவற்றையும் வாங்கி அனுப்பினார். ஆனால், நண்பர்களை மட்டும் அவனே தேடிக் கொண்டான். தனது பைசிக்களில் மூன்று பேர் பிரயாணம் செய்வதை அந்தக் கிராமத்தில் அறியாதவர்களேயில்லை.

அன்றும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போது அன்சாரும் அவன் இரண்டு நண்பர்களும் வேகமாகச் செல்லும் போது, படையின் இரண்டு வீரர்கள் அவர்களை வழிமறித்து புத்திமதி செல்லி அனுப்பினர். அதற்காக அந்த இருவருடனும் கூட சண்டை போட்டுக் கொண்டு சென்றிருக்கின்றனர். மறு நாளும் வேறு ஒரு பாதையில் அன்சாரும் மற்ற நண்பர்களுமாக வேகமாகவே செல்லும்போது அதே இரண்டு இராணுவ வீரர்கள் வழிமறித்துள்ளனர். பின்பு மன்னித்து விட்டிருக்கின்றனர். இருந்தும் ஏதோ படைவீரர்கள் வயதில் குறைந்த இளம் வாலிபர்கள் என்பதாலோ என்னவோ, நடையாக வந்து அவர்களுக்கு மறைவில் இருந்து கல் எறிந்துள்ளனர்.

அவர்களை இராணுவ வீரர்கள் துரத்தியதில், பிடிபட்டது அன்சார்தான். மற்ற இருவரையும் இரவில் வீட்டுக்குச் சென்று அடயாளப்படுத்தினான் அன்சார். அவர்களை றிமான்ட் பண்ணியிருப்பதாக செய்திகள். எப்போது நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வார்களென்று யாருக்கும் தெரியாது. உரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதனால், எதுவும் செய்ய முடியாமல் மாணவர்களின் குடும்பங்கள் பெரும் துயரில் மூழ்கிக் கிடந்தன. யார் இதற்கு முன் நிற்பது? பூனைக்கு மணி கட்டுவது யார்? ஊர் முழுதும் பரவிய இச் செய்தியால் பெற்றார்கள் அதிர்ந்து போயினர். நாட்டின் சட்ட திட்டத்தை மதித்து இந்தப் பயங்கரமான நோயைப் பரவாமல் தடுக்க பொது மக்கள் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று அரசாங்கம் கேட்டுக் கொண்டுதானே இருக்கின்றது. இளைஞர்களைப் பாதுகாப்பதும் எம் கடமை என்பதை சமூகம் ஒத்துக் கொள்ளும். மைமுனாவின்நிலைமைதான் கவலைக்கிடம்.

நிந்தவூர் மக்கீன் ஹாஜி

# சமாதான மருந்து

ஒரே மகளைத் தூர இடத்திற்குக் கட்டிக் கொடுத்து ஒரு சில மாதங்களேயான பொன்னம்மாவின் மனசுக்குள் மகள் இப்போது என்ன செய்துகொண்டிருப்பாளோ என்ற எண்ணம் வலுத்துக் கொண்டிருந்தது.

ஏதோ வேலையாக கணவன் வெளியே சென்றிருக்க, வீட்டு வேலைகளை எல்லாம் வேலைக்காரியை ஏவி செய்து முடித்துவிட்ட பிறகும் இன்னும் நேரமிருக்கவே தொலைக்காட்சியை இயங்கவிட்டுக் கண்களை அதிலே மேயவிட்டாள். எந்த நிகழ்ச்சியிலும் மனம் இலயிக்காமல் போகவே முன் வாசல் அருகிலிருக்கும் சாளரத்தைத் திறந்தாள். தேயிலைத் தோட்டம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கொட்டிவைத்திருந்த பசுமை ஒரு பச்சைக் கம்பளம் விரித்ததுபோல் இருந்தது. நாற்புறமும் சூழ்ந்திருந்த மலைகளுக்கு நடுவே ஆங்காங்கே சிற்றோடைகளும் நீர்வீழ்ச்சிகளும் கண்ணுக்குக் குளிர்ச்சியூட்டின.மேற்கில் மறைய எத்தனிக்கும் சூரியனின் இளஞ்சூட்டில் முற்றத்தில் மலர்ந்திருந்த முல்லைப் பூக்களின் நறுமணம் மூக்கைத் துளைத்தது. மாமரக்கிளையில் கிளிகள் இரண்டு கூட்டை நோக்கிப் புறப்படும் அவசரத்தில் ஒன்றோடொன்று அலகுகளால் உரசிக்கொண்டு ஏதோ சமிக்ஞை செய்த வண்ணம் இருக்கின்றன. ஆனாலும் அவை எதிலும் மனம் இலயிக்காத பொன்னம்மா மாலை இளந்தென்றலும் மேனியைச் சுடுவது போலிருக்க சாளரத்தைச் சாத்திவிட்டு அருகே கிடந்த சொகுசு நாற்காலியில் அமர்ந்துகொண்டு தொலைக்காட்சிப்பெட்டியை இயங்கவைத்தாள். அதுவும் எரிகிறத் தீயில் எண்ணெய் வார்த்ததுபோல் ஏதோ ஒரு சினிமாப்பாட்டை ஒளி, ஒலியாக்கியது. ஒரு தேயிலைத் தோட்டத்திற்குச் சொந்தக்காரரின் மனைவியாக ஆடம்பரமான அந்த மாளிகையில் இருந்தவாறு அந்த மாலைப்பொழுதில் மணலில் விழுந்த புழுவாகப் பொன்னம்மா தவிப்பதற்கும் காரணமில்லாமலில்லை.



என்னதான் செல்வந்த வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் பிறந்த வீட்டில் அவளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியவற்றை முறையாகக் கற்றுக் கொடுக்க வேண்டியது ஒருதாயின்கடமை. அந்தக்கடமையிலிருந்து அவளைஅவள்விருப்பத்திற்கேற்ப வளர்க்கும் தாய்மார்கள் கொடுக்கும் செல்லமானது அவள் மணமுடித்து இன்னொரு வீட்டுக்குச் செல்ல நேர்கையில் அவள் புகுந்த வீட்டில் எப்படி வாழ்வாளோ என்ற கவலையைக் காலம் அந்தத் தாய்மார்க்கே கொடுத்துவிடுகிறது. ஒரு சராசரித் தாயின் தவிப்போடு இருந்தவளிடம் வந்த வேலைக்காரி "அம்மா ரெண்டு நாளைக்கு முன்ன ஊரடங்கு இல்லாதபோது அவசரமா அவரு வேலை செய்யிற முதலாளியோட எங்க வீட்டுக்காரரு கண்டிக்குப் போனாரு."

"ம்ம் அதுக்கென்ன?"

"இல்லம்மா நம்ம சின்னம்மாவை அங்கே எங்கோ கடையிலே பார்த்தாராம்"

சின்னம்மா என்றதும் உசாரான பொன்னம்மா, "ம்ம் சொல்லு சொல்லு'' ஆர்வமாகக் கேட்கத் தொடங்கினாள்.

"அம்மாவும் ஐயாவும் மட்டும்தான் இப்போ வீட்டிலே இருக்காங்களாம், அம்மாவோட மாமியார் மாமனார் எல்லாம் கொழும்புல அவங்க மக வீட்டுக்குப் போய்ட்டாங்கன்னு சொன்னாங்களாம்."

"வேறு ஏதாச்சும் சொன்னாரா''

" சமையலுக்குக் காய்கறி வாங்கிக்கொண்டு இருந்தாங்களாம். இவரு சுக செய்திய கேட்டுட்டு வந்துட்டாராம்''

"என்னது.. சமையலுக்கு காய்கறி வாங்கினாளா? இவளுக்கு சமைக்கத் தெரியாதேடீ.. எப்படி சமாளிக்கிறாளோ தெரியலியே..''

"அதாம்மா எனக்கும் கவலையா இருக்கு"

"'எல்லாம் அவங்க அப்பா கொடுத்த செல்லம் ஒரே புள்ள, ஒரே புள்ளன்னு அவளைப் பெரிய படிப்புப் படிக்கவைக்கப் போய் இப்போ ஒரு பொண்ணு அத்தியாவசியமா படிச்சு வைச்சிருக்கக் கூடிய சமையல் கலையைப் படிக்க விடாம பண்ணிட்டாரு.''

புலம்பத்தொடங்கிய பொன்னம்மாவிடமிருந்து வேலைக்காரி நழுவினாள்

கல்லூரிக்குப் படிப்பிற்கென்று சென்றவள், படிப்போடு நகரத்துக் கடைகளின் நாகரீக உருசிகர உணவிற்கு நாக்கைப் பழக்கிக்கொண்டு வந்துவிட்டாள். படிப்பிற்கு ஏற்ற தொழிலைத் தேடிக்கொண்டிருந்த நயனாவிற்கு வேலை அமைவதற்குள்ளேயே மாலை சூடும் வேளை அமைந்துவிட்டது.

நயனாவிற்குத் தக்க மாப்பிள்ளை. வீட்டிற்கு ஒரே பிள்ளை. நல்ல உத்தியோகத்தில் இருந்ததாலும் முதல் சம்பந்தத்தை விட்டுவிடக்கூடாது என்று ஒரு சுபயோக சுபதினத்தில் கெட்டி மேளம் கொட்டி மாப்பிள்ளையோடு அனுப்பி விட்டார்கள். எல்லா பொருத்தமும் பார்த்துக் கட்டிவைத்தாலும் சமையல் தெரியாதவள் என்றால், என்ன தான் தங்கமான மாமியார் என்றாலும் ஏழாம் பொருத்தமகிவிடும் என்பது பொன்னம்மாவைக் குடைந்தது.

மாப்பிள்ளைக்குக் கொஞ்சமேனும் சமையல் தெரியுமென்றாலும் சமாளித்துக்கொண்டு வாழ்ந்துவிடுவாள். மாப்பிள்ளையும் சமையல் தெரியாதவர் என்றால், நினைக்கவே பொன்னம்மாவிற்கு வருத்தமாக இருந்தது. பசி பொறுக்காதவள், என்ன செய்யப் போகிறாளோ! நினைத்தவள், ஒரு தொலைபேசி அழைப்பெடுத்துப் பேசலாம் என்று எண்ணினாள். கூடவே புதிதாய் மணமுடித்தவர்கள், ஊடலும் கூடலுமாய் இருக்கலாம். இந்த நேரத்தில் அவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது. காலையில் பேசுவோம் என்று தனக்குத்தானே சமாதானப்படுத்தி கொண்டாள். என்றாலும், நினைவுகள் நயனாவைச் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

கொரோனா வைரஸ் காரணமாக நாடே ஊரடங்கில் கிடக்கும் இந்நிலையில், கணவனுக்கு வாய் உருசிக்க சமைத்துப்போட வேண்டியவள், உதவியென்று அக்கம் பக்கத்தவர்களையும் நாட முடியாத சூழ்நிலையில், முன்பொருநாள் சாம்பாருக்குக் காய்கறி நறுக்கச் சொன்னபோது நடந்த சம்பவம் பொன்னம்மாவின் நினைவில் வந்தது.


ஒரு மூன்று பேருக்கு சமைக்க, மூன்றடி நீளமுள்ள புடலங்காய், ஒருகிலோ முருங்கை, ஒரு கிலோவோற்கும் அதிகமான கத்தரிக்காய் என்று ஒரு பத்துப்பேர் இருக்கும் குடும்பத்திற்குத் தேவையான அளவு நறுக்கித் தள்ளிவிட்டாள். நறுக்கிய துண்டுகளின் அளவைப் பார்த்தால் சாம்பாரின் மேல் இருக்கும் அபிமானம் நம்மைவிட்டுத் தூர தேசத்திற்குச் சென்றுவிடும். வெட்டிய காய்கறி வீணாகக் கூடாதே என்பதற்காக அக்கம் பக்கத்தவர்களுக்குக் கொடுக்க நேர்ந்தது. சொந்த வீட்டில் அதுவும் காய்கறி விளையும் இடத்தில் இது நடந்ததால், அதை ஒரு பெரிய சம்பவமாக யாரும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், அவள் புகுந்த வீட்டில் இப்படி நடந்தால் தன் வளர்ப்பை ஏளனம் செய்வார்களே என்பதும் பொன்னம்மாவின் பெருங்கவலையாக இருந்தது.

கவலை ஒருபுறம் இருக்கட்டும் கடைகள், உணவகங்கள் எல்லாம் அடைக்கப்பட்டு வீட்டிலேயே சமைத்து உண்ண வேண்டும் என்ற கட்டாயத்திற்குத் தள்ளப்பட்ட கொரோனா காலத்தில், அவள் ஒருவேளை சாப்பாட்டிற்காக கணவனை என்ன பாடு படுத்துகிறாளோ தெரியாது. வயிற்றுப் பசியைப் போக்கும் வல்லமையே இல்லாதவள், வாலிப பசித்தொட்டு வாழ்க்கையில் ஏற்படும் எல்லாப்பசிகளையும் அடக்கிக்கொண்டு வாழ்வை முன்னெடுத்துச் செல்ல என்ன பாடு படுவாளோ என்று நினைத்தபோது, தானும் கூட ஒரு காலத்தில் இவளைவிடச் சின்னவயதில் கல்யாணமாகி கணவன் வீட்டில் அனுபவித்த சங்கடங்கள் ஒருகணம் கண்முன் வந்து போனது...

எதுவித வசதிகளுமற்ற ஒரு ஒரு சிறிய கிராமத்தில் வாழ்வை ஆரம்பித்து படிப்படியாக ஒவ்வொரு அனுபவங்களின் மூலம் ஒவ்வொரு பாடங்களைக் கற்று இன்று தலைநிமிர்ந்து நிற்பதைப் பார்க்கப் பொன்னம்மாவிற்கே ஆச்சரியமாக இருந்தது. இது போல வாழ்வில் அவளும் வாழ்ந்துகொண்டே வாழ்வை கற்றுக் கொள்வாள். இனி கலங்கிப் பயனில்லை என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள். அந்த சமாதானமே அவளுடைய மனத்துயருக்கு ஒரு மருந்தாகவும் இருந்தது.

மெய்யன் நடராஜ்

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல :12



திரு/திருமதி/செல்வி .........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி .........................................

திகதி ............ கையொப்பம் ............

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 12

**இடமிருந்து வலம்**

1. நுட்பம்
5. பாரதப் பிரதமர்
7. துளை
8. அன்பு
9. ஒரு மணித்தியாலத்தில் இது அறுபது
11. இது இப்பொழுது நடக்கும் நான்காவது யுகம்
12. பாணம் திரும்பிவிட்டது
13. ஒரு வாத்தியக் கருவி
15. சிறப்பு
17. நோன்பு
20. பாடல் வகை
22. மனச் சஞ்சலம் குழம்பிவிட்டது
23. கணிதத்தில் வரும் கழித்தல் குறியீடு
24. பிரித்தல்
25. பயமுறுத்தல் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. சூழ்ச்சி
2. சோர்வு (குழம்பியுள்ளது)
3. வீரச்செயல் புரிந்து மணம் செய்து கொள்வது
4. சில வீடுகளில் தாயாரை இவ்விதம் அழைப்பதுண்டு
5. இதுவும் ஒரு சிற்றுண்டிதான்
6. இந்தியாவின் தலைநகர்
10. சமாதானம்
12. குதிரை
14. பொறுப்பு. பணி என்றும் சொல்லாம் (குழம்பியுள்ளது)
15. கறிச் சரக்குகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
16. நிலத்தடி பொக்கிஷம். இதனைப் பெறுவதற்கு நரபலியும் கொடுப்பதுண்டு
18. தானிய வகைகளுள் ஒன்று (குழம்பியுள்ளது)
19. சிரசு
21. தீங்கிழைப்பவன்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 11 விடைகள்

இடமிருந்து வலம்

01. நடுநிலை 03. சாபம் 05. தத்து 06. பரமகதி 09. வினா 11. ஆத்திகன் 12. திரட்சி 14. தோம்பு 16. பல 18. கனா 19. தடம் 20. விழல் 21. புகையிலை

மேலிருந்து கீழ்

01. நண்பன் 02. நிம்மதி 03. சாது 04. பதவி 05. ஆத்திரம் 07. நகரம் 08. கத்தி 10. சீனா 13. சிலம்பு 14. தோல்வி 15. புகல் 17. படலை 19. தகை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 10

பரிசு பெறுவோர்

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| **B. இந்திரா,**<br>29/14, ஜெம்லேண்ட்,<br>குடகம வீதி,<br>அவிசாவளை. | **ஆர். ஜெயநந்தினி,**<br>இல. 4,<br>சிறிபுர வீதி,<br>பொகவந்தலாவ. | **சந்திராணி தங்கத்துரை**<br>வி.வி. வீதி,<br>பெரியநீலாவணை,<br>கல்முனை. |

பாராட்டு பெறுவோர்

**1. எம்.எம்.பி.எப். ரிஸ்னா,** ஹப்புகஸ்தலாவ.
**2. எம்.சி.எப். சிம்லா,** மருகோன, உக்குவளை.
**3. எஸ். நாகராஜா,** மத்திய வீதி, காரைதீவு 02.
**4. சாஹிரா பானு லியாவுடீன்,** நிந்தனி, புத்தளம்.
**5. ஆர். பாத்திமா இஷால் ஹனா,** கிண்ணியா 3.

## நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

# செருப்பு வெறும் கதையல்ல

செருப்புகள் எனக்கு ஆண்டுக்கணக்கில் தேய்வதில்லை; ஆனால் என்னுடைய வலது காலில் அணிகின்ற செருப்பின் குதிப்பக்கமுள்ள மேல் பாகம் மட்டும் தேய்ந்து ஒரு சிறு துவாரம் போடும்; இதற்கு என்ன காரணமென்று நான் இதுவரை தேடவில்லை.

ஒரு வேளை என் நடையா அல்லது எடையா என்பதும் தெரியவில்லை.

முதன் முதலில் எப்போது செருப்பு அணிந்தேன்?

சரியாக நினைவுக்குக் கொண்டு வர முடியவில்லை

ஆனால் ஐந்து அல்லது ஆறாவது வயதில் ஒரு பச்சை நிறத்திலான வளவளப்பான 'ரிபன்' கட்டிய தோணிப் படம் போட்ட செருப்பு அணிந்தது ஞாபகமிருக்கிறது.

அதற்கு முன்னமே 'சொக்ஸ்' போன்ற மெல்லிய துணியிலான அழகிய நூல் கட்டும் செருப்பு அணிந்து வீட்டின் தாழ்வாரத்தில் கையில் விசிறியுடன் நின்று கொண்டிருக்கும் கருப்பு வெள்ளைப் புகைப் படத்தில் பார்த்திருக்கிறேன்.

காலில் அந்தக் காலத்து 'மேரிக் குயின்' என்ற தோல் செருப்பு அணிந்திருப்பதை உம்மா சொல்லவும் கேட்டிருக்கிறேன்.

'சேற்றுப் புழுக் கடிக்கும் செருப்புப் போடாமல் வெளியே போகாதே..' என்ற வாப்பாவின் உபதேசம் இப்போதும் காதுகளில் ஒலிக்கிறது.

கல்லூரிக் காலத்தில் நமக்கு 'பாட்டா'மட்டும்தான் செருப்பு. அதுதான் 'ஹெட் மாஸ்டர்' தொடக்கம் அரிவரி படிக்கும் பிள்ளைகள் வரை சோசலிஷமானது.

எனது பாடக் கொப்பிகளில் பென்சில் கீறிய பிழைகளை அழித்து விடுவதற்கு இறப்பருக்குப் பதிலாக பல தருணங்களில் பாட்டா எனக்கு உதவியிருக்கிறது.

இன்று நினைக்கையிலும் பற்பல நிறங்களில் பணக்கார விலைகளில் அந்த ஆண்டுகளில் நிறைய 'மொடல்'கள் வராமல் விடவில்லை; நம்மிடம் போதிய பணமில்லாத தால் அவை வேறு தட்டுகளில் ஒளிந்து விட்டிருக்கலாம்.

எனக்குப் பெரும்பாலும் வார்தான் அறுந்து விடும்; அதனோடு மனமும் திக்கென்று படபடக்கும்; எங்காவது ஒரு சட்டை ஊசி அதனை இணைத்துக் குத்தி என் பயணத்தைக் தொடர ஏதுவாகும்.

புதுச் செருப்பென்றால் ஒரு வித வாசம் வரும்; அப்படியே அதனை முகத்தோடு அப்பி மணம் குடிக்கும் பழக்கம் எனக்கு இப்போதும் இருக்கிறது.

வலது இடது இடது வலது என மாறிப் போடுவதிலும், வாப்பாவின் பாதம் நெடுத்த செருப்பை இழுபட அணிந்து நடப்பதிலும் அன்று அலாதி ஆசைதான்.

நீண்ட காலமாக என்னால் மறக்க முடியாமல் இருந்தது ஒரு பள்ளியில் காவு கொடுத்த பஞ்சு போன்ற 'பிலட் போம்' ஊதா நிறச் செருப்புத்தான்.

'என் செருப்பின் மீது ஆசைப்பட்டவன் நல்லாயிருக்க மாட்டான்' என்று கைகளைக் கண்களில் கசக்கி அழுதிருக்கிறேன்.

தமிழ் இலக்கியங்களில் வீரர், வேடர், இடையர் அணிந்த குதி காலுக்கும் புறங்காலுக்கும் வார் பூட்டிய தொடுதோல், அகன்ற அடிப்பாகமுள்ள சப்பாத்து, கொழுக்கின் மூஞ்சி போன்ற கூராக வளைந்து உயர்ந்திருக்கும் காலணி, குறடு, கக்கரை,



கிரிச்சான், தும்பு, களத்துச் செருப்பு, கூனையடிச் செருப்பு, மூட்டு எனப் பல்வேறு வடிவங்கள் பேசப்படுகின்றன.

என்ன பேசினாலும் என் அருமந்த பாட்டாவுக்கு ஈடாகுமா?

எனது திருமண நாளின் மறுதினம் மாமி வாங்கித் தந்த மார்டீன் 'சேர்ட்'டையும் 'அப்பாப்' காற்சட்டையையும் மறக்க முடியாத படி, அன்றே புது மாப்பிள்ளையாய் அணிந்த 'குவா வாடிஸ்' சப்பாத்து, அதில் அவளும் நானும் முகம் பார்த்து மகிழ்ந்த நேரங்கள் எனக்குள் இப்போதும் நீள்கின்றன.

நாங்கள் வீட்டில் இல்லாத சமயம் எனது தாய் மாமன் வாசலுக்கு வந்து போன அடையாளத்தை அவர் அணிந்திருக்கும் பாதரட்சையே காட்டி விடும்; அவர் எப்போதும் ஒரு வேப்பிலையின் வடிவம் பாதத்தில் முத்திரையாய் பொறித்த செருப்பையே அணிந்திருப்பார்.

'ஹவாய் சைன்' செருப்புகளையே அவர் விரும்பி அணிந்ததாகவும் பின்னர் அதன் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் சந்தைக்கு அது கிடைக்கவில்லையென்று மாமா கவலைப்பட்டதாகவும் அவர் மகன் மூலம் அறிந்தேன்.

ஒரே அடியுள்ள மரக் கட்டையால் செய்யப்பட்ட மிதியடி அணிந்த 'மிதிதடி ஆலிம்' என்பவர் எங்களூரில் வாழ்ந்ததாக உம்மா கூறக் கேட்டிருக்கிறேன்.

அவர் ஆயாசமாக ஒரு கையில் பிரம்புடன் வேலி ஓரமாகத் தட்டித் தட்டி நகரும் பாங்கையும் அவரின் மஞ்சோணா மரத்தில் செய்த மிதிதடிச் சத்தம் ஆலிமை இனங்காட்டி நிற்பதாகவும் ஒரு சுரங்கைக் கதை வைப்பார்.

அந்நாளில் அநேகர் தலைமுடி மழித்து மொட்டையாகவே இருப்பார்களாம்; முடி வளர்த்திருந்த அன்றைய ஒரு பிரபலத்தை 'சிலுப்பாக் காரர்' என்று அழைத்ததாகவும் சொல்லுவார்.

சரி, இது போல்தான் செருப்பின் வளர்ச்சியும் இருக்குமோ என்று நான் சிந்திப்பதுண்டு.

அநாதரவான ஒரு நிலையினைப் பெரும்பாலும் செருப்புகள்தான் உணர்த்துகின்றன. பொதுச் சமூக நீரோட்டத்திற்கான சிறு கசிவு இங்கும் பல்வேறு வகையில் செருப்பின் வடிவங்களில் பகர்கின்றன.

நீண்ட நேரம் காத்திருந்து வெயிலில் காய்ந்திருந்து கடலின் உப்பும் கடற்காற்றின் வேகமும் பாறைத் தொகுதிகளில் தோய்ந்த ஈரமும் மூடிப் பொதிந்து கொண்டிருக்கும் சாய்வு நிலப் பகுதிகளில் சமநிலைக்கு ஈடுசெய்து நம்மைச் சுமந்து நுழைந்து செல்லும் பாதணிகளும் சமுதாய அகலிகைகளே.

'பாதணிகளை வெளியே கழற்றுங்கள்' என்ற வாசகத்தோடு எனக்கு எப்போதும் வெறுப்புத்தான்;

இப்படி எழுதிப் போட்டுவிட்டு உள்ளே இருப்பவர்கள் எல்லாம் செருப்புத்தான் அதிலென்ன பெரிய மொடல்?

இல்லை, செருப்பு அணிவதும் ஒரு கலைதான், அதன் நிறம் வடிவம் நமக்கு ஒத்து வராது போனால் மனம் ஒதுங்கியே விடுகிறது; இப்போதைக்கு அணிந்து கொள்வோம் என்று வாங்கினாலும் அதன் தெரிவில் பிழை செய்து விட்டேனோ என்ற ஒரு சிறு நினைவு எனக்குள் அலசி எழுகிறது.

என் சிறு வயதில் பெரு விரலுக்குப் பதிலாக மெட்டி விரலுக்குள் செருப்பின் பட்டியை மாட்டி அணிவதிலும் பின் பகுதி தேய்ந்து குதிகால் தரையில் பட ஒரு குதியால் சறுக்கி நடப்பதென்பதும் மிக்க மகிழ்வானது.

சதக் சதக்கென்று, புருக் புருக்கென்று குதியோடு ஒட்டிப் பிரியும் சத்தம் இனிமையானது.

பரந்து கிடக்கும் வெள்ளை பணற்பரப்பில் போய் உட்கார்ந்து விட்டால் அங்கேயே நம்மைக் கரைந்தளித்துவிடத் தூண்டும் ரம்மியங்களின் களிப்பிலிருந்து மீண்டு எழுகின்றபோது நம் கண்கள் வளைந்து தேடுவது நாம் அணிந்து வந்த செருப்பைத்தான்.

எவ்வளவு குவிந்து கிடந்தாலும் அந்தக் கும்பலுக்குள் நமது சோடியை என்னமாய்த்தான் கண்டு பிடித்து விடுகின்றோம்.

கைகளில் காவிச் சென்ற அரிய செல்வத்தையும் இழந்து விட்டுவரும் மனிதர்கள் பெரும்பாலும் செருப்புகளை அயற்பதில்லை தான்;

சோடி மாறினாலும் செருப்புகள் நிழற் போர்வையாகவே தொடருகின்றன.

அதனை அணிந்திருப்பது எவரின் கண்ணிலும் வந்து விழுவதில்லையே. கடந்த மாதம் என் வீட்டின் பின்னே குசினியொன்றை அமைப்பதற்காக ஆழமான மடுவொன்று வெட்டும் நேரத்தில் பூட்டு வாரோடு கழன்ற நிலையில் இழுபட்டுக் கொண்டு ஒரு வர்ணம் கலைந்த குதிரை முகத்திலான கால் விரல்கள் பதித்த அடையாளத்தோடு உள்ளேயிருந்து ஒரு செருப்பைக் கண்டெடுத்தேன்.

அதன் வயது நூறைத் தாண்டியிருக்குமென்று என் உம்மாவின் சகோதரி சொன்னார். வாப்பாவின் வாப்பா அணிந்திருந்ததாகவும் அவர் சாட்சி பகர்ந்தார்..

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வளர்ச்சியை ஆராய்கின்றபோது அச்சமூகம் பயன்படுத்திய பொருட்களைப் பற்றிய அறிவு அவசியமாகின்றது.

மனிதனின் வளர்ச்சியிலும் கூட இது பொருத்தமாகத்தான் இருக்கும்போல.

செருப்பு வெறும் கதையல்ல; அது என் ஒற்றைத் தியாகி இப்படி எழுதிக் கொண்டிருக்கையில் ரகசியமாக என் நம்பிராட்டி பின்னே நின்றுகொண்டு, உங்களின் இந்த 'ஒட்டச் செருப்பையா சொல்லுறீங்க?' என்கிறாள்.

# நெதர்லாந்தில் ஒரு யாழ்ப்பாண மனிதன்!

மு. நித்தியானந்தன்

இருபத்தேழு ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து, அதில் 17 ஆண்டு காலம் வட்டுக் கோட்டையாழ்ப்பாணக்கல்லூரியில்ஆசிரியராகப் பணிபுரிந்த பென் பவிங்க் (Ben Bavinck) ஒரு டச்சுப் பாதிரியார். சரளமாகத் தமிழில் உரையாற்ற வல்லவர். அவர் பணியிலிருந்து ஒய்வு பெற்று, நெதர்லாந்தில் அம்ஸ்டர்டாமுக்கு திரும்பிவந்த போது,"நான் இங்கு இடம்பெயர்ந்த யாழ்ப்பாணத்தானைப் போல இருக்கிறேன்" என்று பவிங்க் கூறினார். அவரது மரண இறுதிச் சடங்குக்கான அறிவிப்பில் 'யாழ்ப்பாண மனிதன்' என்றே நெதர்லாந்தில் அவரை அடையாளப் படுத்தியிருந்தனர்.



2009ஆம் ஆண்டு கடுங்குளிரில் ஒரு நாள் லண்டன் ஹரோவில் பென் பவிங்கிற்காகக் காத்திருந்தேன். பத்து மணிக்குச் சந்திப்பதாகக் கூறியிருந்தார் பத்துமணிக்கு அவர் வரவில்லை. நேரத்தைக் கடைப்பிடிப்பதில் பென் பவிங்க் மிகவும் கறாரானவர். புதிய இடமாதலால் இடத்தைத்தவற விட்டுவிட்டதாக அறிவித்தவர் சிறிது நேரத்தில் வந்து விட்டார். 85 வயது, சுகவீனமுற்றிருந்தார். ஆனால், உடலில், தோற்றத்தில், மிடுக்கில் சுறுசுறுப்பில் அது தெரியவில்லை.

பவிங்க் தென்னிலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றிய காலப்பகுதி, இலங்கைத்தீவு இரத்த ஓடையில் மிதந்த நாட்கள். ஆயுத அராஜகத்தின் முன்னால் முழு சமூகமுமே மண்டியிட நிர்ப்பந்திக்கப்பட்ட அவலச் சூழலை இலங்கையின் அனைத்துப்பகுதிகளிலும் பவிங்க் அவதானித்தார். சாதாரண மக்கள் இவற்றையெல்லாம் எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதை ஆவலோடு நோக்கினார்.

இலங்கையின் யுத்த நாட்களில் தான் கேட்டவற்றை, பார்த்தவற்றை, தனது சொந்த அவதானிப்புகளை, மதிப்பீடுகளை பவிங்க் டயறிக் குறிப்புகளாகப் பதிவு செய்தார். 23 அப்பியாசக் கொப்பிகளில், ஆயிரக்கணக்கான பக்கங்களில் டச்சு மொழியில் இந்தக்குறிப்புகள் பதிவாகியுள்ளன. நண்பர்கள் இந்த டயறிக் குறிப்புகளை நூலாக வெளியிடலாமே என்று வற்புறுத்தியதில், டச்சு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் தானே அவற்றை மொழி பெயர்த்திருந்தார். பல ஆண்டுகால இடையறாத முயற்சி. டயறி நூலாக்கம் பற்றிய ஆலோசனைக்கான அந்தச் சந்திப்புத்தான் அவருடனான இறுதிச் சந்திப்பாகி விட்டது.

கற்றை கற்றையாகக் குவிந்துபோன டயறிப் பதிவுகள். பிரமிப்புத்தரும் பணி. சுவாரஸ்யமான பதிவுகள். டயறிப் பதிவுகளின் போக்கைக் கூர்ந்து பார்த்தபின், அவற்றை இரண்டு பாகங்களாக, தனித்தனியாக வெளியிடுவதுதான் உகந்ததாக இருக்கும் என்று நான் கூறிய ஆலோசனையை பவிங்க் ஏற்றுக்கொண்டார்.

மேலும், தனி இரு நூல்களாகப் பிரித்துக் கொண்டால்தான் இந்தப்பதிவுகளை 'எடிற்' செய்வதற்கும் சௌகரியமாயிருக்கும் என்று நான் கருதினேன். அதனைத்தொடர்ந்து இரண்டாவது தொகுதியும் வெளிவந்துவிட்டது. தன்னை யாராவது சரியாக நெறிப்படுத்தியிருந்தால், தான் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் தமிழை முழுமையாக் கற்று, ஒரு தமிழ்ப் புலமையாளனாகியிருப்பேன் என்று பவிங்க் என்னிடம் கூறியிருந்தார்.

தமிழுக்குப் பணியாற்றிய ஐரோப்பிய கிறிஸ்தவ பாதிரிமார்களின் அணியில் தானும் இடம்பெற்றிருக்கலாம் என்ற மனஆதங்கம் பவிங்க்கிடம் இருந்திருக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன். க்ரியாவின் ' தற்காலத் தமிழ் அகராதி' திருத்திய புதிய பதிப்பு வெளியாகியபோது, அதில் சேர்க்கப்பட்டிருந்த சில சொற்களைக் குறித்த விபரங்களுடன் க்ரியாவின் சென்னை அலுவலகத்திற்கு பவிங்க் சென்றபோது, அந்த டச்சுக்காரரைப்பார்த்து வியப்படைந்திருக்கிறார் க்ரியா நிர்வாகி எஸ்.ராமகிருஷ்ணன். பவிங்க் விட்டுச் சென்றிருக்கும் டயறிக் குறிப்புகள் சமகால ஈழத்துத் தமிழரின் ஓர் அரசியல், சமூக ஆவணம். சாதாரண மக்களின் பிரச்சினைகளை, அன்றாட அவலங்களை, இயக்கங்களின் வன்முறையை, அரசாங்க அதிகாரிகளின் மெத்தனத்தை அவர் நேர்மையாகப் பதிவு செய்திருக்கிறார்.

நெதர்லாந்தில் ஜெர்மனியின் பாசிஸ அதிகாரத்தின்போது, பாசிஸ ஒடுக்குமுறைக்கு எதிராக , துண்டுப்பிரசுரங்களை இரகசியமாக விநியோகித்த தனது இளமைக்கால அரசியல் அனுபவங்களை பவிங்க் என்னுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.இளமையிலேயே பாசிஸத்தின் கோரத்தைத் தரிசித்து, அதற்கு எதிராகப் போராடிய பவிங்க்கின் மன ஆழத்தில் மனிதாபிமானமும் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான கிளர்ச்சியும் வேரோடியிருந்தன. இரண்டாம் உலகயுத்தம் முடிந்தபின், நெதர்லாந்தின் Utrecht பல்கலைக்கழகத்தில் தனது சட்டப்படிப்பை முடித்தவர் பவிங்க்.

இலங்கையின் கிறிஸ்தவ மதபீடத்தலைவர் வண.கலாநிதி டி.ரி. நைல்ஸ் ஆலோசனையின் பேரில் 1954இல் தனது மனைவியுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியேற்றவர், 17 ஆண்டுகாலப்பணியின் பின், 1975இல் தாய்நாடான ஒல்லாந்து திரும்பினார். மீண்டும் 1988ஆம் ஆண்டில் இலங்கை தேசிய கிறிஸ்தவ கவுன்சிலின் நிவாரண, மறுவாழ்வு அலுவலராகப் பதவியேற்று, இலங்கை திரும்பியபோது, இந்நாடு யுத்தமோதலில் மூழ்கியிருந்தது. 1994இல் அவர் யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று பணியாற்றியபோது, யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. யாழ்ப்பாணத்தில் அவர் பணிபுரிந்த அடுத்த பத்து ஆண்டுகாலம் மோதலும் வன்முறையும் நிறைந்த காலமாகும்.

பாசிஸத்தைத் தனது சொந்த தேசத்தில் தரிசித்திருந்த பவிங்க், அத்தகையதோர் அடக்குமுறை அராஜகம் ஈழத்தில் உருப்பெற ஆரம்பித்தபோது, அதனைத் துல்லியமாக அவரால் அடையாளம் காண முடிந்தது. இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் நடந்தும், சைக்கிளிலும், காரிலும், ஜீப்பிலும் லொறியிலும் படகிலும் கப்பலிலும் பயணித்திருக்கிறார்.

# கல்விமான் 'கம்யூனிஸ்ட் கந்தையா'வின் 101 –வது ஆண்டு நினைவாக..!

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவர்.

பல்கலைக்கழகப் படிப்பு முடித்து ஆங்கிலச் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்றவர். அக்காலம் முதல் கட்சிப் பணியாற்றியவர்.


கட்சியின் உத்தியோகபூர்வ வாரப்பத்திரிகையான 'போர்வார்ட்" டின் (Forward) ஸ்தாபக ஆசிரியர்.


தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த பேச்சாளர் எழுத்தாளர்.

கல்லூரி ஆசிரியராகவும் அதிபராகவும் பல வருடங்கள் பணியாற்றியவர்.

இலங்கையின் தமிழ்ப்பகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்து வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கட்சியால் பணிக்கப்பட்டு 1946 ல் யாழ்ப்பாணம் வந்து கட்சியை அறிமுகப்படுத்தியவர்.

அன்று யாழ் விக்ரோறியா வீதியில் அமைந்த தனது வாடகை வீட்டையே கட்சி அலுவலகமாகப் பாவித்தவர்.





தோழர்கள் சு. வே. சீனிவாசகம் வீ. ஏ. கந்தசாமி ஆர். பூபாலசிங்கம் எம். சி. சுப்பிரமணியம் இராமசாமி ஐயர் ஆகியோர் இவருடன் இணைந்து கட்சியை வடபகுதியில் ஸ்தாபித்துப் பணியாற்றினர்.

பிற்காலத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களான கே. டானியல் டொமினிக் ஜீவா எஸ். பொன்னுத்துரை நீர்வை பொன்னையன் ஆகியோர் இவரது ஆளுமைக்குட்பட்டார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரும் இலக்கியவாதியுமான ப. ஜீவானந்தம் 1947ஆம் ஆண்டில் இந்தியாவில் தலைமறைவாகி யாழ்ப்பாணத்தில் இவரது இல்லத்திலேயே சிலகாலம் வாழ்ந்தார்.

யாழ் மாநகரசபையின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர். அக்காலத்தில் சட்டத்தரணி எம். எம். சுல்தான் என்பவரை மாநகரசபை முதல்வராக்கப் பெரும் முயற்சிசெய்து வெற்றி கண்டவர்.

அன்று ஏழை மக்கள் மாணவர்கள் இளைஞர்களின் ஆதர்ச மனிதனாக விளங்கியவர்.

1963 ம் ஆண்டு இறுதியில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பிளவடைந்தபோது இவர் தோழர் நா. சண்முகதாசன் தலைமையில் சீனச்சார்பு நிலையெடுத்த கட்சியுடன் தம்மை இணைத்துக்கொண்டார்.

1966 ம் ஆண்டளவில் கட்சியின் ஆதரவுடன் ஆரம்பமாகிய தீண்டாமை ஒழிப்பு போராட்ட நடவடிக்கைகளுக்குத் தலைமைகொடுத்தவர்களில் ஒருவர்.

இவருடன் வீ. ஏ. கந்தசாமி கே. டானியல் எம். ஏ. சி. இக்பால் சு. மார்க் கே. ஏ. சுப்பிரமணியம் எஸ். ரி. என். நாகரத்தினம் முத்தையா (Man) ஆகியோர் போராட்டத்திற்குத் தலைமை வகித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சுரண்டல் அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து முழு மனிதகுலமும் விடுதலை பெறவேண்டும் என்ற உன்னத நோக்குடன் பொதுவுடமை இலட்சியத்தைக் கடைப்பிடித்த மு. கார்த்திகேசன் இலங்கையில் சிறுபான்மை இனமான தமிழர்கள் தமது நியாயமான உரிமைகளை இழந்திருப்பது குறித்தும் பெரிதும் கவனம் செலுத்தினார்.


இன ஒடுக்குமுறையும் ஒருவகை வர்க்கச் சுரண்டலே என்று நம்பிய அவர் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தினார்.

1919 ம் ஆண்டு யூன் மாதம் 25 ம் திகதி மலாயாவின் 'தைப்பிங்"கில் பிறந்த இவர் 1977 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ம் திகதி யாழ்ப்பாணத்தில் மாரடைப்பால் மரணமானார். இவரது மகள் ராணி சின்னத்தம்பி கணவர் வி. சின்னத்தம்பி (பாரதி நேசன்) ஆகியோர் சீனாவில் 16 ஆண்டுகளுக்கு மேலாக பீக்கிங் வானொலி அயல்மொழிப் பதிப்பகம் ஆகியவற்றில் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது..!

வி.ரி. இளங்கோவன்









# யாவரும் கேளிர்

## பல்சுவை இலக்கியத் திரட்டு 10

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

**(“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்’)**

### பாடும் நிலா அஸ்தமித்தது!



பாடும் நிலா எனப் புகழ்பெற்ற பின்னணிப் பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் கொரோனா தொற்றினால் பீடிக்கப்பட்டு 25.09.2020 அமரரானார் என்ற செய்தி உலகெங்கும் வாழும் பல்லாயிரக்கணக்கான இரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இவருக்கு நிகராக வேறெந்தப் பாடகரும் தோன்றவில்லை என்பது இரசிகர்களின் ஏகோபித்த முடிபு. பாலசுப்பிரமணியம் திரைப்படப் பாடல்கள் பாடும்போது மனித உணர்வுகளில் ஏதாவது ஒன்றையோ பலதையோ திரைப்படக் காட்சிக்கு ஏற்றவாறு இணைத்துப் பாடுகிறார். அப்பாடல்களை நாம் கேட்கும்போது அந்த உணர்வலைகள் நமது வாழ்வோடு இணைந்த சந்தர்ப்பங்களை நினைவுபடுத்தி எம்மைப் பாடலோடு ஒன்றிவிடச் செய்கின்றன. அதுவே அவரது பாடல்களின் வெற்றியும் தனித்துவமும் என்பது இசைப்பிரியர்களின் கணிப்பு.

1966களில் தொடங்கிய இவரது இசைப் பயணம் அரை நூற்றாண்டைக் கடந்து, 16 மொழிகளில், 42,000 பாடல்களுக்குமேல் பாடி சாதனை புரிந்தார். கர்நாடக இசையையே கற்காமல் கர்நாடக இசையில் அமைந்த 'சங்கராபரணம்' என்ற பாடலைப் பாடியதன் மூலம் இவர் புகழின் உச்சிக்கே சென்றார். 1981ஆம் ஆண்டு பெங்களூரில் உள்ள ஒரு ரெகார்டிங் தியேட்டரில்' ஒரே நாளில் 21 பாடல்களைக் கன்னட இசையமைப்பாளர் உபேந்திர குமாருக்காகப் பாடி சாதனை புரிந்தார். தமிழில் ஒரே நாளில் 19 பாடல்களையும், இந்தியில் 6 மணி நேரத்தில் 16 பாடல்களையும் பாடிச் சாதனை செய்துள்ளார். இந்தியில் 'ஏக் துஜே கேலியே' படம் புகழ்பெற்றதையடுத்து மும்பையில் ஒரே நாளில் 19 பாடல்கள் பாடியவர். சில படங்களைத் தயாரித்தும் இருக்கிறார். முன்னணி நடிகர்களுக்கு டப்பிங்' பின்னணிக் குரல் கொடுத்தும் இருக்கிறார். உலக அளவில் அதிக பாடல்களைப் பாடியதற்கான கின்னஸ் சாதனை ஏட்டில் இவரது பெயர் பதிவாகியுள்ளது. நான்கு தலைமுறை நடிகர்களுக்குப் பின்னணிப் பாடல் பாடியவர்' 70 படங்களுக்குமேல் நடித்த நல்ல நடிகர்' 60 படங்களுக்கு மேல் இசையமைத்த இசையமைப்பாளர். இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது, பத்ம பூஷன் விருது, ஆறு தேசிய விருதுகள், பிலிம்பெயர் விருது, விஜய் விருது, நந்தி விருது போன்ற ஏராளமான விருதுகளைப் பெற்றவர். பாலசுப்பிரமணியம் ஒரு பொறியியல் பட்டதாரி. இவர் சாவித்திரி என்பவரை காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு பல்லவி என்கிற மகளும் சரண் என்கிற மகனும் உள்ளனர். இவரது இழப்பு இசையுலகில் ஈடுசெய்ய முடியாததொன்று. இசைப்பிரியர்களின் உள்ளங்களில் அவர் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

### கொழும்பு சர்வதேசப் புத்தகக் கண்காட்சி 2020 – சில மனப்பதிவுகள்



கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் 2020ஆம் ஆண்டுக்கான புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் மிகப்பெரிய அளவில் நடந்து முடிந்திருக்கின்றது. கடந்த 22 ஆண்டுகளாக ஒவ்வொரு வருடமும் இப்புத்தகக் கண்காட்சி கொழும்பில் நடைபெறுகிறது.

இந்த வருடம் இப்புத்தகக் கண்காட்சிக்குச் செல்பவர்கள் கொரோனா தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது. பார்வையாளர் தமது சுயவிபரங்களை உரிய படிவத்தில் பூர்த்திசெய்து அதனை உரிய நுழைவாயிலில் சமர்பித்த பின்னரே உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர். முகக் கவசம் அணிந்து செல்லல், கைகளைச் சவர்க்காரம் போட்டுக் கைககழுவுதல், சமூக இடவெளிகளைப் பேணுதல் போன்ற நடவடிக்கைகளால் மக்களின் நடமாட்டம் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியிருந்ததைக் காணமுடிந்தது. செப்டெம்பர் 18ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை நடைபெற்ற இக்கண்காட்சிக்குத் தினமும் புத்தகப் பிரியர்கள் உள்நுழைவதைக் காணக்கூடியதாக இருந்தது.

உள்ளே பல்வேறு விற்பனை நிலையங்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இதில் கவலைகொள்ள வைத்த விடயம் என்னவென்றால், வந்திருந்த மக்கள் கூட்டத்தில் மிகக் குறைந்த தமிழ்பேசும் மக்களே காணப்பட்டனர். தமிழ்ப் புத்தக விற்பனை நிலையங்களான பூபாலசிங்கம் புத்தகசாலை, ஜெயா புத்தக நிலையம், குமரன் புத்தக இல்லம், சேமமடு பொத்தக சாலை, வெண்பா புத்தக சாலை ஆகியவற்றில் மிகக்குறைந்த நுகர்வோரே காணப்பட்டனர்.



சிங்கள விற்பனை நிலையங்களில் எள் போட்டால் எள் விழாத கூட்டம். அதுவும் சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர் எனப் பலதரப்பட்டவர்களும் நூல்களை ஆவலோடு வாங்கிச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

சிங்களமொழி இலக்கியப் பிரியர்களுக்குத் தீனிபோட நிறையவே பதிப்பகங்கள் இருக்கின்றன. இத்தகைய நிலைமை தமிழில் இல்லை. ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை வாங்கி நூலாக்கிக் கொடுக்க எம்மிடம் போதிய பதிப்பகங்கள் இல்லை. எழுத்தாளன் தனது பணத்தை முதலீடு செய்தே நூல்களை வெளிக்கொணர வேண்டியிருக்கிறது.

இன்று எமக்குப் பெரும்பாலான நூல்கள் தமிழகத்தில் இருந்துதான் வருகின்றன. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு விற்பனையாகும் நூல்களைக் கையிலெடுக்கவே தயக்கமாக இருக்கிறது. இந்திய விலையின் மூன்றரை நான்குமடங்கு விலை குறிக்கப்பட்டு அவை விற்பனையாகின்றன. சாதாரண வாசகன் வாங்கமுடியாதபடி அநேகமான நூல்களின் விலைகள் குறிக்கப்படுகின்றன.

வாசிப்புக் கலாசாரம் இளைய தலைமுறையினரிடையே அருகிவருகிறது என்று கவலைப்படும் நாம், மறுபுறத்தில் தரமான நூல்களின் வெளியீடுகளை ஊக்குவிக்கும் முறைமை பற்றியும், குறைந்த விலையில் அவை வாசகரை சென்றடையும் வழிவகைகள் பற்றியும் சிந்தித்துச் செயற்படுகிறோமா? வாசிப்பு ஊக்குவிப்பு மாதமாகிய இந்த ஒக்டோபர் மாதத்தில் புத்திஜீவிகளின் சிந்தனைக்கு இதனைச் சமர்ப்பிக்கின்றோம்.

### நவீன உலகின் பொறியியல் அற்புதங்களில் ஒன்றான 'ஈபெல்' கோபுரம்.



நவீன உலகின் பொறியியல் அற்புதங்களில் ஒன்றாகக் கருதப்படும் ஈபெல் கோபுரம் பாரிஸ் நகரின் சின்னமாகவும் விளங்குகிறது. பிரான்ஸ் தேசத்தில் மன்னர் ஆட்சியைக் கவிழ்த்து 1789இல் குடியரசை முதன்முதலில் நிலைநாட்டிய பிரெஞ்சுப் புரட்சியின் வெற்றியைக் கொண்டாடும் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கக் கட்டப்பட்டதே இந்த ஈபெல் கோபுரம். ஓங்கி உயர்ந்த இந்த உன்னதக் கோபுரத்தை வடிவமைத்து கட்டிமுடித்தவர் பொறியியல் மேதையான அலெக்ஸாண்டர் கஸ்டாவ் ஈபெல் (1832 _1923) ஆவார். ஆயிரத்து எழுபது அடி உயரத்தில் அமைக்கப்பட்ட இந்தக் கோபுரம் 1930ஆம் ஆண்டுவரை உலகத்திலேயே மிக உயரமான சின்னமாக விளங்கியது. தற்போது துபாய் நகரில் உள்ள 2717 அடி உயரமான கட்டிடமொன்றே உலகின் மிக உயரமானதாகத் திகழ்கிறது.

இந்தக் கோபுரத்தைக் கட்டுவதற்குமுன் உலகின் பலபாகங்களிலுமிருந்தும் இதற்கான வரைபடங்கள் கோரப்பட்டன. கிடைக்கப்பட்ட 700 வரைபடங்களில் ஈபெல் வரைந்த வரைபடமே ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஈபெல் கோபுரம் சுமார் 108 மாடிகளைக் கொண்ட ஒரு மாளிகைக்கு ஒப்பானது. 300 பணியாளர்கள் இரண்டு ஆண்டுகளாக 15000 இரும்புச் சாதனங்களைக் கொண்டு கட்டிய நூதனச்சின்னம் இது. இக்கோபுரம் மூன்று தளங்களைக் கொண்டது.

மூன்றாவது தளம் 905 அடி உயரத்தில் இருக்கிறது. இங்குள்ள கோபுர உச்சியிலிருந்து பாரிஸ் நகரின் இரவு ஒளி அழகை நாற்புறமும் காண்பது ஒரு கண்கொளாக்காட்சி. இந்தக் கோபுரத்தில் 350 சோடியம் ஆவி மின்சார விளக்குகள் பொருத்தியிருக்கிறார்கள். அதனால் இக்கோபுரம்' அடிமுதல் நுனி வரை பொன் முலாம் பூசப்பட்டதுபோன்று காட்சியளிக்கின்றது.

உறுதியான இந்தக்கோபுரத்தின் சிகரத்தை 1710 படிகளில் ஏறிப் போய் அடையலாம்! அல்லது மின்சாரத்தில் இயங்கும் தூக்கிகள் மூலம் சென்றடையலாம்.

இந்தக் கோபுரத்தில் பொறியியல் நுட்பம் ஒன்று இருக்கிறது. வானளாவிய இரும்புக் கோபுரத்தில் எழும் விசைகளை உண்டாக்கும் முதல்காரணி அதன் 9000 தொன் எடையாகும். இரண்டாவது காரணி வெளிப்புறக் காற்றடிப்பு வேகம் கோபுரத்தைக் குப்புறத் தள்ளாதபடி அக்கோபுரத்தில் உள்ள உந்து விசை எதிர்ப்பு ஆற்றல். அந்த நூதனப் பொறியியல் நியதியைக் கண்டுபிடித்து ஏற்றதொரு உத்திரத் தூண் நெளிவைக் கணித்துள்ளார் ஈபெல்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழிற்புரட்சியின் காலத்தில் பிறந்த ஈபெல், புகழ்பெற்ற பாலங்களையும் கடல் கால்வாய்களையும் கட்டி பொறியியல் வரலாற்றில் இடம் பிடித்தவர். ஒப்பற்ற பொறியியல் சின்னங்களைப் படைத்த கஸ்டாவ் ஈபெல் தனது 91 ஆவது வயதில் (1923)இல் காலமானார்.

**(இனி அடுத்த வாரம்)**

---



# படித்ததும் பகர்வதும்

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### வாசிப்போம் வளம் பெறுவோம்

வாசிப்பு மனிதனை முழு மனிதனாக்கும். வாசிக்க வாசிக்கவே மனிதனின் அறிவு விருத்தியாகிறது. அஞ்ஞானம் மறைந்து விஞ்ஞானம் விசாலமாகிறது. அறியாமை அகன்று அறிவொளி வீசுகிறது.

புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என எதனை வாசித்தாலும் அவற்றிலிருந்து அறிவுப் பசிக்கு தீனி கிடைக்கவே செய்யும். இதனால் தான் “கண்டது கற்க பண்டிதனாவான்” என்று ஆன்றோர் கூறிச்சென்றார்கள்.

இன்றைய நவீன காலத்தில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றை வாசிப்பவர்களின் எண்ணிக்கை பாரிய அளவில் குறைவடைந்துள்ளமை கவலைக்குரிய விடயமாகும். ஆயினும் இவற்றை கனணி, கைபேசிகள் ஊடாக வாசிப்பதில் பலர் ஆர்வம் செலுத்துவது ஒருவகையில் ஆறுதலைத் தருகிறது.

நாம் ஒவ்வொருவரும் எம்மால் இயன்ற அளவில் வாசிப்புக்காக நேரத்தை ஒதுக்குவது அவசியமாகும். இதற்கென எடுக்கப்படும் நேரம் எதிர்காலத்தில் வளமாக, நலமாக வாழ்வதற்கான நல்ல முதலீடாகவே அமையும். வாசிக்க வாசிக்கவே அறிவு கூர்மையடையும். வாழ்க்கை வளமாகும். நற்குண நல்லொழுக்கம் சீர்பெறும்.

பலம் பெருமைகளை அறிந்துகொள்ளவும், கலை கலாசாரங்களை புரிந்துகொள்ளவும், புதிய வரவுகளை தெரிந்துகொள்ளவும், நவீன உலக அபிவிருத்திகளையும், முன்னேற்றங்களையும் கண்டுகொள்ளவும், அதன்படி நம் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளவும் வாசிப்பு துணை புரிகிறது.

இவை போன்று வாசிப்பதின் நற்பலன்கள் ஏராளம்! ஏராளம்!! எனவே நாமும் வாசிப்புக்கு முக்கியத்துவம் அளிப்போம். நல்லவற்றை தேடி வாசிக்க முயல்வோம் அதன் மூலம் நற்பலன் பெறுவோம்.

## எம் நெஞ்சினில் குடியிருக்கும்



கடந்த வார நிகழ்வுகளில் உலகையே உலுக்கிய சம்பவம் ‘பாடும் நிலா’ எஸ். பி. பாலசுப்ரமணியத்தின் மறைவு ஆகும். 1949.06.04ம் திகதி பிறந்த இவர், 2020.09.25ம் திகதி தனது 74 வது வயதில், கொரோனாவின் கொடுந்தாக்குதலில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

1966 முதல் சினிமாவில் பாடத் தொடங்கிய இவர் ஐந்து தசாப்தங்களை கடந்து உலக சாதனை படைக்கும் விதத்தில் பாடல்களை பாடியுள்ளார். இவர் பாடியுள்ள பாடல்களின் எண்ணிக்கை பற்றிய சரியான எண்ணிக்கையை எவராலும் கூற முடியவில்லை. ஆயினும் ஒரு பதிவில் 17 மொழிகளில் 41,230 பாடல்களை பாடியுள்ளதாக குறிப்பிட்டுள்ளதை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இவர் பாடிய அனைத்து மொழிகளிலும் இவரது பாடல்கள் மிகப் பிரபலமாக, ஜனரஞ்சகமாக அமைந்துள்ளமை இவருக்கே உரிய தனிச் சிறப்பம்சமாகும்.

கன்னல் குரலுக்கு சொந்தக்காரராக, பல்மொழிப் பாடகராக, இசையமைப்பாளராக, சினிமா நடிகராக எல்லாவற்றுக்கும் மேலாக மனிதநேயம் மிக்க மாமனிதராக எஸ். பி. பாலசுப்ரமணியம் உலக மக்கள் அனைவரையும் தன்பால் ஈர்த்துள்ளார். இதனால்தான் இவரது பிரிவு அனைவர் உள்ளத்திலும் ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆறு தேசிய விருதுகள், ஏழு பிலிம் பெயார் (Film Fare) விருதுகள், பல்வேறு மாநில விருதுகள், பல நாடுகளிலிருந்தும் சர்வதேச விருதுகள் என நூற்றுக்கணக்கான விருதுகளை வென்றுள்ளார். எல்லா விருதுகளுக்கும் மேலாக சர்வதேசம் எங்கும் கோடிக்கணக்கான இசைப் பிரியர்களின் உள்ளங்களை இவர் வென்றுள்ளார்.

ஆயிரம் நிலவே வா, பாடும் நிலாவே, இது ஒரு பொன்மாலை பொழுது, கேளடி கண்மணி, மண்ணில் இந்த காதல், கேளடி கண்மணி,வெற்றி மீது வெற்றி வந்து என இவரது புகழ் பெற்ற பாடல்களை மட்டுமே பட்டியல் இட்டாலேயே பல நூல்களை வெளியிட முடியும். இவர் மறைந்தாலும் இவரது குரல் இன்னும் ஏழேழு தலைமுறைகளுக்கும் ஒலித்துக்கொண்டே இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

‘பாடும் நிலா’ எஸ். பி. பாலசுப்ரமணியத்தின் ஆத்ம சாந்திக்கு ‘படித்ததும் பகர்வதும்’ பகுதியின் அஞ்சலிகள்!

## செந்தமிழ் அது தேன் தமிழ்

தமிழ் மொழிக்கேயுரிய தனித்துவம் காரணமாக பூத்துள்ள வித்தியாசமான ‘விசேட பூக்கள்’ இவை. இதுவும் தமிழ் மொழிக்கு மட்டுமே விசேடமாக உள்ள தனிச் சிறப்பு என்றால் மிகையல்ல..

கண்ணிலே பூக்கும் பூ கணிப்பு
கல்லிலே பூக்கும் பூ படைப்பு
கடல் நீரில் பூக்கும் பூ உப்பு
கடமையில் பூக்கும் பூ பொறுப்பு
முகத்திலே பூக்கும் பூ சிரிப்பு
மூளையிலே மலரும் பூ நினைப்பு
பாசத்தில் பூக்கும் பூ பிணைப்பு
பகைவரிடம் பூக்கும் பூ எதிர்ப்பு
பள்ளியிலே மலரும் பூ படிப்பு
படித்தபின் தேடும் பூ வாய்ப்பு
நல்லவரிடம் பூக்கும் பூ மதிப்பு
நண்பர்களிடம் பூக்கும் பூ நட்பு
சோம்பலிலே வரும் பூ சலிப்பு
சோதனையில் வரும் பூ தவிப்பு
சாதனையில் வரும் பூ செழிப்பு
பாதத்தில் அணியும் பூ செருப்பு
உழைப்பினால் வரும் பூ தெம்பு
வாய் கொழுப்பால் வரும் பூ வம்பு
உறவினரிடம் இருக்கும் பூ உகப்பு
உலகத்திலே உயர்ந்த பூ அன்பு
(பூக்கள் இன்னும் மலரலாம்)

## என் கேள்விக்கென்ன பதில்?




## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

### நிலை உயரும்போது..!

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் இரண்டாவது மன்னரான கலீபா உமர் அவர்களின் ஆட்சிக் காலமது. சிரியா, பாலஸ்தீன் ஆகிய நாடுகளில் நடந்த யுத்தங்களின் கடைசிக் கட்டத்தில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஒர் உடன்படிக்கை ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தைச் செய்ய கலீபா உமர் தமது பணியாளுடன் பயணமானார், எவ்வித அலங்காரங்களும், ஆடம்பரங்களும் இல்லாமல் ஓர் சாதாரண ஒட்டகத்தின் மீது ஏறி டமஸ்கஸ் வந்து சேர்ந்தார்.

அங்கே அபூ உபைதா பின் ஜர்ராஹ், காலித் பின் வலீத் போன்ற இஸ்லாமிய இராணுவத் தளபதிகள் கலீபாவை களிப்புடன் வரவேற்றார்கள். அங்கு ஓரிரு நாட்கள் தங்கிவிட்டு ஜெருசலத்தை நோக்கி புறப்பட்டார் கலீபா உமர்.

அவ்வேளையில், ‘கலீபா புதிய ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும். ஓர் அழகிய குதிரை மீது தான் செல்ல வேண்டும்’ என்று சகாக்கள் அவரை வற்புறுத்தினார்கள்.

அவர்களின் வற்புறுத்தலுக்கிணங்கிய கலீபா உமர், தமது ஒட்டகத்தை விட்டு விட்டு வேறு ஓர் அழகிய குதிரை மீது ஏறிச்சென்றார்கள். அந்தக் குதிரை கம்பீரமாக ஓடத்தொடங்கியது. சற்றுத்தொலைவு சென்றவுடன் திடீரென குதிரையை நிறுத்தி, அதைவிட்டு கீழே இறங்கிய கலீபா உமர், ‘எங்கே என் ஒட்டகம். அதைக் கொண்டு வாருங்கள்.’ என்று கேட்டார்.

அதிசயப்பட்ட மக்கள் காரணத்தை வினவினார்கள். அதற்கு கலீபா உமர், “இந்த கம்பீரமான குதிரையில் நான் சவாரி செய்த போது என் உள்ளம் தானாகவே பெருமைபடத் தொடங்கியது. அப்போது சிறிதளவாவது அகம்பாவம், தற்பெருமை கொள்வோர் சுவர்க்கம் புகமாட்டார்களென நபிகள் நாயகம் சொல்லியிருப்பது என் நினைவுக்கு வந்தது. அதனால் தான் குதிரையை விட்டு இறங்கி விட்டேன்” என்று விடை பகர்ந்தார்கள்.

இன்று சின்னஞ்சிறு கடமையொன்றை செய்துவிட்டு, பென்னம் பெரிதாக தம்பட்டம் அடித்து பெருமை கொள்வோர் இச்சம்பவத்தை படிப்பினையாகக் கொள்ள வேண்டும்.

## தகவல் களஞ்சியம்

### பிணச்சீரமைப்பு உருவான கதை இது

மனிதர்கள் இறந்த பின்னர் உடலை சில நாட்களுக்கோ அல்லது சில மாதங்களுக்கோ பழுதடையாது இருப்பதற்காக, அந்த உடலுக்கு மேற்கொள்ளும் சில அறிவியல் ரீதியான நடவடிக்கைகள் பிணச்சீரமைப்பு (embalm எம்பாம்) முறை எனப்படுகின்றது. இந்த பிணச் சீரமைப்பு முறை எவ்வாறு உருவானது என்று உங்களுக்குத் தெரியுமா? இதோ, அது பற்றிய தகவல்.

இலண்டனைச் சேர்ந்த பல் மருத்துவரான வில்லியம் ஹன்டர் என்பவரின் மனைவி பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுக்கு அதிபதியாவார். அவர் இறக்கும் தறுவாயில், “என்னைப் புதைக்காமல் இருக்கும் வரை எனது சொத்துக்களை, என் கணவர் அனுபவிக்க உரிமை உண்டு” என உயில் எழுதிவிட்டு இறந்துவிட்டார். இதனை அறிந்த வில்லியம் ஹன்டர் செய்வதறியாது திகைத்தார். எனினும் அவர் தனது நண்பரின் உதவியுடன் தன் மனைவியின் உடலை முதன் முதலில் பிணச்சீரமைப்பு செய்து, தன் பல் மருத்துவமனை வாசலில் வைத்தார். அதனால் வில்லியம் ஹன்டர் தன் வாழ்நாள் முழுவதும் தன் மனைவியின் சொத்துக்களை அனுபவித்ததோடு, அவரின் மருத்துவமனைக்கு வருகை தரும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.